துளஸி ராமாயண

[அயோத்தியா காண்டம்]

10 JUN 1952
TRIPLICANE P.O. MADRAS



ஆண்டாள்

(சூடிக்கொடுத்த சுடர்க்கொடி)

பி. ஸ்ரீ. எழுதியது

ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ்

திவான்பகதூர் வி. பாஷ்யமையங்கார்

*சிறப்புரை கொண்டது

பொருளடக்கம்

1. ஆண்டாள் கும்மி
2. ஆண்டாள் வைபவம்
3. பெரியாழ்வார் நந்தவனம்
4. கனவா? தீர்க்கதரிசனமா?
5. நந்தவனத்தில் ஒரு தெய்வ மலர்
6. தெய்வ மலரை அர்ப்பணம் செய்தது
7. பிள்ளைப் பருவம்
8. பூரிப்பும் கவலையும்
9. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
10. ஆழ்வார் கனவு
11. காதலின் வளர்ச்சி
12. ஆண்டாள் நோன்பு
13. நோன்புக் காட்சிகள்
14. ரஸமான பேச்சு
15. நப்பின்னைப் பிராட்டி யாரை அழைப்பது
16. நோன்பின் பயன்
17. கல்யாணப் பேச்சு
18. செல்வத் தோழிகள்
19. அல்லல் விளைத்த பெருமான்
20. ஆண்டாள் கனவு
21. கனவும் கல்யாணமும்

அனுபந்தம்

(i) மார்கழி நோன்பு
(ii) திருப்பாவை
(iii) அரும்பதவுரை

***சிறப்புரையின் சில பாகம்:—** * இத்தகைய பக்த மணிகளின் ஜீவிய சரிதங்கள் இன்னும் பல வெளிவரத் தக்கவை. இதை அச்சிட்டுப் பிரசுரித்த அல்லயன்ஸ் கம்பெனியார், ஏற்கனவே இம்மாதிரி சில நூல்களை அழகான புத்தகங்களாக வெளியிட்டிருக்கிறார்கள். அத் தொண்டுக்குத் தமிழர்கள் செய்யத்தக்க கைம்மாறு அவைகளை வாங்கிப் படித்து இன்புறுதலே யாகும். இன்னமும் இம்மாதிரி அநேக ஜீவிய சரிதங்களை அவர்கள் வெளியிட்டால் அது நமக்குப் பேருதவியாகும். இந்நூல் படிப்போருக்கு ஆஸ்திக்ய ருசியை விளைவித்துப் பக்தி ஊட்டிப் பேரானந்தத்தைத் தரத்தக்கது. யாவரும் இதைப் படித்து இன்புறுவார்களாக.

அல்லயன்ஸ் கம்பெனி :: மயிலாப்பூர் :: சென்னை

ஸ்ரீ துளஸீ ராமாயணம்

அயோத்தியா காண்டம்

(சுருக்கம்)

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்
மொழிபெயர்த்தது

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் : : சென்னை

காபிரைட்] [ரூ. 1—8—0

அபிமானிகளுக்கு

அடுத்த காண்டத்துடன் துளஸீ ராமாயணம் முடிவு பெறுகிறது. காகிதப் பஞ்சம் காரணமாக அதிகப் பிரதிகள் அச்சிட முடியாது. வேண்டுவோர் முன்னதாகவே தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்வது நலம், லாபமும் ஆகும்.

✻

சித்திரபானு பிரஸ்,

சென்னை.

✻

மகாத்மா காந்தியடிகள்

ஸ்ரீமதி அம்புஜம்மாள்
மொழிபெயர்த்துள்ள
பாலகாண்டத்துக்கு
அளித்துள்ள
முகவுரை

✻

"ஸ்ரீமதி அம்புஜம்மாளுக்கும் எனக்குமுள்ள பரிசயத்தை யாவரும் அறிவர். மிக்க அன்புடன் அவர் ஹிந்தி பயின்றிருக்கிறார். அவ்வளவு அன்புடனேயே இராமாயணமும் கற்றிருக்கிறார். இப்போது அவர் அந்த நிகரற்ற கிரந்தத்தைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். தமிழ் மக்கள் அதை அன்புடன் படிப்பார்களென்று நான் நம்புகிறேன். அம்புஜம்மாளுக்கு நான் வந்தனம் செலுத்துகிறேன்."

✻

எவர் கருணைகூர்ந்து உத்ஸாகப்படுத்தியிராவிட்டால், சிற்றறிவுடைய நான் ஹிந்தி கற்று இந்த மகா காவியத்தைத் தமிழில் வெளியிட்டிருக்க முடியாதோ, அந்த மகாத்மா காந்திக்கு இந்த மொழிபெயர்ப்பைப் பக்தியோடு ஸமர்ப்பிக்கிறேன்

முன்னுரை.

மகாபாரதமும் ராமாயணமும் சாதாரண காவியங்கள் அல்ல; பொழுது போக்கிற்குரிய நல்ல நூல்கள் மட்டும் அல்ல; அமைப்பிலும் நடை அழகிலும் இனிமையான பாக்களைக் கொண்டவை மாத்திரமல்ல; நம் இருதயங்களில் பக்தி சிரத்தை, விசுவாசம் முதலியவைகளைத் தூண்டிவிட்டுச் சுடர் விளக்கைப் போல் பிரகாசிக்கச் செய்யும் தன்மை வாய்ந்தவை மட்டும் அல்ல. அவை அறிவுக் களஞ்சியங்கள்; எந்த விதமான சிக்கலையும் பிரசினைகளையும் தெளிவு படுத்த வல்ல காவியங்கள். அவைகளைப் படிப்போர்க்கு வாழ்க்கையின் உயர்ந்த லட்சியம் புலனாகிவிடுகிறது.

அக்காவியங்கள் முதலில் ஸம்ஸ்கிருதத்தில் இயற்றப் பட்டன. அவை பண்டிதர்களுக்கே ஏற்பட்டவை என்று இருந்தது ஒரு காலம். அவை பொதுஜனங்களின் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்ட காலத்திலிருந்தே நாடெங்கும் ஒரு புதிய உத்ஸாகம், ஊக்கம், ஆவேசம் பரவிவந்தன. வாழ்க்கை பலவகையிலும் மலர்ச்சி பெற்றது. வால்மீகி மகரிஷி மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்காகக் கற்பித்த மந்திரத்தை மகாத்மா துளஸீ தாஸர் சங்கு கொண்டு ஊதி, இந்தியா முழுதும் ஒலிக்கச் செய்தார்.

ஆடவரும் பெண்டிரும், பாலகரும் வயோதிகரும், மற்றும் எல்லாவகையினரும் சுலபமாகப் புரிந்து கொள்ளக்

கூடியதும், நமது தேசீய பாஷையுமாகிய ஹிந்தியில் துளஸீ தாஸர் "ராமசரித மானஸை" இயற்றி அழியாப்புகழ் எய்தினார்; இந்து ஜாதியினருக்கும் பெரும் புகழ் சம்பாதித்துக் கொடுத்தார். இவர் ஒரு பெருங் கலைஞர். ராஜீயம், பொருளாதாரம், ஆத்மீகம் முதலிய வாழ்க்கையின் பலவேறு துறைகளிலும் முதிர்ந்த அனுபவம் பெற்ற ஞானி. இவர் தமது புலமையையும் உயர்ந்த கருத்துக்களையும் அழகான பாஷையில் நம்முன் வைத்திருக்கிறார். காவிய பாத்திரங்களை வர்ணிப்பதில் இவர் காண்பித்திருக்கும் புத்திசாதுரியம், தர்க்கத் திறமை, அனுபவ முதிர்ச்சி முதலியவை மெச்சத் தகுந்தவை. இன்னோசையுடன் கூடிய எளிய நடை இக்காவியத்தில் ஒரு முக்கிய அம்சம். இவருடைய ராம சரிதமானஸ் உலகத்திலுள்ள காவியங்கள் எல்லாவற்றிலும் இன்று அதிகமாகப் பிரசாரம் அடைந்து, மிகுதியாகக் கொண்டாடப்படுகிறது.

துளஸீராமாயணத்தில் மிகவும் சிறந்த அம்சம் அயோத்தியா காண்டம். இது அவருடைய காவிய வானில் மத்தியான சூரியனைப் போல் பிரகாசிக்கிறது. துளஸீதாஸர் முதல் முதலில் இக்காண்டத்தைத் தான் எழுதினார் என்பது சில வித்துவான்களின் அபிப்பிராயம். இதில் தசரதனது புத்திர வாஞ்சை, கௌசல்யையின் தாயன்பு, சிற்றன்னையின் பொறாமை, லட்சுமணனின் சகோதர பக்தி, சீதையின் உயர்ந்த லட்சியம், ராமனுடைய தியாகம், இவைகளை உத்தம முறையில் வர்ணித்திருக்கிறார். பரதன் வாயிலாக வர்ணித்திருக்கும் சகோதர பக்தியும் சுயநலத் தியாகமும் படிப்போர் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியும். இவர் இதன் மூலமாக மனித சமூகத்திற்கு இன்றியமையாத தியாகம், அன்பு,

சேவை ஆகிய, என்றும் அழியாத உண்மைகளைக் கற்பித்துள்ளார். அயோத்தியா காண்டம் மாத்திரம் எழுதி விட்டு மற்றக் காண்டங்களை எழுதாது விட்டிருப்பினும், இவரது பெருமை எவ்விதத்திலும் குறைவு பட்டிருக்காது ஆனால் முழுச் சித்திரத்தையும் வரைய விரும்பிய துளஸீதாஸர், எவ்வளவு விலைமதிக்க வொண்ணாததாய் இருப்பினும், இருதயத்தை மட்டும் வரைந்து விட்டு மற்ற அவயவங்களை விட்டு விடுவாரோ? இச்சிறந்த காவியம் முன்னை விட இப்போது அதிகப் பிரசாரமாக வேண்டியது அவசியம்.

இப்பணியில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ. எஸ். அம்புஜம்மாள் இதற்கு முன்பே பால காண்டத்தைத் தமிழ் மக்களுக்கு உதவியுள்ளார். இப்பொழுது அயோத்தியா காண்டத்தை உதவ முன்வந்துள்ளார். காவிய ஆனந்தத்தை அள்ளி அள்ளிப் பருகவேண்டும் என்ற பேரவா இவருக்குண்டு. தாம் கற்றவைகளை மற்றவருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கம் கொண்டவர். ஹிந்தி பாஷையிலுள்ள இந்த உத்தம காவியத்தை ரஸித்து அளவில்லா ஆனந்தம் கொண்டு, அந்த ஆனந்தத்தின் ஒரு பகுதியைத் தமிழ்ச் சகோதரிகளுக்கும் சகோதரர்களுக்கும் அளித்தே தீரவேண்டும் என்று இந்நூலைத் தமிழ் உரை நடையில் எழுதி வெளியிட்டுள்ளார். இம்மாதிரி இவர் ஹிந்தி பேசும் மக்களையும், தமிழ் பேசும் மக்களையும் அன்பெனும் கயற்றினால் பிணைத்திருக்கிறார். இவ்வரிய காரியத்திற்காக நான் இவரைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

இக்காரியத்தில் ஸ்ரீ. அம்புஜம்மாள் மேன்மேலும் ஊக்கத்துடனும் தளரா முயற்சியுடனும் முன்னேறிச் செல்வா

ரென்றும், தாம் கற்ற ஹிந்தி மொழியிலுள்ள நல்ல இரத்தினங்களைப் பொறுக்கியெடுத்துத் தமிழர்களுக்கும், மிக்க தொன்மை வாய்ந்த தமிழ் இலக்கியத்தை அலங்கரிக்கும் மணிகளை ஹிந்தி பேசும் மக்களுக்கும் வழங்கி வருவாரென்றும் நம்புகிறேன்.

ஸத்திய நாராயண்,
காரியதரிசி.

தக்ஷிணபாரத ஹிந்தி பிரசார சபை,
தியாகராயநகர், சென்னை.
12-3-1942.

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜயம்

ஸ்ரீ துளஸீ ராமாயணம்

இரண்டாம் ஸோபானம்

அயோத்தியா காண்டம்

கடவுள் வணக்கம்

மடியிலே மலைமகளும், முடியிலே கங்கையும், நெற்றியில் இளம்பிறையும், கழுத்தில் விஷமும், மார்பில் சர்ப்பராஜனும் விளங்கப் பெற்றவரும், வெண் திங்களின் ஒளிவீசும் திருமேனியரும், தேவர்களுக்கு முதல்வரும், மங்கள ரூபியுமான சங்கரன் என்னைக் காக்கவே.

மகுடாபிஷேகத்தால் பெரிதும் மனமகிழ்தலேனும், வன வாசத்தைப்பற்றிய துயரத்தால் மலினம் அடைதலேனும் இல்லாத ஸ்ரீராமசந்திரனது முகமாகிய செந் தாமரையின் ஒளி எனக்கு எக்காலமும் நன்மை தரட்டும்.

கருங்குவளையின் வர்ணமும் மென்மையும் வாய்ந்த திருமேனியன், சீதாபிராட்டி இடது பாகத்தில் இலங்க,

அழகிய வில்லும் அம்பும் ஏந்திய கரங்களுடையவன் ரகு குல சிரேஷ்டன்: அந்த ஸ்ரீராமசந்திரனுக்கே வந்தனம்.

நான் என் குருவின் கமலச் சேவடிகளின் தூளியினால் எனது மனக் கண்ணாடியைத் துடைத்துச் சுத்திசெய்து, அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகைப் புருஷார்த்தங்களையும் அளிக்கவல்ல ஸ்ரீராமனது நிர்மல மான புகழை விளக்கிக் காட்டுகிறேன்.

மன்னர், ராம பட்டாபிஷேகம் நடத்த விரும்புதல்

ஸ்ரீராமன் திருமணம் முடித்துக்கொண்டு அயோத்தி வந்தடைந்த நன்னாள் முதல், அந்நகரில் பல புதிய புதிய மங்கல விழாக்கள் நடைபெற்று வந்தன. அப்பொழுது, ஈரேழு புவனங்களென்னும் உயர் மலைகளினிடையே புண்ணியங்களென்னும் கார்முகில்கள் இன்பத்தையே மழையெனப் பொழியலாயின.

அந்நகரத்தின் வைபவங்களை யெல்லாம் சொல்ல இயலாது. படைப்புக் கடவுளின் திறமையெல்லாம் இவ்வளவேயோ எனத் தோன்றுமாறு விளங்கிய அந் நகரத்து மக்கள் அனைவரும் ராமனது முகமாகிய சந்திரனைக் கண்டு துறைதோறும் இன்புறலாயினர்.

"சக்கரவர்த்தி தமது வாழ்நாளிலேயே ராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டுதலே மிகவும் சிறந்ததாகும்" என்ற ஒரே விருப்பம் அனைவர் மனத்திலும் குடி கொண்டது. அதனால், அக்கோரிக்கை நிறைவேறும் பொருட்டே யாவரும் சிவபிரானைப் பிரார்த்தித்தனர்.

ஒரு சமயம் ரகு குலாதிபதியான தசரதர் தம் பரிஜனம் புடைசூழ மந்திராலோசனை மண்டபத்தில் வீற்றிருந்தார். நற்கருமங்களெல்லாம் ஓர் உருக்கொண்டு உதித்ததே போன்று விளங்கிய ஸ்ரீராமனது புகழைப் பிறர் சொல்லக் கேட்டு அகமகிழ்ந்திருந்தார்.

மங்களங்கள் அனைத்திற்கும் காரணரான ஸ்ரீமந் நாராயணனையே புதல்வனாய்ப் பெற்றவரது பெருமைகளை எவ்வளவாய்ச் சொல்லினும் போதாது.

அத்தகைய பெருமை வாய்ந்த மன்னர்பிரான் அன்று ஆலோசனை மண்டபத்திற்கு வருமுன்னர், வழக்கப் படியே தமது கிரீடத்தைச் சீராக அணிந்துகொள்ளக் கையில் கண்ணாடி எடுத்து முகம் பார்த்தபொழுது, தமது இரு செவிகளின் பக்கமாய் ரோமங்கள் வெளுத்து நரைத்திருத்தலைக் கண்டார். அந்த ரோமங்கள், "மன்னா! ராமனுக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டிப் பிறவிப் பயனை ஏன் அடையலாகாது?" என்று உபதேசஞ் செய்வதேபோல அவருக்குத் தோற்றியது.

உடனே அரசர் வசிஷ்ட பகவானைப் பார்த்து, "முனிவர் கோவே! கேட்டருளுக! இப்பொழுது ராமன் எல்லாத் துறைகளிலும் சமர்த்தனாகிவிட்டான். என்னைப் போல் ராமனும், நமது பந்துக்கள், மித்திரர், பரிஜனங்கள், அமைச்சர்கள், நகரமாந்தர் அனைவருடைய அன்பிற்கும் உறைவிடமாகிவிட்டான். தங்களுடைய ஆசிமொழிகளை

உருக்கொண்டாற்போல அவன் செவ்வனே பிரகாசிக்கிறான். அந்தணர் அனைவரும் தத்தம் குடும்பத்துடன், தங்களைப்போலவே அவன்பால் மிகவும் அன்பு பாராட்டுகின்றனர்.

"ஓ, தலைவ! இந்நாள் என் மனத்தில் ஒரு கோரிக்கை நிலைகொண்டுளது. அது தமது அனுக்கிரகத்தினால் நிறைவேறத்தக்கது," என்றார்.

அரசர் தம்பால் காட்டின இயல்பான உள்ளன்பைக் கண்டு முனிவர் மனங்களித்தார். ஆதலால், "அரசே! யான் செய்யத் தக்கது யாது? உத்தரவு இடக்கடவீர்," என்று பதிலுரைத்தார்.

எல்லா விதத்திலும் குரு தமக்கு அனுகூலமாயிருப்பதை யுணர்ந்த அரசர் இனிமையாக, "எமது தலைவ! ராமனை யுவராஜ பதவியில் நியமிக்கவேண்டும். அதற்குத் தங்கள் அனுமதி வேண்டும். தாங்கள் அதற்கு வேண்டிய சாமக்கிரிகளையும் ஆயத்தஞ் செய்யவேண்டும்," என்றார்.

அதற்கு அம்முனிவர், "மன்னர் மன்ன! எவனை விரோதித்துக் கொள்ளுவதினாலே மாந்தர் பச்சாத்தாபப்பட நேரிடுமோ, எவனைப் பூஜியாமையால் மாந்தரின் மனக்கொதிப்பு என்றும் அடங்குவதில்லையோ, எவன் பரிசுத்தமான அன்பின் பின்னே செல்லும் இயல்புடையவனோ, அவனே ராமனாகவும், தங்களுடைய மைந்தனாகவும் இருக்கிறான். ஆகையால், அரசே! தாமதிப்பானேன்? விரைவில்

எல்லாம் ஆயத்தஞ் செய்திடலாம். ராமன் யுவராஜாவாக நியமிக்கப்படும் அத்தினமே சுபதினமாம்; சகல மங்களத்திற்கும் இருப்பிடமாம்," என்றார்.

அதைக் கேட்டு அரசர் அகமகிழ்ந்து தம் மாளிகை சென்று, ஏவலாளரையும் மந்திரி சுமந்திரரையும் அழைப்பித்தார்.

அவர்கள் முன்னே வந்து நின்று, 'வெற்றி உண்டாக!' என்று ஆர்ப்பரித்து வணங்கினார்கள். அரசர் அவர்களுக்கு மங்களகரமான செய்தியை அறிவித்து, "முனிவர்கோனாகிய வசிஷ்டருடைய கட்டளைப்படி ராமனது யுவராஜ்யாபிஷேகத்திற்கு என்ன என்ன செய்யவேண்டுமோ, அவைகளையெல்லாம் விரைவில் செய்யுங்கள்," என்று ஆக்ஞாபித்தார்.

அப்போது, முனிவர் மகிழ்ச்சியுடன் மென்மையான குரலில், "சிறந்த புண்ணிய தீர்த்தங்கள் எல்லாவற்றையும் கொண்டு வருக," என்று கட்டளையிட்டார். மேலும் அவர் பற்பல பச்சிலைகள், வேர்கள், பழங்கள், மலர்கள், இதழ்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவைகளைக் கொண்டு வரும்படி ஏவினார்.

பந்தல்கள், தோரணங்கள், கொடிகள், கலசங்கள், யானைகள், குதிரைகள், இரதங்கள் யாவற்றையும் அலங்கரித்துச் சித்தஞ் செய்யும்படி முனிவர் இட்ட கட்டளையைப் பணியாளர் தலைமேல் தாங்கித் தத்தம் வேலையில் முனைந்து நின்றனர்.

ராமனது பட்டாபிஷேகச் செய்தியைச் செவியுற்ற ஆணும் பெண்ணும் அடங்க, அனைவரும் மனமகிழ்ச்சி

கொண்டனர்; விதியின் நற்பயனை எண்ணி மகிழ்ந்தனர். பின்பு மங்களகரமான சகல உபகரணங்களையும் ஆயத்தஞ் செய்யலாயினர்.

அப்போது மன்னர் பெருமான், ராமனுக்குத் தக்க உபதேசஞ் செய்யும்படி அவரது மாளிகைக்கு வசிஷ்டரை அனுப்பினார்.

குருவின் வருகையைச் செவியுற்ற ராமன், அரண்மனை வாயிலில் வந்து அவரை வரவேற்று அவரது பாதத்தில் பணிந்து நின்றான். வசிஷ்டர் அன்பினால் மயிர்க்கூச் சுற்று ராமனது நற்குணம் முதலியவைகளைப் புகழ்ந்து கூறினார். "ராம! உனது பட்டாபிஷேகத்திற்காக அரசர் யாவும் ஏற்பாடு செய்துள்ளார். அவர் உனக்கு யுவராஜ பதவியை அளிக்க விரும்புகிறார்.

"ஆதலால், ராம! தெய்வ கிருபையினால் க்ஷேமமாக இவ்வைபவம் நிறைவேறுமாறு நீ இன்று நியமத்துடனிருந்து பூர்ண விரதம் அனுஷ்டிக்க வேண்டும்," என்று உத்தரவிட்டு அப்பால் தசரதரிடம் திரும்பிச் சென்றார்.

அப்போது, ராமன் வியப்புற்று, தன் மனத்திலே பின்வருமாறு எண்ணலானான்: "நாங்கள் சகோதரர் அனைவரும் ஒருமித்துப் பிறந்தோம். இளமை தொட்டு ஒன்று சேர்ந்தே, உண்டு உறங்கி ஓடி விளையாடி வந்தோம். காது குத்தல், உபநயனம், விவாஹாதி மங்களங்களும் ஒருங்கே நடந்தேறின.

"ஆனால், இத்தூய வம்சத்தில் உள்ள ஒரு குறை,

சகோதரருள் மூத்தவனுக்கே ராஜ்யாபிஷேகம் செய்வதென்பதே," என வருந்தினன். சகோதர அன்பினால் வருந்துகின்ற பிரபுவாகிய ஸ்ரீராமனுடைய அருந்துயர் பக்தர்களின் மனத்திலுள்ள களங்கத்தை அறவே ஒழிக்கட்டும் எனத் துளஸீதாஸன் கூறுகிறான்.

நிற்க: கடைவீதிகள், வீடுகள், பாதைகள், நாற்சந்திகள் எங்கும், ஆண் பெண் அனைவரும் ஒன்று கூடிக் கூட்டமாய் நின்று, "இனிமேல் தாமதமிராது. நாளையே நல்ல முகூர்த்தம். கடவுள் நம் கோரிக்கையைப் பூர்த்தி செய்து வைப்பார்," என்று ஒருவரோடொருவர் பேசிக் களித்தனர்.

ஆனால், குறும்புத்தனமுள்ள தந்திரசாலிகளான தேவர்களுக்கு வாத்திய கோஷங்கள் நிறைந்த அவதபுரி (அயோத்தியாபுரி),திருடனுக்கு நிலவெறிக்கும் இரவுபோல,இன்பத்திற்கிடையூறாக இருந்தது. உடனே அவர்கள் ஸரஸ்வதிதேவியை வரவழைத்து, அவள் பாதங்களில் பன்முறை விழுந்து பணிந்து,

"அம்மா! எங்களுக்கு நேர்ந்துள்ள இடரை இன்றே நீங்கள் தீர்த்து வைக்கவேணும். ராமன் நாடு துறந்து காடு செல்லவும், எங்கள் எண்ணம் கைகூடவும் கிருபை செய்யவேணும்," என்று பிரார்த்தித்துக் கொண்டனர்.

இமையவர் வேண்டுகோளை நாமகள் கேட்டு, அப்படியே ஸ்தம்பித்து நின்று, "ஐயோ! நான் தாமரைக் காட்டுக்குப் பனி விழும் இரவுபோல் ஆயினேனே!" என்று மிகவும்

துக்கித்தாள். அப்போது அவ்விண்ணவர் அவளை மிகவும் கொண்டாடி, "தாயே! இதில் உங்கள்மீது சிறிதும் குற்றஞ் சாராது," என்று உரைத்தனர்.

மந்தரை யென்னும் ஓர் அறிவிலி கைகேயிக்கு இஷ்டமான வேலைக்காரியாயிருந்தாள். அவளை அபகீர்த்திக்குப் பாத்திரமாகச் செய்து, அவள் மதியைக் கெடுத்துச் சென்றாள் ஸரஸ்வதி தேவி.

அன்று மந்தரையானவள் நகரின் விசேஷ அலங்காரத்தை நோக்கி வியப்புற்றாள். எங்கும் வாத்தியங்கள் முழங்கின. மங்கள காரியங்கள் நிகழலாயின. அப்பொழுது அவள், "என்ன விசேஷம்?" என்று ஊர் ஜனங்களை வினவ, "ராமனுடைய பட்டாபிஷேகம்" என்று அவர்கள் கூறினார்கள். அது கேட்டு மந்தரை உள்ளங் கொதித்தாள்.

அவள் உடனே பிரலாபித்துக்கொண்டே, கைகேயியை நாடிச் சென்றாள். அவளைக் கண்டவுடனே கைகேயி நகைத்துக் கொண்டே, "உனக்கு என்ன வருத்தம் ஏற்பட்டது இன்று?" என்று வினவ, மந்தரை யாதொன்றும் சொல்லாமல், ஸ்திரீகளின் இயற்கைக்கேற்பக் கண்களில் நீர் பெருகி யோடப் பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றாள்.

அப்போது, கைகேயி திரும்பவும் நகைத்து, "நீ பெரிய வாயாடி. இன்று லக்ஷ்மணன் உனக்கு ஏதோ பாடம் கற்பித்துள்ளான் போலும்!" என்று உரைத்தாள். அதற்கும் மந்தரை வாய்திறக்கவில்லை. பெரும் பாவியான அந்த மந்தரை கொடிய கருநாகம்போல் பெருமூச்சுவிட்டாள்.

அரசி மிகுந்த திகில்கொண்டு, "அடீ! என்

பேசுகிருயில்லே? அரசர், ராம லக்ஷ்மணர், பரத சத்துருக்னர் அனைவரும் க்ஷேமந்தானே?" என்று வினவவே, மந்தரையின் மனம் பெரிதும் புண் பட்டது.

"அம்மணீ! எனக்கு யார் எதற்காகப் பாடம் கற்பிக்கவேணும்? நான் எவர் பலத்தைக்கொண்டு வாயாடி நிற்கப்போகிறேன்? அரசர் எவனுக்கு யுவராஜ பதவியை அளிக்கப் போகிருரோ அவனே, அந்த ராமனைத் தவிர, யாருக்கு க்ஷேமம் ஏற்படப்போகிறது?

"பிரமன் கௌஸல்யா தேவியின் பக்கத்தில் இருக்கிருன். அவளுக்கு முன்னே மற்றவர்களுடைய இருதயத்தில் கர்வம் நிற்குமா? கணப்பொழுதில் பறந்தோடிவிடும். எவரது வைபவத்தைக் காண என் நெஞ்சு கொதிப்படைந் திருக்கிறதோ, அவரது வைபவத்தை நீர் ஏன் போய்ப் பார்க்கக்கூடாது?

"உம்முடைய பிள்ளேயோ ஊரிலில்லே; அன்னிய நாட்டிலுள்ளான். நீரோ எள்ளளவும் கவலேயின்றி யிருக்கிறீர். அரசர் நம் கைக்குள்ளிருக்கிருர் என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கிறீர். நித்திரா தேவி உம்முடன் அதிகமாக உறவாடுகிருள். உமக்கு உமது மெத்தையும் திண்டுமே மிகவும் பிரியமான பொருள்கள். அரசன் விரித்துள்ள கபடம் நிறைந்த சாமர்த்திய வலேயை நீர் ஏன் கண்டுகொள்ளவில்லே?" என்ருள்.

மந்தரையின் பிரியமான இந்தப் பேச்சைச் செவியுற்ற கைகேயி, 'ராமனிடம் இவள் துவேஷம் பூண்டுள்ளாள்,'

என்பதை யுணர்ந்து, தலை குனிந்துகொண்டு அவளைப் பார்த்து, "போதும்! போதும்! வாயை மூடு. வீட்டை இரண்டு படுத்துகிற இத்தகைய வார்த்தைகளை இனிமேல் கூறுவாயானால், உன்னுடைய நாக்கைப் பிடுங்கி விடுவேன்.

"பிரியமாகப் பேசுகிறவளே! மந்தரா! உனக்கு நற்புத்தி புகட்ட வேணுமென்றே இங்ஙனம் கடிந்து கூறுகிறேனே யல்லாமல், உன் மீது எனக்குக் கனவிலும் கோபமில்லை.

"நீ சொன்னபடி நடந்தேறுமேயானால், அந்த நாளே சுகத்தையும் சுபத்தையும் தரும் அழகிய நல்ல தினமாகும்.

"மூத்தவன் பிரபுத்வம் அடைவதும், இளையவர்கள் அவனுக்குப் பணி செய்வதும் நமது சூரிய குலத்தின் அழகிய வழக்கமாகும். அடி தோழீ! உண்மையாகவே நாளை ராமனுக்குப் பட்டாபிஷேகம் நிகழ்வதாயின், உனக்கு இஷ்டமான பொருளைக் கேட்டுப் பெற்றுக்கொள்.

"கௌஸல்யா தேவியிடம் இருப்பது போலவே பிற தாய்மார்களிடத்திலும் சமமான அன்புகொண்டு ஒழுகுவது ராமனுடைய இயற்கைக் குணம். என்னிடமோ அவனுக்கு, விசேஷமான பிரியம். அதை நான் பன்முறை சோதனை செய்து பார்த்திருக்கிறேன்.

"கடவுள் அருள் கூர்ந்து எனக்கு மறுஜன்மம் தருவாரானால், ஸ்ரீராமனை என் பிள்ளையாகவும் சீதையை என் மருமகளாகவும் அடையும்படி கேட்பேன்.

"அடி, தோழீ! ராமன் எனக்கு என் உயிரைக் காட்டிலும் பிரியமானவன். அவனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தேறுவதால் நீ ஏன் துக்கம் அடையவேண்டும்?

"பரதன் மீது ஆணையிடுகிறேன். நீ சூதுவாதின்றி உண்மையை ஒளியாமல் எனக்குச் சொல்லு! சந்தோஷமாக இருக்க வேண்டிய இச்சமயத்தில் நீ வருந்துவதேன்? இதன் காரணத்தை எனக்குத் தெரிவிப்பாய்," என்றாள்.

அதற்கு மந்தரை, "ஒரு முறை வாயைத் திறந்ததுமே, என்னுசை யெல்லாம் பூர்த்தியாய் விட்டதே! இப்போது இரண்டாந்தடவையும் நாக்கை வைத்துக் கொண்டு பேசட்டுமா? துரதிர்ஷ்டம் பிடித்த என் மண்டையை உடைக்க வேண்டியதுதான்! உமக்கு நல்லதையே சொன்னேன். ஆனால், உமக்கு அது கெடுதலாகத் தோன்றியது.

"கடவுள் என்னைக் கூனியாகவும் குரூபியாகவும் பிறருக்கு அடிமையாகவும் செய்திருக்கிறார். அவரை விதைத்தால் துவரை முளைக்குமா? எதை விதைத்தாயோ அதையே அறு. எதைக் கொடுத்தாயோ அதையே பெறு. அடிமை நீங்கி நான் ஒருகாலும் அரசியாவதில்லை. நீ கொடுத்து வைத்ததை அடையப் போகிறாய். யார் ராஜாவானால் எனக்கென்ன?

"என் சுபாவத்தைச் சுட வேணும். உனக்குக் கேடு நேர, அதை என்னால் காணக் கூடவில்லை. ஆதலால், ஏதோ இரண்டு வார்த்தை சொல்லத் துணிக்

தேனம்மா! தாயே! மன்னித்து விடு. நான் செய்தது பெரும் பிழையே!" என்றாள்.

சிற்றறிவுள்ள கைகேயி, உள்ளே கபடம் பொதிந்து மேலே அன்பின் முலாம் பூசின அவ்வசனங்களைச் செவியுற்று, அமரர்களின் மாய வலையிற் சிக்குண்டு, தனக்குச் சத்துருவாயிருந்த மந்தரையை மிகவும் வேண்டியவளாக நம்பி விட்டாள்.

வேடச்சியின் பாட்டைக் கேட்டு மதிமயங்கி நிற்கும் மான்போல், கைகேயி மந்தரையை மிகவும் கொண்டாடி அவள் மனத்திலுள்ளதைக் கூறும்படி அடிக்கடி வற்புறுத்தி வேண்டினாள். விதிக்கேற்றவாறு மதியும் கெட்டதுபோலும். பணிப்பெண்ணாகிய மந்தரை தான்விட்ட பாணம் பலித்ததை யுணர்ந்து உள்ளத்தே உவகை கொண்டாள்.

அச்சமயம் அவள், "அம்மா! நீரோ கேட்கிறீர். எனக்கோ சொல்வதற்கு அச்சமாக இருக்கிறது. 'குடும்பத்தைக் குலைக்கும் பாதகி' என்று நீரே எனக்குப் பெயரிட்டிருக்கிறீரே!" என்று வருத்தத்துடன் சொன்னாள். பிறகு அவளுக்கு விசுவாசம் உண்டாகும்படி, பல பேச்சுக்கள் நடந்தன. அயோத்தியின் ஏழரை நாட்டுச்சனி பிடித்தது போலத் தோன்றிய மந்தரை பின்னும்,

"ராணியம்மா! 'எனக்கு ராமனும் சீதையும் மிகவும் வேண்டியவர்களே; நான் ராமனுக்கு மிகவும் வேண்டியவளே!' என்று நீர் சொன்னதும் உண்மை தான். ஆயினும் அவை யாவும் கடந்துபோன

விஷயம். அந்நாள் இப்போது இல்லை. விபரீத காலம் வந்தால், மித்திரனும் சத்துரு வாகிறான்!

"நீர் 'நமது பதியின் அன்பிற்குப் பாத்திரமாயுள்ளோம்' என்ற பெருமையினால் சிறிதும் கவலையற்றிருக்கிறீர். மன்னன் உமது வசப்பட்டிருப்பதாய் நீர் நம்பியிருக்கிறீர். ஆனால் நம் மன்னரோ, நாவிலே தேனும் நெஞ்சிலே நஞ்சும் உள்ளவர். நீரோ கபடமற்ற தன்மையுள்ளவர்.

"ராமனுடைய தாய் மிகவும் கெட்டிக்காரி; ஆழ்ந்த நெஞ்சினள்; தருணம் பார்த்திருந்து தன் காரியத்தை முடித்துக் கொண்டாள். அரசன் பரதனை மாமன் வீட்டிற்கு அனுப்பியது முதலான யாவும் கௌஸல்யாதேவியின் தூண்டுதலினால் நிகழ்ந்தனவென்று நீர் அறிந்து கொள்ளும், அம்மா!

"அரசர் உம்மையே அதிகமாய்க் காதலிக்கிறார். சக்களத்திகள் இதைக் காணச் சகியார்: இது சுபாவந்தான். கௌஸல்யா தேவி தந்திரஞ் செய்து மன்னரைத் தன்வசப்படுத்திக் கொண்டு ராமனுக்கு யுவராஜ்யப் பட்டம் கட்ட முகூர்த்தம் நிச்சயித்து விட்டாள்.

"இக்குலத்தின் முறைப்படி ஸ்ரீராமனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்து வைப்பது யுக்தமே. யாவருக்கும் அது சம்மதம் தான். ஆனால், வருங்காலத்தை உத்தேசித்தே எனக்கு அச்சம் உண்டாகிறது. இனிமேல் செய்யக் கூடியது என்ன இருக்கிறது? தெய்வம் இட்ட பலனை அனுபவித்தே ஆகவேணும்!" என்று பிரசங்கஞ் செய்தாள்.

இதே விதமாகக் கோடிக்கணக்கான குயுக்திகளைக் கிளப்பி, மந்தரை கைகேயிக்குச் சூதுவாதுகளைக் கற்பித்துச் சக்களத்திகளிடம் விரோதம் வளரும்படி அவளுடைய கபடமற்ற மனத்தைக் கலைத்துவிட்டாள்.

விதியின் வன்மையால் கைகேயி மந்தரையை முழுதும் நம்பிவிட்டாள். கைகேயி மீண்டும் ஆணையிட்டு மந்தரையை வினவ, அவள் "ராணியம்மா! என்ன கேட்கிறீர்? இன்னுமா விளங்கவில்லை? சொந்த நன்மை தீமைகளைப் பசு பக்ஷிகள் கூட அறியுமே!

"பட்டாபிஷேகத்திற்கான காரியங்கள் ஆரம்பித்துப் பதினைந்து நாட்களாயின: இன்றுதான் என்மூலம் உமக்கு இச்செய்தி எட்டியிருக்கிறது. அம்ம! நான் உமது ஆதரவால் உண்ணுகிறேன்; உடுக்கிறேன். ஆதலால் உமக்கு உண்மை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்: சொல்வதினால் என்ன தோஷம்?

"முன்னே, கத்துரு விநதைக்குக் கஷ்டம் கொடுத்தாள். இனி, கௌஸல்யாதேவி உமக்குத் துன்பம் விளைவிப்பாள். பரதன் சிறையில் வீழ்ந்து கிடப்பான்; லக்ஷ்மணன் ராமனுக்குத் துணைவனாவான்!" என்று சொன்னாள்.

கைகேயி மந்தரையின் சொற்களைக்கேட்டு அச்சத்தினால் சோர்ந்து போனாள். ஒன்றும் சொல்லமுடியவில்லை. அவளுடைய உடல் வியர்த்தது. வாழைக் குருத்துப்போல் நடுங்கினாள். அச்சமயத்தில் கூனி மந்தரை தன் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

அதிர்ஷ்டம் திரும்பிவிட்டது. கபடமுடையவள் பிரியமுள்ளவளானாள். கைகேயி கொக்கை ஹம்ஸமென்றெண்ணி, அவளைப் புகழ்ந்து பேசத்தொடங்கினாள். "மந்தரையே! கேள்! நீ உரைத்தது உண்மையே. எனது வலது கண் நாள்தோறும் துடித்து வருகிறது. நான் இரவு தோறும் கெட்ட கனவுகள் காண்கிறேன். மோகத்திற்கு வசப்பட்டிருந்ததினால், அதை உன்னிடம் உரைத்தேனில்லை.

"அடி, தோழீ! என்ன செய்வேன்? நான் கபடமற்றவள். எனக்கு யார் நன்மை செய்பவர்? யார் தீமை இழைப்பவர்?—என்று கூடத்தெரியவில்லை," என்று சொன்னாள்.

அதற்கு மந்தரை, "அம்மணீ! நான் கணித சாஸ்திரம் அறிந்தவர்களைக் கேட்டேன். அவர்கள் கோடு கிழித்துக் கணக்குப் பார்த்து, 'நமது பரதனே அரசாள்வான்!' என்று உரைத்தனர். இது நிச்சயம். ராணி அம்மா! நீர் என் சொற்படி நடப்பதானால் உபாயமொன்று சொல்லுவேன். அரசர் உமக்குச் சேவை செய்வதில் ஈடுபட்டவரல்லவோ?" என்று விடை கூறினாள்.

அப்போது கைகேயி, "உன் சொற்படி நான் கிணற்றிலும் குதிப்பேன். பர்த்தாவையும் பிள்ளையையும் கூடத் துறப்பேன். அடி, தோழீ! நல்லது: நீ இப்போது எனக்குற்ற பெருந் துன்பம் கண்டு, என் நன்மைக்காக ஏதேனும் வழி சொல்லுவாயானால், நான் என்னதான் செய்யமாட்டேன்?" என்றாள்.

மந்தரையின் பேச்சு, கேட்பதற்கு இன்பந்தருவதாயும், முடிவில் பயங்கரமாயும் உள்ளது. அப்போது அவள் கைகேயியை நோக்கி, விஷங்கலந்த மதுவைப் போல இனிமையாக, "என் தலைவியே! நீர் முன்பு ஒரு நாள் என்னிடம் அறிவித்த விஷயம் இப்பொழுது உமக்கு ஞாபகம் இருக்கிறதா? இல்லையா?

"அம்மணீ! நீர் ஒருகால் அரசனிடமிருந்து இரண்டு வரங்களைப் பெற்று, அவைகளை அவரிடமே அடைக்கலமாக வைத்திருக்கிறீர். இன்று நீர் அவைகளைக் கேட்டுப் பெற்று உமது உள்ளம் குளிரும்படி செய்துகொள்ளும். அவைகளின் மூலம் உமது மகனுக்கு இராஜ்ய பாரத்தையும், ராமனுக்கு வன வாசத்தையும் அளித்துச் சக்களத்தியின் ஆனந்தத்தை நீரே அடையக்கடவீர்!

"தான் கொடுத்த வாக்குப் பிறழாத முறையில் அரசன் ராமன்மீது ஆணையிட்டுக் கூறிய பின்பே, நீர் அவ் வரங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளவேணும். இன்று இரவு கடந்து விடுமாயின், பின் காரியம் கெட்டுப் போய் விடும். என் வார்த்தை நன்மை பயப்பதென மனமார நம்பும்," என்று யுக்தி கூறினாள்.

பாவி மந்தரை இவ்வாறு கொடிய, பெரியதொரு, பாவம் இழைத்தவளாய், மேலும், "அம்மா கோபாகிரஹம் செல்லும். எடுத்துக்கொண்ட காரியம் அனைத்தையும் புத்திசாலித்தனத்துடன் செய்து முடித்தல் வேண்டும். உடனே நம்பிக்கை கொள்ளுதல் கூடாது," என்று எச்சரிக்கை செய்தாள்.

அதைச் செவியுற்ற ராணி கூனியிடம் உயிருக்கு நிகரான பிரியம் கொள்ளலானுள். மீண்டும் மீண்டும் அவளது திறமையைக் கொண்டாடி, "அடி, தோழீ! எனக்கு நன்மை செய்வதில் இப்புவியில் உனக்குச் சமமானவர் ஒருவருமில்லை. அடி! வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டவளுக்கு ஒரு ஆதாரம் கிட்டியதுபோல நீ எனக்கு இருக்கிருய்.

அடி, ஸகியே! நாளையதினம் என் மனோரதம் கைகூடக் கடவுள் செய்வாரானுல், நான் உன்னை என்றும் என் கண்ணுள் மணிபோல் கண்காணித்து வருவேன்," என்று இவ்வாறு மந்தரைக்குப் பல நன்மொழிகளைச் சொல்லிக் கைகேயி கோபாகிரஹத்தை அடைந்தாள்.

அங்கே கைகேயி கோபத்திற்கான வேஷங்களைப் பூண்டு படுத்துக்கொண்டாள். அந்நாள்வரை கைகேயி அரசு செலுத்தி வந்தாள்: ஆனுல் துர்ப்புத்தியைக் கேட்டதன் பயனுக அவளுக்கு அழிவுகாலம் கிட்டிவிட்டது. ராஜ தானியிலோ எங்கும் தடபுடலாக இருந்தது. இத்தீய நிகழ்ச்சியை எவரும் அறியவில்லை.

அன்பென்ற குணமே உடலெடுத்துக் கொடுமையாகிய குணத்தின் அருகே செல்வதுபோல, தசரதர் அந்திப் போதில் உவகையுடன் கைகேயியின் மாளிகைக்குப் போனுர்.

கோபாகிரஹத்தின் பெயரைக் கேட்ட அளவில் அரசர் திடுக்குற்ருர். அச்சத்தினுல் அவர் கால் முன் எழவில்லை. எவருடைய புஜபலத்தைக் கொண்டே இந்திரனும் தன் பதவியில் சுகமாக வாழ்கிருனே, ஏனைய அரசரும் எவரது

முகக்குறிப்பு ஒன்றையே நோக்கிக் காத்திருக்கின்றனரோ, அந்த ராஜாதிராஜர் தம் காதலியின் கோபத்தைச் செவி யுற்றுச் சோர்வடைந்தார்.

மன்மதனுடைய மகிமையையும் பிரதாபத்தையும் பாருங்கள்! திரிசூலம், வஜ்ராயுதம், வாள் இவைகளின் அடியை லக்ஷயமின்றித் தாங்கவல்ல ஈசனை ரதியின் மணவாளன் தன் மெல்லிய புஷ்ப பாணத்தினுல் அடித்து விட்டான்!

பயந்து, பயந்து மெல்ல அரசர் தம் காதலியை நாடிச் சென்றார். அவளுடைய கோலத்தைக் காண மன்னருக்கு மனவருத்தம் உண்டாயிற்று. கைகேயி பூமியில் படுத்திருந்தாள். பழைய முரட்டுச் சேலை யொன்றை இடுப்பில் உடுத்திருந்தாள். அவளது ஆபரணங்கள் அனைத்தும் எங்கும் சிதறிக் கிடந்தன.

அவளுக்கு வரப்போகும் வைதவ்ய கதியை அறிவிப்பதுபோல அந்தத் துஷ்ட புத்தியின் வேஷம் இருந்தது. அரசர் அவள் சமீபம் சென்று மென்மையான மொழியில், "பிராணப் பிரியே! என்ன கோபம்! ஏ, சுந்தரமுகீ! அழகிய கண்களைப் படைத்தவளே! குயில் போன்ற குரலினாய்! யானை நடை கொண்டவளே! உன் பிணக்குக்குக் காரணம் யாது? அதை எனக்கு உணர்த்திடுவாய்," என்று திரும்பத் திரும்ப வினவினார்.

மேலும் அரசர், "அடி, பிரியே! உனக்குத் தீங்கிழைத்தவன் யார்? இருதலை படைத்தவன் எவனுளான்? யமன்

எவனைக் கொண்டுபோகப் பார்க்கிறான்? நீ சொல்லு: நான் செய்யவேண்டியது யாது? எந்த ஆண்டியை அரசனாக்க வேணும்? நம் நாட்டை விட்டு எந்த மன்னனைத் துரத்த வேணும்?

"ஏ, காதலீ! என் பிராணன், பிள்ளை, சொத்து, சுதந்திரம், குடும்பம், பிரஜை, எல்லாமே உன்னுடைய ஆதீனத்தில் உள்ளவை. இது சிறிதும் அபத்தமன்று. வேண்டுமானால் நூறுமுறை ராமன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.

"அடி, பெண்ணே உனக்கு எது வேணுமோ, அதைக்கேட்டு உள்ளங்குளிரப் பெற்றுக்கொள்வாய். உனது அழகிய உடலில் ஆபரணங்கள் பூண்டு அலங்கரித்துக்கொள். அடி, காதலீ! சமயாசமயம் உணரவேண்டாமா? விரைவில் இத் துர்வேஷத்தைக் களைந்தெறிவாயாக.

"அழகிய கண்ணாய்! நாளை ராமனுக்கு யுவராஜ பதவியளித்து முடிசூட்டப் போகிறேன். ஆதலால் சுபமான அலங்காரங்களைச் சீக்கிரம் செய்துகொள்," என்று கெஞ்சிக் கேட்க, பழுத்து வந்த பிளவையில் விரல் பட்டதுபோல் அந்தப் பாவியின் மனம் பின்னும் பற்றி எரியலாயிற்று.

அரசர் நீதிசாஸ்திரங்களில் நிபுணராயிருப்பினும், பெண்களின் சுபாவம் அளத்தற்கரிய, ஆழங்கொண்ட, சமுத்திரம் போன்றிருப்பதினால், அவளது உள்ளத்தின் மர்மத்தை அறிந்து கொள்ளவில்லை.

அப்போது, கைகேயி கபடக் காதலை வெளிப்படுத்திச்

சிரித்த முகத்தினளாய், முகத்தையும் கண்களையும் மினுக்கிக் கொண்டு, "பிராண நாதா! 'கேள்! கேள்!' என்று சொல்லிக் கொண்டே யிருக்கிறீர். ஆயினும் என்றைக்காவது ஒன்றைக் கொடுத்தோம், வாங்கிக்கொண்டோம் என்ப துண்டோ? அதுதான் இல்லை. நீர் எனக்கு இரண்டு வரங்கள் அளிப்பதாக உரைத்திருக்கிறீர். ஆனால், அவை கிடைப்பதே சந்தேகமாயிருக்கிறது!" என்றாள்.

அதற்கு அரசர் நகைத்து, "உன்னுடைய இரகசியத்தை இப்பொழுது அறிந்து கொண்டேன். பிணங்குவதில் உனக்குப் பிரியம் அதிகம். நீ இந்த இரு வரங்களையும் அடைக்கலமாக வைத்தபின்பு, அவற்றைக் கேட்டு வாங்கிக் கொள்ளவில்லை. நானும் மறந்து போனேன். நானோ சூது வாது அறியாதவன்.

"என்மேல் வீணாகப் பொய்ப்பழி சுமத்தாதே. என்னிட மிருந்து, இரண்டுக்கு மாறாக நாலு வரங்களை ஏன் கேட்டு நீ பெற்றுக் கொள்ளக்கூடாது? உயிர் நீங்கினும் நீங்குக: சொன்ன வார்த்தை தவறக்கூடாது. இது ரகுகுலத்தாரின் உறுதியான கொள்கை. வெகு காலமாகத் தவறாது நடந்து வருகிறது.

"ஒருகோடிக் குன்றிமணிகள் சேரினும் பர்வதத்திற்கு நிகராகுமோ? அதுபோல் பாவக் கூட்டமும் அசத்தியத்திற்கு ஈடாகாது. 'ஏனைய நற்கருமங்களுக்கெல்லாம் சத்தியமே மூலகாரணம்' என்று வேத புராணங்களால் தெரிகிறது. மனுதர்ம சாஸ்திரத்திலும் அது கண்டுள்ளது. இதற்குமேல் நற்கருமங்களுக்கும் அன்பிற்கும் எல்லையாயிருக்கிற ராமன்மீது ஆணையிட்டுள்ளேன்!" என்றுரைத்தார்.

இங்ஙனம் தான் நாடிய விஷயம் பக்குவத்திற்கு வரவே, பக்ஷியின் குடலைப் பிளக்கும் வேடனைப்போன்று துர்ப்புத்தி யுள்ள கைகேயி நகைத்தவாறே, "ஆருயிர்த்தலைவ! என் மனத்திற்குப் பிடித்த வரங்கள் இன்னவென்று கூறுகிறேன். கேளுங்கள்: ஒன்று, பரதனுக்கே முடி சூட்டல் வேண்டும். நாதா! மற்றதையும் கைகூப்பிக் கேட்டுக் கொள்ளு கிறேன். அவசியம் என் இஷ்டத்தை நிறைவேற்றி வைத்தல் வேண்டும். அதாவது, ராமன் இராஜ போகத்தில் பற்றற்று முனிவர் வேடந்தாங்கிப் பதினாலு வருஷம் வனவாசம் செய்தல் வேண்டும்!" என்று சொன்னாள்.

கைகேயி மெல்ல மொழிந்த இச்சொற்களைக்கேட்ட அளவில், தசரத சக்கரவர்த்தி சந்திர கிரணங்களால் தாக்கப் பட்ட சக்ரவாகப் புள்ளைப்போல மனங்கலங்கினார். இராஜாளியால் தாக்கப்பட்ட சிட்டுக்குருவிபோலத் திக்பிரமை யடைந்தார். மின்னல் ஒழுகிப் பட்ட பனைமரம் போல நிலையற்றுத் திகைத்தார்.

"அந்தோ! என்மனோரதமாம் கற்பகம் பூத்துப் பிஞ்சுவிடுந் தறுவாயில், கைகேயியாம் காட்டுயானை அதனை வேருடன் பிடுங்கி அழித்ததே! அயோத்தியைப் பாழாக்கினாளே!

ஆ, தெய்வமே! என்ன நிகழ இருந்தது! என்ன நேர்ந்தது! நான் மாதர் மீது விசுவாசம் கொண்டேனே! சித்தி கைகூடும் சமயத்தில் யோகியை அஞ்ஞானம் சூழ்ந்து கொண்டு அழித்து விட்டது போலாயிற்று!"

அரசன் இவ்வாறு மனத்திற்குள்ளே முணுமுணுத் திருக்க, அதைப் பார்த்துக் கெடுமதி படைத்த கைகேயி

மிகவும் கோபமுற்று, "பரதன் உமது மகனல்லனோ? நீர் என்னை விலைகொடுத்து வாங்கினீரோ? என் வார்த்தையைக் கேட்ட அளவில் உமக்கு அம்பு தைத்தது போலாயிற்றோ? முதலிலேயே நன்றாக யோசித்துப் பேசியிருக்கலாமே! நீர் ரகு குலத்தில் உதித்த சத்தியசந்தர்! உண்டு அல்லது இல்லை— என்று வெளிப்படையாகத் தெரிவித்து விடக்கூடாதா?

"நீர் தான் வரமளிப்பதாகச் சொன்னீர்! சத்தியத்தைப் புகழ்ந்து வரங்கொடுப்பதாக இசைந்தீர்! நான் மென்று தின்னப் பொரிகடலை கேட்பேன் என்று நினைத்தீர்போலும். இப்பொழுது நீர் வரமளிக்கவேண்டாம். சத்தியம் தவறி, உலகத்தில் அபகீர்த்தியைத் தேடிக் கொள்ளும்.

"தங்கள் உடல் பொருள் இவைகளைத் துறந்தும், சிபிச் சக்கரவர்த்தி, ததீசி முனி, பலிச் சக்கரவர்த்தி, இவர்கள் தங்கள் பிரதிக்ஞையையும் சொல்லையும் காப்பாற்றினர்," என்று இவ்வாறு சுட்ட புண்ணில் உப்பைத் தெளிப்பதுபோல, கைகேயி மிகவும் கடுமையான சொற்களைச் சொல்லலானாள்.

தர்ம துரந்தரரான தசரத சக்கரவர்த்தி மெல்லத் தம் மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டார். பின்பு கைகேயியை விழித்துப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டு இவள் மிகவும் நொய்ம்மையான இடத்தில் என்னைக் கத்தியால் குத்திவிட்டாள்!" என்று பெருமூச்சு விட்டார்.

அப்போது அரசர் கைகேயியைப் பயங்கர வடிவங் கொண்ட கொடியவளாய்க் கண்டார். "உண்மையில், இவள் என் பிராணனை வாங்கி விடுவாளோ?" என்று யோசித்தார். மனத்தை மெல்லத் திடப்படுத்திக் கொண்டு,

அவளைத் துதித்த வண்ணம் வணக்கத்துடன் பின்வருமாறு பேசலுற்றார்.

"ஏ, பிரியே! பயந்த சுபாவ முள்ளவளே! என் பாலுள்ள பிரீதியையும் விசுவாசத்தையும் மறந்து இவ் விதமான கொடிய வார்த்தைகளை ஏன் பேசுகிறாய்? சிவபிரான் சாக்ஷியாக நான் உண்மையே கூறுகிறேன். எனக்கு ராமன் பரதன் இருவரும் இரு கண்கள் பொன்றவர்கள்.

"நான் விடியற்காலம் தூதரை அனுப்புகிறேன்: செய்தியைக் கேட்டவுடன் சகோதரர் இருவரும் ஓடிவரு வார்கள். நல்ல நாள் ஒன்று வைத்து யாவும் ஆயத்தம் செய்தபின், மிகவும் ஆடம்பரத்துடன் பரதனுக்கே பட்டா பிஷேகஞ் செய்து வைக்கிறேன்.

"ராமனுக்கு இராஜ்யத்தில் ஆசை கிடையாது. மேலும் அவன் பரதன்பால் மிகுந்த அன்புடையவன். மூத்தவன் இளையவன் என்பதை மனத்தில் ஆராய்ந்து இராஜ நீதியைச் செய்தேன். இராமன் தாய் கோசலை என்னிடம் ஒன்றும் கூறவில்லை என்பதற்கு ராமன்மேல் நூறு முறை வேண்டுமானாலும், ஆணையிட்டுக் கூறுகிறேன். உன்னைக் கேளாமல் நான் இவையெல்லாம் செய்துவிட்டேன். இதனால்தான் என் மனோரதம் கைகூடாது போயிற்று.

"இப்போது கோபத்தைவிட்டுச் சுபமாக அணிகலங்களை எடுத்து அணிந்துகொள். சில தினங்களில் பரதன் யுவராஜர்வாகி விடுவான். நீ சொன்னவைகளில் ஒன்றுதான் எனக்கு வருத்தத்தைத் தருகிறது. நீ கேட்ட இரண்டாவது

வரம் மிகவும் சிக்கலானது. அவ்வரத்தின் தீயினால் என் மனம் இன்னும் எரிந்துகொண்டிருக்கிறது.

"உனக்கு என்னிடம் உண்டான சினத்தினால் இங்ஙனம் என்னைப் பரிகாசம் செய்ய நினைத்தாயோ? அல்லது நீ கேட்டது உண்மையோ? உன் குரோதத்தை விட்டு ராமன் செய்த குற்றத்தை இன்னதென்று சொல்லு. ராமனை மகா குணவான் என்றும், நல்லொழுக்கம் படைத்தவனென்றும் எல்லாரும் கொண்டாடுகிறார்களே?

நேசமுடையவளே! கோபத்தையும், பரிகாசத்தையும் விட்டு விடமாட்டாயா? நான் என் கண்களால் காண வேண்டுமென்று இருந்தால், நன்கு ஆலோசித்து, வேண்டிய வரத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்.

"நீர் இன்றி மீன்கள் உயிர் வாழ்ந்தாலும் வாழலாம்; மணியை யிழந்த நாகம் பிழைத்தாலும் பிழைக்கும்: ஆனால் ராமன் இன்றி என் உயிர் நில்லாதே! உண்மையாக உரைக்கிறேன்; உள்ளத்தில் கபடம் சிறிதும் இல்லை; இது என்னுடைய சுபாவம்," என்றார். இதைக் கேட்டதும் கைகேயின் மனம் நறுநெய் வார்த்த அழல் போலாயிற்று.

அதற்குக் கைகேயி, "சக்கரவர்த்தியே! நீர் கோடி உபாயம் செய்துமென்ன? இங்கு என்னிடம் உமது சூது ஒன்றும் நடவாது. நான் கேட்ட இரண்டாவது வரம் உண்டு அல்லது இல்லை என்று கூறிக் கீர்த்தியையோ, அபகீர்த்தியையோ தேடிக்கொள்ளும். வார்த்தையை வளர்த்தல் எனக்கும் பிடிக்கவில்லை. ராமன் சாதுதான்; நீரும்

பெரியவர்; கெட்டிக்காரர்! ராமனது அன்னையும் நல்லவளே. எல்லாருடைய குணங்களையும் நான் அறிந்துள்ளேன். கோசலை என்பால் கொண்டிருக்கும் அன்பிற்குத் தக்கபடி அவள் வெகுகாலம் மறவாதிருக்கக்கூடிய கைம்மாறு செய்கிறேன். அதை அவள் அனுபவிப்பாள்.

"அரசரே! நாளையதினம் பொழுது புலர்ந்ததும் ராமன் தவவேடந் தாங்கி வனத்திற்குச் செல்லப் புறப்படா விடின், எனக்குச் சாவும் உமக்கு அபகீர்த்தியும் சம்பவிப்பது திண்ணம். இதை அறிந்துகொள்ளும்," என்றாள்.

கொடியாள் கைகேயி இங்ஙனம் கூறிநிற்க, அச்சமயம் அவள் இருகரை புரண்டோடும் கோப நதி போலப் பார்க்கொணு நிலையிலிருந்தாள். இரு வரதானங்களே அந் நதியின் கரைகள் என்னலாம்; அவளது கடினமான அடமே நீரோட்டம்; மந்தரையின் சொற்பொழிவே அதனுள் நீர்ச்சுழல்; என்னலாம். அவ்வாற்றுப் பெருக்கம் தசரதனும் விருக்ஷத்தை வேருடன் கிளப்பிக் கொண்டு விபத்துரூபமான கடலுக்கு இழுத்துச் செல்வது போலிருந்தது.

அது முழுமையும் உண்மைதானென்று அரசர் கண்டார். மனைவி என்ற பெயரால் மரணம் தம் தலைமேல் தாண்டவமாடு கிறது என்று உணர்ந்தார். கைகேயியின் காலைப் பிடித்து அவளை உட்காரவைத்து, "அம்மா, தாயே! சூரிய குலத்திற்குக் கோடாலிக் காம்பாகாதே!" என்று வேண்டிக்கொண்டார்.

அப்போது கைகேயி, "நீங்கள் செய்து கொடுத்த

சபதத்தையாவது விட்டு விடுங்கள். இன்றேல் மனத்தைத் தைரியப் படுத்திக் கொள்ளுங்கள். பெண்டிரைப்போல் ஓலமிட வேண்டாம். சத்திய சந்தர்களுக்கு வீடு, வாசல், மனைவி, மக்கள், உடல், பொருள், பூமி யாவும் துரும்புக்குச் சமமாகச் சொல்லப்படுகின்றன!'' என்றாள்.

இவ்வாறு கைகேயி கூறிய கொடுமொழிகளைக் செவி யுற்று அரசர், "அடி! நீ எது வேணுமானாலும் சொல்லிக் கொள். உன்மேல் குற்றமில்லை. உன்னைப் பேய்பிடித்து ஆட்டுகிறது. யமன் உன்மூலம் என்னை அழைக்கிறான்!

"ஆயினும் இதனால் எனக்கு வரப்போகும் பச்சாத்தாபமும், நீ பின் அடையப் போகிற மாசும், நாம் இறந்தாலும் அழியாது நிலைத்தேயிருக்கும். இப்போது உனக்கு எது இஷ்டமோ அதைச்செய். முகத்தை மூடிக்கொண்டு என் கண்களுக்கு வெளியே போய் உட்கார்!'' என்றார்.

இவ்வாறு, அரசர் பலவாறு அறிவுறுத்தியும் அவள் கேளாமற் போகவே, அவளை நோக்கி, "நீ இங்ஙனம் எல்லாவற்றையும் பாழாக்கவோ முனைந்திருக்கிறாய்?'' என்று வினவியவாறே பூமிமீது சாய்ந்துவிட்டார். கபட சாமர்த்தியம் உள்ள கைகேயி யாதொன்றும் பகராது சுடுகாடுபோல், விழித்துக் கொண்டிருந்தாள்.

அரசர் மிகவும் மனங்கலங்கி இறகுகள் இழந்த பக்ஷி போல, "ராமா! ராமா!'' என்று ஜபித்தவாறு மூர்ச்சையுற்று விழுந்தார். அப்போது அவர் மனத்துள்ளேயே, "இந்த விஷயத்தை எவரும் ராமனுக்குச் சொல்லாதிருக்க

வேணுமே? பொழுது புலராமலேயே இருக்கலாகாதா?" என்று பிரார்த்தித்துக் கொண்டார்.

அவ்விரவு முழுதும் அரசர் இங்ஙனம் புலம்பிப் புரண்டு கொண்டே யிருக்கப் பொழுதும் விடிந்தது. அரசர் மாளிகையில் சங்கு, வீணை, புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களின் ஒலி கேட்கலாயிற்று. மாகதர்களும் கட்டியக்காரர்களும் பாடிய கீர்த்திப் பாடல்களைக் கேட்கக் கேட்க அரசருக்குக் கூரிய பாணம் தைப்பதுபோலிருந்தது. உடன்கட்டை ஏறச்செல்லும் ஸ்திரீக்கு எவ்வாறு ஆடையாபரணங்களில் மனங்கொள்ளாதிருக்குமோ அவ்வாறே இம்மங்கள வாத்தியங்கள் அரசருடைய மனத்தைத் துன்பப்படுத்தின.

ராமனைக் காணவேண்டுமென்ற அவாவினால், இரவு முழுதும் ஜனங்களுக்கு உறக்கமேயில்லை.

அரண்மனை வாசலில் மந்திரிகள் சிப்பந்திகள் ஜனங்கள் எல்லோரும் பெருங்கூட்டமாய்க் கூடியிருந்தார்கள். அவர்கள் அனைவரும் சூரியோதயமாவதைக் கண்ணுற்று, "இன்று இன்னும் அயோத்தி மன்னர் விழித்துக் கொள்ளக் காணோமே; இதன் காரணம் என்ன?" என்று வினவலாயினர்.

அப்போது, சுமந்திரர் அரசரது மாளிகைக்குள் பிரவேசித்தார். அந்த இடம் பெரும்பூதம் பாய இருப்பது போலவும், ஆபத்தும் அருந்துயரும் சேர்ந்து வாழ்வது போலவும் இருந்தது.

அங்கேயுள்ள பயங்கரமான தோற்றத்தைக் கண்டு

அச்சத்துடன் சுமந்திரர் அரசரது பள்ளியறைக்குள் பிரவேசித்தார்.

அங்கே வேருடன் வெட்டப்பட்ட தாமரைத் தண்டு போல் சோகத்தினால் மூர்ச்சித்துக் கீழே விழுந்து கிடந்த அரசரைக் கண்டார். அப்போது அமங்களம் நிறைந்த கைகேயி அவரைப் பார்த்து, "நீர் விரைவில் சென்று ராமனை அழைத்துவாரும். பிறகு வந்து சமாசாரங்களை விசாரிக்கலாம்," என்றாள்.

சுமந்திரர் அரசரை உற்று நோக்கி அவரது அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு, "ராணி ஏதோ சூது செய்திருக்கிறாள்!" என்று ஊகித்தார்.

பிறகு சுமந்திரர் வெளிவந்து மாளிகை வாயிலில் காத்திருந்த ஜனங்களுக்கு ஏதோ சமாதானம் கூறிவிட்டு, ரகு குலதிலகமான ஸ்ரீராமன் இருக்கும் இடத்திற்குச் சென்றார். சுமந்திரர் வருவதை ஸ்ரீராமன் கண்டு, விரைந்தெழுந்து அவரைத் தந்தைக்குச் சமமாகப் பாவித்து வரவேற்றுப் பூஜித்தான்.

சுமந்திரர் ராமனது திவ்ய முகத்தைக் கண்ணால் பருகி, ரகு குலதிலகனான ஸ்ரீராமனைத் தம்முடன் மாளிகைக்கு அழைத்துச்சென்றார். ராமன் ஒரு வித ஆடம்பரமுமின்றிக் கால்நடையாகவே சுமந்திரருடன் செல்வதை ஜனங்கள் கண்டு சிந்தை கொள்ளலாயினர்.

ரகு வம்சத்தின் பூஷணமாகிய ராமன் அரசரது மாளிகைக்குள் சென்று அவர் இருக்கும் விபரீதமான

கோலத்தைக் கண்டான். கிழட்டு யானை யொன்று பெண் சிங்கத்தைக் கண்டு, பீதியுற்று விழுந்திருப்பது போல் பூமியில் விழுந்து கிடந்தார் தசரத சக்கரவர்த்தி. மன்னர் உதடுகள் வறட்சி யடைந்திருந்தன. சரீரம் முழுதும் அனல் போல் எரிந்து கொண்டிருந்தது. மணியிழந்த அரவம் போன்றார் மன்னர். பக்கத்தில் கைகேயி காலனின் காலத்தைக் கணக்கிடுபவள் போல் நிற்பதையும் ராமன் கண்ணுற்றான்.

ராமன் இயற்கையில் மென்மையான இளகிய மனமுடையவன். அவன் இதுகாறும் ஒருபோதும் துன்பம் என்பதைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

அவன் சமயமறிந்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, இனிமையான குரலில் அன்னை கைகேயியை நோக்கி, "அம்மா! தந்தை வருத்தப்படுவானேன்? அதன் காரணத்தைத் தெரிவித்தால், அவர் துயர் நீங்குமாறு முயற்சி எடுத்துக் கொள்ளலாம்," என்றான்.

அதற்குக் கைகேயி, "அப்பா, ராமா! கேள்: உன்மீது அரசர் அதிக அன்பு வைத்திருக்கிறார். இது தான் அவர் துன்பத்திற்கெல்லாம் காரணம்.

"எனக்கு அவர் இரண்டு வரங்கள் தருவதாக முன்பு சபதம் செய்திருந்தார். எனக்கு இஷ்டமானது எதுவோ, அதை நான் கேட்டேன். உன்னிடம் அவ்விஷயத்தைத் தெரிவிக்க அவர் சங்கோசப்படுகிறார். ஆதலால் அவற்றைக் கேட்டதும் பெருங்கவலை கொண்டார்.

ஒரு பக்கம் பிள்ளைமேல் பாசம். மறுபக்கம் எனக்குக்

கொடுத்த வாக்குறுதி. இவ்விரண்டு சங்கடங்களின் மத்தியில் கட்டுண்டு அரசர் தவிக்கிறார். உன்னால் ஏதேனும் செய்யக் கூடுமானால், அரசர் கட்டளையைத் தலைமேற் கொண்டு இவரது இக்கொடிய துயரை நீக்கி வை,'' என்று பயமின்றி யாரும் தடுப்பாரற்றுக் கொடுமையாய், யாரும் கேட்டு அச்சமுறும் வண்ணம் சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போது, ராணியின் நாக்கு வில்லாகவும், விதம் விதமான வார்த்தைகள் கூரிய அம்புகளாகவும், தசரத மன்னரே அவைகளால் அடிக்கப்படும் மென்மையான குறியாகவும், தோன்றின.

கொடுமையே பலம்மிகுந்த ஒரு வீரனுருவந்தாங்கித் தனுர் வித்தையை அப்பியசிப்பதுபோல, அவள் நடந்த விஷயங்களை யெல்லாம் ராமனுக்கு எடுத்துக் கூறித், துராக்கிரகமே உருவெடுத்தவள்போல் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

இயற்கையில் ஆனந்தத்திற்கு இடமாகவும், சூரிய குலத்திற்குத் தினகரன் போன்றுமுள்ள ராமன், மனத்தில் புன்னகை கொண்டவண்ணம், வாக்குக்கே பூஷணமாகவும், குற்றமில்லாமலும், மென்மையாகவுமுள்ள நல்ல மொழிகளைச் சொல்லலானான்.

"அம்மா! கேள்! பெற்றோர் சொல்லும் வார்த்தைகளில் அன்புள்ளவனே பெரும் பாக்கியம் படைத்த புத்திரனாவான். அம்மா! அங்ஙனம் தாய் தந்தையரைச் சந்தோஷப் படுத்தும் புத்திரன் உலகமுழுவதிலும் கிடைப்பது துர்லபம்'' என்றான்.

"அப்பால் ராமன் கைகேயியை நோக்கி, "வனத்தில் முனிவர்களை அதிகமாகச் சந்திக்கலாகும். எனக்கு எல்லா விதத்திலும் இது நன்மையே. மேலும், தந்தை கட்டளையும், உம்முடைய விருப்பமும் இதில் அடங்கியுள்ளன.

"அன்றியும், என் ஆருயிர்த் தோழனும் தம்பியுமான பரதன் இராஜ்யத்தை யடைவான். ஆதலால் எல்லா விதத்திலும் கடவுள் எனக்கு அனுகூலமாகவே யிருக்கிறார். இவ்வித நல்ல உத்தேசத்தின் பொருட்டாவது நான் வனஞ் செல்லாது போனால், முட்டாள்களின் கூட்டத்தில் என்னைத் தான் முதல்வனாகக் குறிப்பிடுவார்கள்!

"கற்பக விருக்ஷத்தைவிட்டு ஆமணக்கை வைத்து வளர்ப்போரும், அமுதத்தை வெறுத்து விஷத்தை வேண்டு வோருங்கூட, இவ்விதமான தருணம் வாய்க்கும் போது இதை ஒருநாளுங் கைவிடார். அம்மா! இதை நன்கு யோசித்துப் பாருங்கள்.

"அம்மா! அரசர் முற்றும் சிந்தை கொண்டிருப்பதைக் காண்பது ஒன்றே எனக்கு விசேஷ வருத்தத்தை உண்டாக்குகிறது. இந்த அற்ப விஷயத்திற்காக இவ்வளவு பெருந் துயர் தந்தைக்கு உண்டாவதேன்? என்னால் இது நம்ப முடியவில்லையே!

"அரசர் திடசித்தம் படைத்தவர்; குணங்களின் ஆழமான கடல். என்னால் ஏதோ பெரும் பிழை நேர்ந்திருக்கிறது. ஆதலால்தான் அரசர் என்னுடன் சிறிதும் வார்த்தை யாடவில்லை போலும்! அம்மா! உம்மேல் ஆணை. நீர்

எனக்கு உண்மையைக் கூறவேணும்," என்று வினவினன்.

இதற்குள் அரசர் மூர்ச்சை தெளிந்து ராமனை நினைத்துக் கொண்டு தரையில் புரண்டார். தருணம் பார்த்து மந்திரி சுமந்திரர் அவருக்கு ராமன் வருகையை அறிவித்து விண்ணப்பஞ் செய்து கொண்டார்.

சோகத்தால் பரிதவித்துக் கொண்டிருந்த அரசரால் வாய்திறந்து பேச முடியவில்லை. அடிக்கடி ராமனை மார்புறத் தழுவி அவன் காட்டிற்குச் செல்லாது தடுக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டார்.

"இந்நெடிய உலகெங்கும் என் அபகீர்த்தி பரவினாலும், பரவட்டும். என் நற்கீர்த்தி அழியட்டும். நரகத்தில் விழவோ, சுவர்க்கத்திற்குச் சொல்லவோ? எதுவானாலுஞ்சரி; பொறுக்க முடியாத எத்துயரையும் நான் அனுபவிக்கச் சித்தமே! ஆயினும், ராமனை என்னிடமிருந்து அகற்ற வேண்டாம்," என்று அரசர் இங்ஙனம் மனத்துக்குள்ளேயே புலம்பி வெதும்பி, வாயினால் ஒன்றுஞ் சொல்லாமலிருந்தார். அவருடைய மனம் அரச மரத்தின் இலைபோல ஊசலாடிக் கொண்டிருந்தது.

இங்ஙனம், தந்தை அன்பிற்கு வசப்பட்டு இருப்பதையும், தாய் பின்னும் ஏதோ சொல்ல இருப்பதையும் ஊகித்தறிந்த ராமன், தேசம் காலம் சமயம் இவைகளை ஆலோசித்து அதற்குத் தக்கவாறு மிக்க பணிவுடன் "தந்தாய்! அதிகப்பிரசங்கித்தனமாய் நான் ஏதேனும் தகாத சொல்லை மொழிந்தாலும், அது என் சிறு பிள்ளைத்தனமென்று தாங்கள் பொறுத்தருள்க.

"தாங்கள் இவ்வளவு அற்ப விஷயத்திற்கு இவ்வளவு பெருந்துயர் கொள்வானேன்? விஷயத்தை முன்பே என்னிடம் அறிவித்திருக்கக் கூடாதா? ஐயனே! உமது நிலைமையைப் பார்த்துவிட்டுப் பின் தாயாரைக் கண்டு கேட்டேன். இப்பொழுது எல்லா விவரங்களும் அறிந்து என் உடம்பு குளிர்ந்தது.

"பிதாவே! இச்சுப சமயத்தில் அன்பின் வசப்பட்டுத் துக்கிப்பதை விட்டுச் சந்தோஷமாக எனக்குப் போக விடை கொடுங்கள்," என்று கூறிவிட்டுப் புளகாங்கிதமானன், மறுபடியும் தந்தையை நோக்கி, "தங்களுடைய கட்டளையை நிறைவேற்றி நான் பிறந்த பயனை அடைந்து, விரைவில் தங்களிடம் திரும்பி வந்துவிடுகிறேன். போக உத்தரவு கொடுங்கள். அன்னை கோசலையிடம் உத்தரவு பெற்று வந்து, தங்கள் திருப்பாதத்தைத் தொட்டுப் பின் நான் வனம் புகுவேன்," என்று ராமன் கூறி அவ்விடத்தினின்றும் புறப்பட்டுப் போனன்.

தசரத சக்கரவர்த்தியோ கொடிய துக்கத்தில் ஆழ்ந்து செயலற்றிருந்தார். தேள் கொட்டியவுடன் உடலெங்கும் விஷம் ஏறுவதுபோல, இக்கொடிய செய்தி ஊரெங்கும் பரவியது.

காட்டில் தீப்பிடித்துக் கொள்ள, ஆங்குள்ள விருட்சங்களும், அவைமீது படர்ந்துள்ள கொடிகளும் வாடிச் சோர்வடைவதுபோல, இச்செய்தியைக் கேட்ட அளவில் அயோத்தி நகரத்திலுள்ள ஆண் பெண் அனைவரும்

மனக்கலக்கமுற்றார். யார் யார் எந்த எந்த இடத்தில் இச்செய்தியைக் கேட்டனரோ, அவரவர் அந்த அந்த இடத்தில் நின்று தலையில் அடித்துக் கொள்ளலாயினர். எங்கும் சகிக்க முடியாத பெருந்துயர் குடிகொண்டது.

"எல்லாம் செவ்வையாகவும் அழகாகவும் முடிய இருக்கையில், விதி குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்ததே!" என்று யாவரும் கூடிப் பேசலாயினர். "இந்தப் பாவிக்கு இந்த எண்ணம் பிறப்பானேன்? தனக்குத் தங்க நிழல் கொடுத்த வீட்டில் நெருப்பை வைத்தாளே!" என்று ஆங்காங்கே ஜனங்கள் கைகேயியைத் திட்டலாயினர்.

பின்னும் பலர், "இவள் தன் கையினாலேயே தன் கண்களைப் பிடுங்கிப் பார்க்க விரும்புகிறாள்; அமுதத்தை எறிந்துவிட்டு விஷத்தை ருசி பார்க்க விரும்புகிறாள்! துரதிர்ஷ்டம் பிடித்தவளும், துர்ப்புத்தியுடையவளுமான கைகேயி, ரகு வம்சமாகிய மூங்கிற் காட்டிற்குத் தீயைப் போல் ஆயினளே!" என்றார்கள்.

வேறு சிலர், தங்களுக்கு அமுதத்தைக் காட்டி விட்டு முடிவில் விஷத்தைக் காட்டிய பிரமன்மீது குறைகூறினார்கள். நகரமெங்கும் ஓரே அமளியாக இருந்தது. மக்கள் அனைவரும் துக்கத்தில் மூழ்கியிருந்தனர். அவர்கள் உள்ளத்திலே சகிக்கக்கூடாத தாபம் ஏற்பட, சந்தோஷமெல்லாம் பறந்து போயிற்று.

பெரியோர்களும், கைகேயிக்கு மிகவும் வேண்டிய தோழிமார்களும், பிராயம் முதிர்ந்த பிராமண ஸ்திரீகளும்

கைகேயிபால் சென்று அவளுடைய சுபாவத்தையும் ஒழுக்கத்தையும் புகழ்ந்து பேசி, அவளுக்கு உபதேசம் செய்யத் தொடங்கினார்கள். ஆனால் அவர்களுடைய நன்மொழிகள் அவளுக்குக் கூரிய பாணங்களைப்போல் தோன்றின. கோபம் பொங்கியெழப் பொறுக்கமுடியாத சினங்கொண்டு கைகேயி தன் தோழிகள் சொன்ன நல்லுரைகளைக் கேட்டு யாதொரு விடையும் பகராது மௌனமாய், பசித்திருக்கும் ஒரு சிங்கம் மான் கூட்டத்தை நோக்குவதுபோல அவர்களை வெறுத்து நோக்கினாள்.

தோழிமார் அவளுடைய நோய் குணப்படாதென்று உணர்ந்து, "சீ! அற்ப புத்தி படைத்தவளே! துரதிர்ஷ்டம் பிடித்தவளே!" என்று கைகேயியைத் திட்டியவாறு அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

இங்ஙனம் அரசரது மாளிகையில் ஆண் பெண் அடங்கலும் துயரக்கடலில் ஆழ்ந்திருக்க, ராமன் தன் அன்னை கௌஸல்யா தேவியின் மாளிகைக்குள் பிரவேசித்தான்.

ராமபிரானது திருமுகம் சந்தோஷத்தினால் தெளிந்திருந்தது. உள்ளத்தில் உத்ஸாகம் பன்மடங்கு அதிகரித்திருந்தது. தான் வனஞ் செல்வதைத் தந்தை தடுக்கவில்லையென்று துக்கமற்றிருந்தான்.

ரகுகுல பூஷணனான ராமன் இரண்டு கைகளையும் குவித்துத் தெளிந்த சித்தத்துடன் அன்னையின் அடியில் தலையை வைத்துப் பணியவே, தாய் மகனை வாரித் தழுவி

ஆசிமொழிகளைக் கூறிப் பின் அனேக ஆடை ஆபரணங்களை அவனுக்கு அளித்தாள்.

அச்சமயம் அவளுக்கு உண்டான ஆனந்தத்தையும் அன்பையும் சொல்ல இயலாது. தரித்திரனுக்குப் பெரும் பொருள் கிடைத்தது போலிருந்தது. தாய் கௌசலை மிக்க பிரியத்துடன் ராமனுடைய சுந்தர வதனத்தைக் கண்ணுற்று இனிய மொழிகள் சொல்லத் தொடங்கினாள்:

" அப்பா, குழந்தாய்! தாய் உனக்குத் திருஷ்டிதோஷம் கழிக்கிறாள். புண்ணியத்தின் பயனும், இன்பத்திற்கு எல்லையும், பிறப்பினால் உண்டான பெரும் பேற்றின் முழு உருவமும் போலிருப்பவனே! மைந்தா! ஆனந்தத்தை அளிப்பதும், மங்களகரமானதுமாகிய அந்த நன்முகூர்த்தம் எப்பொழுது? அதைச் சொல்லு.

" அப்பா! நீ சீக்கிரம் ஸ்நானம் செய்து உன் மனத்திற்கு இஷ்டமான தின்பண்டங்களை அருந்தி, அதன்பின் நீ உன் தந்தையின் சமீபம் போயிரு. வெகு நேரமாகிவிட்டது," என்று உரைத்துவிட்டுத் திருஷ்டி சுற்றிப்போட்டாள்.

தர்ம துரந்தரனான ராமன் தர்மத்தின் போக்கை உணர்ந்தவனாய்த் தாயைப் பார்த்து மிகவும் மென்மையான மொழிகளைச் சொன்னான். " அம்மா! தந்தை எனக்கு வனமாகிய ராஜ்யத்தை அளித்துள்ளார். அங்கு எல்லா விதத்திலும் எனக்குப் பெரும் பயன் கைகூடும்.

" நான் கானகம் செல்லும்போது, ஆனந்தமும் சுபமும் உண்டாகும் விதமாக நீங்கள் சந்தோஷத்துடன்

ஆசிமொழிகளைக் கூறியனுப்பவேணும். அம்மா! என்மீதுள்ள அன்பின் காரணமாக, மறந்தும் அச்சமுறக்கூடாது. ஏனென்றால், உங்களுடைய அநுக்கிரகத்தினால்தான் எனக்கு ஆனந்தம் உண்டாகும்.

"நான் பதினான்கு வருஷம் வனவாசமிருந்து பிதாவின் சொல்லைப் பரிபாலித்துப் பின் திரும்பிவந்து உங்கள் திருவடி தரிசிப்பேன். தாயே! உங்கள் மனத்தை மலினமுறச் செய்ய வேண்டாம்."

ராகவன் சொன்ன மெல்லிய தேன் மொழியும் அன்னைமீது கூரிய அம்புபோலத் தைத்தது; நெஞ்சில் நோயை உண்டாக்கிற்று. ராமனுடைய குளிர் மொழிகளைக் கேட்டதும் கௌசலை, மழையில் அடிபட்ட சிறு காஞ்சொறிச் செடிபோலத் துயருற்றுச் சோர்வடைந்தாள். அவள் பட்ட துயரை வருணிக்க யாராலும் முடியாது. சிங்கத்தின் கர்ஜனை கேட்ட மான்போல் இருந்தாள். கண்களில் நீர் பெருகிற்று; உடல் நடுக்குற்றது. மாரிக்காலத் துவக்கத்து மழைநுரையில் அகப்பட்ட மீன்போல் துடித்தாள். மெல்லச் சமாளித்துக்கொண்டு மைந்தனது முகத்தைப் பார்த்தவண்ணம் தழுதழுத்த குரலில் அன்னை கௌஸல்யா தேவி பேசலுற்றாள்:

"அப்பா! தந்தை உன்பால் உயிருக்கு ஒப்பான அன்பு கொண்டவரல்லவோ? அவர் நாடோறும் உன் நல்லொழுக்கத்தைக் கண்டு களிப்படைந்து வந்தனரே! உனக்கு அரசுரிமையை அளிக்கப்போவதாக நிச்சயம்

செய்த பின், என்ன குற்றத்திற்காக வனம் செல்லும்படி உத்தரவிட்டார்! அப்பா, மகனே! சூரிய வமிசத்திற்கு நெருப்பெனத் தோன்றியவன் எவன்? இதை நீ எனக்குச் சொல்லக்கடவாய்,'' என்றாள்.

அப்போது ராமனது முகக் குறிப்பை உணர்ந்து, மந்திரிகுமாரன் நடந்த வரலாறுகளை யெல்லாம் எடுத்துரைத்தான். அவற்றைக் கேட்டவுடன் கௌஸல்யாதேவி ஊமைபோலானாள். அக்காலத்தில் அவளது நிலைமையை வருணிக்கமுடியாது. ராமனை வீட்டிலேயே இருக்கவேண்டுமென்றோ, வனத்திற்கே போய் வரவேண்டுமென்றோ, ஒன்றையும் அவள் சொல்ல முடியவில்லை. இரு வகையிலும் அவள் மனத்தில் கொடிய தாபமே மேலிட்டிருந்தது.

பிரமனின் போக்கு எக்காலத்திலும் யாவர் விஷயத்திலும் வஞ்சகமானது: சந்திரனைப் படைத்து இராகுவையும் படைத்தான். ராணி ஒரு பெரிய தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டாள். ராமனை வனஞ்செல்ல விடுவதாயின், பெரிய விபத்து நேரிடுமே!—என்று வருந்தினாள்.

பிறகு, புத்திசாலியும், பதிவிரதா தர்மத்தை உணர்ந்தவளுமான கௌசலை ராமனையும் பரதனையும் சமமாக எண்ணிப் பெருந்தன்மையான மனத்துடன், "அப்பா, மகனே! உனக்குத் திருஷ்டிதோஷம் கழிக்கிறேன். நீ செய்த காரியம் சரியானதே. தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதே எல்லாத் தருமங்களிலும் சிறந்த தருமமாகும்.

"உனக்கு அரசுரிமையை அளிப்பதாகச் சொன்ன அரசரோ இப்பொழுது உனக்கு அளித்தது வனமேயாகும். இதற்காக நான் சிறிதும் வருந்தவில்லை. ஆனால், நீ இங்கே இல்லாமற்போனால் பரதனும் மஹாராஜாவும் பிரஜைகளும் வருந்த நேரிடுமே! என்றுதான் துக்கப்படுகிறேன்.

"அப்பா! இது கேவலம் தந்தையின் கட்டளைமட்டு மாயின், தந்தையைக்காட்டிலும் தாய் முக்கியமானவள் என்று தெரிந்துகொண்டு நீ வனத்திற்குச் செல்லவேண்டாம். தாயும் தந்தையுமாக இருவருமே உன்னை வனத்திற்குச் செல்லும்படி உத்தரவிட்டால், வனமே உனக்கு நூறு அயோத்திக்கு ஒப்பாகும்.

"அப்பா! உனக்கு வனதேவன் தந்தையும், வனதேவி தாயுமாகக் கடவர். வனத்தில் சஞ்சரிக்கும் மிருகங்களும் பட்சிகளுமே உனது பாத கமலங்களுக்குச் சேவை செய்யும் தொண்டர்கள்! அந்திய காலத்தில் அரசர்களுக்கு அழகு ஆரணிய வாசமே. ஆனால், அப்பா! உன் இளமைப் பருவத்தை எண்ணியே என் மனம் கவலை கொண்டது.

"ஓ, ரகுகுல திலகமே! வனமே பாக்கியம் பெற்றது. நீ விட்டுச் செல்லும் இந்த அயோத்தி துர்ப்பாக்கியத்தை அடைந்தது. மைந்தா! நீ என்னையும் உடன் கூட்டிச் செல்லவேணும் என்று கூறுவேனாகில், உன் மனத்தில் சந்தேகம் எழும்.

"அப்பா, புத்திரா! நீ யாவருக்கும் வேண்டியவன்; உயிருக்கு உயிராகவும், மனத்திற்கு மனமாகவும்

இருக்கிறாய். அப்படிப்பட்ட நீ 'அம்மா! நான் காட்டிற்குப் போகிறேன்' என்கிறாய். நான் உன் சொல்லைக் கேட்டுச் சும்மா இருந்து வருத்தப்படுகிறேன்.

"குழந்தாய்! இமைகள் கண்களைக் காப்பது போலப் பிதுர்க்களும் தேவர்களும் உன்னை ரட்சிக்கக் கடவர். உனது வனவாசத்தின் இறுதியே நீராகவும், உனது இஷ்ட மித்திர பந்து ஜனங்களாகிய நாங்களே மீன்களாகவும் இருக்கிறோம்.

"நீ தயைக்கு இல்லம்; தர்மத்தின் முன் செல்பவன். இவற்றையெல்லாம் ஆலோசித்து, நாங்கள் உயிருடன் பிழைத்திருக்கும்போதே திரும்பி வந்து எங்களைச் சந்திக்கத் தக்கவாறு உபாயம் செய்.

"நான் உனக்குத் திருஷ்டி தோஷம் கழிக்கிறேன். உன் குடும்பத்தார், நகரப் பிரஜைகள் எல்லோரையும் அநாதர்களாக விட்டுச் சுகமே நீ காட்டிற்குச் சென்றுவா. இன்று அவர்களுடைய நல்வினைப் பயன்களெல்லாம் செலவழிந்து போயின போலும். அதனாலேதான் இந்தப் பயங்கரமான காலம் நமக்கு விபரீதமாக ஏற்பட்டது!" என்றாள்.

இங்ஙனம் கௌசலை தன்னை ஒரு பெருந் துர்ப் பாக்கியவதியாகக் கூறிப் பலவிதமாக ஓலமிட்டழுது ராமன் அடிகளில் சாய்ந்தாள். அப்பொழுது, அவள் உள்ளத்தில் பொறுக்கமுடியாத துயரம் ஏற்பட்டிருந்தது. அங்கே அச்சமயம் உண்டான துயர் நிறைந்த கூக்குரலைக் கூற இயலாது. ராமன் தன் அன்னையை அன்புடன் எடுத்து

மார்போடு அணைத்துக்கொண்டான். பிறகு, இனிய மொழிகளைக் கூறி அவளைத் தேற்றலானான்.

அத்தருணம், சீதை இச்செய்தியை அறிந்து மிகவும் கவலை கொண்டு அங்கே விரைந்து வந்தாள். மாமியின் பாதத்தில் விழுந்து வணங்கித் தலை குனிந்தவாறே ஒரு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

மாமி சீதைக்கு இனிய ஆசிமொழிகள் கூறினாள். சீதையின் வடிவழகை நினைத்து மனத்தில் ஆழ்ந்த சிந்தனை கொண்டாள். ரூபராசியும், பரிசுத்தமான பதிபக்திக் களஞ்சியமுமாக இருக்கும் சீதை முகத்தைக் கவிழ்த்திக் கொண்டே யோசிக்கலானாள்:

"என் பிராண நாதர் வனஞ் செல்ல விரும்புகிறார். எந்தப் புண்ணியமான பிரபாவத்தைக் கொண்டு நானும் அவருடன் செல்லலாகும்? எனது உயிர் உடல் இரண்டுமே உடன் செல்லுமா? அன்றி, உயிர் ஒன்றே கூடச்செல்லுமா? கடவுளின் செயல் எப்படியோ? ஒன்றும் புலப்படவில்லையே!"

இவ்வாறு யோசித்த வண்ணம் சீதை தன் காலின் பெருவிரல் நகத்தினால் பூமியைக் கீற, அச்சமயம் அவளுடைய கால் மெட்டிகள் அன்பின் மேலீட்டால், "சீதை எங்களை ஒருகாலும் விட்டுப் பிரியாமல் இருக்கவேணும்!" என்று கடவுளிடம் விண்ணப்பஞ் செய்து கொள்வது போல் ஒலி செய்தன.

சீதையின் அழகிய கண்களிலிருந்து நீர் பெருகுவதைக் கண்டு கௌஸல்யாதேவி ராமனைப் பார்த்துச் சொன்னாள்: "ராமா! கேள். சீதை மிகவும் சுகுமாரி; மாமன் மாமி பரி ஜனங்கள் யாவருக்கும் பிரியமானவள். அரசர்களுக்கெல்லாம் சிரோபூஷணமான ஜனக மஹாராஜன் இவள் தந்தை. சூரிய குலத்துக்குச் சூரியனாய்த் துலங்கும் தசரத சக்கரவர்த்தியே இவள் மாமன். நற்குணங்களுக்கும் ரூபசௌந்தரியங் களுக்கும் இருப்பிடமாய்ச் சூரிய குலமாகிய நெய்தற் காட் டிற்குச் சந்திரன் போன்ற நீ இவளது கணவன்.

"நற்குணமும் சீலமும் படைத்து, ரூபராசியாய் விளங்கும் இவளை நான் மருமகளாக அடைந்தேன். இவளை என் கண்மணியாகச் செய்து பிரியத்துடன் போஷித்து என் உயிருடன் இணைத்து வைத்திருக்கிறேன்.

"கற்பகக் கொடிக் கொப்பாக இவளிடம் அன்பு காட்டி, நேசமாகிற நீரைப் பாய்ச்சி இவளை வளர்த்துள்ளேன். இப்பொழுது இக்கொடி பூத்துப் பலன் தரும் சமயத்தில், விதி எனக்குப் பிரதிகூலமாகிவிட்டது! இதன் பரிணாமம் என்ன ஆகுமோ? அறியக்கூடவில்லை.

"கட்டில், மெத்தை, ஊஞ்சல், பீடம், பிரிய ஜனங்களின் மடி இவற்றிலன்றிச் சீதை கடினமான தரையில் ஓர் அடி வைத்தும் அறியாள். இவளை நான் சஞ்சீவி ஔஷதம் போல மூடி மூடிப் பத்திரமாய்ப் பாதுகாத்து வந்தேன்! இதுவரை இவளை நான் தீபத்தின் திரியைத்தூண்டுதற்குக்கூட ஏவினதில்லை.

“ரகுநாதா! இப்படிப்பட்ட சீதை உன்னுடன் காட்டிற்குச் செல்ல விரும்புகிருள். இவளுக்கு என்ன உத்தரவு கொடுக்கப்போகிருய்? சந்திர கிரணங்களின் ரஸத்தை ருசி பார்க்கும் சகோரப் புள் சூரியன்பால் கண்ணெடுத்து நோக்கவுங் கூடுமோ?

“வனத்திலே யானை, சிங்கம் முதலிய பல துஷ்ட ஜந்துக்களோடு பொல்லாத ராக்ஷஸர்களும் திரிகிருர்கள். மகளே! விஷப் பூண்டுகள் நிறைந்த தோட்டத்தின் மத்தியில் சஞ்சீவி மூலிகை அழகுடன் விளங்கக் கூடுமா?

“வனத்தில் சஞ்சரிப்பதற்கென்றே சுகத்தை என்றும் கண்டறியாத வேடுவர், கோலர் ஆகிய முரட்டுச் சாதிக் கன்னிகைகளைக் கடவுள் படைத்திருக்கிருர்! அவர்கள் சுபாவம் கல்லுள் தேரைபோலக் கடினமானதால், அவர்களுக்குக் கிலேசம் சிறிதும் தோன்ருது.

“புத்திரா! சித்திரத்திலுள்ள குரங்கைக் கண்டும் அஞ்சியோடுகிற சீதை காட்டில் எங்ஙனம் வசிப்பாள்?

“மானஸ ஸரோவரத்தின் அழகிய தாமரை மலர்க் கூட்டத்தின் நடுவில் சஞ்சரிக்கும் அன்னப் பறவை பாழுங் கிணற்றிற்கு ஏற்றதா? இவைகளை ஆலோசித்துப் பார்! உன் உத்தரவு எதுவோ, அதன்படி ஜானகிக்கு உபதேசம் செய்கிறேன்,” என்ருள்.

பின்னும் கௌசலை, “சீதை வீட்டிலேயேஇருப்பாளாயின், எனக்குப் பெருந் துணையாக இருக்கும்” என்றும் கூறினுள்.

சீலம் சிநேகம் ஆகிய அமுதத்தில் தோய்ந்திருந்த அன்னையின் மொழிகளைக் கேட்டு ராமன், விவேகம் நிறைந்த செம்மொழிகளை உரைத்து அன்னையின் மனம் சாந்தமுறச் செய்தான். பிறகு வனவாஸத்தின் குணதோஷங்களை எடுத்துக் கூறிச் சீதைக்கு அறிவுறுத்தலானான்.

தாயின் முன்பு மனைவியிடம் பேச ராமன் கூச்சமுற்றான். ஆயினும் ஆபத்துக் காலத்தை உத்தேசித்து மென்மையாகப் பேசினான்: "ராஜ குமாரீ! எங்கள் புத்தி மதியைக்கேள். உன் மனத்தில் வேறு எண்ணம் கொள்ளாதே.

"நம் இருவர் நன்மையையும் நீ விரும்பினால், என் சொற்படி கேட்டு நீ வீட்டிலேயே இருப்பாயாக. பெண்ணே! வீட்டில் வசிப்பதினால், என் சொற்படி நடப்பதுமன்றி, உன் பதியின் அன்னைக்கு வேண்டிய பணிவிடைகளும் செய்வாய். இவ்விதம் நடப்பதினால் உனக்கு எல்லாவிதத்திலும் நன்மையே ஏற்படும்.

"அன்புடன் மாமி மாமனார் திருவடிகளைத் தொழுவதைக் காட்டிலும் சிறந்த தருமம் வேறொன்றில்லை. புத்திர வாஞ்சையின் காரணமாக என் தாய் என்னை நினைத்து வருந்தும்போதெல்லாம், சுந்தரீ! நீ உனது இன்மொழிகளால் பண்டைக் காலத்துக் கதைகளைச் சொல்லி, அவள் மனத்தைத் தேற்றுவாயாக.

"சுந்தர வதனியே! நான் உண்மையாக நூறுமுறை

சபதஞ்செய்து சொல்லுகிறேன். உன்னை வீட்டிலிருக்கும்படி சொல்வது கௌஸல்யா தேவியின் பொருட்டேயாகும்.

"நல்வினையின் பயன் நம் முயற்சியின்றியே சித்திக்கும்," என்று வேதமும் தெரிவிப்பதோடு குருமாரும் கூறுகின்றனர். காலவரிஷி, ராஜா நகுஷன் இவர்கள்யாவரும் வீண் பிடிவாதத்தினுல் பல சங்கடத்திற்கு ஆளாயினர்.

"சுமுகி! அறிவுடையோய்! நான் தந்தையின் கட்டளையை நிறைவேற்றிய பின், விரைவில் வீடு திரும்புவேன். நாட்கள் கடந்துபோக அதிக காலம் பிடிக்காது. சுந்தரீ! எங்கள் பேச்சைக் கேட்பாயாக.

"அழகிய பெண்ணே! அன்பில் ஈடுபட்டு அடம் செய்வாயாஞல், இறுதியில் நீ துன்பமுறுவாய். வனம் மிகவும் கொடியது; பயங்கரமான தோற்றமுடையது. அங்கே மிகவும் கடுமையான வெய்யிலும் கொடுங்குளிரும் மாறி மாறி நம்மைப் பாதிக்கும். பெருங் காற்றுடன் மழை பொழியும்.

"காட்டு வழியில் தர்ப்பை, முட்செடிகள், கரடுமுரடான விஷக் கற்கள் சிதறிக் கிடக்கும். நாம் அவைமீது பாத ரக்ஷையின்றி நடந்து செல்லவேண்டும். உன்னுடைய பாத பத்மங்கள் மிகவும் மென்மையாகவும் அழகாகவும் உள்ளன. வழியிலே மிகவும் ஏற்றமும் இறக்கமுமான மலைகளும் பல உண்டு.

"கடக்க முடியாதனவும், அளப்பற்ற ஆழங்கொண்டனவும், எட்டிப்பார்க்க முடியாதனவுமான

பல நதி நதங்களும் மலையருவிகளும் குகைகளும் பள்ளத்தாக்குகளும் வழி நெடுக இருக்கின்றன.

"வனத்தில் வாழும் கரடி, சிங்கம், புலி, காட்டாடு, யானை முதலிய மிருகங்களின் சப்தத்தைச் செவியுற்றால், மனோதைரியம் பறந்தோடும். பூமியில் படுத்துறங்கவும், மரப்பட்டைகளையே ஆடையாக உடுத்தவும், கந்த மூலங்களையே ஆகாரமாகக் கொள்ளவும் வேண்டும். இவைகூட எல்லா நாட்களிலும் கிடைப்பதரிது.

"வனத்தில் நர மாமிசம் அருந்தும் ராக்ஷஸர் உண்டு. அவர்கள் கபட வேஷங்களைக் . கோடிக் கணக்கில் போட்டுக்கொண்டு அங்கே திரிந்து கொண்டிருப்பார்கள். காட்டாறு மலையருவிகள் இவைகளின் நீர், குடிப்பதற்கு ஏற்றபடி யிராது. இன்னும் வனவாசத்திலுள்ள கஷ்டங்களை யெல்லாம் சொல்ல முடியாது.

"பயங்கரமான சர்ப்பங்களும், கோரமான பட்சிகளும், ராக்ஷஸர் கூட்டமும் வனத்திலே உண்டு. அரக்கர் குலத்து ஸ்திரீ புருஷர் கொள்ளைக்காரர்களுக்குச் சமமாக நடப்பர். காட்டை நினைக்கும்போதே பெருஞ் சூரர்களும் அஞ்சுகின்றனர். மான்போன்ற பார்வையுடையவளே! இயற்கையிலேயே நீ பயந்தவள்.

"அன்னப் பட்சி போன்ற நடையுடையவளே! நீ வனஞ் செல்வதற்குச் சிறிதும் தகுதியற்றவள். நீ காட்டிற்குச் செல்வதைச் செவியுற்று ஜனங்கள் என்னையே பழிப்பார்கள். மானஸ ஸரோவரத்தின் அமுதமாகிய

நீரிலே வளர்ந்த அன்னப் பறவை உப்புக் கடலிலே உய்யுமோ?

"குரு, எஜமானன், தோழன் இவர்களுடைய புத்திமதிகளைச் சிரமேற்கொண்டு கௌரவிக்காதவர்கள் பிற்காலத்தில் பச்சாத்தாபமடைவர். அவர்களுடைய நன்மைகளுக்கு இடையூறு அவசியம் ஏற்படுகிறது," என்று கூறினான்.

பிரியமான கணவனின் மனோஹரமான மெல்லிய மொழிகளைச் செவியுற்ற சீதையின் அழகிய விழிகளில் கண்ணீர் பெருகிற்று. சக்கரவாகப் புள்ளுக்குச் சரத்கால இரவின் வெண்மதி எங்ஙனம் துயர்தருமோ, அதுபோல் சீதைக்கு அப்போது ராமனின் தண்மொழிகள் பெருந்தாபத்தையே உண்டாக்கின.

"என்பால் பழுதற்ற அன்பு வைத்திருக்கும் என் நாயகர் என்னை விட்டுப்பிரிந்து போக விரும்புகிறார்!" என்று பூமியின் மகளான சீதை விழி வழியே பெருகாநின்ற கண்ணீரைப் பலமாக அடக்கிய வண்ணம் மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, மாமியின் பாதத்தில் வீழ்ந்து கை கூப்பியவாறு சொல்வாளாயினள்.

"தேவீ! எனது அதிகப் பிரசங்கித்தனத்தைப் பொறுத்தருள வேண்டும். எனக்கு எது பெரு நன்மையைப் பயக்குமோ, அதையே என் பிராண நாதர் எனக்கு உபதேசித்துள்ளார். ஆனாலும் நான் மனத்தில் நன்கு ஆலோசித்துப் பார்த்ததில், பிராண நாதரின் பிரிவுக்கு

ஈடாக வேறொரு துயரும் உலகில் இராது எனத் துணிந்தேன்.

“பிராண நாதா! தயாநிதியே! அழகுடையவரே! சமர்த்தரே! ரகுகுலமாகிய நெய்தற் காட்டிற்குச் சந்திரன் போன்றவரே! நீங்கள் இல்லாத சுவர்க்கமும் எனக்கு நரகத்திற்கு ஈடாகும்.

“அன்புள்ள தாய், தந்தை, சகோதரி, பிரியமான சகோதரன், பந்துஜனம், மாமன், மாமி, குரு, ஸ்வஜனம், நண்பன் இவர்கள், நம்மிடம் என்றும் மாறாத சிநேகமும் உறவும் உடையவராயிருப்பினும், நாதா! புருஷனைப் பிரிந்த ஸ்திரீக்குச், சூரியனைக் காட்டிலும் அதிகமான தாபத்தைக் கொடுப்பவராவர். உடல், பொருள், வீடு, நாடு, அரசுரிமை யாவும் பதியைப் பிரிந்த ஸ்திரீக்குச் சோகத்தை உண்டாக்கக் கூடியனவாகும்.

“பதி இழந்த ஸ்திரீக்குப் போகம் வியாதிக்கு ஒப்பாகும். ஆபரணங்கள் வீண் சுமையாகும். இவ்வுலக வாழ்வு யமராஜனது தண்டனைக்குத் துல்யமாக இருக்கும். பிராண நாதா! இந்த அகண்டமான பூவுலகில் இன்பமளிக்கும் பொருள் உங்களையன்றி வேறில்லை எனக்கு.

“நாதா! புருஷனற்ற ஸ்திரீ நீரற்ற நதிபோலவும், உயிரற்ற உடல் போலவும் ஆவாள். நாதா! சரத்கால சந்திரனுக்கு ஒப்பான உமது களங்கமற்ற முகமண்டலத்தைத் தரிசித்தவாறே வாசஞ் செய்யும் எனக்குத் துன்பங்கள் யாவும் இன்பமாகவே யிருக்கும்.

"நாதா! காட்டில் உங்களுடன் கூடிவாழும் எனக்கு மிருக பட்சிகளே பரிஜனங்களாகவும், காடு நாடாகவும், மரவுரியே தூய ஆடையாகவும், பர்ணசாலை சுவர்க்கத்திலுள்ள மாளிகை போலவும் இன்பத்திற்கு ஏதுவாகும். பின்னும் உங்களுடன் வசிக்கும் எனக்குக் கந்த மூலாதி பலங்களே அமுதுக் கொப்பான உணவு. வனத்திலுள்ள பெரும் பர்வதங்கள் அயோத்தியிலுள்ள நூறு இராஜமாளிகைகளுக்கு ஈடாகும். பகற்போது கண்டு மகிழ்வுற்றிருக்கும் சக்ரவாகங்கள் போல், நான் ஒவ்வொரு விநாடியும் பிரபுவின் திருவடித் தாமரைகளைக் கண்டவாறு களிப்பெய்துவேன்.

"நாதா! நீங்கள் எனக்கு வனத்திலுள்ள பல ஆபத்துக்களையும் மனக்கிலேச பயாதிகளையும் வெகுவாக எடுத்துரைத்தீர்கள். கிருபைக்கு இருப்பிடமே! அவை யாவும் ஒருங்கே சேர்ந்து உண்டானாலும், பிராண நாதனின் பிரிவினால் உண்டாகும் துயருக்கு லவலேசமும் ஈடாகமாட்டா.

"சமர்த்தர்களுக்குள் சிரோமணியே! இவற்றை ஆலோசித்து என்னை உங்களுடன் கூட்டிச் செல்லவேணும். ஸ்வாமீ! என்னை இங்கே விட்டுச் செல்ல வேண்டாம். நான் அதிகமாக எதை வேண்டக்கூடும்? தாங்கள் தயையே உருக்கொண்டவர்கள்; அனைவர் உள்ளத்தையும் உணர்ந்தவர்கள்.

"தீனபந்து! சுந்தரா! இன்பம் அளிப்பவரே! பிரியத்திற்கும் ஒழுக்கத்திற்கும் உறைவிடமே! நீங்கள் திரும்பிவரும் காலம்வரை என்னை அயோத்தியில்

இருக்கிப் போவதானால், என் உயிர் நில்லாது: இதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

"பத்மங்கள் போன்ற தங்கள் திருப்பாதங்களை ஒவ்வொரு க்ஷணமும் பார்த்திருக்கும் எனக்கு வழி நடக்கும் பிரயாசை சிறிதும் தோன்றாது. எல்லா விதத்திலும் என் பிராணப் பிரியருக்குச் சேவை செய்து இன்புறுவேன். வழி நடப்பதினால் உங்களுக்கு உண்டாகும் பிரயாசத்தைத் தீர்ப்பேன்.

"பசுமரத்தடியில் இருந்து தங்கள் திருத்தாள்களை அலம்பித் துடைத்துக் களிப்புற்ற மனத்துடன் உங்களுக்கு விசிறுவேன். வியர்வைத் துளிகளுடன் துலங்கும் நீலத் திருமேனியையும் என் பிராண நாதரையும் தரிசித்துக் கொண்டேயிருக்கும் எனக்குத் துக்கிப்பதற்குச் சமயமேது?

"பூமியில் புல்லையும் இலை தளிர்களையும் சமமாகப் பரப்பி, இந்த அடியாள் இரவு முழுதும் உங்கள் திருத்தாள்களை வருடி யிருப்பாள். ஸௌந்தரிய மூர்த்தியான உங்களை அடிக்கடி பார்க்குந்தோறும் எனக்குக் காற்றின் உஷ்ணம் சிறிதும் தோன்றாது போகும்.

"பிரபுவின் துணையோடிருக்கும் என்னைக் கண்ணெடுத்தும் பார்க்க வல்லவன் யார்? சிங்கத்தின் மனைவியை முயலும் நரியும் கண்ணெடுத்துப் பார்க்கவும் கூடுமோ?

"நான் சுகுமாரியாம்; என் நாதர் காட்டிற்குப் போகத் தகுதியுடையவராம். உங்களுக்குத் தவம் தகும்: எனக்கு

மட்டும் போக விலாசங்கள்! இத்தகைய கொடிய மொழிகளைச் செவியுற்றும் என் இதயம் வெடிக்காமல் இருக்குமேயானால், இந்த அற்பப் பிராணன் பிரபுவின் பிரிவினால் கொடிய துயரையும் சகிக்கவல்லதே!"

இவ்வாறு சீதை கூறி மிகவும் சிந்தை கலங்கியிருந்தாள். பிரிவைச் சொல்லும் சொற்களைக் கேட்கவும் பொறுக்கவில்லை. அவளுடைய நிலைமையைக் கண்டு ராமன், "நாம் பிடிவாதம் செய்து இவளை இங்கேயே விட்டுச் சென்றால், உயிரை வைத்துக்கொண்டிராள்," என்று மனத்துள் தேர்ந்தான். அப்போது இளகிய மனமுடையவனும், சூரிய குலத்தின் அதிபதியுமான ராமன் சீதையைப் பார்த்து, "சீதே! வருந்தவேண்டாம். என்னுடன் வனத்திற்கு வருவாயாக! துக்கிப்பதற்கு இது அன்று சமயம். காட்டிற்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் சீக்கிரம் செய்," என்று அன்புடன் பேசித் தேற்றினான்.

பிறகு தாயின் பாதங்களில் பணிந்து அவளுடைய ஆசீர்வாதம் பெற்றான். அப்போது கௌஸல்யா தேவி, "புத்திரா! விரைவில் திரும்பி வந்து பிரஜைகளின் தாபத்தைத் தணிப்பாயாக. கல்மனம் வாய்ந்த இந்தத் தாயாரை என்றும் மறவாதே!

"கடவுளே! மனத்தைக் களிப்பிக்கும் இந்தத் தம்பதிகளை மறுபடியும் என் கண்களால் காணப் பெறுவேனோ? என் துர்த்தசை என்றைக்காவது மாறுமோ? அப்பா! உன் தாய் பிழைத்திருக்கையிலேயே உன் மதிமுகத்தைத் திரும்பவும் காணப்பெறும் அந்த நல்ல

நாள்—நன்முகூர்த்தம்—எப்போது கிட்டுமோ ?" என்று பிரலாபித்தாள்.

அப்பால், ஜானகி மாமியின் பாதத்தில் விழுந்து, "அம்மா! கேளுங்கள். நான் பரம துர்ப்பாக்கிய முடையேன். உங்களுக்குப் பணிவிடை புரிந்திடும் நாளில், கடவுள் எனக்கு வனவாசத்தைக் கொடுத்திருக்கிறார். என் மனோரதம் கைகூடாமற் போயிற்று. தாங்கள் எங்கள் பிரிவினால் உண்டாகும் துயரை மறந்துவிடுங்கள். என்பாலுள்ள அன்பை விடக்கூடாது. விதிவலி கொடியது! இதில் என் குற்றம் ஒன்றும் இல்லை," என்று சொன்னாள்.

சீதையின் சொற்களைக் கேட்டு மாமி சிந்தை கலங்கினாள். அச்சமயம் அவள் இருந்த நிலையை எங்ஙனம் வருணிக்க இயலும் ?—என்கிறார் துளஸீதாஸர்.

கௌஸல்யாதேவி மீண்டும் மீண்டும் சீதையைக் கட்டித் தழுவிக் கொண்டாள். பிறகு தைரியமுற்று அவளுக்கு நன்மொழிகளைச் சொல்லி, "கங்கை யமுனா நதிகளின் நீரோட்டம் உள்ளவரை, உன் மாங்கல்யம் நிலைத்திருக்கக் கடவது!" என்று ஆசீர்வாதஞ் செய்தாள்.

லட்சுமணனுக்கு இச்செய்தி எட்டவும், அவன் வருந்திக் கலக்கமுற்றான். கண்களில் நீர் பெருகிற்று. தேகம் மயிர்க்கூச்சுற்றது. உடல் நடுங்கிற்று. அன்பினால் அதைரிய முற்றவனாகி, ராமபிரானிடம் ஓடிவந்து அவனுடைய திருவடிகளைப் பிடித்துக் கொண்டான். 'தமையனார் நமக்கு என்ன உத்தரவு கொடுப்பாரோ? வீட்டில் இருத்திப் போவாரோ? அல்லது உடன் கூட்டிச் செல்வாரோ ?" என்று

எண்ணியவாறு, வீடு வாசல் பந்துமித்திரர் முதலிய எல்லாத் தளைகளையும் அறுத்தெறிந்து தன்னுடன் வர விரும்பும் லட்சுமணன் தன்முன்னே கைகூப்பி நிற்பதைக் கண்டான் ராமன்.

தர்ம சாஸ்திரங்களைக் கற்றறிந்த சமர்த்தனும், சரளமான நேசம், சீலம் இவைகளின் கடல் போன்றவனுமான ராமன் லட்சுமணனை நோக்கி, "அன்புள்ள சகோதரா! முடிவில் உண்டாகும் ஆனந்தத்தை எண்ணிப்பார். இப்பொழுது அன்பிற்கு வசப்பட்டுப் பயங் கொள்ளாதே.

"எவர் இயல்பாகவே தாய், தந்தை, குரு, எஜமானன் இவர்களுடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றுகிறாரோ, அவரே மானிடப் பிறவியால் பெரும் பேற்றை அடைகிறார். மற்றவர்கள் இவ்வுலகில் பிறப்பதும் வீணே.

"தம்பீ! இதை உணர்ந்து நான் சொல்வதைக் கேள். வீட்டிலோ பரத சத்ருக்னர் இல்லை. நீ இங்கேயே தாய் தந்தையருக்குத் தொண்டு செய்திரு. நம் தந்தைக்கோ வயது ஆகிவிட்டது. மேலும் அவர் என் பொருட்டு உள்ளுக்குள்ளேயே வருந்திக் கொண்டிருக்கிறார். நான் உன்னையும் என்னுடன் வனத்திற்கு அழைத்துக்கொண்டு செல்வேனானால், இந்த அயோத்தி எல்லா விதத்திலும் நாதனற்றுப்போம். குரு, தாய், தந்தை, பரிவாரம், குடிஜனம் அனைவர்மீதும் தாங்கமுடியாத துயர் விழும். ஏனையோருக்கும் தைரியம் கூறிக்கொண்டு நீ இங்கேயே இருக்கவேணும். அப்பா, லட்சுமணா! அப்படிச் செய்யாவிட்டால் நமக்குப் பெருந்தோஷம் சம்பவிக்கும். எந்த ராஜ்யத்தில் பிரஜைகள்

சந்தோஷமில்லாமல் இருக்கின்றனரோ, அந்த ராஜ்யத்தில் அரசன் அவசியம் நரகத்திற்கு அதிபதியாவான். நீ நியாயத்தை உணர்ந்து வீட்டிலேயே தங்கிவிடு,'' என்றான்.

இதைச் செவியுற்ற லட்சுமணன் மிகவும் வருந்தினான். ராமனுடைய குளிர்ந்த மொழிகளைக் கேட்டுத் தம்பி, பனித் துளி பட்ட தாமரை மலர்போல மனம் குன்றிப்போனான்.

அன்பு மேலீட்டால் லட்சுமணன் விடை யொன்றும் பகர இயலாதவனானான். திகில் கொண்டு அவன் தமையனை நோக்கி, "நாதா! நான் தங்கள் அடிமை. தாங்கள் என் எஜமானர். தாங்களே என்னைக் கைவிடும் பட்சத்தில் என்னாலாவது யாதுளது?

"பிரபு எனக்கு நன்மையே போதித்தார். ஆனால், எனக்குள்ள பயத்தினால் நான் அதை நிறைவேற்றமாட்டாது நிற்கிறேன்.

"தைரியவானும், தருமத்தின் பாரத்தைச் சுமக்க வல்லவனுமான சிறந்த புருஷனே நீதி சாஸ்திரங்களுக்கு அதிகாரியாகிறான்.

"நானோ சுவாமியின் தயவால் போஷிக்கப்பட்டு வந்த பாலகன். நல்லது: ஹம்ஸ பட்சியினால் என்றேனும் சுமேரு பர்வதத்தை உயர்த்த முடியுமா?

" ஸ்வாமி! என் உள்ளத்தில் உள்ளதை உள்ள படி சொல்லுகிறேன். என்னை நம்பும்: நான் தாய், தந்தை, குரு எவரையும் அறியேன்.

"தீனபந்து! எல்லோருடைய உள்ளத்திலும் உறைபவனே! வேதங்களில் பாடியிருக்கும் அந்தப் பிரியம் விசுவாசம், இவ்வுலகிலுள்ள நேசம் பந்துத்வம் யாவும் நீரே எனக்கு!

"ஸ்வாமீ! எவனுக்கு நற்பெயர், நற்கதி, ஐசுவரியம் இவை யாவும் பிரியமாக உள்ளனவோ, அவனுக்கே தருமோபதேசம் செய்தல் தகும். எவன் முக்கரணங்களினாலும் எஜமான் பாதங்களில் பற்றுள்ளவனாக இருக்கிறானோ, அவனை என்றேனும் துறக்கக் கூடுமோ?" என்று கூறினான்.

கருணைக்கடலாகிய ராமன் தன் தம்பியான லட்சுமணன் சொன்ன பணிவான இனிய மொழிகளைக் கேட்டு, 'இவன் நம்மேலுள்ள அதிகப் பிரியத்தால் பிரிவை எண்ணி வருந்துகிறான்,' என்று உணர்ந்து அவனை மார்புறத் தழுவி, "தம்பி! விரைவில் சென்று அன்னையிடம் விடை பெற்றுவா. சீக்கிரம் காட்டிற்குச் செல்ல வேணும்," என்று சொன்னான்.

அதைச் செவியுற்ற லட்சுமணன் களிப்புற்றான். குருடன் மறுபடியும் கண்களைப் பெற்றது போலக் களிப்படைந்து சுமித்திரையின்பால் சென்றான். இங்ஙனம் அவன் சென்று தன் தாயின் பாதத்தில் பணிந்து நின்றானேயன்றி, அவன் மனமெல்லாம் சீதாராமரிடம் லயித்திருந்தது.

அவன் மனம் மலினமுற்றிருப்பது கண்டு அன்னை காரணம் யாதென்று வினவ, லட்சுமணன் நடந்தவற்றை

விவரமாகச் சொன்னான். நான்கு பக்கங்களிலும் காட்டுத் தீப் பிடித்து எரிவதைக்கண்டு வெருளும் பெண் மானேபோல், அந்தக்கொடிய செய்தியைக் கேட்ட சுமித்திரை அச்சமுற்றாள்.

சுபாவத்திலேயே செம்மனம் படைத்த சுமித்திரை, "காலம் நமக்கு விபரீதமாயிருக்கிறது!" என்று தெளிந்து இனிமையான குரலில் பேசினாள். "அப்பா, மைந்தா! ஜானகியே உன் தாய். எல்லாத் துறைகளிலும் உன்மேல் மட்டில்லாத வாஞ்சை கொண்டுள்ள ராமனே உனக்குத் தந்தை.

"சூரியன் ஒளி எங்கு வீசுகிறதோ அங்கேதான் பகல். அதுபோல ராமன் எங்கே இருப்பானோ; அந்த இடம்தான் அயோத்தி. எக்காலத்திலாவது சரி, ராமனும் சீதையும் காட்டிற்குப் போகும்படி ஏற்பட்டதாயின், அப்போது உனக்கு அயோத்தியில் வேலை ஒன்றுமில்லை.

"குரு, மாதா, பிதா, எஜமானன், பந்துஜனம், தேவர் இவர்களை உயிர்போல நினைத்துச் சேவை செய்யவேணும். உயிர்போல அனைவருக்கும் பிரியமானவன் ராமன்: உயிருக்கும் உயிரானவன்; சுயநலமற்றவன்; அனைவருக்கும் தோழன்.

"மகனே! உனக்குத் திருஷ்டிதோஷம் கழிக்கிறேன். மாசற்ற உனது உள்ளம் ராமனது திருவடியே கதியென்று இருப்பதால், நீயும் நானும் பெரும் பாக்கியத்திற்குப் பாத்திரமாகிவிட்டோம். இவ்வுலகின்கண் ராமபக்தனை ஈன்றவளே பிள்ளைப்பேறு பெற்றவள். அப்படியில்லாமல் பிள்ளை பெறுவதும் வீணே. இதைவிட மலடியாக இருந்தலே

மேலானது. ராமனுக்குப் பகைவனாகும் புத்திரனால் நன்மைக்கே அழிவு உண்டாகிறது.

"மைந்தா! உன் அதிர்ஷ்ட வசத்தினாலேயே ராமன் காட்டிற்குப் போகிறான் போலும். வேறு காரணம் ஏது? ராமன் சீதை இவர்கள் திருப்பாதங்களில் சகஜமான பற்று உண்டாவது புண்ணியங்களுக்கெல்லாம் பயனாகும்.

"அப்பா! குழந்தாய்! கனவிலும் காமக் குரோத லோப மோக மத மாத்ஸர்யங்களுக்கு வசப்படாதவனாய் இருப்பாயாக. எல்லா விகாரங்களையும் துறந்து, நீ மன மொழி மெய்களினாலும் சீதா ராமர்களுக்குத் தொண்டாற்றக் கடவாய்.

"தாய் தந்தையரான சீதா ராமருடன்கூட வனத்திலே இருக்கும்போது, உனக்கு எல்லா விதத்திலும் இன்பமே கிடைக்கும். மைந்தா! கானகத்தில் ராமன் வருத்தம் அடையாதபடி செய்யத்தக்கது எதுவோ, அக்காரியத்தையே நீ செய்யக்கடவாய். நான் உனக்குச் சொல்லும் புத்திமதி இது தான்," என்றாள்.

அதிர்ஷ்டத்தால் வலையை அறுத்துக்கொண்டு தப்பி ஓடும் மான்போல, லட்சுமணன் அன்னையின் அடியில் பணிந்து உடனே புறப்பட்டுப் போய்விட்டான்.

ராமன் இருக்குமிடம் தேடி லட்சுமணன் சென்றான். தமையனின் சமீபம் அடைந்ததும் மனக் களிப்புற்றான். ராமன் சீதை இவர்களின் அழகிய திருப்பாதங்களில் சேவித்து அவர்களுடன் கூட ராஜமாளிகைக்குப் போனான்.

நிற்க: நகரத்திலே குடி-ஜனங்கள் ஸ்திரீ புருஷர்கள் அனைவரும், 'கை கூடி-வந்த காரியத்தைக் கடவுள் கெடுத்து விட்டார்!' என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டனர்.

அனைவரும் தேனைப் பறிகொடுத்த ஈக்கள் போலப் பரிதவித்தனர். மனம் நொந்து உடல் இளைத்து முகம் வாடிப்போயினர். அவர்கள் கைகளைப் பிசைந்து கொண்டும், தலையை மோதிக்கொண்டும், இறகைப் பறி கொடுத்த பட்சி போல வருந்தினர். ராஜ தர்பாரில் பெருங்கூட்டம் கூடிவிட்டது. துக்கம் கரைகடந்து போக, அதை வருணிக்க முடியவில்லை.

"ராமன் வந்து விட்டான்!" என்று இனிய மொழிகளை உரைத்துச் சுமந்திரர் தசரத மஹாராஜாவை எடுத்து உட்கார வைத்தார். தசரதர் சீதையுடன் இரண்டு மைந்தரையும் கண்டு சோகமுற்றார். சக்கரவர்த்திக்குப் பேச முடியவில்லை. உள்ளத்தில் வருத்தம் பொங்கி எழப் பயங்கரமான தாபம் நெஞ்சில் ஏற்பட்டிருந்தது.

அப்போது ராமன் மிகவும் பிரியத்துடன் அவரது திருவடிகளில் சிரம் வைத்து வணங்கி நின்று வனஞ்செல்ல விடை கேட்டான்.

"தந்தாய்! எனக்கு ஆசி கூறி வனத்திற்குச் செல்ல உத்தரவு கொடுக்க வேணும். இச்சமயம் சந்தோஷப்பட வேண்டியிருக்க, அதற்காக வருத்தப்படுகிறீர்களே!

"தந்தாய்! இஷ்ட ஜனங்களின்மேலுள்ள பாசத்தினால்

அஸாவதானமாக நடந்தால், உலகிலே நற்பெயர் கெட்டு நிந்தைக்கு இடமாகும்,'' என்று கூறினன்.

அதைச் செவியுற்ற தசரதர் புத்திர வாஞ்சையினல் கட்டுப் பட்டவராய் எழுந்து ராமனைக் கரம்பிடித்து உட்காரவைத்துக் கொண்டு, "மைந்தா! கேளாய்: 'ராமன் தாவர ஜங்கமப் பொருள்களுக் கெல்லாம் தலைவன்!' என்று உன்னை முனி ஜனங்கள் யாவரும் கூறுகின்றனர்.

"கர்மங்களின் நன்மை தீமைகளை உள்ளத்தே ஆராய்ந்து, அதற்கேற்ற பயனைக் கடவுள் நமக்கு அளிக்கிறார். எவன் எக்கர்மத்தைச் செய்கிறானே, அதன் பலனையே அவன் அடைகிறான். வேதங்களும் தர்ம சாஸ்திரங்களும் மற்ற யாவும் இதையே கூறுகின்றன.

"ஆயின், குற்றம் செய்தவன் ஒருவன்; அதன் பலனை அனுபவிக்கிறவன் மற்றொருவன் என்பது கடவுளின் வெகு விசித்திரமான செயல் போலும். அவர் செயலை அறியத் தக்கவர் இவ்வுலகில் எவர் உள்ளார்?'' என்று வருந்தினர்.

அரசர் ராமனை அயோத்தியிலேயே நிறுத்திக் கொள்வதற்காகப் பற்பல உபாயங்கள் கபடமின்றிச் செய்து பார்த்தார். ஆனல், தர்மத்தின் பொறுப்பையுடையவனும் சமர்த்தனுமான ராமனின் முகக் குறிப்பைக் கொண்டு, 'இவன் இனி நிற்க மாட்டான்,' என்று உணர்ந்து அரசர் சீதையைக் கட்டியணைத்து உச்சி மோந்து மிக்க வாஞ்சை யுடன் அவளுக்குப் பல வித உபதேசங்களைச் செய்தார். காட்டிலுள்ள கஷ்டங்களையும், மாமியார், மாமனர், தாய்

தந்தையர் இவர்களுடன் வசிப்பதிலுள்ள சுகத்தையும் எடுத்துச் சொன்னார்.

ஆனால், சீதையின் மனமோ ராமன் திருவடியிலேயே லயித்திருந்தது. ஆகையால் வீட்டிலிருப்பது இன்பமாகவும், காட்டிற்குச் செல்வது துன்பமாகவும் அவளுக்குத் தோன்றவில்லை. பிறகு அங்கேயுள்ள வேறு பலரும் சீதைக்கு வனவாசத்திலுள்ள கஷ்டங்களை எடுத்துச் சொல்லிப் புத்திமதி கூற முயன்றனர்.

புத்திசாலிகளான மந்திரிகளின் மனைவிமாரும் குரு பத்தினிகளும் மிக்க அன்புடன் இனிமையான வார்த்தைகளினால், "சீதா! உனக்கு வனவாசம் எவரும் அளிக்கவில்லை! ஆதலால், குரு மாமனார் இவர்கள் சொற்படி நடப்பாயாக," என்றனர்.

அப்போது, சீதை வெட்கத்தினால் அவர்களுக்கு உத்தரம் அளிக்க இயலாதவளாய் நிற்க, அவர்கள் சம்பாஷணையைக் கேட்ட கைகேயி வெகுண்டு எழுந்திருந்து விரைந்து சென்று, முனிவர்களுக்கான உடை, பூஷணம், பாத்திரம் முதலியவற்றை எடுத்து வந்து சீதாராமர் முன்பு கொண்டு வைத்து மென்மையான மொழியில், "ரகுவீரா! உயிர் போல நீ அரசருக்கு மிகவும் வேண்டியவன். அவருடைய எண்ணம், அன்பு எல்லாம் உன்னைச் சுற்றியே எப்போதும் உள்ளன. அவர் அவைகளை விடமாட்டார். தாம் செய்த நற்பயன், நற்கீர்த்தி, பரலோகப் பிராப்தி இவற்றில் எது கெடுவதாயினும் சரி: அவருக்குச் சம்மதந் தான். ஆனால் உன்னை வனத்திற்குச் செல்லும்படி

ஒரு போதும் உத்தரவிடார். "ஆகையால், நீயே யாவற்றையும் ஆலோசித்து எது செய்யத்தக்கதோ, அதைச்செய்வாயாக," என்று சொன்னாள்.

தாயின் இந்த உபதேசத்தைக் கேட்டு ராமன் மிகவும் இன்புற்றான். ஆனால், அதே சொல் அரசரது மார்பினில் அம்புபோல் தைத்தது. அப்பொழுது அரசர், "துர்ப்பாக்கியம் படைத்த உயிரே! நீ இன்னும் நீங்காது இருக்கிறாயா?" என்று அரற்றினார்.

அதைக் கேட்டு அங்குள்ள பரிஜனங்கள் பரிதவிக்க, அரசர் மூர்ச்சையுற்று விழுந்தார். செய்வதற்கு என்ன உரியது? ஒருவருக்கும் ஒரு யுக்தியும் தோன்றவில்லை. ராமன் விரைவில் முனிவேஷம் பூண்டு தாய்தந்தையர் அடிகளில் பணிந்து வெளியே சென்றுவிட்டான்.

இங்ஙனம் ராமன் தன் மனைவி தம்பி இவர்களுடன் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டு, குருவின் பாத கமலங்களில் வணங்கிப் பின்னும் கணேசன், பார்வதி, மஹாதேவன் இவர்களைத் தியானஞ் செய்து அவர்களது ஆசிமொழிகளைப் பெற்று வனத்திற்குப் புறப்பட்டான்.

ராமன் போன பிறகு எங்கும் பெருந்துக்கம் உண்டாயிற்று. நகரத்திலுண்டான 'ஹா! ஹா!' சப்தத்திற்கு அளவேயில்லை. அச்சமயம் லங்கையில் அபசகுனங்கள் பல தோன்றலாயின. அயோத்தியைக் கொடிய துயர் சூழ்ந்து

கொண்டது. விண்ணவர் ஒரு புறம் மகிழ்ச்சியிலும், ஒரு புறம் துயரத்திலும் ஆழ்ந்தனர்.

அரசருக்கு மூர்ச்சை தெளிந்ததும் சுமந்திரனை அழைப்பித்து, "ராமன் வனம் சென்று விட்டான். என் பிராணனோ இன்னும் நீங்கின பாடில்லை. இவ்வுடல் இன்னும் நிலைத்திருப்பது எந்த இன்பத்தை உத்தேசித்தோ?

"உயிர் உடலை விட்டு நீங்குமாறு செய்வதற்கு இதைக் காட்டிலும் கோரமான துக்கம் வேறு யாது உளது? தோழரே! நீர் சிரத்தை எடுத்துக் கொண்டு ராமனுடன் கூடப் போகவேணும்.

"சுகுமாரர்களான அவ்விரு சகோதரர்களையும், ஜனக மஹாராஜன் புத்திரியையும் உமது இரதத்தில் ஏற்றிக் கொள்ளும். அவர்களுக்கு வனத்தைக் காட்டிவிட்டு, நான்கு தினங்களில் ஊருக்குத் திரும்பவும் அழைத்து வர வேணும்.

"ராமன் சத்யசந்தன்; திடமான விரதமுடையவன். ஆகையால் அவ்விரு சகோதரரும் ஒருகால் வனத்திலிருந்து திரும்பி வர இசையார். அப்பொழுது நீர் கைகூப்பி வணக்கத்துடன், 'பிரபுவே! மிதிலைமன்னன் மகளையாவது என்னுடன் திரும்ப அனுப்பவேணும்,' என்று, பிரார்த்தித்துக் கொள்ள வேணும்.

"சீதை இருள் அடர்ந்த காட்டைக் கண்டு அஞ்சும் தருணம் பார்த்து நான் சொன்னதாக, 'மகளே! உன் மாமன், மாமி உனக்குச் சொல்லி யனுப்பிய செய்தியாவது: நீ திரும்பி

வந்து விடு! ஏனென்றால், வனத்தில் பெருந்துன்பங்கள் உண்டு. நீ உன் இச்சைப்படி சில நாள் தந்தை கிரகத்திலும், சில நாள் உன்மாமனார் இல்லத்திலும் வசிக்கலாம்,' என்று சொல்லும்.

"இங்ஙனம் சொல்லி முயன்று பாரும். சீதை திரும்பினால் என் உயிருக்கு ஆதரவு ஏற்படும். இல்லாவிட்டால், இறுதியில் என் மரணம் சம்பவிப்பது நிச்சயம். விதியின் போக்கு விபரீதமாக முடிய, நம் வசத்தில் உள்ளது ஒன்றுமில்லை!" என்றார்.

இவ்வளவும் சொல்லிய பின் மன்னர் மறுமுறை, "ராமன், லட்சுமணன், சீதை இவர்களைச் சீக்கிரமே எனக்குக் கொண்டு வந்து காட்டுங்கள்!" என்று கூறியபடியே மூர்ச்சித்துப்போனார்.

அப்படியே சுமந்திரரும் அரசரை வணங்கி அவர் உத்தரவு பெற்றுக்கொண்டு சடுதியில் தேரைச் சித்தம் செய்து நகரத்திற்கு வெளியே சீதா ராமர்கள் இருக்குமிடம் தேடிச் சென்றார்.

அங்கே சுமந்திரர் ராமனுக்கு அரசரது ஆக்ஞையை அறிவித்து அவரைத் தம் தேரில் ஏறும்படி பிரார்த்தித்துக் கொண்டார். அவ்விரு சகோதரரும் அயோத்திக்குத் தலை வணங்கி நமஸ்காரம் செய்து, பின் சீதையுடன்கூட இரதத்தில் ஏறிக்கொண்டனர்.

ராமன் சென்றதுமே அயோத்தி நாதனற்று இருப்பதை உணர்ந்த நகரமாந்தர் அனைவரும் மிகவும் மனம்

கலங்கி, ராமனுடன் கூடவே வனஞ் செல்லத் துணிந்தனர். அப்பொழுது, கருணைக்கடலான ராமன் அவர்களுக்குப் பலவாறு புத்திமதி கூற, அவர்கள் திரும்பினர். ஆனால் அன்பின் வசப்பட்டு மீண்டும் அப்பேதை மாந்தர் அவனைத் தொடர்ந்து சென்றனர்.

ராமன் இல்லாத அயோத்தி பயங்கரமான தோற்றமுடையதாக இருந்தது. அது காலராத்திரியின் இருள் சூழ்ந்து கொண்டது போல் இருந்தது. நகரத்துப் பிரஜைகளாகிய ஸ்திரீ புருஷர்கள் அனைவரும் பயங்கரமான காட்டு மிருகங்கள் போல் காணப்பட்டனர்; ஒருவரை யொருவர் கண்டு அச்சமுற்றனர்.

அனைவரும் ஒன்று கூடி, "சீதை, ராம லட்சுமணர் இன்றி நமக்குச் சுகமில்லை. ஆகையால் ராமன் எங்குள்ளானோ, அங்கேயே நாம் அனைவரும் இருப்போம்! அவனின்றி அயோத்தியில் நமக்கு என்ன வேலை?" என்றனர். இவ்வாறு யோசித்துத் தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய வீடு வாசல்களை யெல்லாம் துறந்து, அப்பிரஜைகள் எல்லோரும் ராமனுடன் புறப்பட்டு விட்டனர். இதில் என்ன ஆச்சரியம்? ராமனது தாமரைத் தாள்களில் திடமான பற்றுக் கொண்டவர்களை என்றைக்கேனும் காம போகாதிகள் தம் வசப்படுத்த முடியுமோ?

இங்ஙனம் சிறுவர்களையும் முதியோரையும் வீட்டில் வைத்துவிட்டு நகரவாசிகள் அனைவரும் பின்பற்றித் தொடர்ந்து வர, ராமன் வனஞ் சென்று அன்றிரவில் தமஸா நதிக்கரையில் தங்கினான்.

அப்போது ராமன் தன்னைப் பின்பற்றி வந்துள்ள பிரஜைகளுக்கு அன்பு தோய்ந்த இன்மொழிகளினால் வித விதமான தர்மோபதேசங்களைச் செய்து அறிவுறுத்தலானான். ஆனாலும், அவர்கள் ராமனிடமுள்ள அன்பினால் அவன் என்ன சொல்லியும் வீடு திரும்பவில்லை.

ராமனின் சிநேகமும் சீலமும் அவர்களை வசீகரித்து விட்டன. ராமன் தர்ம சங்கடத்தில் சிக்கிக் கொண்டு தவித்தான்.

பிறகு, வழி நடந்த சிரமத்தினாலும் மன வருத்தத்தினாலும் களைப்படைந்திருந்த அவர்கள் அனைவரும் அன்றிரவு ஆழ்ந்த நித்திரை போயினர். அப்போது தேவ மாயையும் உதவியாய், அவர்கள் புத்தியை வலித்துத் தன் வசப்படுத்தி யிருந்தது.

இந்நிலையில் நடு நிசி கழிந்து செல்ல, ராமன் சுமந்திரரை அழைத்து அன்புடன், "ஐயா! இரதம் சென்ற தடம் கலைந்து போகும் விதமாகத் தேரைச் செலுத்துங்கள். எவ்வித உபாயத்தினாலாவது நாங்கள் சென்ற வழி இரகசியமாக இருக்கும்படி செய்யக்கடவீர்," என்று உத்தரவிட்டான்.

பிறகு, ராம லட்சுமணர்கள் சீதை ஆகியோர் சிவனடியை மனத்தால் நினைத்து வணங்கிவிட்டு இரதத்தின்மீது ஏறிக் கொண்டனர். மந்திரி சுமந்திரர் இரதத்தை இங்கும் அங்கும் நடத்திப் பிறகு மறைவாக ஓட்டிக்கொண்டு போய்விட்டார்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், மக்கள் ராமனைக் காணாது, "ராமன் போய் விட்டான்!" என்று பெருஞ் சத்தம்

இட்டனர். அவர்கள் அனைவரும் 'ராமா! ராமா!!' என்று அழைத்தவாறு நாற்புறமும் ஓடினர்.

"ராமன் இல்லாத வாழ்வைச் சுட வேணும்" என்று அவர்கள் நீரைவிட்டுப் பிரிந்ததும் உயிர் நீங்கும் இயல்புடைய மீனினங்களை மிகவும் கொண்டாடித் தம்மை நிந்தித்துக் கொண்டனர். "அன்பரின் பிரிவைக் கொடுத்த அந்தக் கடவுள் நாம் வேண்டி நின்றும் மரணத்தை ஏன் கொடுக்க வில்லை?" என்று முறையிட்டனர்.

இங்ஙனம் ஓலமிட்டழுது துக்கிப்பவர்களாய் அவர்கள் அயோத்திக்குத் திரும்பினர். அவர்களுக்குண்டான ஆறாத் துயரை வர்ணித்தல் இயலாது.

அவர்கள் அனைவரும் ராமன் வனவாசம் முடித்துத் திரும்பிவரும் நாளை ஆவலுடன் எதிர் நோக்கித் தம் உயிரை வைத்துக் கொண்டிருந்தனர்.

நிற்க: ராம லட்சுமணர் இருவரும் சீதை சுமந்திரருடன் சிருங்கிபேரம் என்ற ஊருக்கு வந்து சேர்ந்தனர். அவ்விடத்தில் கங்கையைக் கண்டு ராமன் இரதம் விட்டிறங்கிக் களிப்புடன் கங்கையை வணங்கிய பின், மந்திரி சுமந்திரர், லட்சுமணன், சீதை இவர்கள் வணங்கினார்கள். மனைவி, சகோதரன், மந்திரி இவர்களுக்கு ராமன் அந்தக் கங்கையின் பிரபாவத்தை விளக்கிப் பற்பல கதைகளைச் சொல்லிக் கொண்டே அதன் அலைகளை வெகு நேரம் நோக்கி நின்றான்.

பிறகு அதில் யாவரும் ஸ்நானம் செய்து அதன் பின்

தூய நீரைப் பருக, வழி நடந்த களைப்பு நீங்கப் பெற்று மனத் தெளிவடைந்தனர்.

எந்த ராமனை நினைத்த மாத்திரத்திலேயே நமது சிரமம் முழுமையும் தூர விலகி விடுகிறதோ, அந்த ராமனுக்குச் சிரமம் ஏற்படுவதென்பதும், விலகுவதென்பதும் கேவலம் லோகாசாரமேயன்றி வேறில்லை.

ராமன் தூய்மை வாய்ந்த சச்சிதானந்த ஸ்வரூபத்தின் வேர்; சூரிய குலத்தின் துவஜம்; அவன் ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டிச் செல்வதற்கு ஏற்ற பாலம் போன்றதொரு சரித்திரத்தை ஒரு மானிடன்போலச் செய்துகாட்டுகிறான்.

நிற்க: வேடுவர் தலைவனான குகனுக்கு ராமன் வந்த செய்தி கிடைத்ததும், அவன் சந்தோஷமடைந்து தன் சுற்றத்தார் புடை சூழ்ந்து வரக் கூடைகள் நிறையக் கனி கிழங்குகளைக் காணிக்கையாகக் கொண்டு சந்திக்கச் சென்றான். அவனுள்ளத்தில் அடக்கமுடியாத ஆனந்தம் பெருகி ஓடியது.

அவன் சென்று ராமனுக்குத் தண்டனிட்டுத் தான் கொண்டுவந்த காணிக்கைகளைமுன்வைத்துப் பிரபுவை மிகவும் பிரியத்துடன் நோக்கினான். எல்லோரையும் நேசிக்கும் இயற்கை வாய்ந்த ராமன் சகஜமாயுண்டான சினேகத்தினால் பரவசனாய்த் தன் அருகில் அவனை வீற்றிருக்கச் செய்து க்ஷேம சமாசாரங்களை வினவினான்.

அப்போது குகன், “இன்று நான் பாக்கியசாலிகளின்

எண்ணிக்கையில் தொடுக்கப்பட்டு விட்டேன். ஏனென்றால் தங்களுடைய திருவடித் தாமரையின் தரிசனம் எனக்கு க்ஷேமமன்றோ? எஜமானரே! இப்பிரதேசம், வீடு பொருள் யாவும் உங்களுடையன. நான் என் பரிவாரங்களுடன் தங்களுடைய தாழ்மையான தாஸன். தயவு செய்து இந்தச் சிருங்கிபேரபுரத்தில் தங்கள் பாதம் படும்படி செய்யவேணும். பிறர் என்னை மெச்சும்படி தாங்கள் என்னைத் தங்கள் அடிமை யாக்கிக் கொள்ள வேணும்," என்று வேண்டினான்.

அதற்கு ராமன், "அறிவு வாய்ந்த தோழ! நீ சொல்வது சரி. ஆனால், தந்தை எனக்கு இட்ட கட்டளை வேறாயிற்றே. தவ விரதம் மேற்கொண்டு தவசிகளின் உடை தரித்து அவர்கள் புசிக்கும் ஆகாரத்தையே அருந்திப் பதினான்கு வருஷம் வனவாசம் செய்ய வேண்டுமென்றிருக்க, நான் இந்தக் கிராமத்துக்குள் பிரவேசிப்பது சரியன்று," என்று சொன்னான். அது கேட்ட குகனுக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று.

மோகன மூர்த்திகளான சீதா ராம லட்சுமணர்களின் ரூபத்தைக் கண்ட கிராம ஜனங்களான ஆணும் பெண்ணும் பிரியத்துடன், "ஏ, சகி! இத்தகைய பாலர்களைக் காட்டுக்கு அனுப்பிய அந்தத் தாய் தந்தையர் எத்தகையினராக இருக்கக்கூடும்: சொல்!" என்று பேசிக் கொண்டனர்.

அதில் ஒருவன், "பூபதி நன்மையே புரிந்தான்! கண்களைப் படைத்ததின் பயனைப் பிரம்மா நமக்கு அளித்தானன்றோ?" என்றான்.

இதற்குள் வேடுவர் தலைவனுகிய குகன் ஓர் அழகிய சிம்சுபாவிருட்சத்தைக் கண்டு ராமன் தங்குவதற்கு ஏற்ற இடமென நிச்சயித்து ராமனைக் கூட்டிச் சென்று அந்த ஸ்தானத்தைக் காட்டினுன். ராமன் அதை நோக்கி, "இவ்விடம் எல்லா விதத்திலும் செளகரியமா யுள்ளது," என்ருன். கிராமத்து ஜனங்கள் ராமனைத் தரிசித்து விட்டுத் தத்தம் வீடுகளுக்குச் செல்ல, ராமன் சந்தியாவந்தனம் செய்யச் சென்ருன்.

குகன் ராமனுக்காக மெல்லிய கானகப் புல்லையும் தளிர்களையும் படுக்கைபோல மெத்தென விரித்துச் சுத்தமான, இனிய சுவையுள்ள, கனிகள் கிழங்குகள் முதலியவற்றைத் தொன்னைகளில் நிரப்பி வைத்தான்.

அப்போது ரகுகுல திலகனுன ராமன், சீதை, சுமந்திரர் தம்பி லட்சுமணன் இவர்களுடன் கந்த மூலம் பலங்களை அருந்திப் படுத்துக் கொள்ளவே, சகோதரனுன லட்சுமணன் ராமன் கால்களை வருடலானுன்.

பிறகு, பிரபு நித்திரை கொண்டதையறிந்து லட்சுமணன் சுமந்திரரையும் நித்திரைக்குப் போகும்படி மெல்லச் சொல்லி விட்டுக் கொஞ்ச தூரத்தில் அம்பையும் வில்லையும் கையில் தாங்கி வீராசனம் போட்டு உட்கார்ந்து விழித்திருந்தான்.

குகன் நம்பிக்கையுள்ள காவலாளிகளைக் கூப்பிட்டு மிகவும் பக்தியுடன் ஆங்காங்கே நிறுத்தி வைத்தான். தானும் தோள்களில் அம்பறுத் தூணியைத் தாங்கி வில்லில்

பாணமேற்றியவாறே, லட்சுமணன் அருகில் போய் உட்கார்ந்தான்.

பிரபு ரகுராமன் இங்ஙனம் பூமி மீது சயனித்திருப்பதைக் கண்ட நிஷாத ராஜனான குகனுக்கு ராமன்பாலுள்ள பிரியத்தின் காரணமாக அதிக வருத்த முண்டாயிற்று. உடல் மயிர்க் கூச்சடையக் கண்களில் நீர் பெருக, அவன் அன்புடன் லட்சுமணனை நோக்கிப் பின் வருமாறு பேசலானான்:

"சுவாமீ! இந்திரனது மாளிகையும் இதற்கு இணையில்லை யென்னும்படியான இயற்கையழகு வாய்ந்தது ராஜமாளிகை. அதன் நாற்கட்டு அங்கணங்கள் இரத்தினங்கள் பதிக்கப்பெற்று மன்மதனே தனது கைகளால் அமைத்தவை போல் உள்ளன.

"அழகாகவும், பரிசுத்தம் வாய்ந்ததாகவும், விசித்திரமாகவும், புஷ்பங்களின் நறுமணம் வீசப்பெற்றதாகவும் உள்ளது அந்த ராஜ பவனம். அங்கே அழகிய மஞ்சங்களும், இரத்தின மணி விளக்குகளும், வேறு பலவிதமான சௌகரியங்களும் இருக்கின்றன.

"பால்நுரை போன்ற மெதுவான படுக்கை வஸ்திரங்களும் தூய வெண்பட்டு மெத்தைகளும், விதம் விதமான திண்டுகளும் அங்கே இருக்கின்றன. இப்படிப்பட்ட இடத்தில் ராமனும் சீதையும் தமது தேக காந்தியினாலேயே ரதிமன்மதர்களுடைய கர்வத்தைப் பங்கப்படுத்துகிறவர்களாய் இரவு தோறும் நித்திரை செய்வது வழக்கம்.

"அந்த ராமனும் சீதையுமே இன்று உடல் சோர்ந்து

களைத்துப்போய், திறந்த வெளியில் புல்மெத்தையின்மேல் படுத்துறங்குவதைக் காண என் மனம் பொறுக்கவில்லை. தாய் தந்தையர், பந்துமித்திரர், நகரவாசிகள், உண்மையான வேலைக்காரர், வேலைக்காரிகள் யாவரும் எந்த ராமனைத் தமது உயிர்போலப் பாதுகாத்து வந்தனரோ, அந்தத் திறமையுள்ள ராமன் இன்று வெறும் தரையின்மீது தூங்குகிறான். ஜனக மகாராஜனைத் தந்தையாகவும், இந்திரனது சகாவான தசரத சக்கரவர்த்தியை மாமனாகவும், ஸ்ரீராமனைக் கணவனாகவும், உடையவளாய், உலகமெங்கும் பரவிய பிரபாவத்தோடு கூடிய அந்த ஜானகி இன்று பூமியில் படுத்திருக்கிறாள். விதி யாரை விட்டது? நன்று, நன்று! காட்டுக்குப் போக ஏற்றவர்களா ராமனும் சீதையும்? கர்மம்தான் எல்லாவற்றிற்கும் முக்கியமானதென்று உலகம் சொல்வது உண்மையே!

"மூட புத்தி படைத்த கைகேயி சீதாராமர் சுகமாக இருக்க வேண்டிய தருணத்தில் அவர்களுக்குப் பெருந் துன்பத்தை விளைவித்தாள். அவள் சூரிய வம்சமான விருட்சத்துக்குக் கோடரியானாள்; உலகத்தைத் துன்பத்தில் ஆழ்த்தினாள்.

"பூமியில் சயனித்திருப்பவர்களாக அந்தச் சீதா ராமர்களைப் பார்த்த குகனுக்கு அப்போது மட்டில்லா வேதனை உண்டாயிற்று.

இவ்வாறு குகன் சொல்வதைக் கேட்ட லட்சுமணன் ஞான வைராக்கிய பக்தி ரஸம் செறிந்த இனிய சொற்களால் மெல்லக் கூறலானான் :—"ஐயா! சுகத்தையோ,

துக்கத்தையோ, யாரால் யாருக்குக் கொடுக்க இயலும்? மனிதர்கள் தத்தம் கர்ம பலனையே அனுபவிக்கிறார்கள்.

"ஒருவரைச் சந்தித்தல், விட்டுப் பிரிதல், நன்மை தீமைகளை அனுபவித்தல், பகை, நட்பு, உதாஸீனமாக இருத்தல் ஆகியவை மயக்கத்தின் வலைகளாகும். பிறந்தது முதல் இறக்கும்வரை, ஸம்ஸார பாச பந்தம் இருக்குமளவில் இன்பம், துன்பம், கருமம், காலம், நம்மால் பார்க்கப்படுவன, கேட்கப்படுவன, மனத்தின் கண் யோசிக்கப்படுவது, பூமி, வீடு, செல்வம், ஊர், குடும்பம், விண்ணுலகம், பாதாளம் (நரகம்) இவற்றைக் குறித்து நாம் செய்யும் விவகாரங்களெல்லாம் மயக்கத்தினால் உண்டானவை: அவை உண்மையானவையல்ல.

"கனவிலே ஒரு பிச்சைக்காரன் அரசனாதலும் கூடும்; தரித்திரன் இந்திரனாகவும் கூடும். ஆனால் அவன் விழித்துக் கொண்டபின் பிச்சைக்காரனாகவோ, இந்திரனாகவோ கனவு கண்டதினால் லாப நஷ்டங்களில்லை. அது போன்றுளது இவ்வுலகம். மனத்தில் இதை நன்கு அறிந்துகொள். இங்ஙனம் தெளிந்து சினத்தை விடவேண்டும். ஒருவர் மேலும் குற்றம் சுமத்தலாகாது. சகலரும் மோகமாகிய இரவில் தூங்குகின்றனர். அதிலேயே விதம் விதமான கனவுகள் காண்கின்றனர். பரமார்த்த ஞானம் பெற்றவர்களும், ஸம்ஸார பந்தங்களினின்றும் வைராக்கியமடைந்தவர்களுமான யோகிகளும் இப்பிரபஞ்சமாகிய இரவில் (தூங்காமல்) விழித்திருப்பர். எப்போது ஒருவனுக்குப் போக விலாஸங்களினின்றும் வைராக்கியம் ஏற்படுமோ, அப்

போதுதான் அவனை உலகத்தில் விழித்திருப்பவனாகக் கருத வேண்டும்.

"ஸ்ரீராமன் பரம்பொருளாகிய பிரம்மமே. அப்பொருள் கட்புலனுக்கும் மனத்திற்கும் எட்டாதது; அநாதி; உவமையற்றது; விகாரமில்லாதது; அபின்னமானது. இதன் மஹிமையை 'இது மட்டுமல்ல; இது மட்டுமல்ல!' (நேதி—நேதி) என மறைகள் நித்தியம் நிரூபிக்கின்றன."

"அக்கருணாமூர்த்தி தொண்டர், பூமி, பிரம்ம நிஷ்டர், பசு, தேவர் இவர்களுக்கு நன்மை புரியவேண்டி மானிட வடிவம் தாங்கிக் காரியங்களை நிகழ்த்தி வருகின்றார். அவர் சரிதையைக் கேட்பவருக்கு ஸம்ஸார வலை அறுபடும். தோழனே! இதைத் தெரிந்து கொண்டு உனது மோகத்தை விட்டு விடு. சீதாராமர்களின் திருத்தாள்களில் என்றும் பற்றுள்ளவனாக இருக்கக்கடவாய்," என்றான்.

இவ்வாறு ராமனுடைய தூய குணங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டே யிருக்கையில், பொழுது புலர்ந்தது. ஜகத்திற்கு க்ஷேமத்தைத் தருபவனாகிய ஸ்ரீராமசந்திரன் நித்திரை விட்டெழுந்தான்.

களங்கமற்றவனும் சமர்த்தனுமான ராமன் காலைக் கடனை முடித்துக்கொண்டு நீராடிய பின், ஆலம்பாலை வருவித்தான்: அதைக் கொண்டு அவனும் தம்பியும் முடிகளை ஜடையாகத் திரித்துக் கொண்டனர். அதைக் கண்ணுற்ற சுமந்திரருடைய கண்களில் நீர்ப்பெருக்கெடுத்தது.

சுமந்திரர் மனத்தில் பெருந்தாபம் எழ, முகம் வாடி

விட்டது. அவர் மிகவும் தாழ்மையுடன் கரங்குவித்து இராமனை விளித்து, "பிரபோ! கோசலாதிபதி எனக்கு இட்ட கட்டளை இது. 'நீர் இரதத்தைச் செலுத்திக்கொண்டு செல்லும். அவர்களுக்கு ஆரணியத்தைச் சுற்றிக் காண்பித்துவிட்டு ஸ்நானம் செய்வித்தபின், இரு சகோதரர்களையும் சீதையையும் விரைவில் நகருக்குத் திரும்ப அழைத்து வாரும். சகல சந்தேகங்களையும், சங்கோசத்தையும் விலக்கி அவர்களை விரைவில் திரும்பவும் கூட்டி வாரும்," என்பதேயாம்.

"சுவாமீ! மகாராஜா எனக்கு அங்ஙனம் கட்டளையிட்டுள்ளார். இப்பொழுது தாங்கள் எவ்வாறு உத்தரவு இடுகிறீர்களோ, அவ்வாறு செய்யக் காத்திருக்கிறேன்," என்று சுமந்திரர் சொல்லி ராமன் பாதத்தில் விழுந்து குழந்தைபோலத் தேம்பி அழலானார்.

மேலும் அவர் "ராம! அயோத்தி அநாதியாகாமல் இருப்பதற்காக வேண்டி எது செய்யத் தக்கதோ, அதைச் செய்ய வேணும்," என்று பிரார்த்தித்தார்.

அப்போது ராமன் சுமந்திரரைத் தூக்கி உட்கார வைத்துத் தேற்றினன். "பெரியவரே! நீர் தர்ம மார்க்கங்கள் அனைத்தும் சோதித்துப் பார்த்திருக்கிறீர். அறிவாளிகளாகிய சிபி, ததிசி, அரிச்சந்திரன் முதலிய அரசர்கள் தர்மத்தைக் காக்கும் பொருட்டுப் பலவிதத் துன்பங்களைச் சகித்திருந்தார்கள். நந்தி தேவன், பலி முதலிய அரசர்கள் பற்பல துன்பங்களைப் பொறுத்துத் தர்மத்தைக் காத்திருக்கின்றனர்.

'உண்மை சொல்வதற்கீடாகத் தர்மம் வேறு கிடையாது' என்று நிகமாகமங்களும் புராணங்களும் சொல்லுகின்றன. நான் அதைச் செய்வது சுலபமானதென்று அறிகிறேன். அதைக் கைவிடுவதினாலே மூன்று லோகத்திலும் எனக்கு அபகீர்த்தி பரவிவிடும்.

"பிரபலமான புருஷனுக்கு உண்டாகும் அபகீர்த்தி கோடி மரணத்திற்கு ஒப்பான கொடிய துன்பமாகும். பெரியவரே! உமக்கு நான் அதிகம் சொல்வது எங்ஙனம்? இவ்வளவு பதில் பேசுவதே என்னைப் பாவத்தில் பங்கு கொள்ளச் செய்யும்.

"நீர் சென்று எனக்காக என் தந்தையின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு ஆயிரம் வணக்கத்துடன் கைகூப்பி, 'தந்தாய்! எங்கள் பொருட்டுத் தாம் எவ்விஷயத்திற்கும் சிறிதும் சிந்தை கொள்ள வேண்டாம்,' என்று பிரார்த்தித்துக் கொள்ளவேணும்.

"நீரோ தந்தையைப் போல் எனக்கு மிகவும் வேண்டியவர். கைகூப்பி உம்மை நான் வேண்டுவது இது. தகப்பனார் எங்கள் பொருட்டுச் சிந்தையுற்று வருந்தாமல் பார்த்துக் கொள்வது தங்கள் முக்கியமான கடமையாகும்," என்றான்.

ராமனுக்கும் சமந்திரருக்கும் நடந்த அச் சம்பாஷணையைச் செவியுற்று, வேடுவர் தலைவனான குகன் பரிவாரங்களுடன் வருத்தமுற்றான். அப்போது லட்சுமணன் சில கடுஞ் சொற்களைச் சொல்ல, அவ்வாறு சொல்வது தகாதென ராமன் தடுத்துரைத்தான்.

தம்பியின் கடுஞ்சொற்களுக்காக அண்ணன் வெட்க முற்று அதை அரசனிடம் சென்று சொல்லாதிருக்குமாறு ஆணையிட்டுத் தரும்படி சுமந்திரரை வேண்டிக் கொண்டான்.

அதன்மேல் சுமந்திரர், 'சீதை காட்டிலுள்ள கஷ்டங்களைப் பொறுக்க முடியாது' என்று அரசர் சொல்லி அனுப்பிய செய்தியை ராமனுக்கு அறிவித்தார். "ராம! அரசர் என்னைப் பிரார்த்தித்து அப்போது காட்டிய எளிமையையும் பிரீதியையும் சொல்லமுடியாது," என்று சொன்னார்.

தயாநிதியான ராமன் தந்தையின் வசனத்தைக் கேட்டுச் சீதைக்குக் கோடிவிதம் அறிவுறுத்திச் சொல்லலானான். அப்போது சீதை ராமனைப் பார்த்து, "தாங்கள் ஒரு பெரிய விவேகி; கருணையே உருக்கொண்டவர். தாங்கள் அறியாதது என்ன? இதை மட்டும் சொல்லுங்கள். உடலை விட்டு நிழல் தனித்து நிற்கக் கூடுமோ? சூரியனை விட்டு வெப்பமும், சந்திரனைப் பிரிந்து நிலவும் எங்கேனும் போக முடியுமா?" என்றாள்.

இங்ஙனம் அன்பு தோய்ந்த மொழிகளால் சீதை ராமனுக்குப் பதிலுரைத்து, அப்பால் சுமந்திரரை நோக்கி, "பெரியவரே! எங்களுக்குற்ற ஆபத்தின் காரணமாய் இன்று நான் தங்கள்முன்னே நின்று பேசலாயிற்று. அதை விகற்பமாகக் கொள்ள வேண்டாம்.

" ஆரிய புத்திரரின் பாத கமலங்களின்றி வாழ நேரிடின்,

இவ்வுலகின்கண் உள்ள சம்பந்தங்கள் யாவும் எனக்கு வியர்த்தமாகிவிடும்.

"முடிமன்னர்களின் மகுடங்களால் எப்போதும் உராயப் பெற்றிருப்பது என் தந்தையின் பாத பீடம். அப்படிப்பட்ட என் தந்தையின் வைபவத்தையும், அவர் இல்லத்தின் சுகத்தையும் நான் அனுபவித்திருக்கிறேன். எல்லாவித சுகத்திற்கும் இடமானது என் தந்தையின் கிரகம். அது எனக்கு என் அன்பரின்றி, மறந்தும் மனத்திற்குப் பிடித்ததாக மாட்டாது.

"இந்திரனே முன் வந்து வரவேற்றுத் தனது பாதி ஆஸனத்தை அளிக்கும் பாக்கியமுடையவர் எவரோ, அந்தக் கோசலாதிபதியே என் மாமனார். அவர் புவன சக்கரவர்த்தி.

"எல்லா விதமான சுகத்திற்கும் இருப்பிடமான என் பிதாவின் கிரகமும், அத்தகைய மகிமை வாய்ந்த மாமனார் இல்லமும், அயோத்திவாசமும், பிரியமான பந்து ஜனங்களும், தாய் போன்ற மாமிமார்களும், இவர்கள் பழக்கமும் யாவும் எனக்கு ரகுராமனின் பாதகமலங்களின் தூளின்றிக் கனவிலும் சுகத்தை அளிப்பனவல்ல!

"கொடிய பாதை, அடர்ந்த காடு, பர்வதம், யானை, சிங்கம், அகாத நதி, தடாகங்கள், வேடுவர், கிராதர், மான், பட்சி இவை யாவும் பிராண நாதனுடன் கூடவாழும் எனக்குச் சுகத்தை யளிப்பதாகும்!

"தாங்கள் எனக்காக மாமன் மாமியார் பாதங்களில் வணங்கிக் கைகூப்பி, "என் நிமித்தம் தாங்கள் வருந்த

வேண்டாம். நான் வனத்திலே சாதாரணமாக அதிக சுகத்துடன் வாழ்கிறேன். தைரியசாலிகளுக்குள் முதல்வரும், வில்லம்பு தாங்கிச் சோபிக்கின்றவருமான ஆரிய புத்திரரும், பிரியமான மைத்துனனும் என்கூட இருக்கும் போது எனக்கு வழிநடந்த சிரமமோ, மயக்கமோ, வருத்தமோ இல்லை. ஆதலால், மறந்தும் தாங்கள் எனக்காக வருந்த வேண்டாம் என்று வேண்டிக் கொள்ளுங்கள்" என்றாள்.

சீதையின் தண்மொழிகளைச் செவியுற்ற சுமந்திரர், மாணிக்கத்தை இழந்தநாகம் போல் கலங்கினார். கண்களால் எதையும் பார்க்க முடியவில்லை. காதும் கேட்க வில்லை. மிகவும் மனங் குழம்பிப் பேச இயலாதிருந்தார்.

அப்போது ராமன் அவருக்குப் பலவாறு தேறுதல் சொல்லியும், சுமந்திரர் மனச்சாந்தி அடைந்தாரில்லை. தம்முடன்கூட ராமனும் அயோத்திக்குத் திரும்பி வரவேண்டு மென்று பலவாறு முயன்று பார்த்தார். ரகுராமனோ அவருடைய மொழிகளுக்குத் தக்க பதில் அளித்து விடை கொடுத்தனுப்பினான்.

ராமனுடைய ஆணை மீற முடியாதது. விதிவலியோ கொடியது. அதன் முன் எவர் அதிகாரம் செல்லும்? ராமன், லட்சுமணன், சீதை இவர்தம் பாதங்களில் பணிந்து, மூலதனத்தைப் பறி கொடுத்த வியாபாரிபோல் சுமந்திரர் சோர்வுற்று வீடு திரும்பினார்.

சுமந்திரர் இரதத்தைச் செலுத்தத் தொடங்கினார்.

குதிரைகளோ ராமன் பக்கம் திரும்பிப் பார்த்துப் பார்த்துக் கனைத்துக்கொண்டே சென்றன. அதைக் கண்ணுற்ற வேடுவனான குகனும் மனங்கலங்கித் தலையை மோதிக் கொண்டு பரிதவித்தான்.

எவருடைய பிரிவின் காரணமாக வாயில்லாப் பிராணிகளும் வருந்தித் தம் நிலைமையில் மாறுகிறதோ, அந்த ராமன் இல்லாமல் தாய், தந்தை, குடிகள் யாவரும் எங்ஙனம் உயிர் பிழைத்திருப்பார்கள்? அந்த ராமன் சுமந்திரரைத் துரிதப்படுத்தி அனுப்பிவிட்டுத் தான் கங்கைக் கரைக்கு வந்து சேர்ந்தான்.

ராமன் கங்கையைக் கடந்து செல்வதற்குப் படகுக் காரனைப் படகு கொண்டுவரச் சொன்னான். அதற்குப் படகோட்டி, "ராம! நான் உமது இரகசியத்தை அறிவேன். உமது பாத கமலங்களின் தூளி, தொட்ட பொருளை மனிதராக மாற்றும் சக்தி வாய்ந்த மூலிகையென அனைவரும் கூறுகின்றனர்!

"அது தொட்ட மாத்திரத்தில் கற்சிலையை அழகிய பெண்ணாக்கி விட்டதாம். கல்லை விடக் கடினமான பொருளிருக்கச் சாத்தியமில்லை. என்னுடைய படகும் ரிஷி பத்தினியாக மாறி விடுமேயானால், என் படகு பறந்து போய் என்பிழைப்பும் கெட்டுவிடுமன்றோ? இப்படகைக் கொண்டே என் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றி வருகிறேன். வேறு ஒரு தொழிலும் செய்ய அறியேன்!" என்று கூறிப் படகு விட மறுத்தான்.

பின்னும் அவன், "நாத! நான் முதலில் தங்கள் சரண கமலங்களை நீர் கொண்டு கழுவப் பெறுவேனேயாயின், தங்களை என்படகில் ஏற்றிக் கொள்வேன். நான் ஏதும் கூலி கேட்க மாட்டேன். ராம! உமது பேரில் ஆணை; உங்கள் தந்தை மீது ஆணை! நான் சொல்வது யாவும் உண்மை. வேணுமானல் லட்சுமணன் என்மீது அம்பு எய்யட்டும். உங்கள் திருப்பாதங்களை நான் அலம்பப் பெறுதவரை, கிருபா நிதியாகிய உங்களை அக்கரை கொண்டு சேர்க்க மாட்டேன்!" என்று கூறினன்.

படகோட்டியின் அன்பு தோய்ந்த முரணை பேச்சைக் கேட்டுத் தயாநிதியான ராமன் லட்சுமணனையும் சீதையையும் பார்த்து நகைத்தான்.

கருணைக் கடலான ராமன் படகோட்டியை நோக்கிப் புன்னகையுடன், "அப்பா! நல்லது! உன்னுடைய படகு எங்கும் போய்விடாதபடி என்ன செய்ய வேணுமோ, அதைச் செய். சடுதியில் ஜலங் கொணர்ந்து என் அடிகளைக் கழுவி எங்களை அக்கரையில் சேர்ப்பாய்: நேரம் ஆகிறது," என்றான்.

எவனுடைய நாமத்தை ஒருதடவை நினைப்பதினலேயே மனிதன் ஸம்ஸாரமாகிற ஆழ்கடலின் அக்கரையை அடைகிறனே, இவ்வகண்ட புவனத்தை மூன்றடிக்கும் சிறியதாகச் செய்தவன் எவனே, அந்த ராமனே நதியைக் கடக்கப் படகோட்டியின் உதவியை நாடினன்: என்னே விந்தை!

நிற்க: படகோட்டி, ஸ்ரீராமனின் திருப்பாதங்களைக் கழுவி, அந்தத் தூய நன்னீரைத் தன் பந்து மித்திரர்களுடன் பருகினன்.

இங்ஙனம் அவன் முதலில் தன்பிதுர்க்களின் ஆத்மாவைப் பவசாகரத்தின் அக்கரையிற் கொண்டு சேர்ப்பித்துப் பின் களிப்படைந்த மனத்தினனாய், ராமனை அக்கரையிற் கொண்டு சேர்த்தான்.

சீதையும் ராமனும், குகன் லட்சுமணன் இவர்களுடன் படகை விட்டு இறங்கிக் கங்கையின் மணலில் நின்றார்கள்.

அவர்கள் இறங்கியதும், குகன் ராமனை நமஸ்காரம் செய்து நின்றான். "இவனுக்குக் கூலி யொன்றும் நாம் கொடுக்க வில்லையே!" என்று ராமன் வெட்கமுறக் கணவன் உள்ளத்தை யறிந்த சீதை, இரத்தினங்கள் இழைக்கப் பெற்ற தன் மோதிரத்தைச் சந்தோஷத்துடன் கழற்றினாள்.

அப்போது ராமன், "இந்தா! இந்தக் கூலியைப் பெற்றுக் கொள்," என்று குகனுடன் சொல்லப் படகோட்டி மனங்குழைந்து ராமன் தாள்களைப் பிடித்துக் கொண்டான்.

"நாத! இன்று நான் அடையாத பொருள் யாது? தோஷம், துக்கம், வறுமை ஆகிய அக்கினிகள் சாந்தமடைந்துவிட்டன! நான் வெகு காலமாகக் கூலி வேலை செய்கிறேன். ஆனால் கடவுள் இன்றே சரியாக எனக்கு முழுக் கூலியையும் கொடுத்தருளினார்!

"நாத! தீனதயாளுவே! இப்போது எனக்கு

ஏதும் வேண்டாம்: தங்கள் அனுக்கிரகம் இருக்கிறது. தாம் திரும்பி வரும்போது எதைத் தந்தாலும் அந்தப் பிரசாதத்தைத் தலையில் தாங்கி வைத்துக்கொள்வேன்,'' என்று சொன்னான். ராமன், சீதை, லட்சுமணன் மூவரும் வற்புறுத்தியும், படகோட்டி கூலி பெறச் சம்மதிக்கவில்லை. அப்போது தயாமூர்த்தி ராகவன் அவனுக்குப் பக்தியாகிய வரத்தை யளித்துவிட்டு விடை பெற்றுக்கொண்டான்.

பிறகு, ராமன் நீராடி மண்ணால் சிவலிங்கம் பிடித்து வைத்து அதற்குப் பூஜை செய்து வணங்கினான். சீதை இரு கரங்களையும் குவித்துக் கங்கையை வணங்கி, "தாயே! நான் என் கணவன், மைத்துனன் இவர்களுடன்கூட க்ஷேமமாகத் திரும்பி வந்து உனக்குப் பூஜை செய்யுமாறு என் மனோரதத்தை நிறைவேற்றுவாயாக,'' என்று வேண்டிக்கொண்டாள்.

அன்பு-ரஸம் ததும்பிய சீதையின் செம்மொழிகளைக் கேட்டுப் பரிசுத்தமான சிறந்த கங்கைநீரிலிருந்து ஒரு வாக்கு உண்டாயிற்று: "ரகு வீரனுக்குப் பிரியமானவளே! வைதேகி! கேள். உனது பெருமையை யார் அறியார்? அணிமாதி எட்டு விதமான ஸித்திகளும் உனக்குக் கை கூப்பி வணங்குகின்றன: உன்னை ஒரு முறை பார்த்தவர் லோக பாலர்களாகி விடுகின்றனர். என்னை நீ பிரார்த்தித்ததின் மூலம் எனக்குப் பெருமை அளித்து விட்டாய்; எனது நாவைப் பயன்பெறச் செய்வதற்கென்றே உனக்கு ஆசி கூறுகிறேன். (உண்மையில், என் ஆசிமொழி உனக்குத் தேவையில்லை—என்பது தாத்பரியம்) நீ உன் மைத்துனன், கணவன் இவர்களுடன் க்ஷேமமாய்

அயோத்திக்குத் திரும்புவாய். உனது கோரிக்கை நிறைவேறும். உலக மெங்கும் உன் புகழ் பரவக் காண்பாய்!'' என்றது.

மங்களத்திற்கு ஆதாரமான கங்கையின் வாக்கைச் செவியுற்று, 'அவள் தன் பட்சத்தில் இருக்கிருள்!' என்று உணர்ந்து சீதை சந்தோஷத்துடன் இருந்தாள். பிறகு ரகுராமன் குகனைப் பார்த்து, "உன் இருப்பிடம் செல்லக் கடவாய்,'' என்று சொல்ல, அவன் முகம் வாடினன்: அவனது உள்ளத்திலே கொடிய தாபம் உண்டாயிற்று.

அப்போது குகன் கைகூப்பி, "ரகுவம்ச ரத்தின மணியே! என் விண்ணப்பத்திற்குச் செவி சாய்க்க வேணும். நாத! நான் தங்கள்கூட இருந்து தமக்குக் காட்டுப் பாதைகளைக் காட்டிக்கொண்டு சில தினங்களாவது தங்கள் பாத சேவை செய்ய விரும்புகிறேன்.

"பிரபோ! தாங்கள் எந்த வனத்தில் சென்று வாசஞ் செய்ய விரும்புகிறீர்களோ, அங்கே உங்களுக்கு அழகிய பர்ணசாலை கட்டித் தருகிறேன். மேலும், அவ்வப்போது தாங்கள் எனக்கு என்னென்ன உத்தரவு இடுகிறீர்களோ, அதன்படி நடக்கிறேன். இது சத்தியம்,'' என்று வேண்டினன்.

ராமன் குகனுடைய உண்மையான பக்தியை மெச்சி அவனை உடன் அழைத்துச் சென்றான். குகன் குதூகலத் துடன் தன் இனத்தார்களை அழைப்பித்துத் தக்கவாறு சம்மானஞ் செய்து விடையளித்து அனுப்பினன்.

அப்போது, பிரபு ராமன் கணபதியையும் சிவனையும்

ஸ்மரித்துப் புனிதமான கங்கையை வணங்கி, சீதா லட்சுமணர்களுடன் காட்டிற்குள் பிரவேசித்தான்.

அன்று அவர்கள் ஒரு மரத்தடியில் தங்கினார்கள். தோழனான குகனும் லட்சுமணனும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர்.

பிறகு பிரபு ராமன் விடியற்காலம் எழுந்து காலைக் கடனை முடித்தபின், புண்ணிய தீர்த்தங்களுக் கெல்லாம் தலைமை பெற்ற பிரயாகையைச் சென்று தரிசித்தான்.

அப்பால் பரத்வாஜ முனியை நாடிச் சென்றனர். ராமன் முனிவரைக் கண்டு நமஸ்கரிக்க, பரத்வாஜ முனி ராமனை மார்புறத் தழுவிக் கொண்டார். பரத்வாஜரின் உள்ளத்தில் உண்டான மகிழ்ச்சியைச் சொல்ல முடியாது; பிரம்மானந் தத்தின் குவியலைக் கண்டெடுத்தவர் போலானார். பரத்வாஜ முனிவர் ராமனுக்கு ஆசி கூறி, "இன்று பிரம்மதேவன், நான் இதுவரையில் செய்த புண்ணியங்களின் பலன் முழுவதையும் என் கண்முன் கொணர்ந்து காட்டியிருக்கிறான்!" எனத் தெளிந்து மகிழ்ந்தார்.

பரத்வாஜர் ராமனுக்குத் தக்க ஆசனம் ஈந்து பூஜித்து க்ஷேம சமாசாரங்களை வினவித் தம் ஆசையைத் தீர்த்துக் கொண்டார்.

அமுதத்திற்கு ஒப்பான கிழங்கு, வேர், கனி முதலியவைகளையும், இளங்குருத்துக்களையும் உண்ணக் கொடுத்தார். ராமன், சீதை முதலியவர்களுடன்கூட மிக்க

ருசியுடன் அழகிய அக்கனி கிழங்குகளை உண்டனர். அனைவரும் சிரமம் தீர்ந்து சுகமுற்றனர்.

அப்போது பரத்வாஜர் இனிய சொற்களால், "இன்று என்னுடைய தவம், தியாகம், தீர்த்தாடனம், ஜபம், யோகம், வைராக்கியம் இவை யாவும் பயன் பெற்றன. ராம! இன்று உன்னைத் தரிசித்தேன். அதன் பயனாக என்னுடைய நற்கருமங்கள் யாவும் பலித்து விட்டன!

"ராம! இப்போது இதைக் காட்டிலும் மேலான புண்ணிய பலனில்லை. எனக்கு உண்டான சுகத்திற்கு முடிவேது? உன்னுடைய தரிசனத்தினால் என் ஆசையெல்லாம் பூர்த்தியாகி விட்டது! இப்பொழுது கிருபை புரிந்து உனது திருவடித் தாமரைகளை என் மனம் என்றும் நேசித்திருக்குமாறு எனக்கு வரமளிப்பாய்," என்றார்.

அப்போது ராமன் அன்புடன் முனிவரை நோக்கி, "முனிவர் கோனே! தாங்கள் எவனுக்கு ஆதரவு அளிப்பீர்களோ; அவனே எல்லோரிலும் மேன்மையுற்றவன்; நற்குணங்களுக்கெல்லாம் இருப்பிடம்!" என்றார். இங்ஙனம் ராமனும் முனிவரும் ஒருவருக்கொருவர் மரியாதை செய்து வார்த்தைகளினால் வர்ணித்துக் கூற இயலாத ஆனந்தம் அனுபவித்தனர்.

ராமன் ஒரு கிராமத்தைக் கடந்து செல்லும்போது, அவ்வூர் ஜனங்கள், ஆணும் பெண்ணுமாக, அவனைத் தரிசிக்க ஓடி வந்தார்கள். அங்ஙனம் செய்தவர்கள் பிறவிப்

பயனை அடைந்தவர்களாய், மனத்தை ராமனுடன் கூடவே போகவிட்டுத் துக்கத்துடன் வீடு திரும்பினர்.

அப்போது ராமன் முனிவரை நோக்கி, "சுவாமி! நாங்கள் எந்த மார்க்கமாகச் செல்லவேண்டும்: சொல்லுங்கள்" என்று வினவ, ரிஷி மனத்துள் நகைத்து ராமனை நோக்கி, "உனக்கு எல்லா மார்க்கமும் சுலபமானதே!" என்றார்.

பிறகு பரத்வாஜ ரிஷி பிரமசாரிகளான சிஷ்யர்கள் நால்வரை வழி காட்டும்படி ராமனுடன் அனுப்பினார். அவர்கள் பல ஜன்மாந்தரங்களாகப் பெரும் புண்ணியம் செய்து வந்தவராதலால், அவர்களுக்குப் பெரும்பாக்கியம் கிடைத்தது. ராமன் முனிவரை நமஸ்கரித்து விடை பெற்றுக்கொண்டு சந்தோஷத்துடன் சென்றான்.

ராமன் அன்றிரவு அங்கே தங்கிச் சிரம பரிகாரம் செய்து கொண்டான். காலையில் பிரயாகையிலே நீராடித் தெளிந்த மனமுடையவனாய் முனிவருக்குத் தலை வணங்கிச் சீதை, லட்சுமணன், குகன் முதலியவருடன் புறப்பட்டான்.

இங்ஙனம் சிறிது தூரம் வழி நடந்த பின், ராமன் வணக்கத்துடன் அந்தப் பிரமசாரிகளுக்கு விடை கொடுத்தனுப்பினான். அவர்களும் தாம் கோரின பலனை அடைந்தவர்களாய் வீடு திரும்பினர். அதன்மேல் ராமன் முதலியோர், ராமனுடைய திருமேனிக் கொப்பாக நீல நிறம் வாய்ந்திருக்கும் யமுனா நதியை அடைந்து அதில் நீராடினார்கள்.

ராமன் அங்கே குகனுக்குப் பல தேறுதல் வார்த்தை களைச் சொல்லி விடை கொடுத்தனுப்பினான். குகனும் ராமன் கட்டளையைச் சிரமேல் தாங்கித் தன் இல்லம் திரும்பினான்.

ராமன், லட்சுமணன், சீதை ஆகிய மூவரும் கை கூட்பி யமுனைக்கு நமஸ்காரம் செய்தனர். பின்பு சீதையுடன்கூட அவ்விரு சகோதரர்களும் சூரியன் மகளாகிய யமுனையின் பிரபாவத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு வழி நடந்தனர்.

இம்மூவரும் யாதேனும் ஒரு கிராமத்தின் வழியாகச் செல்லும்போது அவர்களது வருகையைக் கேள்வியுற்று, முதியோர் ஸ்திரீ புருஷர் உள்ளிட்ட அவ்வூரார் அனைவரும் தத்தம் வீட்டு வேலைகளை அப்படியே போட்டுவிட்டு ராமனைக் காண ஓடி வருவர்.

அங்ஙனம் ராமனைத் தரிசிக்க வந்தவர்களில் ஒருவன், ராமன் திருமேனியைக் கண்டு மயங்கி அவனையே கண் கொட்டாது நோக்கிய வண்ணம் பின்னே தொடர்ந்து சென்றான்.

வேறொருவன், கண்களின் வழியாக ராமனுடைய உருவத்தைத் தன் மனத்தினுள்ளே கொண்டு வைத்து, மனம் மெய், மொழி மூன்றும் துறந்து கலங்கிச் சுய நினைவற்று நின்றான்.

வேறு சிலர் அடர்ந்த தண்ணிழல் தரும் அழகிய ஆல விருட்சமொன்றைக் கண்டு, அதன் அடியில் மெத்தெனப்

புற்களையும் இலைகளையும் பரப்பி ராமனைப் பார்த்து, "இதன் மீது சற்று இளைப்பாறுங்கள். இன்றே போக வேணுமா? நாளைக் காலையில் செல்லலாமே!" என்றார்கள்.

சிலர் குடம் நிரம்ப நன்னீர் கொணர்ந்து ராமனை நோக்கி அதிக வாஞ்சையுடன், "சுவாமீ! தண்ணீர் அருந்துக," என்று வேண்டினார்கள்.

தயையுள்ளவனும், சீலமுள்ளவனுமான ராமன் அவர்களுடைய அன்பார்ந்த மொழிகளைச் செவியுற்று அவர்கள் பக்தியை மெச்சி, மனத்தில் சீதை சோர்வுற்று இருப்பதையும் அறிந்து, அவ்வட விருட்சத்தின் அடியில் சற்றுநேரம் இளைப்பாறினான்.

அப்போது, ஆண் பெண் எல்லாரும் மகிழ்வுற்று, அவர்களது முக காந்தியை உற்று நோக்கலானார்கள். இங்ஙனம் சீதா ராமர்களது உவமையற்ற திருமேனி யழகைக் கண்டு, அவர்கள் மனமும் கண்களும் மயங்கிக் கிடந்தன.

அப்போது ராமலட்சுமணர் இருவரும் முடியிலே அழகிய ஜடையாகிய மகுடம் தரித்து, அகன்ற மார்பும் நீண்ட புஜங்களும் விசாலமான நேத்திரங்களும் படைத்தவர்களாய், சரத்கால சந்திரனுக்கு ஒப்பான திருவுடைய முக மண்டலத்திலே வியர்வைத் துளிகளின் வரிசைகள் மிளிர, மிக்க சோபையுடன் விளங்கினார்கள்.

வசீகரமான அவ்வழகிய குமாரர்களின் சௌந்தரியத்தை என்னால் வர்ணிக்க முடியவில்லை. ஏனென்றால், என் மதி சிறிது; அவர்தம் எழில் பெரிது. நிற்க: அக்கிராமவாசிகள் மன மொழி மெய் மூன்றையும் ஒருங்கே செலுத்தி, அந்தச் சீதா ராம லட்சுமணர்களுடைய சௌந்தரியத்தைத் தரிசித்து நின்றார்கள்.

அப்பொழுது ஸ்திரீ புருஷர் அனைவரும் ராமன்மீது கொண்ட பிரேமை காரணமாய் உடல் தளர்ந்து சோர்வுற, தீபத்தைக் கண்டு மருளும் மான்ஜோடிகள் போல மருண்டு நின்றனர்.

கிராமத்துப் பெண்கள் சீதையை அணுகினார்கள். ஏதேனும் கேட்க வேண்டுமென்ற ஆவல் அதிகமாயிருந்தும், கேட்கக் கூச்சமுற்றனர்.

பின்பு மெல்லத் துணிந்து அடிக்கடி சீதையின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்து மெல்லிய, இனிய, சுலபமான வார்த்தைகளினால் பேசப் புகுந்து, " ராஜகுமாரீ! உம்மை ஒன்று வேண்டுகிறோம். ஆனால் ஸ்திரீகளுக்குள்ள சுபாவப்படி விருப்பம் இருந்தும், கேட்க அச்சப்படுகிறோம்.

" சீமாட்டி! எங்கள் மரியாதையற்ற பேச்சுக்களைப் பொறுத்துக் கொள்க. நாங்கள் கேவலம் நாட்டுப் புறத்தார் என்பதை அறிய வேணும். மனத்தில் விகற்பம் வேண்டாம்.

" அம்மணீ! இவ்விரண்டு இராஜ குமாரர்களும் இயற்கையிலேயே நல்ல அழகு வாய்ந்தவர்கள். மரகத மணியும் சுவர்ணமும் இவர்களிடமிருந்தே தம் காந்தியைப் பெற்றுள்ளன!

"தாயே! இவர்கள் முறையே சியாமளம், வெண்ணிறம் வாய்ந்து, அழகிய இளம்பிராயத்தினராய், எழிலுக்கும் சோபைக்கும் உறைவிடமாய் விளங்குகின்றனர்.

"இவர்கள் முகம் சரத்கால சந்திரன் போன்றுள்ளது: கண்கள் சரத்காலத் தாமரை போன்று பிரகாசிப்பன.

"அழகிய முகம் படைத்தவரே! கோடி மன்மதரைப் பழிக்கும் எழில் வாய்ந்த இவர்கள் உமக்கு யார்?" என்று வினவினார்கள்.

அன்பு நிறைந்த அந்தப் பெண்களின் அழகிய வார்த்தையைக் கேட்டு, சீதை மனசுக்குள்ளே வெட்கப் பட்டுப் புன்னகை புரிந்தாள். சுந்தர நிறம் வாய்ந்த சீதை அந்தப் பெண்களைப் பார்ப்பதும், பூமியை நோக்குவதுமாக இருந்தாள். இரு விதமான நாணத்தினாலும் நாணமுற்றவளானாள். குயில் போன்ற குரலும், மான் குட்டி போன்ற மருண்ட கண்களும் கொண்ட சீதை நாணத்துடன் அன்பு ததும்ப,

"இயற்கையாக மிகவும் அழகு வாய்ந்து வெண்ணிறம் படைத்து விளங்கும் அவர் பெயர் லட்சுமணர்; அவர் என் இளைய மைத்துனர்," என்று சொன்னாள்.

பிறகு தன் மதிவதனத்தைச் சேலையின் தலைப்பினாலே மறைத்துப் பர்த்தாவின் பக்கம் திரும்பிப் புருவங்களை நெளித்து, வலியன் (கருங்குருவி) என்ற பறவையின் கண்கள் போன்ற கண்களையுடைய அவள், கடைக்கண்ணால் தன்

பிராண நாயகனை அவர்களுக்குச் சுட்டிக் காட்டித் தனது நாயகன் என்றாள்.

அதையுணர்ந்து அந்தப் பெண்கள் இரத்தினமணிக் குவியலைக் கண்டெடுத்த ஏழையர்போல் சந்தோஷ முற்றனர்.

பின்பு அவர்கள் அன்பு கொண்டு சீதையின் பாதங்களில் விழுந்து வணங்கிய பின் அப்பிராட்டியைப் பலவாறு வாழ்த்தி, "இப்பூமியை ஆதிசேஷன் தன் முடியில் தாங்கியிருக்கும்வரை உங்கள் சௌபாக்கியம் நிலைக்கக் கடவது: நீர் தீர்க்க சுமங்கலியாக இருக்கக்கடவீர்!" என்று வாழ்த்தினர்.

"தேவீ! பார்வதியைப்போலத் தாமும் தம் கணவருக்குப் பிரியமானவராக இருப்பீர். எங்கள்மீதுள்ள பிரியம் விலகாமல் இருக்கவேணும். நாங்கள் தங்களைத் திரும்பத் திரும்பக் கைகூப்பி வேண்டுவது, இதே வழியாகத் தாங்கள் திரும்பி வரவேணும் என்பதே" என்றார்கள்.

பிறகு ராமன் பிரிய வசனங்களைச் சொல்லி அவ்வூர் ஜனங்களைத் திரும்பிப் போகச் செய்து, சீதையும் லட்சுமணனும் தொடர்ந்து வரச் சென்றபோது, அவன் அவ்வூர் ஜனங்களது மனத்தைமட்டும் விடாது தன்னுடனே கொண்டு போனான்.

ராமன் முன்னும், சமீபத்திலே தவசிவேஷத்தில் லட்சுமணன் பின்னும் சோபிக்கின்றவர்களாய், அந்த

அடவியில் போய்க்கொண்டிருந்தனர். ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் மத்தியில் மாயை துலங்குவதுபோல, அவ்விருவர் மத்தியிலும் சீதை சோபித்தாள்.

சீதா சமேதராய்ச் செல்லும் அவ்விரு வழிப்போக்கர்களை எவரெவர் தரிசித்தனரோ, அவர்களெல்லாம் ஆனந்தப்பட்டார்கள். கடப்பதற்கரிய சம்ஸாரத்தின் மார்க்கத்தைக் கஷ்டமின்றிக் கடந்து விட்டார்கள்.

"இன்று கூட, கனவிலானாலும் சரி, சீதா ராம லட்சுமணர்களாகிய இவ்வழிப் போக்கர் எவர்மனத்தில் வாசம் செய்வாரோ, அவர் முனிசிரேஷ்டன் ஒருவனாலே என்றுவது ஒரு நாள் அடையப்படும் அந்த ராம தாமத்திற்குச் (ராமன் வீடு) செல்லும் மார்க்கத்தை அடைகிறார்!" என்கிறார் துளஸீதாஸர்.

நிற்க; ராமன் சீதை களைத்திருப்பதைக் கண்டான். சமீபத்தில் ஓர் ஆலமரமும், குளிர்ந்த நல்ல நீர்நிலையும் இருந்ததை நோக்கி, அன்றிரவு அங்கே தங்கினான். கிழங்கு, வேர், கனி முதலியவைகளை உண்டு நித்திரை போனான். மறு நாள் விடியற்காலை எழுந்திருந்து நீராடி, அவ்விடம் விட்டுப் புறப்பட்டான்.

இவ்வாறு பிரபு ராமன், அழகிய வனாந்தரங்களையும் நதி தடாகங்களையும் பர்வதங்களையும் பார்த்துக்கொண்டே வால்மீகிமுனி வாழும் ஆச்ரமம் வந்தடைந்தான். ராமன் வால்மீகி வாழும் அழகிய இடத்தைக் கண்டான்.

அங்கே சிறந்த பர்வத சிகரங்களும், அவற்றைச் சார்ந்த

அடவிகளும், நன்னீர்நிலேகளும் நிரம்ப இருந்தன. தடாகங்களில் தாமரைகளும், விருக்ஷங்களில் புஷ்பங்களும் மலர்ந்திருந்தன. தேனைக் குடித்து மயங்கியிருந்த வண்டினங்கள் இனிமையாக ரீங்காரம் செய்தன. பட்சிகளும் மான் கூட்டங்களும் கோலாகலமாய்ப் பலவிதமான சப்தங்கள் செய்துகொண்டிருந்தன. அவை யாவும் விரோதம் நீங்கிக் களிப்புடன் ஒன்ருகத் திரிந்து வாழ்ந்தன.

தாமரைக் கண்ணனும் ராமன் அந்த அழகிய பரிசுத்தமான ஆச்ரமத்தைக் கண்டு சந்தோஷித்தான். ராமன் வருகையைக் கேள்வியுற்ற வால்மீகிமுனிவர் அவனே எதிர்கொண்டு அழைத்துப் போக வந்தார்.

ராமன் வால்மீகிமுனிவருக்குத் தண்டம் சமர்ப்பிக்க, அந்தப் பிராமணோத்தமர் அவனே அன்புடன் வாழ்த்தி ஆசீர்வதித்தார்.

ராமனுடைய அழகிய திருமேனியைத் தரிசித்து அவரது கண்கள் மரியாதை செய்து குளிர்ந்தன. ஆச்ரமத்திற்குள் அழைத்துச் சென்ருர்.

அன்று முனிசிரேஷ்டர் உயிருக்கு ஒப்பான விருந்தினரை அடைந்தார். அவர்களுக்கு அழகிய ஆசனங்களே ஈந்து, மிகவும் இனிமையான கந்த மூலங்களேயும் தருவித்துக் கொடுத்தார்.

சீதை, ராமன் முதலியோர் அவற்றை வாங்கி உண்டனர். வால்மீகி முனிவர் ராமனுடைய மங்கள வடிவத்தைக் காணவே, பெருமகிழ்ச்சி கொண்டார். அப்போது ராமன்

தன் கரதாமரைகளைக் குவித்துச் செவிகளுக்கு இன்பம் பயக்கும் மதுரமான மொழியில், "முனீச்வர! தாம் முக்காலம் உணர்ந்தவர். இந்த அகண்ட பூதலம் யாவும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நன்கு அறிவீர்!" என்று கூறிவிட்டு, ராணி கைகேயி தனக்கு வனவாசம் தந்த கதைகளை வர்ணித்துக் கூறினன்.

பின்னும் அவன், "எமது தலைவ! தந்தையின் கட்டளை, தாயின் விருப்பம், பரதன் போன்ற சகோதரன் அரசனாவது, இவற்றுடன் எனக்கு உங்கள் தரிசனம் கிடைப்பது, இவை யாவும் யாம் செய்த புண்ணியத்தின் பிரபாவமேயாம்.

"முனிவர்கோனே! தங்களுடைய பாத தரிசனத்தினல் சமஸ்த நற்கருமங்களின் பயனையும் இன்று நாங்கள் பெற்று விட்டோம்.

"ஆதலால், இப்போது நாங்கள் எங்கே வசிப்பதால் முனிவர்களுக்கு இடையூறு இராதோ, தாம் எங்களை எங்கே வசிக்கும்படி சொல்லுவீர்களோ, அங்கேயே வசிக்கிறோம். சீதை, லட்சுமணர்களுடன் நான் அந்த இடத்திற்குச் சென்று வசிக்குமாறு, அத்தகைய இடத்தை விசாரித்து அறிந்து எனக்குச் சொல்ல வேணும்.

"அந்த இடத்திலே அழகிய இலைகளினலும் புற்களினலும் குடிசை கட்டி அதில் சில காலம் நான் வசிக்கிறேன்," என்றான்.

அதற்கு அம்முனிவர் சொன்னர்: "இந்த வையகம்

ஓர் ஆடரங்கம். அதில் நீ வேடிக்கை பார்க்கிறவன். பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்கள் அதை நடத்தி வைப்பவர்கள். அவர்களும் உனது இரகசியத்தை உணர வில்லை யென்றால், அதை அறிபவர் வேறு யாருளர்?

" உன்னுடைய திருமேனி சச்சிதானந்த மயமானது. தூய மனம் படைத்தவன் ஒருவனே அதை அறிவதற்கு அதிகாரியாகிறான். தேவர்கள் சாதுஜனங்கள் இவர்களுடைய காரியத்தை நிறைவேற்றி வைப்பதற்காகவே நீ மனுஷ்ய தேகம் எடுத்திருக்கிறாய்! ஆதலால் ஒரு மானிட மன்னன்போலப் பேசியும் நடந்தும் வருகிறாய்!

" ராம! 'நான் எங்கே வசிக்கலாம்?' என்று என்னை வினவுகிறாய்! இந்தக் கேள்வியால் நான் வெட்க மடைகிறேன். நல்லது: நீ இல்லாத இடமொன்று எனக்குச் சொல்லுவாயானால், பிறகு நான் உனக்குத் தங்க இடம் கூறுகிறேன்!" என்று விடை பகர்ந்தார்.

இங்ஙனம் அன்பு-ரஸம் தோய்ந்த முனிவர் மொழிகளைக் கேட்டு ராமன், உள்ளத்திலே புன்னகை கொண்டு உடனே வெளிப்படையாக வெட்கமுற்றான்.

அப்போது வால்மீகிமுனிவர் நகைத்து மீண்டும் அமிழ்தம் பொழியும் மென்மொழியிலே, " ராம! கேள். சீதை லட்சுமணர்களுடன் நீ வசிக்கத் தக்க இடம் இன்னதென்று சொல்லுகிறேன்.

" உங்கள் சரித்திரங்களாகிற அனேக நதிகளால் இரவு பகலாய் நிரப்பப் பட்டும் நிரம்பாத கடல் போன்ற

காதுகளை உடையவர் எவரோ, உங்கள் தரிசனமாகிற கார்முகிலை விரும்பி நிற்பதும், ஏனைய நதி, தடாகம் கடல் முதலியவைகளைப் பொருட்படுத்தாமல் உங்கள் திருமேனியின் தரிசனத்தை எப்போதும் விரும்பி நிற்பதுமான சகோரப் புள்ளைப் போன்ற கண்களையுடையவர் எவரோ, அவர்களுடைய இதயம் அழகிய வீடாகும். அதில் உனது பந்துவுடனும் சீதையுடனும் வாசஞ் செய்வாயாக.

"அனைவருக்கும் பிரியமானவர் எவரோ, நன்மை செய்பவர் எவரோ, சுக துக்கங்களையெல்லாம் சமமாகப் பாவிக்கும் இயல்புடையவர் எவரோ, எவர் புகழையும் நிந்தையையும் ஒன்றாகக் கருதுகிறாரோ, எவர் ஆலோசித்துப் பிரியமான உண்மைமொழிகளையே எக்காலத்தும் சொல்வாரோ, விழித்திருக்கும்போதும் உறங்கும்போதும் உம்முடைய பாதுகாப்பிலே உயிர் வைத்திருப்பவர் எவரோ, எவருக்கு உம்மையன்றி வேறு கதியில்லையோ, பரஸ்திரீயைத் தாய்போல் கௌரவிப்பவர் எவரோ, எவர் பிறர் சொத்தை விஷத்தைக் காட்டிலும் கொடிய விஷமாகக் கருதுகிறாரோ, ராம! நீ அவர்களுடைய மனத்தில் வாசஞ் செய்யக் கடவாய்!

"நாத! எவருக்கு நீ ஒருவனே தாய், தந்தை ஸ்வாமி, குரு எல்லாம் ஆகிறாயோ, அவருடைய மனமாகிற கோயிலிலேயே சீதா ஸமேதராய் நீங்கள் இரு சகோதரர்களும் வசிக்க வேண்டியது!

"துர்க்குணங்களை விட்டு நற்குணங்களையெடுத்துக் கொள்பவரும், பிராமணன் பசு இவர்கள் பொருட்டுச்

சங்கடங்களைச் சகிப்பவரும், நீதி யுணர்ந்தவர்களின் எண்ணிக்கையில் இடம் பெற்றவருமான ஸத் புருஷர்களின் அழகிய உள்ளம் உனது இல்லமாகும்.

"சொத்து சுதந்திரம், ஜாதி மதம், சுகமான வீடு வாசல், பிரியமான மனைவி மக்கள் எல்லாம் துறந்து உனக்கே தம்மைக் கொடுத்திருப்பவர் எவரோ, அவருடைய இதயத்தில் நீ இருப்பாயாக.

"இயல்பாக உன்னிடத்தில் அதிகமான பிரீதியுடையவராய், யாதொன்றையும் விரும்பாதவராய் இருப்பவர் எவரோ, அவர் உள்ளத்தில் நீ சதா உறைவாய். அதுவே உன்னுடைய உறைவிடமாம்" என்று இந்தப் பிரகாரம் ராமனுக்கு வசிக்கும் இடம் காட்ட, அவருடைய பிரியம் மிகுந்த வார்த்தைகள் ராமனுக்கு இஷ்டமாக இருந்தன.

அப்போது மீண்டும் ரிஷி, "சூரிய குலத்தின் நாயக! கேளாய்: இச்சமயம் உனக்குச் சுகத்தைக் கொடுக்கக் கூடிய ஆச்ரமம் ஒன்றை யான் கூறுகிறேன்; கேள்.

"நீ சித்திரகூட பர்வதத்தில் வாசஞ் செய். அங்கே எல்லா அனுகூலங்களுமுண்டு. பர்வதம் சிறந்தது; வனமோ அழகியது. யானை, சிங்கம், மான், பட்சிகள் யாவும் அங்கே ஆனந்தத்துடன் பொழுது போக்குகின்றன!

"அங்கே ஒரு புண்ணிய நதி யுண்டு. அதன் பிரபாவம் புராணங்களில் கண்டிருக்கிறது. அந்நதி அத்திரி ரிஷியின் பிரியையான அநசூயா தேவியினால் தம் தபோபலத்தினாலே அங்கே கொண்டு வரப்பட்டது! அது கங்கையின் ஒரு

கிளாநதி; மந்தாகினி என்ற பெயருடையது: பாப கர்மங்களாகிற பாலர்களைப் பட்சிக்கும் சூனியக்காரி அது!

"ஜப தப ஹோம யோகங்கள் செய்து உடலை ஒடுக்கும் அத்திரி முதலிய முனிசிரேஷ்டர்கள் அந்த மலைச்சாரலில் வாசஞ் செய்கின்றனர். ராம! அங்கே போய் அவர்கள் சிரமத்திற்குத் தக்க பரிகாரத்தை அளிப்பாயாக. மேலும் அந்தச் சிறந்த சித்திரகூட பர்வதத்திற்குப் பின்னும் ஒரு சிறப்பை அளிப்பாயாக!" என்றார்.

இவ்வாறு வால்மீகி மாமுனி சித்திரகூடத்தின் எல்லையற்ற வைபவத்தை எடுத்துக்கூறவே, இரு சகோதரர்களும் சீதா சமேதராய் அந்த உத்தம நதிநீரத்தை அடைந்து அதில் நீராடினர்.

அச்சமயம் ராமன், "அப்பா, லட்சுமணா! நதிதீரமோ மிக நன்றாக இருக்கிறது. இப்பொழுது நாம் வசிப்பதற்கு ஒரு தக்க இடம் தேர்ந்தெடுப்பாய்" என்றான். லட்சுமணன் அந்த ஆற்றின் வடகரையின் உயர்ந்த பாகமொன்றைப் பார்த்தான். அது உயர்ந்து, வில்லைப்போல நான்கு பக்கமும் வளைந்து செல்லும் நீரோடையை உடையதாயிருந்தது.

"இந்நதியே வில்லின் நாண்கயிறு. சமம், தமம், தானம் இவை அம்புகளுக்கொப்பாக இருக்கின்றன. கலியுக பாப கர்மங்கள் அனைத்தும் அவ்வில்லுக்கு லட்சியம். இந்தச் சித்திரகூட மலையே குறி தவறாத வில்லாளி: அவன் பாணத்தைத் தொடுக்க நிச்சயமாய்க் குறியை அடித்து வீழ்த்துவான்!"

இவ்வாறு லட்சுமணன்கூறி அவ்விடத்தை ராமனுக்குக் காட்டினன். அந்த இடத்தைப்பார்த்து ராமன் மகிழ்வுற்ருன்.

"ராமனுடைய சித்தம் இதையே நாடி நிற்கிறது" என்று தேவர்களுக்குத் தெரிந்தவுடன், அவர்கள் தேவராஜனை முன்னிட்டுக் கொண்டு அங்கே வந்தனர்.

அவர்கள் எல்லாரும் பீலர், கோலர் என்ற மலை ஜாதியார் வேஷத்தில் வந்து புல்லால் ஒன்று சிறிதும், ஒன்று பெரிதுமாக அழகிய இரண்டு குடிசைகளை அமைத்துச் சென்றனர். அவற்றின் அழகை வர்ணித்துக் கூற முடியாது.

ரதி, வசந்தர்களுடன் கூட முனிவேஷம் பூண்டு வந்த மன்மதன் போல அந்த அழகிய பர்ணசாலையில் சீதா லட்சுமணருடன் கூட ராமன் இனிது சோபித்திருந்தான்.

ராமன் சித்திரகூடத்தில் வசிக்கிருன் என்ற சேதியைக் கேட்டு ரிஷிகணங்கள் அவனைக் காண வந்தனர். ரகுகுல சந்திரனுகிய ராமன், முனிவர் குழாம் வருகையைக் கண்டு மகிழ்வுற்று நமஸ்கரித்தான்.

பிரபு ராமன் அவரவர் யோக்கியதைக்குத் தக்கவாறு உபசரித்துப் பேசி அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினுன். அதன்மேல் அவர்கள் தத்தம் ஆச்ரமம் சென்று பயமின்றி ஜப தபாதிகள் செய்து யாகங்களை நடத்தலாயினர்.

ராமன் வந்து வாசஞ்செய்யத் தொடங்கியது முதல், அவ்வனம் மங்களம் பயப்பதாக மாறிவிட்டது. பல வித மரங்கள், பூக்கள் நிரம்பப் பூத்தும், கனிகள் நிறைந்தும் இருந்தன. அவற்றில், அழகிய கொடிகள் அடர்ந்து பந்தல் போலப் படர்ந்து துலங்கின.

லட்சுமணன் ஒவ்வொரு நிமிஷமும் சீதாராமர்களுடைய திருவடிகளைத் தரிசித்துக்கொண்டு அவர்கள் தன்மீது வைத்திருக்கும் பிரியத்தை அறிந்தவனாய், தாய் தந்தையர், சகோதரர், வீடு இவை மீது கனவிலும் கவனத்தைச் செலுத்தாது வசித்து வந்தான்.

அயோத்தியாபுரி, அரண்மனை, பந்துஜனம்—என்ற ஞாபகத்தை அறவே மறந்து அவ்வனத்திலே ராமனுடன் கூடச் சீதை சுகமாக ஜீவித்து வந்தாள். ஒவ்வொரு க்ஷணமும் பதியின் சந்திர வதனத்தைக் கண்டு, சகோரப்பேடு போல மனக் களிப்புற்றிருந்தாள்.

சீதைக்கும் லட்சுமணனுக்கும் எது இன்பத்தை அளிக்குமோ, அதையே ராமன் சொல்லியும், செய்தும் வந்தான். ராமன் பண்டைக் காலக் கதைகள் பல சொல்லி வர, சீதையும் லட்சுமணனும் அவற்றைச் சிரத்தையுடன் கேட்டு இன்புற்றனர்.

ராமன் அவதபுரியை நினைக்கும் போதெல்லாம், அவன் கண்களில் நீர் ததும்பும். தாய் தந்தை, உறவினர், உடன் பிறந்தார் இவர்களையும், பரதனுடைய பிரீதி பணிவு ஒழுக்கம் இவற்றையும் நினைத்து, தயா சமுத்திரமாகிய பிரபு

ராமன் வருந்துவான். ஆனால், துக்கிப்பதற்கு இது சமயம் அன்றெனத் தெளிந்து பொறுத்திருப்பான்!

ராமன் வருந்தும் போதெல்லாம், சீதையும் லட்சுமணனும் மனிதனைப் பின்பற்றி வரும் பிரதிபிம்பம் போல் தாமும் கூட வருந்துவார்கள்.

கண்ணுள் விழியைக் காக்கும் இமைபோல் ராமன் சீதையையும் லட்சுமணனையும் பாதுகாத்து வந்தான். விவேக மற்ற ஒருவன் தன் தேகத்தைப் போற்றிப் போஷிப்பது போலச் சீதையும் லட்சுமணனும் ராமனுக்குத் தொண்டாற்றி வந்தனர். மிருகம், பட்சி, வனதேவதை, தவசி முதலியோரின் நன்மையை நாடி நிற்கும் ரகுராமன், இவ்வாறு சுகமாக வனத்தில் வசித்து வந்தான்.

"ராமன் வனஞ் சென்ற அழகிய பாகத்தை எடுத்துச் சொன்னேன். சுமந்திரர் எவ்வாறு அயோத்தி வந்து சேர்ந்தார் என்பதைக் கேளுங்கள்" என்கிறார் துளஸீதாஸர்.

பிரபு ராமனைக் காட்டிற்கு அனுப்பி விட்டுக் குகன் திரும்பி வந்த போது, அங்கு ஓரிடத்தில் சுமந்திரரும் இரதமும் இருக்கக் கண்டான். சுமந்திரர் தம் நினைவின்றி மூர்ச்சித்துக் கிடப்பதைக் காணவே, குகனுக்குச் சொல்ல இயலாத வருத்தமுண்டாயிற்று.

ராமனுடைய அந்தச் சிரேஷ்டமான குதிரைகளோ புல்லை மேயாமலும், தண்ணீர் குடியாமலும் கண்களில் நீரைப் பெருகவிட்டுக் கொண்டிருந்தன. ராமனுடைய அந்தக் குதிரைகளைக் கண்ட வேடுவன் வருத்தமுற்றான்.

குகன் மெல்லிய மொழிகளால்பல கதைகளைச் சொல்லித் தேற்றி வற்புறுத்திச் சுமந்திரரைத் தேரின்மீது ஏற்றி உட்கார வைத்தான். அதிக சோகத்தினால் சோர்வுற்றிருந்த சுமந்திரரால் இரதத்தைச் செலுத்த முடியாது போயிற்று. சுமந்திரர் ராமன் பிரிவைத் தாங்கா து உள்ளத்தே பெரு நோய் கொண்டிருந்தார்.

மந்திரி, குதிரை இவர்களுடைய பரிதாப நிலையைக் கண்டு வேடுவன் வியாகுலமுற்றான். நல்ல வேலையாட்கள் நால்வரைத் தருவித்துச் சாரதியுடன் துணை கூட்டி அனுப்பினான்.

பணக் குவியலைப் பறிகொடுத்த லோபி போலவும், சுத்த வீரனென்று பெயர் வாங்கிய யுத்த வீரனொருவன் போர்க் கோலம் பூண்டு யுத்த களத்தினின்றும் முதுகு காட்டி வருவது போலவும், சுமந்திரர் மிகவும் வருந்திக் கைகளைப் பிசைந்தும், தலையில் அடித்துக் கொண்டும், அயோத்தியை நோக்கித் திரும்பி வந்தார்.

" கடவுளே! எளியோரும் துன்புற்றோருமாகிய ராமனுடைய அன்னையர் அனைவரும் என்னை வினவும்போது, நான் யாது சொல்லுவேன்? லட்சுமணன் தாய் கேட்கும் போது, அவளுக்கு நான் என்ன நற்செய்தி சொல்லுவேன்?

" அரச குமாரர்களைக் காட்டில் கொண்டு விட்டு நான் சுகமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தேன் என்று, அவர்கள் முன் எந்த வாயைக் கொண்டு பதில் சொல்லுவேன்? ராமன், சீதை, லட்சுமணன் இவர்கள் செய்தியைச் செவியுற்று, அக்கணமே

அரசர் தேகத்தைத் துரும்புபோல் எண்ணித் துறந்து விடுவாரே!'' என்று சுமந்திரர் எண்ணி வருந்தினார்.

பசு, பிராமணன், குரு இவர்களைக் கொன்றவன் போல், சுமந்திரர் பட்டணத்தில் பிரவேசிக்க வெட்க முற்றார். ஆதலால் அவர் ஒரு மரத்தின்கீழ் வீற்றிருந்து பகற்பொழுதைக் கழித்தார். அந்திப் பொழுது வந்ததும், அவருக்கு நகரத்தில் நுழையும் சமயம் கிடைத்தது.

அப்பொழுது இருட்டியவுடன், சுமந்திரர் அயோத்திக்குள் பிரவேசித்து வாசலில் இரதத்தை நிறுத்தி விட்டு அரசரது மாளிகைக்குள் சென்றார். இவ்விவரம் அறிந்த ஜனங்கள் இரதத்தைக் காண்பதற்கு அரண்மனை வாசலுக்கருகே வந்தனர்.

மந்திரியின் வரவைச் செவியுற்று அந்தப்புர மெங்கும் அல்லோல கல்லோலப்பட்டது. பிரேதங்கள் வாழும் இடம்போல அம்மாளிகை மிகவும் பயங்கரமாயிருந்தது.

தாதிமார் மந்திரியின் சோகத்தை யுணர்ந்து அவரை ராணி கௌசலையின் அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே அமிர்தத்தை விட்டுப் பிரிந்த சந்திரன் போல் அரசர் துலங்குவதைச் சுமந்திரர் கண்டார்.

பஞ்சணை, ஆசனம், அலங்காரம் யாதுமின்றி அழுக்கடைந்த ஆடையுடன், வெறுந்தரையில் அரசர் விழுந்து கிடந்தார், சுவர்க்கத்திலிருந்து நழுவிய யயாதியோ என்னும்படி. அவர் வருந்திப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார்.

அரசரைப் பார்த்து மந்திரி, 'மஹாராஜ்!' என்று கூறி நமஸ்கரித்தார். மந்திரியின் மொழியைக் கேட்டதும் அரசர் கவலையுற்று எழுந்து உட்கார்ந்து, "சுமந்திரரே! ராமன் எங்கே?" என்று வினவினார்.

மீண்டும் அவர், "பிரியமான தோழரே! ராமனது க்ஷேமத்தைத் தெரிவியும். ராமன், சீதை, லட்சுமணர் இவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்களை உடன்கூட்டி வந்தீரோ? அன்றி, அவர்கள் காட்டிற்கே போய் விட்டார்களோ?" என்று கேட்கவே, அதைச் செவியுற்ற மந்திரியின் கண்களில் ஜலம் பெருகிற்று.

"நான் ராமனுக்கு முடி சூட்டுவதாகச் சொல்லி, முடிவில் அவனுக்கு வனவாசம் கொடுத்துவிட்டேன். இவைகளைக் கேள்வியுற்றும் எவன் மனத்தில் சந்தோஷமோ, வருத்தமோ எதுவும் உண்டாகவில்லையோ, அந்த அன்பான மகனைப் பிரிந்தும் என் உயிர் நீங்காது நிற்கிறதே! எனக்கு ஒப்பான பெரும் பாவி யார் இருக்கிறார்?

"சுமந்திரரே! ராமன், ஜானகி, லட்சுமணன் இவர்கள் இருக்கும் இடத்திற்கு என்னையும் கூட்டிச் செல்லும். இல்லையேல், என் உயிர் போய்விடும்: மெய்யாகவே சொல்லுகிறேன்.

"அப்பா! எனக்கு மிகவும் பிரியரான பிள்ளைகளின் செய்தியைச் சொல்லும்" என்று அரசர் அடிக்கடி மந்திரியை வினவி, மீண்டும் "தோழரே! ராமன் சீதை லட்சுமணன் இவர்களை நான் கண்ணால் காணும்படி விரைவில் ஓர் உபாயம் செய்யும்!" என்று வேண்டினார்.

மந்திரி மனத்தைத் தைரியப் படுத்திக் கொண்டு மென்மையாக, "மஹாராஜ்! நீர் ஒரு பண்டிதரும் ஞானியும் சூரரும் வீரரும் ஆவீர். மேலும் மிக்க பொறுமைசாலி. ராஜ்ய பாரத்தைச் செவ்வனே வகிப்பவன், ஸத்புருஷர்களின் சங்கத்திற்கு என்றும் சேவை செய்து வருபவன். தர்மிஷ்டர்களான வேந்தர்களில் முதன்மை பெற்ற நீங்கள் ஸத்புருஷர்களின் சங்கத்திற்கு எப்போதும் தொண்டராயிருக்கிறீர்கள்.

"சுவாமி! பிறப்பு, இறப்பு, எல்லாச் சுகதுக்கங்கள், போக விலாசங்கள், லாப நஷ்டம், அன்பர்களின் சேர்க்கை, பிரிவு, இவை யாவும் இரவு பகல் போலக் காலம் கருமம் இவற்றின் ஆதீனத்திற்குட்பட்டு மாறி மாறித் தோன்றுவன.

"பாமர ஜனங்கள் சுகத்தில் ஆடிப்பாடி ஆனந்தித்தும், துக்கத்தில் கண்ணீர் விட்டழுதும் காலங்கழிப்பார்கள். ஆனால் திடசித்தம் படைத்த பெரியோர்கள், சுகம் துக்கம் இரண்டிலும் சமசித்தம் உடையவர்களாயிருப்பார்கள். அனைவருக்கும் நன்மை செய்பவரே! ஞானத்தின் உதவியால் விசாரித்தறிந்து துக்கத்தை நீக்கிப் பொறுமையைக் கைப் பிடியுங்கள்.

"மன்னர் மன்ன! நான் தைரியமிழந்து கலங்குவதைக் கண்டு, தைரியசாலியான ராமன் ஸ்திர சித்தத்துடன் இனிமையாக, 'ஓ, பெரியவரே! நீர் தந்தைக்கு என் நமஸ் காரத்தைத் தெரிவிக்க வேணும். எனக்காக அரசர் பாதத்தில் அடிக்கடி வணங்கி, "தந்தாய்! உங்கள் கிருபை யால் காட்டிற்குச் சென்றும் நான் சுகத்தையே அடைவேன்.

தங்கள் கட்டளையை நிறைவேற்றி க்ஷேமத்துடன் தங்கள் பாத தரிசனம் செய்வதற்காக வீடு திரும்புவேன்!" என்று நான் சொன்னதாகச் சொல்லும். பிறகு, எனக்காக அன்னையர் பாதங்களிலும் பல தடவை பணிந்து அவர்களைச் சந்தோஷிப்பித்துப் பலவாறு பிரார்த்தித்துக் கொள்ளும். கோசலாதிபதி க்ஷேமமுறும் வண்ணம் முயற்சி செய்ய வேணும்' என்று உரைத்தான்.

"மேலும், சீதை சிரம் வணங்கி ஏதோ சில வார்த்தைகள் சொல்ல இருக்க, அன்பின் பெருக்கால் உடல் சோர்ந்து மயிர்க் கூச்சடைந்து கண்களில் நீர் பெருகச் சும்மா நின்றாள்.

"அச்சமயம் ராமன் முகக்குறிப்பை அறிந்து குகன் படகை வேகமாக அக்கரை கொண்டு சென்றான். இவ்வாறு ரகுவம்சத்தின் திலகம் போன்ற ரகுராமன் காட்டிற்குச் செல்ல, நான் மார்பில் வஜ்ரம் போன்ற இதயத்தைத் தாங்கியவனாய்ச் சும்மா நின்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

"ராமன் காட்டிற்குச் சென்ற செய்தியைக் கொண்டு திரும்பி வந்த என்னுடைய மனக் கிலேசத்தை எங்ஙனம் புகல்வேன்?" என்று இவ்வாறு சொல்லி மந்திரி சோர்வும் வருத்தமும் கவலையும் கொண்டு மௌனமாய் நின்றார்.

சாரதியின் இச்சொற்களைச் செவியுற்றவுடனே, மன்னர் மண்மீது சாய்ந்து விட்டார். அவர் இதயத்தில் பெருந் தாபம் ஏற்பட்டது. பெரு மோகம் அவரது மனத்தை வளைத்துக் கொள்ள, மாரிக் காலத்தில் மீனினங்களுக்கு உண்டாகும் மாஞ்சா என்ற நோயுற்ற மச்சம்போல் துடிக்கலானார்.

ராணிமார் அனைவரும் ஓலமிட்டழுதனர். அச்சமயம் இருந்த கோரக் காட்சியைச் சொல்லுவது எங்ஙனம்? அவர்கள் போட்ட கூச்சலைக் கேட்டுத் துக்கத்திற்கும் துக்கமுண்டாக, தைரியத்தின் திரமும் பறந்தோடி விட்டது!

தசரத சக்கரவர்த்தியின் உயிர் தொண்டையை வந்தடைத்தது. மாணிக்கத்தை இழந்த நாகம்போல் பரிதவித்தார். தண்ணீரற்ற தாமரைக் காடுபோல் அவருடைய அங்கங்களெல்லாம் சோர்ந்து துவண்டன.

ராஜாதி ராஜர் சோர்ந்திருப்பதைக் கண்ணுற்ற ராணி கௌசலை, சூரிய குலத்துச் சூரியன் அஸ்தகிரியை அடைந்து விட்டானென்று அறிந்தாள். அப்போது, ராமன்தாய் தைரியத்தை மேற்கொண்டு செம்மொழிகளைச் சொல்லுபவளாய்,

"நாதா! ராமனுடைய பிரிவு கரையற்ற கடல் போன்றது. அதில் அவதபுரியாகிற மரக்கலத்தைச் செலுத்தும் மாலுமித் தலைவர் நீர் ஒருவரே. பிரிய பரிஜனம், பிரஜை, பந்து, அனைவரும் அதில் ஏறிச் செல்லும் யாத்திரிகர்கள் என்று ஆராய்ந்தறிய வேணும்.

"தாங்கள் மனந்தெளிந்து தைரியத்தைக் கைவிடாதிருப்பீர்களானால், அந்த மரக்கலம் கரைபோய்ச் சேரும். இன்றேல், அதிலுள்ளவர் எல்லோரும் முழுகிப் போக வேண்டியது! அன்பரே! என் பிரார்த்தனையைக் கவனத்தில் வைப்பீரானால், சீதை, லட்சுமணன் இவர்களுடன் அவசியம் ராமனை மறுபடியும் காண்பீர்!" என்று கூறினாள்.

என்ன சொல்லியும் என்ன பயன்? அரசரது துயர் நீங்கவில்லை. வெகு நேரம் புலம்பிக்கொண்டிருந்தார். நேரம் அதிகம் கழிந்தும், இரவு முடிவடையப் பெறுது ஒரு யுகத்திற்குச் சமமாக ஊர்ந்து சென்றது. அப்போது, குருட்டு ரிஷியின் சாபம் அரசருக்கு ஞாபகத்திற்கு வந்தது. அந்தக் கதை முழுவதையும் அரசர் கௌசலைக்குக் கூறலானுர்.

வேந்தர் அக்கதையை எடுத்துக் கூறும்போதே மிகவும் சிந்தையுற்று, "ராமனின்றி உயிர் வாழ விரும்புவது நிந்திக்கத் தக்கது. ராமன்மீது எனக்குள்ள அன்பை நிரூபிக்கத் தவறினுல், இந்த உடலத்தை இனி வைத்திருந்து நான் என்ன செய்யப் போகிறேன்?" என்ருர்.

இப்படிச் சொன்ன பிறகு சக்கரவர்த்தி, 'ராம! ராம!! ராம!!!' என்று ஓலமிட்டு, மீண்டும் மீண்டும் 'ராம! ராம!!' என்று புலம்பியவாறே, ராமனது பிரிவைப் பொருமல் ஆவி துறந்து சொர்க்கத்திற்குப் போய்விட்டார்.

எவருடைய புகழ் அனேக பிரமாண்டங்களிலும் பரவி நிற்கிறதோ, அந்தத் தசரத சக்கரவர்த்தியானவர், வாழ்வு சாவு இரண்டிலும் அடைதற்கரிய அரும்பேற்றை அடைந்தவரானுர்.

எங்ஙனமெனில், ராமனுடைய முகமாகிற சந்திரனையே தரிசித்துக்கொண்டு ஜீவித்திருந்து, அவனை விட்டுப்பிரிந்ததும் மரித்துச் சீரும் சிறப்பும் பெற்ருர்.

அரசருடைய தேவியர் அனைவரும், அப்பொழுது கதி கலங்கி மன்னருடைய நற்குணம், வடிவழகு, பலம்,

பராக்கிரமம் தேஜஸ், இவற்றைப் புகழ்ந்து கண்ணீர் விட்டுக் கதறினார்கள். அவர்கள் இவ்வாறு புலம்பியழுது அடிக்கடி பூமியில் வீழ்ந்து புரண்டனர்.

சேடிகளும் பணியாட்களும் சிந்தை கலங்கிப் பலவாறு புலம்ப, நகரத்தில் வீடுதோறும் மக்கள் கண்ணீர் சொரிந்து, "நியாயத்தின் எல்லையும், குண ரூபங்களின் பொக்கிஷமுமாயுள்ள சூரிய குலத்துச் சூரியன் மறைந்து விட்டானே!" என்று அரற்றினர்.

இவ்வாறு உலக முழுவதும் கண்ணற்றுப் போகும்படி செய்த கைகேயியை அனைவரும் வைதனர். இங்ஙனம் அழுதழுது இரவு கழிந்து பொழுதும் விடிய, ஞானிகளான சகல முனிவர்களும் அங்கு வந்து சேர்ந்தனர்.

அப்போது வசிஷ்ட மாமுனி சமயத்துக்குத் தக்க அநேக புராணங்களை எடுத்துக் கூறித் தம்முடைய நுண்ணறிவை வெளிப்படுத்தி அனைவரும் துக்க நிவிர்த்தி பெறும்படி செய்தார்.

பிறகு அவர் ஓடம் ஒன்றைத் தைலத்தால் நிரப்பி அதனுள் தசரத சக்கரவர்த்தியின் உடலத்தைப் பத்திரப் படுத்தி வைத்து, தூதுவரை யழைத்து அவர்களை நோக்கி, "நீங்கள் விரைந்தோடிப் பரதனிடம் சொல்லுங்கள். மன்னன் மரணத்தை எங்கும் எவரிடமும் உரைக்க வேண்டாம். 'குரு உங்கள் இருவரையும் அழைத்து வரச்சொன்னார்' என்று இவ்வளவு மட்டும் உரையுங்கள்" என்று கட்டளை யிட்டார்.

முனிவரது கட்டளையைக் கேட்ட தூதுவர் சிறந்த குதிரைகளும் வெட்கமுறும்படி விரைந்து சென்றனர்.

நிற்க: அயோத்தியில் மேற்கூறிய அனர்த்தங்கள் விளையத் தொடங்கிய சமயத்திலிருந்தே பரதனுக்கு அபசகுனங்கள் தோன்றலாயின. அவன் இரவுதோறும் பயங்கரமான கனவுகளைக் கண்டு விழித்தும், பகலில் ஆயிரக் கணக்கான கொடிய விபத்துக்களைக் கற்பனை செய்தும் மனங்கலங்கினான்.

இவ்விதம் பரதன் மனத்தில் கவலை கொண்டிருக்கும் போதே, அயோத்தியிலிருந்து தூதர்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் மூலமாக அவன் குருவின் கட்டளையைச் செவியுற்று உடனே கணேசக் கடவுளைத் துதித்து அயோத்திக்குப் புறப்பட்டான்.

அவன் காற்றுக்குச் சமமான வேகத்துடன் குதிரைகளை ஓட்டிக் கொண்டு, அடர்ந்த காடு, நதி, பர்வதம் இவற்றை விரைவில் கடந்து சென்றான். பரதன் உள்ளம் மிகவும் பீதியுற்றிருக்க, அவனுக்கு எதிலும் விருப்பமில்லாமற் போய்விட்டது. "ஹா! நாம் பறந்து போவோமாக!" என்று மனத்தில் ஆத்திரப்பட்டான்.

பரதனுக்கு ஒரு விநாடி செல்வது ஒரு வருஷமாக இருந்தது. இந்தப் பிரகாரம் பரதன் நகரத்திற்குச் சமீபம் வந்து சேர்ந்தான். பட்டணத்துக்குள் பிரவேசிக்கையிலேயே துர்ச் சகுனங்கள் உண்டாயின. தகாத இடத்தில் உட்கார்ந்து கொண்டு காகங்கள் கோரமாகக் கரையலாயின.

கழுதையும் குள்ள நரியும் அபஸ்வரத்துடன் ஊளை யிட்டன. இச்சப்தங்களைச் செவியுற்ற பரதனது உள்ளம் திகில் கொண்டு துடித்தது. நதி, தடாகம், துரவு, உத்தியான வனங்கள் யாவும் பொலிவிழந்தன. நகரம் காண்பதற்கு மிகவும் பயங்கரமான தோற்றத்தை யுடையதாயிருந்தது.

பாதையில் பரதனைச் சந்திக்க நேர்ந்தபொழுது, நகர வாசிகள் யாவரும் வாய் திறவாமல் மௌனமாய் அவனை நமஸ்கரித்துச் சென்றனர். அதைக் கண்டு பரதன் மனத்தில் அச்சமும் வருத்தமும் பெரிதும் எழ, எவரையும் க்ஷேம சமாசாரம் வினவத் துணியாது கடந்து சென்றான்.

நகரின் நாற்புறமும் தீக்கிரையான பிரதேசம்போல் சூனியமாக இருந்தது. கடைத் தெருக்களையும் ராஜ வீதிகளையும் கண்கொண்டு பார்க்கமுடியவில்லை. சூரிய குலமாகிற தாமரை வனத்திற்கு நிலவு போலிருந்த கைகேயி, தன் மைந்தன் வருகையைக் கேள்வியுற்றுக் களிப்புற்றாள்.

ஆரத்தி சித்தஞ்செய்து எடுத்துக்கொண்டு களிப்புடன் எழுந்தோடி, வாயிலில் பரதனை எதிர்கொண்டு சந்தித்துத் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்றாள். பனிமழை தாக்கிய தாமரைக்காடு போல், தன் பரிஜனங்கள் துக்கமுற்று முகம் வாடியிருப்பதைக் கண்டான் பரதன்.

காட்டில் தீ மூட்டிக் களித்திடும் வேடிச்சிபோல மிகவும் களிப்புற்றிருந்தாள் கைகேயி. தன் அருமந்த புத்திரன் துக்கத்தில் ஆழ்ந்து விசனத்திருப்பதை அவள் நோக்கி, "நம் தாய்வீட்டில் அனைவரும் க்ஷேமந்தானே?" என்று வினவினாள்.

அப்போது பரதன் அவ்விடத்து க்ஷேம சமாசாரங்கள் யாவற்றையும் எடுத்துரைத்துத் தன் குலத்தின் க்ஷேமத்தைக் குறித்து வினவலாயினன். "தாயே! தந்தை எங்கிருக்கிறார்? அன்னையர் அனைவரும் எங்கே? சீதை, ராமன், அன்பார்ந்த தம்பி எல்லோரும் எங்கே இருக்கிறார்கள்?" என்று வினவினான்.

அந்தத் துஷ்டையான கைகேயி புத்திரனின் மொழிகளைச் செவியுற்றுக் கண்களில் கபடநீர் பெருக்கி, பரதன் காதிலும் மனத்திலும் சூலாயுதங்கொண்டு தைக்குந் தன்மை வாய்ந்த வன்மொழிகளை உரைக்கலானாள்.

"அப்பா! குமார! நான் எல்லாக் காரியங்களையும் செய்து முடித்துவிட்டேன். பாவம்! மந்தரை மிகவும் உதவி புரிந்தாள். மத்தியில் கடவுள் கொஞ்சம் காரியத்தைக் கெடுத்துவிட்டார்! அவ்விஷயமாவது: சக்கரவர்த்தி சொர்க்கத்திற்குச் சென்றுவிட்டதுதான்!" என்றாள்.

இச்சொற்களைக் கேட்டவுடன் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்ட யானைபோல் பரதன் பதைத்துப் பொறி கலங்கி, "ஹா, தந்தாய்! ஹா, தந்தாய்!!" என்று கதறிப் பூமியில் விழுந்து மனங்கலங்கினான்.

"ஓ பிதாவே! அந்திய காலத்தில் நான் உம்மைக் காணவும் பெறவில்லையே! தாம் என்னை ராமன் வசம் ஒப்படைத்தும் சென்றீரில்லையே!" என்று கதறியழுது பிறகு மெள்ளச் சமாளித்து மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, "அம்மா! தந்தை இறக்க நேர்ந்ததின் காரணம் என்ன? சொல்லு" என்றான்.

மகன் வார்த்தையைக் கேட்ட கைகேயி, புண் படுத்தி அதன் மீது விஷத்தைப் பூசுவதுபோலப் பேசலானுள். துஷ்டையும் கல் நெஞ்சம் படைத்தவளுமான கைகேயி, அதிக மகிழ்ச்சியுடன் ஆரம்பம் முதல் நடந்த தனது தீச்செயல்கள் யாவற்றையும் எடுத்துக் கூறினுள்.

ராமன் காட்டிற்குச் சென்றதைக் கேட்டவுடனே, பரதன் தந்தை மரணமடைந்த செய்தியை மறந்துவிட்டான். ராமன் வனஞ்சென்றதற்குத் தானே காரணம் என மனத்துள் உணர்ந்து, சோர்வுற்று வாய் பேசாது துக்கித்திருந்தான்.

மைந்தன் வருத்தப்படுவதைக் கண்டு கைகேயி சுட்ட புண்ணில் உப்பைப் பூசுவது போன்ற வார்த்தைகளால் அவனைத் தேற்ற முயன்முள் :

"குமார ! அரசருக்காக வருந்துவது சரியன்று. அவர் புண்ணியத்தையும் நற்பெயரையும் பெற்று வேண்டிய மட்டும் சுகபோகங்களை அனுபவித்தார்.

"அவர் ஜீவித்திருக்கையில் மானிடப் பிறவிக்கான பெரும் பேறுகள் அனைத்தையும் பெற்று, வாழ்க்கை முடிவில் இந்திரன் மாளிகைக்கு ஏகினர். இவ்வாறு அனுமானம் செய்து நீ வருத்தத்தை விட்டு உன் இனத்தாருடன் இந்த இராஜ்யத்தை ஆள்வாயாக!" என்று கூறினுள்.

இச்சொற்களைச் செவியுற்று அரசகுமாரன் மனங் கொதித்தான். பழுத்த புண்ணில் தீ வைத்ததுபோல் வருந்தினன். பிறகு சற்றுத் தைரியமுற்றுப் பெருமூச்சுடன் பேசினன் : "பாவி! நீ நம் குல முழுவதையும் கெடுத்து விட்டாய் !

"உனக்கு இவ்வளவு துராசை இருந்திருக்குமேயானால், பிறந்ததுமே ஏன் என்னைக் கொன்று போடவில்லை. அடி, பாவீ! நீ அடிமரத்தை வெட்டிக் கிளைக்குத் தண்ணீர் பாய்ச்சினாய்! நீ செய்வது குளத்தின் நீரை வற்றச் செய்து மீன்களின் உயிரைக் காப்பதுபோல் இருக்கிறது!

"சூரிய வம்சமானது ஒரு சிறந்த குலம். தசரதனாகிய தந்தை, ராம லட்சுமணர்களாகிய சகோதரர் ஆகிய இத்தனை பாக்கியம் இருந்தும், அம்மா! நீ எனக்குத் தாயாக வாய்த்தாயே! விதியின் வலியை யார் தடுக்க முடியும்?

"அடி, துன்மதி படைத்தவளே! இப்படிப்பட்ட துர்யுக்தி உன் மனத்தில் உதித்தபோது, உனது உள்ளம் துண்டு துண்டாக ஏன் உடைந்து போகவில்லை?

"நீ வரம் கேட்டபோது உன் மனத்தில் சிறிதும் வருத்தம் ஏற்படவில்லையா? பாவி! உன் வாய் புழுத்து, உன் நாக்கு ஏன் உடனே எரிந்து விடவில்லை?

"நம் மன்னர் சாது; கபடமற்றவர்; தர்மத்தில் விருப்பமுள்ளவர்; நன்னடை கொண்டவர். என் தந்தையார் பெண்களின் இயற்கையை அறிந்து கொள்வது எங்ஙனம்?

"ராமனிடத்தில் உயிருக்கொப்பான அன்பு வைத்திராத பிராணி, இந்த அகண்ட பூமியில் ஒன்றுகூட இல்லையே!

"அப்படிப்பட்ட ராமன் உனக்குப் பகைவனாகி விட்டான்! நீ யார்? எனக்கு உண்மையைச் சொல்லு. சரி: நீ யாரானால் என்ன? முகத்தில் கரியைப் பூசிக்கொண்டு

விட்டாய்! எழுந்து போ. என் கண்முன் நில்லாமல் எங்கேனும் போய், மறைவாய் உட்கார்ந்து கொள்.

"ராமனிடம் துவேஷம் பாராட்டும் உன் உதரத்தி லிருந்து கடவுள் என்னைப் பிறப்பித்துள்ளார்: நான் உன்னை இகழ்வது வீணே! எனக்கு இணையான பாவி வேறு யார் இருக்கிறார்?" என்று பரதன் தன் தாயைப் பலவாறு நிந்தித்தான்.

நிற்க: தாய் கைகேயியின் தீவினையைக் கேள்வி யுற்று, சத்ருக்னனுடைய அங்கங்களெல்லாம் கோபத் தீயினால் எரியலாயின. ஆனால், அவன் செய்யக் கூடியது ஒன்று மில்லை. அதே சமயத்தில் பற்பல வித ஆடை ஆபரணங்களைப் பூண்டிருந்த மந்தரை (கூனி) அங்கே வந்து சேர்ந்தாள். அவளைப் பார்க்கவும் லட்சுமணனுடைய தம்பி சத்ருக்னனுக்கு, எரியும் நெருப்பிலே நெய்யை ஹோமம் செய்தாற்போல் அடங்காத கோபம் மூண்டது. உடனே அவன் குதித்தெழுந்து அவளுடைய கூனில் ஒரு இடி இடித் தான். அவள் கூச்சலிட்டுக் கொண்டே குப்புற விழுந்தாள்.

கூன் முறிந்து கன்னங்கள் பிளந்து பற்கள் உடைந்துபோக, அவள் மூக்கிலிருந்து உதிரம் பெருகியது. "ஹா! தெய்வமே! நான் செய்த குற்றம் என்ன? நன்மை செய்யப் போக எனக்குத் தீமையுண்டாயிற்றே!" என்று ஓலமிட்டாள் அக்கூனி.

சத்ருக்னன், நகம் முதல் தலைவரை அவளை ஊன்றிப் பார்த்து மகா துஷ்டையென உணர்ந்து, மயிரைப் பிடித்துக்

கறகறவென இழுக்கலானுன். அப்போது கிருபா சமுத்திர மாகிய பரதன் அவனை விடுவித்தான். பின் பரத சத்ருக்னர் இருவரும் கௌசலையை நாடிச் சென்றனர்.

கௌசலை அழுக்கு வஸ்திரமுடுத்து, உடல் இளைத்து முகம் வெளுத்துப் பொன்னுல் நிருமிக்கப்பட்ட கற்பகக் கொடியின்மீது பனிக்கட்டிமழை அடித்தால் எங்ஙனம் இருக்குமோ, அங்ஙனம் காணப்பட்டாள்.

தாய் கௌசலை பரதனைப் பார்த்து எழுந்து ஓடினுள்; ஆனுல் தலை சுற்ற மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். அவளுடைய நிலைமையைக் கண்டு பரதன் மனங்கலங்கி ஓடி வந்து காலில் விழுந்தான். அச்சமயம் அவனுக்குத் தன்னுடலில் ஞாபகம் இல்லை. பின்பு பரதன் கௌசலையை நோக்கினுன்:

"அம்மா! தந்தை எங்கே? எனக்குக் காட்டு! சீதையும் ராம லட்சுமணர்களாகிய இரு சகோதரரும் எங்கே?

"என்னை எவள் பெற்றுளோ, அந்தக் கைகேயி இவ்வுலகில் ஏன் உதித்தாள்? அவள் பிறந்தாலுமென்ன? மலடியாக இருக்கலாகாதா?

"அம்மா! எவன் பொருட்டு உனக்கு இக்கதி நேர்ந்ததோ, குடியைக் கெடுத்தவனும், அன்பர்க்குத் துரோகியும், அபகீர்த்திக்குப் பாத்திரமும் எவனே, அந்தப் பாவியான எனக்கு நிகரான துர்ப்பாக்கியன் மூவுலகிலும் கிடைக்க மாட்டான்!

"தந்தை சுவர்க்கத்திற்கும், ரகுவம்சத்தின் கொடி போன்ற ராமன் காட்டிற்கும் சென்றார்கள். இவைகளுக் கெல்லாம் கேவலம் நான் ஒருவனே காரணம்: என்னைச் சுடவேணும்! மூங்கிற்காட்டிற்கு நெருப்பாகி விட்டேன்: கொடிய துயர், துன்பம், தோஷம் இவைகளுக் கெல்லாம் ஆளாகியும் விட்டேன்!" என்று கூறினான்.

தாய் கௌசலை பரதனுடைய நயமான பேச்சைக் கேட்டுச் சற்று மனந்தேறி எழுந்தாள். பரதனை வாரி எடுத்துக் கட்டி அணைத்துக் கண்ணீர் விட்டாள்.

கபடமற்ற சுபாவமுள்ள கௌசலை, ராமனே காட்டி லிருந்து திரும்பி வந்து விட்டானென்று எண்ணியவள் போல அவ்வளவு ஆர்வத்துடன் பரதனைக் கட்டியணைத்துக் கொண்டாள். பிறகு லட்சுமணன் தம்பியான சத்ருக்னனைச் சந்தித்தாள். அப்போது அவள் இருதயத்தில் தோன்றிய அன்பிற்கும் விசனத்திற்கும் கங்கு கரையில்லை.

அத்தருணம் அவள் சுபாவத்தைக் கண்ட எல்லோ ரும், "ராமன் தாயார் ஏன் இப்படி இருக்கமாட்டாள்?" என்று பேசிக் கொண்டனர். கௌசல்யாதேவி பரதனை மடியில் உட்கார வைத்துக்கொண்டு கண்களைத் துடைத்து மென்மையாக, "அப்பா, குழந்தாய்! உனக்கு நான் திருஷ்டி கழிக்கிறேன்! நமக்கு இப்போது போதாத வேளையென்று உணர்ந்து வீணில் விசனப்படாமல் நீ தைரிய மாக இருக்கவேணும்.

"காலத்தின் போக்கையும் நாம் செய்த வினைப் பயனையும் நம்மால் தடுக்க முடியாது என்பதை அறிய

வேணும். தன்னைத் தானே தூஷித்து, மனம் நோவதைத் தவிர்த்துவிடு.

"மகனே! எவரையும் பழிக்காதே! விதிவலி எனக்கு விரோதமாய் இருக்கிறது. இவ்வளவு துன்பத்திலும், கடவுள் என்னை உயிருடன் வைத்திருக்கிறரே: அவருடைய விருப்பம் எதுவோ தெரியவில்லை: அப்பா! தந்தையின் கட்டளையினல் ராமன் ஆடையாபரணங்களைக் களைந்துவிட்டு மரவுரி தரித்துக்கொண்டான். அச்சமயம் அவன் மனத்தில் வியப்போ, களிப்போ ஏதுமில்லை.

"அவன் முகம் தெளிவுற்று விளக்கமாக இருந்தது. எவர் மீதும் அன்போ, கோபமோ அவனுக்கு இல்லை. எல்லோரையும் சந்தோஷப்படுத்திவிட்டு அவன் கானகம் சென்றான்.

"ராமன் காட்டிற்குச் செல்வதைக் கேட்டுச் சீதையும் கூடச் சென்றாள். அவள் ராமன் திருவடியில் பற்றுடையவளாய் நாங்கள் என்ன செய்தும் நிற்கவில்லை.

"செய்தியைக் கேட்டவுடன் லட்சுமணன் எழுந்து கூட ஓடினன். ரகுநாயகன், என்ன முயன்றும் நின்றானில்லை. அப்பொழுது ரகுபதி யாவருக்கும் சிரம் வணங்கிச் சீதையுடனும் இளைய சகோதரனுடனும் சென்றான்.

"இங்ஙனம் ராம லட்சுமணர்களும் சீதையும் காட்டிற்குச் செல்ல, நானே அவர்களுடன் சென்றேனில்லை. அன்றி, என் ஆவியையாவது உடன் அனுப்பி வைத்தேனு? அதுவுமில்லை! இவை யாவும் இக்கண்கள் முன்பே நடை

பெற்றன: ஆனால் இத்துர்ப் பாக்கியம் படைத்த ஜீவன் இவ்வுடலை விட்டு நீங்கவில்லையே!'' என்று சொன்னாள்.

இவ்வாறு சொல்லிக் கௌசலை புலம்புவதைச் செவியுற்று, பரதனுடன்கூட அந்தப்புரத்தார் எல்லோரும் மனங்கரைந்து வருந்தினார்கள். அன்று அந்த ராஜமாளிகை விசனத்தின் வீடுபோல் ஆயிற்று.

பரதன் வேத புராணங்களிலுள்ள பற்பல அழகிய கதைகளை எடுத்துச்சொல்லித் தாய்மார் அனைவரையும் தேற்றுவித்தான். பிறகு இரு கரமும் குவித்துக் கபடமற்ற அழகிய சொற்களால், "தாய் தந்தை, மக்கள் இவர்களைக் கொல்லுவதினால் என்ன பாவம் நேருமோ; பசுக் கொட்டில்களையும், பிராமணர்களின் நகரங்களையும் தீயிட்டுக் கொளுத்துவதினால் என்ன பாவம் நேருமோ; ஸ்திரீகளையும், குழந்தைகளையும் கொலை செய்வதினால் எந்தத் தோஷம் சம்பவிக்குமோ; மித்திரனுக்கும் தன் அரசனுக்கும் விஷங்கொடுத்துக் கொல்வதினால் என்ன தோஷம் சம்பவிக்குமோ;

"மனம் மெய் மொழிகளாகிய முக்கரணங்களாலும் செய்யப்படுகிற பெரியனவும் சிறியனவுமாகிய குற்றங்கள் என்னென்ன உள்ளனவென்று கவிகள் கூறுகிறார்களோ;

"ராமனைக் காட்டிற்கு அனுப்பியதற்கு நான் இம்மியளவாவது உடந்தையா யிருப்பேனாயானால், அம்ம! அவற்றின் தோஷங்கள் யாவும் என்னைச் சேரட்டும்!

"அம்மா! இந்த வஞ்சகத்தில் யான் சம்பந்தப்பட்டிருப்பேனேயானால், காமுகரும், பேராசை பிடித்தவரும்,

லோபியும், பரஸ்திரீயையும் பரசொத்தையும் விருப்பத்துடன் நோக்குவோரும் அடையும் கதியை நானும் அடையக் கடவேன் !'' என்றான்.

அன்னை கௌசலை நல்ல சுபாவமுடைய பரதனின் வார்த்தைகளைச் செவியுற்று, "நீ முக்கரணங்களினாலும் ராமனிடம் எப்போதும் அன்பு செலுத்தியிருப்பவன். ராமன் உனக்கு உயிரினும் உயிராயிருப்பவன். நீயும் அவனுக்குப் பிராணனைக் காட்டிலும் அதிகப் பிரியமானவன். சந்திரன் விஷத்தையும், பனி அக்கினியையும் பொழிந்தாலும், ஜலஜந்து தண்ணீரை விட்டுப் பிரிந்து வாழ்ந்தாலும், ஞானம் கிட்டிய பின்னும் மோகம் நீங்காதிருந்தபோதிலும், நீ ராமனுக்குத் தீங்கிழைப்பவனாகமாட்டாய்! உலகத்திலே எவனாவது ராமன் வனமேகியதற்கு உடந்தையாயிருந்தவன் நீ என்று கூறுவானேயானால், அவன் கனவிலும் சுகத்தையும் நற்கதியையும் அடையான் !'' என்றாள்.

கௌசலை இவ்வாறு கூறிப் பரதனைக் கட்டியணைத்துக் கொண்டாள். அப்போது அவள் ஸ்தனங்களில் பால் பெருகக் கண்களில் நீர் ததும்பியது. இவ்வாறு இவர்கள் பலவிதம் புலம்பி விசனித்து உட்கார்ந்திருக்கையிலேயே, இரவு கடந்து பொழுதும் புலர்ந்தது.

அப்போது மந்திரிமார்களையும் மற்றும் பெரியோர்களையும் கூட்டிக்கொண்டு வசிஷ்டரும் வாமதேவரும் அங்கு வந்தார்கள். முனிவர் பரதனுக்கு அழகிய பாரமார்த்திக தத்துவங்களையெல்லாம் போதித்தார்.

மீண்டும் அவர் பரதனைப் பார்த்து, "புத்திரா! உன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு இன்று இச்சமயம் செய்யத் தக்கது எதுவோ, அதைச் செய்து முடிப்பாயாக" என்று உரைத்தார். முனிவரின் மொழிகளைச் செவியுற்ற பரதன் எழுந்து மன்னரின் ஈமக்கடனைச் செய்வதற்கு வேண்டுவனவெல்லாம் சித்தஞ்செய்யக் கட்டளையிட்டான்.

பிறகு வேத விதிப்படி சக்கரவர்த்தியின் உடலத்தை நீராட்டி அலங்கரித்தனர். அழகிய விசித்திரமான பல்லக்கு ஒன்று சித்தஞ் செய்யப்பட்டது.

பரதன் ஏனைய தாய்மார்களுடைய பாதங்களில் விழுந்து அவர்களை உடன்கட்டை ஏறுதபடி வேண்டிக்கொள்ள, ஆவல் கொண்டிருந்த அவர்களும் அதற்கு உடன்பட்டனர்.

சந்தனம், அகில் முதலிய கட்டைகளின் சுமைகள் பல வந்து சேர்ந்தன. இன்னும் பலவகையான வாசனைத் திரவியங்களும் வந்து சேர்ந்தன. சரயூ நதிக்கரையிலே, சொர்க்கத்திற்குச் செல்லும் படிக்கட்டோ?—என்று சொல்லும்படி அழகிய சிதை அடுக்கப்பட்டது.

வசிஷ்டர் ஒன்றை ஆஜ்ஞாபிக்க, அதை ஆயிரம் மடங்காகப் பாவித்து அவர் கட்டளையைப் பூர்த்தி செய்தான் பரதன். தீட்டுக் கழிந்து போனதும், யானை, பசு, குதிரை, தேர் முதலிய வாகனங்களையும் தானஞ்செய்து பிதாவின் ஈமக் கடனை இனிது நிறைவேற்றினான். அவன் தந்தையைக் குறித்துச் செய்தவைகளையெல்லாம் லட்சம் முகங்கொண்டு வர்ணித்துக் கூறமுடியாது.

நிற்க: முனிவரில் சிறந்தவரான வசிஷ்டர் ஒரு நல்ல நாளைக் குறித்துக்கொண்டு, முனிவர்களையும் மற்றுமுள்ள பெரியோர்களையும் தருவித்தார்.

அவர்கள் அனைவரும் சென்று ராஜ சபையில் உட்கார்ந்து கொண்டனர். பிறகு வசிஷ்டர் பரத சத்ருக்னர்களை வரவழைத்துப் பரதனைத் தன்னருகே வீற்றிருக்கச் செய்து, தர்மமும் நியாயமுமான சொற்களைச் சொல்லலானார்.

முதலில் முனி சிரேஷ்டர் துஷ்டை கைகேயி செய்த வஞ்சகத் தொழிலை வர்ணித்துக் கூறினார். பின்பு, தம்முயிரைக் கொடுத்து ராமன்பாலுள்ள பிரீதியையும், தம் வாழ்க்கையையும் காப்பாற்றிய தசரத மன்னரின் சத்திய விரதத்தையும், அவருடைய தர்ம புத்தியையும் மிகவும் கொண்டாடிப் பேசினார்.

"பரத! எல்லா விதத்திலும், நம் வேந்தர் பெரிய பாக்கியசாலி. அவருக்காக இனி விசனப்படுவது வீண். இதைத் தெரிந்துகொண்டு உன் துக்கத்தை நீக்கு. அரசர் ஆஜ்ஞையைச் சிரமேல் வகித்து அதன்படி நட.

"அரசர் சிங்காதனத்தை உனக்கே கொடுத்துச் சென்றார். தம் சொல்லைக் காப்பதற்காக மன்னர் ராமனைத் துறந்து, ராமன் பிரிவாகிற தீயினில் தம் உடலை நீத்துள்ளார். அவ்விதமான அவர் சொல்லை மெய்ப்பிக்க வேண்டியது உன் கடமையாகும்.

"மன்னருக்குத் தம் சொல் பிரியமாக இருந்ததேயன்றி உயிரின்மேல் பிரியமில்லை. ஆகையால், "குமார! தந்தையின் சொல்லை உண்மையாக்குக. அவர் ஆஜ்ஞையைச் சிரமேல் தாங்கி நிறைவேற்றுவாய். இதனால் உனக்கு எல்லா விதத்திலும் நன்மையே உண்டாகும்.

"பரசுராமன் தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததற்கு உலகமே சாட்சியாக நிற்கிறது. ராஜா யயாதியின் மகன் பிதாவுக்குத் தன் யௌவனப் பருவத்தைக் கொடுத்து அவர் இஷ்டத்தை நிறைவேற்றி வைத்தான். இவ்வாறு தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த மகனுக்குத் தோஷமோ, அபவாதமோ உண்டாகவில்லை.

"இது செய்யத்தக்கது; இது தகாதது—என்று சற்றும் யோசியாமலே எவர் தந்தையின் கட்டளையைத் தடையின்றி நிறைவேற்றுகிறாரோ, அவர் இன்பத்திற்கும் நற்கீர்த்திக்கும் பாத்திரமாய் இந்திரன் பட்டணத்தில் வசிப்பவராவர்.

"பரத! நீ உன் தந்தையின் சொல்லை மெய்ப்பிக்க வேண்டியது அவசியம். அவர் சொற்படி இந்நாட்டுப் பிரஜைகளைக் காப்பாற்றவேணும். விசனமுறுவதை நீக்கிவிடு. இவ்வாறு செய்வதினால் சுவர்க்கத்திலுள்ள நம் வேந்தர் திருப்தியடைவார். உனக்குப் புண்ணியமும் கீர்த்தியும் கிடைக்கும்; ஒருவித தோஷமும் சம்பவியாது!" என்றார்.

வசிஷ்டர் மேலும் உபதேசித்தருளினார்:—"தந்தை எவனுக்கு ராஜ்ய பாரத்தை அளிப்பாரோ, அவனுக்குத்தான் அது உரியது—என்பது பெரியோர்களின் அபிப்பிராயம்.

வேதங்களும் அவ்விதமே உரைக்கின்றன. ஆகையால் நீ விசனப்படாதே. நான் உன் நன்மைக்காகவே சொல்லுகிறேன்—என்பதை அறிந்து, நான் சொல்லுகிறபடி நட.

"மேலும், இச்செய்தியைச் செவியுற்று ராமனும் சீதையும் களிப்பெய்துவார்கள். இது செய்யத் தகாத காரியமென்று எந்தப் பண்டிதனும் சொல்லத் துணியான். கௌசலை முதலிய உனது தாய்மார் அனைவரும் தம் தேசத்து மக்கள் அமைதியுடனிருப்பதைக் கண்டு தாமும் சுகமுறுவர்.

"ராமனுக்கும் உனக்கும் பரஸ்பரமுள்ள சிநேகத்தை அறிந்தவர் அனைவரும் உன் விஷயத்தில் நல்ல அபிப்பிராயமே கொள்வர். ராமன் திரும்பி வந்த பிறகு, ராஜ்யத்தை அவன் கையில் ஒப்புவித்து நீ பேரன்புடன் அவனுக்குத் தொண்டாற்றுவாய்," என்றார்.

அப்போது மந்திரிகளும் கைகூப்பி வணங்கி, "அவசியம் தாம் குருவின் கட்டளைப்படி நடக்கவேணும். ராமன் திரும்பி வந்த பிறகு, எது செய்யத் தக்கதோ அதைச் செய்யலாகும்," என்று சொன்னார்கள்.

அத்தருணம் கௌசலை மனோதைரியத்துடன், "நோயாளிக்குப் பத்தியம் எப்படியோ, அப்படியாகும் குருவின் கட்டளை ஒருவனுக்கு. அதை நன்மை பயப்பதாகக் கௌரவித்து அதற்குக் கீழ்ப்படிதல் வேண்டும். காலத்தின் போக்கை அறிந்துகொண்டு விசனத்தை விட்டுவிடு.

"பிள்ளாய்! ராமனோ காட்டில் இருக்கிறான்; மஹாராஜா சொர்க்கத்தில் இருக்கிறார்! நீ இவ்விதம் சோர்வுற்

றிருப்பது சரியன்று. ஐயனே! இத்தருணம் தேசத்து மக்கள், பரிவாரம், மந்திரிமார், தாய்மார் எல்லோருக்கும் நீ ஒருவனே கதி!" என்ருள்.

அந்த வார்த்தையைச் செவியுற்றுப் பொறுமையை வகிக்கும் பரதன் திட சித்தங்கொண்டு தாமரை மலர்போன்ற கைகளைக் கூப்பி, அமுதம் தோய்ந்த செம்மொழிகளினுலே அனைவருக்கும் தக்க விடையளிக்கத் தொடங்கினன்.

"குரு எனக்குச் செய்த உபதேசம் மிகவும் சரியானதே. பிரஜைகளுக்கும் மந்திரிமாருக்கும் மற்றவர்களுக்கும் இது சம்மதம்தான். அன்னையும் அதைச் சரியென்று ஒப்புக் கொண்டு அதன்படி என்னை நடக்குமாறு கட்டளையிடுகிருள். அவள் உத்தரவை நான் அவசியம் நிறைவேற்றவேணும்.

"குரு, தாய், தந்தை, எஜமான், இஷ்டமித்திரர் இவர்கள் சொற்களைச் செவியுற்று இதமென்று உணர்ந்து சந்தோஷத் துடன் செய்யவேணும். அவற்றைச் செய்வது சரியோ, குற்றமோ என்று ஆராய்வதினுலே தர்மம் போய்விடுகிறது; பாவத்தின் பாரம் தலையில் ஏறுகிறது!

"எதை நிறைவேற்றுவதினுலே எனக்கு நன்மை உண்டாகுமோ, அதை நீங்கள் சுலபமாக உபதேசித்திருக்கிறீர்கள்: இதை நான் நன்கு அறிந்திருந்தும் என் மனம் திருப்தியுற வில்லை!

"இச்சமயம் நீங்கள் என் விண்ணப்பத்தையும் சற்றுச் செவியுற வேணும். பிறகு நான் செய்யத்தக்கதை அறிவியுங்கள். உங்கள் சொல்லுக்கு நான் விடைகூறத்

துணிந்ததே அபசாரம்: அதனைப் பொறுத்தருள்க. துன்புற்றோரின் குணதோஷங்களைச் சான்றோர் கணக்கிடமாட்டார்.

"பிதா சொர்க்கத்திலும், ராமனும் சீதையும் வனத்திலும் இருக்க, என்னை அரசு புரியும்படி ஏவுகிறீர்கள். இதிலிருந்து எனக்கு நன்மையா, அன்றி உங்களுக்குக் காரிய சித்தியா வரப்போகிறது?

"ராமனுக்குத் தொண்டாற்றுவதே நமக்கு நன்மை தருவது. அதை அபகரித்துவிட்டது என் தாய் கைகேயியின் வஞ்சகம். மனத்தில் இவ்விஷயமாக நான் தீர்க்காலோசனை செய்து பார்த்தேன். வேறு எந்த உபாயமும் எனக்கு நன்மை பயப்பதாக மாட்டாது.

"ராமன், சீதை, லட்சுமணன், இவர்களின் பாத தரிசனமின்றிக் கவலைக்கு ஏதுவாகிற இந்த அரசுரிமை எம்மாத்திரம்? இது துயரக் குவியல்! ஆடையின்றி ஆபரணங்களைச் சுமப்பது வீண்! விரக்தியின்றி, பிரம விசாரம் செய்வது வீண்.

"வியாதியுற்ற உடலுக்கு விஷய போகம் வியர்த்தமே. ஈச்வர பக்தியின்றி ஜபதபங்கள் வீணே. உயிரின்றி அழகிய உடல் வியர்த்தமே. அப்படியே எனக்கு ராமனின்றி எல்லாம் வீணேயாகும்.

"எனக்கு உத்தரவு கொடுங்கள். ராமனிடம் செல்லுகிறேன். இவ்வொரு துணிவே எனக்கு இதமாவது.

"என்னை அரசனாக்கி நீங்கள் நலம் பெற விரும்புகிறீர்கள். அன்பிற்கும் அஞ்ஞானத்திற்கும் வசப்பட்டு அப்படிச் சொல்லுகிறீர்கள்.

“நானே கைகேயியின் புதல்வன், துர்ப்புத்தி படைத்தவன்; ராமனுடைய விரோதி; வெட்க மற்றவன். நீங்கள் கேவலம் மோகத்திற்கு வசப்பட்டு, என்னைப் போன்ற அதமனுடைய இராஜ்யத்தில் சுகமுற விரும்புகிறீர்கள்.

“நான் உண்மையாகச் சொல்லுகிறேன். யாவரும் கேட்டு நம்பவேணும். அரசன் தர்மசீலனாயிருக்க வேண்டியது அவசியம். நீங்கள் வற்புறுத்தி எனக்கே அரசுரிமையை அளிப்பீர்களானால், அப்போது இப்பூதலம் பாதாளத்திற்கே இறங்கிவிடும்!

“என் பொருட்டு ராமனுக்கும் சீதைக்கும் வனவாசம் ஏற்பட்டது. எனக்கு நிகரான பாவி வேறு எவன் இருப்பான்? நம் வேந்தர் ராமனுக்கு வனவாசம் கொடுத்தார்; அவனை விட்டுப் பிரிந்ததும் தேவருலகம் சென்று விட்டார்!

“துஷ்டனாகிய நானே எல்லா அனர்த்தங்களுக்கும் ஏதுவாகிறேன். இப்பொழுது சாவதானமாய் உட்கார்ந்து கொண்டு எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ராமன் இல்லாத மாளிகையைப் பார்த்ததும், எனது இவ்வுயிர் இன்னும் இருக்கிறது, உலகத்தோர் நகைப்பையும் பொறுத்துக்கொண்டு!

“ராமன் சுக போகங்களில் அலட்சியமாயிருப்பவன். பேராசையுள்ளவர்கள் பூமியை ஆள ஆவல் கொள்ளுகின்றனர். ஹா! நான் என் உள்ளத்தின் கடுமையை எங்ஙனம் உரைப்பேன்? அது வஜ்ராயுதத்தின் உரத்தையும் தோற்கடித்து விட்டது! காரணத்தைக் காட்டிலும் காரியம்

கடினமாகிறது. இது என்னுடைய தோஷமில்லை. *எலும்பை விட வஜ்ரமும், கல்லைக் காட்டிலும் அதிலிருந்து எடுக்கப்படும் இரும்பும் கடினமாயிருக்கின்றன.

“ கைகேயி, லட்சுமண சீதாராமர்களுக்கு வனவாசத்தை அளித்தாள்; பர்த்தாவைச் சொர்க்கத்திற்கு அனுப்பி அவருக்கு நன்மை புரிந்தாள் !

“ நாட்டு மக்களுக்குத் துக்கத்தையும், சந்தாபத்தையும் கொடுத்துத் தான் வைதவ்யத்தையும் அபவாதத்தையும் ஏற்றுக் கொண்டாள் !

“எனக்குச் சுகம், நற்பெயர், உத்தம ராஜ்யம் இவைகளைத் தேடிவைத்தாள் போலும்! இதைக் காட்டிலும் வேறு நற் காரியம் எனக்கு என்ன இருக்கிறது? இவ்வளவு நடந்தும், நீங்கள் எனக்கு மகுடம் சூட்டுவதாகச் சொல்லுகிறீர்களே !

“ கைகேயியின் உதரத்தில் உதித்த எனக்கு இப்புவியில் எச்செயலும் அநுசிதமாகாது. என் காரியத்தை விதிவலி செய்து முடித்திருக்கையில், பிரஜைகளும் பஞ்சாயத்தாரும் சகாயம் செய்வானேன் ? கிரகம் பீடிக்கச் சன்னி பிடிக்கத் தேள் கொட்ட, இவற்றுக்கும் மேலாகக் கள்ளையும் குடிக்கச் செய்வது என்ன சிகிச்சையோ ?—சொல்லுங்கள் !

“ கைகேயி புதல்வனுக்கு எது ஏற்றதோ, அதையே சாமர்த்திசாலியான பிரம்மா எனக்கு அளித்திருக்கிறார் !

---

* ‘ எலும்பை விட வஜ்ரமும்’ என்ற இடத்தில் குறிக்கப்படுவது ததீசி முனிவர் சரிதை.

ஆனால் தசரதன் புதல்வனாகவும், ராமன் தம்பியாகவும் இருக்கும் பெரும் பேற்றைக் கடவுள் எனக்கு அளித்தது வீணென்றே சொல்ல வேணும்!

"இக்காரியத்தில் பரதனுடைய சம்பந்தம் இம்மியளவு மில்லை—என்று சொல்வார் இவ்வுலகில் ராமனும் சீதையும் நீங்கலாக வேறொருவருமில்லை. ஆகையால் நான் பிறர் சொல்லும் பழி பாவங்களை யெல்லாம் இன்பமாகக் கருதிக் கேட்டுச் சகித்திருக்கிறேன். ஜலமிருக்கும் இடத்தில் தானே சகதியுமிருக்கும்?

"உலகம் பழிக்குமே என்ற பயம் எனக்குச் சிறிது மில்லை; பரலோகத்தைப் பற்றிய சிந்தையுமில்லை! என் பொருட்டு ராமனும் சீதையும் வனத்தில் கஷ்டப்படுகின் றனர்—என்ற இந்த ஒரு பச்சாத்தாபமே என் உள்ளத்தை எரித்துக்கொண்டிருக்கிறது.

"எல்லாம் துறந்து ராமன் திருவடியில் தன் மனத்தைச் செலுத்திய தம்பியான லட்சுமணன் பிறவி யெடுத்ததின் பெரும்பயனை அடைந்துவிட்டான்.

"ராமனை வனத்திற்கு அனுப்புவதற்காகவே ஏற்பட்டது போலும் என் பிறப்பு. இந்தத் துர்ப்பாக்கியன் பச்சாத்தாபப் படுவதும் வீண் பொய்யாகுமோ?

"அனைவருக்கும் தலைவணங்கி நான் என் கொடிய பரிதாப நிலையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ரகுநாயகனுடைய பாத தரிசனமின்றி இந்த என் உள்ளக் கொதிப்பு ஒரு நாளும் நீங்காது.

“ எனக்கு வேறொரு உபாயமும் தோன்றவில்லை. ராம னின்றி என் மனோபாவத்தை அறியக் கூடியவர் யார்? நாளைய தினம் காலையே ராமனிடம் செல்ல வேணுமென்ற இந்த ஒரு எண்ணமே என் மனத்தில் நிலைத்துளது.

“ நான் கெட்டவன்; அபசாரப் பட்டவன்; நிகழ்ந்த துர்ச் சம்பவங்களுக்கெல்லாம் காரணன். ஆயினும், நேரில் வந்து சரணமடைவதைக் கண்டதும், அண்ணன் ராமன் என்குற்றங்களை மன்னித்து என்மீது விசேஷமான கிருபை புரிவான். ராமன் தன் பகைவனுக்கும் தீங்கிழையாதவன். யானோ அவனது பால னும் அடிமையுமானவன். தாங்கள் கட்டளையிடுங்கள்; ஆசி கூறுங்கள்: என் விண்ணப்பத்திற்கு இணங்கி ராமன் இராஜதானிக்குத் திரும்புவான்.

“ கொடிய மாதர்வினுடைய உதரத்தில் உதித்த துஷ்டனாகிய நான் ஸதா தோஷங்கள் நிறைந்தவனாயிருப் பினும், ராமன் தன் தாஸனாக அறிந்து என்னை என்றும் கைவிடமாட்டான் என்ற நம்பிக்கை எனக்குண்டு” என்று கூறி முடித்தான் பரதன்.

ராமனுடைய நேசமாகிய அமிர்தத்தை உண்டவர் போல் பரதனுடைய சொற்களைக் கேட்டு யாவரும் இன்புற்றனர்.

“ பரத! நீ நல்ல யோசனை கூறினாய். ராமன் எங்குளனோ, அங்கேயே போகவேணும். சோக ஸாகரத் தில் மூழ்கிக் கொண்டிருக்கும் எமக்கு நீ ஒரு தெப்பம்

காட்டினாய்!" என்று அனைவரும் அவனைக் கொண்டாடினர்.

மேக கர்ஜனையைக் கேட்டு மயிலுக்கும் சாதகப் புள்ளுக்கும் அடக்க முடியாத ஆனந்தம் உண்டாவதுபோல், அப்போது எல்லோருடைய மனத்திலும் பெருங்களிப்பு உண்டாயிற்று. பரதன் மறுநாள் சூரியோதயத்திலேயே புறப்பட நிச்சயித்திருக்கிறானென்று அனைவருக்கும் தெரிய, யாவருக்கும் பரதன் உயிரினும் இனியவனானான்.

"மிகவும் நல்லது' என்று மக்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். அனைவரும் பரதனுடன் புறப்பட்டுப் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானார். காவலாக வீட்டிலே தங்கும்படி செய்யப்பட்டவரெல்லோரும் தம் கழுத்தே முறிந்து விட்டதுபோல் எண்ணினார்கள். "தம்பீ! ஒருவரையும் வீட்டில் தங்கும்படி சொல்லாதே. பிறவிப் பயனைப் பெற எவனுக்குத் தான் விருப்பமிராது?" என்று இறைஞ்சினர் சிலர்.

பரதன் சுசீலனாதலால், விசனித்திருக்கும் தாய்மார்களின் மனோபாவத்தை யறிந்து, அவர்களுக்கென்று மூடு பல்லக்குகளையும் சிவிகைகளையும் சித்தஞ் செய்யும்படி உத்தரவிட்டான்.

அப்போது பரதன், 'பட்டாபிஷேகத்திற்கான சாமக்கிரிகளை எடுத்துச் செல்லவேணும். வசிஷ்டர் வனத்திலேயே ராமனுக்கு முடிசூட்டி வைப்பார்!' என்று ஆஜ்ஞாபிக்க, மந்திரிகள் துரிதமாகச் செல்ல வேணுமென்ற கட்டளையைக் கேட்டு வணங்கி, உடனே தேர், யானை,

குதிரை முதலியவைகளைச் சித்தஞ்செய்தார்கள். முதலில் முனிவர்கோனும் அருந்ததியும் சகலமான சாமான்களையும் சித்தஞ்செய்து கொண்டு அக்கினி சகிதம் தேரில் ஏறினார்கள். தேஜோராசியாய் விளங்கிய அந்தணர் குழாம் பலவித வாகனங்களின்மேல் அமர்ந்தது. நகரத்தாரனைவரும் சித்திரகூடஞ்செல்ல ஆயத்தமாயினர். ராணிமாரும் புறப்பட்டனர்.

பரத சத்ருக்னர்களாகிய அவ்விரு சகோதரரும், நகர வாசிகள் அனைவரையும் மரியாதையுடன் புறப்படச் செய்து, நகரத்தை நம்பிக்கையுள்ள சேவகர்வசம் ஒப்படைத்துவிட்டு, ராமன் சீதை இவர்களின் திருவடியைத் தியானித்த வாறு வனத்திற்குப் புறப்பட்டனர்.

நீர் விடாய் கொண்ட யானைகள் நீர்நிலையைக் கண்டு ஓடுவதுபோல, ராம தரிசனத்திற்கு ஆவல் கொண்ட நகர மாந்தர் அனைவரும் அதிவிரைவில் சென்றனர். ராமனும் சீதையும் காட்டிலிருப்பதை எண்ணிப் பரதன் தம்பியுடன் கூடக் கால் நடையாகச் சென்றான்.

பரதன் அவ்வாறு செய்வதைப் பரிவுடன் நோக்கி, மக்கள் யாவரும் யானை, குதிரை, தேர் முதலியவைகளை விட்டிறங்கித் தாமும் கால் நடையாகச் செல்லலானார்.

அது கண்டு ராமனது தாய் தனது சிவிகையைப் பரதனுக்குச் சமீபமாய்ச் செலுத்தி இனிமையாக, “வத்ஸ! தாய் உனக்குத் திருஷ்டி-தோஷம் கழிக்கிறாள். நீ தேர் மீது ஏறிக்கொள். உன் பரிவாரங்கள் உன் பொருட்டுக் கஷ்டப்படுகிறார்கள். நீ நடந்து செல்வதால், அனைவரும்

நடந்து செல்வார்கள். யாவரும் சோகத்தினால் வருந்திச் சோர்வுற்றிருக்கின்றனர் ; நடந்து செல்லவும் சக்தியற்றவர் !" என்றாள்.

இரு சகோதரரும் தாயின் சொற்களைச் சிரமேற் கொண்டு அவள் அடிபணிந்து அப்படியே இரதமேறிச் சென்றனர்.

அவ்விரு சகோதரரும், முதல் நாள் தமஸா நதிக்கரை கரையில் தங்கி, இரண்டாம் நாள் கோமதி தீரத்தில் வசித்தனர். சிலர் பால், சிலர் பழம், ஏனையோர் ஒரே வேளை இரவில் போஜனம்,—இவ்வாறு சகல ஜனங்களும் ராகவனை நினைத்தவாறே, ஆபரணங்களையும் சுகத்தையும் துறந்து நேமநிஷ்டையுடன் இருந்தனர்.

அதன்பின் சரயூ நதிதீரத்தில் இறங்கி இளைப்பாறிவிட்டு, மறுநாள் சூரியோதயத்தில் சிருங்கிபேரபுரத்திற்கு அருகே வந்தடைந்தனர்.

வேடுவர் தலைவனும் குகன் சகல சமாசாரங்களையும் செவியுற்றுச் சிந்தை கலங்கி யோசிக்கலானான்: "பரதன் இக்காட்டிற்கு வரவேண்டிய காரணமென்ன? இவன் மனத்தில் கபடம் கொண்டிருக்க வேணும். நெஞ்சில் சிறிதும் வஞ்சகமில்லையாயின், உடன் சைனியத்தைக் கொண்டு வருவானேன்?

"லட்சுமணனுடன் கூட ராமனைக் கொன்று விட்டு நாம் சுகமாக இடையூறின்றி இராஜ்யம் நடத்தலாகும் என்று எண்ணினான் போலும். பரதன் ராஜநீதியை நன்குணர்ந்

தானில்லை. முன்பு உண்டானது அபவாதம் ஒன்றே: இப்பொழுதோ அவனுயிருக்கே ஹானி வந்து விட்டது! ஏனெனில் தேவாசுரர்கள் அனைவரும் ஒருங்கே வந்தாலும், போரில் ராமனை வெல்வார் எவருமில்லை! பரதன் இங்ஙனம் ராமனுக்கு விரோதமாக நடந்து கொள்வதில் என்ன ஆச்சரியம்! விஷக் கொடியில் அமுதப் பழம் ஒருகாலும் பழுக்காதல்லவா?"

இவ்விதமாக எண்ணிக் குகன் தன் இனத்தாரை நோக்கி, "நீங்கள் யாவரும் சாவதானமாயிருக்கவேணும். படகோட்டிகளே! நீங்கள் உங்கள் ஓடங்களை நீரில் அமிழ்த்தி விட்டு நதியின் துறையை அடைத்துவிடுங்கள். எல்லோரும் இறக்கச் சித்தமாகுக. நான் பரதனுடன் சமர் புரிவேன்; அவனை உயிருடன் கங்கையில் இறங்கவிடேன். யுத்தத்தில் சாவு கிட்டுகிறது; அதுவும் கங்கைக் கரையில்; சேவையோ ராமன் பொருட்டு; உயிரோ நீர்மேல் குமிழிபோல் நிலையற்றது," என்றான்.

அப்பொழுது ஒரு வயோதிகன் சற்று ஆலோசித்துக் குகனை நோக்கி, "தாங்கள் பரதனைச் சந்திக்கச் செல்லுங்கள். போர் செய்வதற்கு நிமித்தமில்லை. ராமனைச் சமாதானஞ் செய்யவே பரதன் செல்கிறான்; யுத்தத்திற்கன்று—என்று நற்சகுனங்கள் கூறுகின்றன," என்று சொன்னான்.

அதைச் செவியுற்று வேடுவர்தலைவன், "முதியவன் சொல்வது சரி: விசாரியாது விரைவில் ஒரு காரியத்தைச் செய்துவிட்டுப் பின் வருத்தப்படுகிறவன் மூடன். பரதனுடைய சீலம், சுபாவம் இவைகளை ஆராய்ந்தறியாமல்

யுத்தஞ் செய்யத் தொடங்குவது, நமக்குக் கேடு தருவதேயாகும்.

"ஆதலால் நீங்கள் யாவரும் ஒன்று சேர்ந்து நதிதீரத்தைச் சூழ்ந்து கொள்ளுங்கள். நான் சென்று பரதனைச் சந்தித்துக் குறிப்பறிந்து வருகிறேன். சத்துரு, மித்திரன், பொதுவாயிருப்பவன் இவர்களுடைய நடவடிக்கையின் உண்மையை அறிந்த பிறகே எது செய்யத் தக்கதோ, அதை வந்து செய்கிறேன்.

"பரதனுடைய சுபாவத்திலிருந்து அவனுடைய நட்பின் இயல்பைக் கண்டு கொள்ளுகிறேன். பகைமையும் பிரீதியும் எவ்வளவு மறைத்தாலும் மறையாமல் புறம்பே தோன்றுவன!" என்று சொல்லிக் குகன் காணிக்கை கொண்டு போவதற்காகக் கந்த மூலபலங்களையும் பட்சிகளையும் மிருகங்களையும் தருவித்தான்.

பிறகு படகோட்டி அன்புடன் புளகாங்கிதனாய்த் தன் பெயரைச் சொல்லித் தூரத்திலிருந்தே முனிவருக்குத் தண்டனிட்டான். முனிவர் ராமனுடைய தோழனை குகனைத் தாமே அணுகிச் சென்று நிலத்தில் விழுந்து கிடந்த அன்பைச் சேர்த்து எடுப்பவர் போல அவனை வாரித் தழுவிக் கொண்டார்.

வசிஷ்டர் குகனை ராமனுக்கு மிகவும் வேண்டியவனென அறிந்து ஆசி கூறிப் பரதனை நோக்கி, "இவன் ராமனது நண்பன்" என்று கூறவே, பரதன் அன்பு பொங்கியெழ இரதத்தை விட்டிறங்கிக் குகனைச் சந்திக்க ஓடினான்.

குகன் தன் ஊர், ஜாதி, பெயர் இவைகளையெல்லாம் சொல்லிப் பரதனுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தான்.

குகன் பணிவதைக் கண்டு பரதன் அவனை வாரியெடுத்துக் கட்டியணைத்துக் கொண்டான். அச்சமயம் பரதனுள்ளத்தில் லட்சுமணனைக் கண்டதற்கொப்பாக அன்பும் ஆனந்தமும் பொங்கியெழுந்தன. இதைக்கண்டு ஜனங்களெல்லோரும் களிப்பெய்தினர். அமரர் விண்ணிலிருந்து மலர்மாரி பெய்தனர்; துதி செய்தனர்.

வேத மார்க்கங்களிலும், லோகாசாரத்திலும், எல்லா வகையிலும் இழிகுலத்தோனென்று புறக்கணிக்கப்பட்டவன் எவனோ, எவனுடைய நிழலைத் தீண்டினால் உடனே நீராட வேணுமென்று சாஸ்திரம் விதிக்கிறதோ, அந்த நிஷாதனை ராமனுடைய இளைய சகோதரனான பரதன் மார்புறச் சேர்த்துத் தழுவிப் புளகாங்கிதனானன்.

'ராம! ராம!!' என்று ஒருவன் கொட்டாவி விட்டாலும், பாவக் கூட்டங்கள் அவனுக்கு எதிரே வருவதில்லை! அப்படியிருக்க, பந்து மித்திரர்களுடன் பாவம் நீங்கிப் பரிசுத்த முள்ளவனாகும்படி ராமனே நேரில் மார்புறத் தழுவிக் கொண்ட அந்தக் குகன் விஷயத்தில் சொல்வதற்கென்ன இருக்கிறது?

சண்டாளன், சவரன், கசியன், யவனன், கோலன், பீலன் முதலிய ஈன ஜாதியரும், மூர்க்கன், நீசன் முதலியோரும், 'ராம' என்று உச்சரிப்பதினாலேயே பரிசுத்தராய், இப்புவியெங்கும் கியாதி பெற்றவராகி விடுகிறார்கள். கர்மநாசி

என்ற நதியின் நீரும் கங்கையில் விழுந்தவுடன், அதை எவன் தன்மேல் தெளித்துக் கொள்ளவில்லை? ராம நாமத்தைத் தலைகீழாய் ஜபஞ் செய்த வால்மீகி பிரம்மாவுக்கு நிகரானார்!

நிற்க: ராமனுடைய நண்பனாகிய குகனைப் பரதன் அன்புடன் சந்தித்து அவனுடைய க்ஷேம லாபங்களை வினவலானான். பரதனுடைய நல்லொழுக்கத்தையும் நேசத்தையுங்கண்டு, அச்சமயம் குகன் தன் நினைவற்று நின்றான்.

பிறகு, "மஹாராஜ்! க்ஷேம லாபங்களுக்கு வேர் போன்ற தம்முடைய பாத பங்கஜங்களின் தரிசனமே எனக்குத் திரிகாலத்திலும் க்ஷேம லாபங்களைத் தரக்கூடியன வென்று முன்னமே நான் தெளிந்துள்ளேன். இப்பொழுது நீங்கள் எனக்குச் செய்த பரம அனுக்கிரகத்தினால் கோடிக் கணக்கான என் இனத்தாருடன் கூட எனக்கு என்றும் மங்களமே உண்டாகும்.

"நான் வஞ்சகன்; பயந்தவன்; துர்ப்புத்தி படைத்தவன்; இழிகுலத்தோன்; வேத முறைப்படிக்கும், லௌகிக ரீதியாகவும் எல்லாவிதத்திலும் ஒதுக்கப்பட்டவன். ஆயினும், பிரபு ராமன் தம்முடையவனாக என்னைச் செய்துகொண்டது முதல் நான் லோக பூஷணமாகிவிட்டேன்!" என்றான் குகன்.

அப்பால், அவன் தன் பணியாட்கள் அனைவருக்கும் ஜாடை காட்ட, அவர்களும் அவனது குறிப்பை அறிந்து வீடுகளிலும், மரத்தின் அடிகளிலும், குளக்கரையிலும்,

உத்யான வனங்களிலும் மக்கள் தங்குதற்குரிய வாசஸ்தானங்களை அமைத்துத் தந்தனர். பரதன் சிருங்கிபேரபுரத்தைக் கண்டதும், சந்தோஷமேலீட்டால் மெய்ம்மயங்கி, வேடுவன் கையைப் பிடித்துக்கொண்டு வணக்கமும் அன்பும் உருவெடுத்தாற்போல விளங்கினன்.

பரதன் இங்ஙனம் சேனையுடனும் பரிவாரங்களுடனும் சென்று லோகபாவனியாம் கங்கையைக் கண்டான். பிறகு ராமன் கங்கையைத் தாண்டிய கட்டத்தைப் பணிந்து ராமனையே சந்தித்ததுபோல மிகவும் சந்தோஷமுற்றான்.

ரகுநாயகன் தங்கி இளைப்பாறிய அந்தப் புனிதமான சிம்சுபா விருட்சத்தின் அடியிற் சென்று, பரதன் மனத்தில் அன்பும் ஆதரவும் அதிகம் எழ அதை வணங்கி நமஸ்காரஞ் செய்தான்.

அங்கே அழகிய தர்ப்பாசனமொன்றைக் கண்டு அதைச் சுற்றி வலம் வந்து வணங்கினன். அங்கு ராமன் அடிச்சுவடு படிந்த தூளியை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அச்சமயம் அவனுக்குண்டான மனக் கிளர்ச்சியினலேயே ஒன்றும் பேச இயலாதிருந்தான்.

சீதையின் ஆடையிலிருந்து அங்கே சிதறிக் கிடந்த ஓரிரண்டு பொன்னலாகிய ஜிகினப் பொட்டுகளைப் பார்த்துச் சீதைக்குச் சமானமென்று பரதன் அவற்றைத் தலையில் சூடிக்கொண்டான். அப்பொழுது அவன் கண்களில் நீர் ததும்பிற்று; உள்ளத்தில் வருத்தமுண்டாயிற்று. தோழனை குகனை நோக்கி இனிய குரலில், "ராமனது பிரிவாற்றுமையால்

அயோத்தியின் ஆண் பெண்கள் எவ்வாறு பொலிவற்று நிற்கின்றனரோ, அவ்வாறே சீதையின் விரசுத்தால் இந்த ஜிகினாப் பொட்டுகள் காந்தியிழந்து மாசற்றிருக்கின்றன.

"பர்த்தாவையே கடவுளென மதித்தொழுகும் பதிவிரதைகளான பெண்மணிகளுக்குள் சிரோமணியாய் விளங்கும் சீதையின் புல்மெத்தையைக் கண்டும் என் இதயம், 'ஹா! ஹா!' வென அரற்றி வெடித்துப் போகவில்லை! ஆதலால், என் இதயம் வஜ்ரத்தைக் காட்டிலும் கடினமாகும்.

"ரகுகுல ரத்தினமாகிய ராமன் இன்ப ரூபி; சுபம், ஆனந்தம் அனைத்துக்கும் களஞ்சியம். அவரே வெறுந் தரைமீது புல்லைப் பரப்பிப் படுத்துறங்குகிறார்! விதியின் கதி மிகவும் கடுமையானது.

"துன்பம் என்பதை ராமன் காதாலும் கேட்டதில்லை. சக்கரவர்த்தி அவரைச் சஞ்சீவி விருட்சத்தைப்போல் பாதுகாத்து வந்தார். நாகம் தனது மாணிக்கத்தையும், இமைகள் விழிகளையும் காப்பதுபோல், அன்னையர் அனைவரும் ராமனை இரவு பகலாய்க் காத்துவந்தனர்.

"அந்தோ! அதே ராமன் இன்று காடு காடாய்த் திரிந்தும், காய், கனி, கிழங்கு முதலியவைகளைத் தின்றும் வருகிறார்.

"அசுபங்களுக்கு வேர் போன்ற அந்தக் கைகேயியைச் சுடவேணும்! பிரியமான தன் உயிர்க்காதலனுக்குக் கூட அல்லவா அவள் பிரதிகூலையானாள்?

"பாவக்கடலாயும், துர்ப்பாக்கியத்திற்கு இடமாயும் உள்ள என்னையுந்தான் சுட்டுக் கொளுத்த வேணும்! என் பொருட்டன்றோ நிகழ்ந்தன இந்த எல்லா ஆபத்துக்களும்? அந்தோ! என்னைப் பிரம்மா குலத்துக்குக் களங்கமாகவும், துஷ்ட அன்னையை ஸ்வாமித் துரோகியாகவும் சிருஷ்டித்து விட்டனரே!" என்று பிரலாபித்தான்.

அதைச் செவியுற்ற குகன் கனிவுடன், "ஸ்வாமீ! தாம் வீணில் வருத்தப்படலாகுமோ? ராமன் உம்மிடம் பிரிய மானவர். நீரும் ராமனிடம் அதிக அன்பு வைத்தவர். இதில் குற்றவாளி எவருமில்லை! தெய்வம் நமக்குப் பிரதி கூலமாயிருக்கிறது: அதன் தோஷம் தான் இது!" என்று கூறினன்.

நண்பனுடைய இன்மொழிகளைச். செவியுற்ற பரதன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு ராமனைத் தியானித்த வாறே தன் கூடாரத்திற்குச் சென்றான்.

பரதன் வரவைக் கேள்வியுற்ற சிருங்கிபேரபுரத்தார் அனைவரும் துக்கத்துடன் பரதனைக் காணவந்தனர்.

இந்தப் பிரகாரம் இரவு முழுதும் வந்தவருடன் பரதன் பேசி யிருந்து விட்டுப் பிறகு சூரியோதயத்தில் படகுகளில் கங்கையைக் கடந்து செல்லலானான்.

பரதன் முதலில் குரு வசிஷ்டரை ஒரு சிறந்த படகில் மரியாதையுடன் ஏற்றிப் பிறகு தாய்மார்களை ஒரு புதிய ஓடத்தில் ஏறும்படி செய்து, தானும் ஒரு படகில் ஏறிக் கொண்டான்.

நான்கு நாழிகைக்குள் அனைவரும் கங்கையின் அக்கரையை அடையவே, பரதன் யாவரையும் ஜாக்கிரதை யாகப் படகினின்றும் கரையில் இறக்கி விட்டான்.

மறுநாள் விடியற்காலம் காலைக்கடனை முடித்துக் கொண்டு தாய்மார் குரு இவர்கள் பாதம் பணிந்து, பரதன் நிஷாதர்களை முன்னிட்டுக் கொண்டு சைனியத்தை நடத்திச் சென்றான்.

இவ்வாறு உள்ளத்தில் பிரீதி பொங்கியெழ 'சீதாராம்! சீதாராம்!' என்று ஜபித்தவாறே பரதன் மூன்றாம் ஜாமத்தில் பிரயாகையை அடைந்தான்.

பிறகு ராமனது அழகிய குணக் கூட்டங்களைக் கேட்ட வாறே பரத்வாஜ முனிவரின் ஆச்ரமத்தை அணுகினான். தம்மைத் தண்டனிட்டு நமஸ்கரிக்கும் பரதனை நோக்கித் தமது பாக்கியமே உருக்கொண்டு வந்ததோவென்று கருதினார் பரத்வாஜர்.

முனிவர் தன்னை ஏதேனும் கேட்பாரோவென்று பரதன் சங்கையுற்றிருக்கப் பரத்வாஜர் அவனுடைய நல்லொழுக் கத்தையும் சங்கோசத்தையும் உணர்ந்து, "பரத! யாம் விஷயங்கள் யாவும் அறிவோம். விதிவலி அங்ஙனமிருக்கப் பிறர்வசம் என்ன இருக்கிறது?

"கைகேயியின் தீவினைக்காக மனசுக்குள்ளே தன்னைத் தானே நொந்து கொள்ளாதே! இதில் கைகேயியின்மேல் சற்றேனும் குற்றமில்லை. அவளுடைய புத்தியை ஸரஸ்வதி கெடுத்து விட்டாள்!" என்று கூறிச் சமாதானஞ் செய்தார்.

"இவ்விஷயத்தில் உன் மீது இம்மியளவாவது குற்றங் கூறுபவன் ஒருவனிருந்தால், அவன் அதமன்; முட்டாள்; துஷ்டனுமாவான்.

"அப்பா! நீ அரசு செலுத்தி வந்தாலும் யாதும் தோஷமில்லை. அதைக் கேள்வியுற்று ராமன் சந்தோஷமே அடைவான்.

"பரதா! இப்பொழுது நீ செய்ததோ மிகவும் நன்று, நன்று! உன்னால் இது செய்யத் தக்கதே. ரகுநாயகன் திருப்பாதங்களில் பற்று வைப்பது எல்லா நன்மைக்கும் ஏதுவாகிறது.

"பரதா! கேளாய்: ராமன் மனத்தில் அவனது பிரீதிக்குப் பாத்திரமாயிருப்போரில் உனக்கு ஈடானவர் வேறொருவருமில்லை. ராம லட்சுமணர்களும் சீதையும் உன்மீது மிகுந்த பிரேமை வைத்துள்ளார். இங்கு அவர்கள் தங்கிய அன்றிரவு முழுவதும் உன்னைக்கொண்டாடிப் பேசுவதிலேயே சென்றது. மூடமனிதன் ஒருவன் ஜகத்தின் அற்ப சுகத்தோடு வாழ்வதில் எவ்வளவு பற்று வைத்திருக்கிறானோ, அவ்வளவு பற்று உன் மீது ராமனுக்கு," என்றுரைத்தார்.

அப்போது பரதன் புளகாங்கிதனாய் உள்ளத்தில் சீதா ராமர் உருவந்தோன்ற, கண்களில் ஆனந்த பாஷ்பம் ததும்ப, முனிவர் முன்னிலையில் தலைவணங்கித் தழுதழுத்த குரலில் சொன்னான்:

"தாம் சர்வஜ்ஞர். நான் உரைப்பது உண்மை. ஒருவனுடைய மனோபாவத்தை அந்தர்யாமியாகிய சீதாராமரே அறிவார்.

"கைகேயியின் தீவினையைக் குறித்தோ, உலகம் என்னை இழிவாகக் கருதுமேயென்றோ, என் மனத்தில் துக்கமோ, விசாரமோ சிறிதுமில்லை.

"எனது பரகதி கெடுமே—என்ற பயமுமில்லை. பிதாவின் மரணத்தைக் குறித்தும் துக்கமில்லை. ஏனென்றால் ராம லட்சுமணர்களாகிய நன்மக்களைப் படைத்த அவருடைய அழகிய புகழும் புண்ணியமும் உலகமெங்கும் பரவி நிற்கின்றன.

"மேலும், ராமர் பிரிவைத் தாங்கமாட்டாமல் விநாடியிலே நசிக்கக்கூடிய இந்த உடலை விட்டுச் சென்ற அந்த அரசர் பொருட்டு விசனிப்பதற்கு முகாந்தரம் என்ன இருக்கிறது?

"ஆனால் ராம லட்சுமணர்களும் சீதையும் காலில் பாதரட்சை கூட இல்லாமல் முனி வேஷம் தாங்கிக் காடு காடாய்த் திரிகின்றனர்.

"இவர்கள் கிருஷ்ணாஜினத்தை உடையாக உடுத்திக் கொண்டு பழங்களையுண்டு, காய்ந்த சருகுகளையும் புல்லையும் பூமியில் விரித்து அவற்றின்மீது படுத்துறங்கி நாள்தோறும் மரத்தடியிலேயே தங்கிக் குளிர், உஷ்ணம், காற்று, மழை இவையனைத்தையும் சகித்து வருகிறார்கள்.

"இந்தத் துக்கமாகிற தீயினால் நாள் முழுவதும் என் நெஞ்சு எரிகிறது. பகலில் பசியோ, இரவெல்லாம் நித்திரையோ ஏதுமில்லை எனக்கு. நான் உள்ளுக்குள்ளேயே

உலகெங்கும் தேடிவிட்டேன். இக்கொடிய வியாதிக்கு ஒரு மருந்தும் கிடையாது!" என்று வருந்தினன்.

பரதன் சொற்களைச் செவியுற்ற பரத்வாஜர் திருப்தியுற்றார். அங்கே கூடியிருந்த அனைவரும் பரதனைப் பலவாறு புகழ்ந்து, "வத்ஸ! அதிக வருத்தம் வேண்டாம். ராமன் திருவடிகளைத் தரிசித்த மாத்திரத்தில் உனது துயரமெல்லாம் தொலைந்துபோம்" என்று தேற்றினார்கள்.

மீண்டும் பரத்வாஜர் பாதனுக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லி முடிவில், "பரத! இன்று நீ எமக்கு மிகவும் இஷ்டமான அதிதியாகவேணும். நாங்கள் கொடுக்கும் கனி, வேர், கிழங்கு, புஷ்பங்களை நீ தயவு செய்து ஏற்றுக்கொள்ள வேணும்" என்று வேண்டினார்.

அப்போது பரதன், "நாத! தாம் இடும் கட்டளையைத் தலைமேல் தாங்கிக் கீழ்ப்படிதல் எங்கள் முதற்கடமையாகும்" என்று சொல்லவே, அவனுடைய பணிவான வசனங்கள் முனிவரது மனத்தைக் களிப்புறச் செய்தன.

அப்பால் அவர் சீசியுள்ள தமது சிஷ்யர், பணியாளர் சிலரை அருகே அழைத்து, "பரதனுக்கு விருந்தளிக்க வேணும். நீங்கள் சென்று கந்தமூல பலங்களைக்கொண்டு வருக," என்று கட்டளையிட, அச்சிஷ்யர்களும் 'நல்லது, ஸ்வாமீ!' என்று விடை பகர்ந்து தலைவணங்கிக் களிப்புடன் தத்தம் வேலைக்குச் சென்றனர்.

பிறகு அம்முனிவர், "நம் அதிதிகள் மிகவும் கொண்டாடத் தக்கவர். ஒரு தேவதையை அதன் அந்தஸ்திற்கு

ஏற்றபடி பூஜிக்கவேணும்" என்று எண்ணியிருக்க, அதைக் கேட்டு அணிமாதி சித்திகளும் ஆங்குற்று அவரை நோக்கி, "எஜமான்! உத்தரவாகட்டும். நாங்கள் அதை உடனே செய்யக் காத்திருக்கிறோம்" என்றன.

அப்போது முனிவர்கோன் மகிழ்ச்சியுடன், "ராமனை விட்டுப் பிரிந்ததால், பரதன் தன் தம்பியுடன் ஆறாத் துயருற்றிருக்கிறான். விருந்தோம்பி எல்லாருடைய சிரமத்தையும் நீக்குவீராக" என்றார்.

அதன் பின் சித்திகள் நொடியில் சுகலவிதமான சாமக்கிரிகளையும் சேகரித்து வைத்துவிட்டன. சுவர்க்கத்திலே கனவிலும் காணக் கிடைக்கப் பெறாத அரும்பொருள்கள் யாவும் அங்கே மலிந்து கிடந்தன. முதலில் அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு தங்கும் வசதிகள் அமைக்கப் பட்டன.

உணவுப் பொருள்களும், பலவகைப் பானங்களும், குடிநீரும் சுத்தமாகவும், அமிர்தத்தைக் காட்டிலும் மதுரமாயுமிருந்தன. என்றும் இத்தகைய பொருள்களைக் கண்டிராத ஜனங்கள் அவைகளைக் கண்டு துறவிகள்போல் திகைப்புற்றனர்.

ஒவ்வொருவர் இடத்திலும் தனித்தனியாக ஒரு காமதேனுவும் கற்பக விருட்சமும் இருக்கக்கண்ட இந்திரனும் இந்திராணியுங்கூடப் பெரிதும் பொறாமையுற்றனர்.

அடுத்த நாள் விடியற்காலம் பரதன் தன் பரிவாரங்களுடன்கூட முனிவருக்குத் தலை வணங்கிச் சென்று தீர்த்த

ராஜாவான புனிதப் பிரயாகையில் நீராடினன். பிறகு மகரிஷியின் ஆணையும் ஆசிமொழியும் பெற்று அவற்றைச் சிரத்தின்மேல் தாங்கி, மறுபடியும் அவருக்குத் தண்டனிட்டு விடை கொடுத்தனுப்புமாறு மிகவும் வேண்டினன்.

பிறகு பரதன் முதலான யாவரும் சமர்த்தர்களான வழிகாட்டிகளை உடன்கொண்டு சித்திரகூட மலையை உத்தேசித்து நடந்தனர்.

பரதன், ராமனது தோழனை குகன் தோளிலே கையைப் போட்டுக்கொண்டு அன்பே உருக்கொண்டு வந்தாற்போல் மெலல நடந்து சென்றான்.

அவன் பாதங்களில் பாதரட்சை இல்லை; தலைமீது குடையுமில்லை. அவன் களங்கமற்ற அன்பு, நியமம், விரதம், தர்ம சிந்தனையாகிய அணிகளைப் பூண்டவனாய், வழி நெடுக ராமலட்சுமணர் சீதை இவர்தம் கதைகளைச் செவியுற்றும், கனிவுடன்தான் சொல்லியும் இவ்வாறு தோழன் குகனுடன் சம்பாஷித்தவாறே சென்றனன்.

இங்ஙனம் தனது சமூகத்தாருடன்கூட விவேகமாகிற மரக்கலத்தின்மீதேறி வந்தவன்போல் வந்த பரதன், ராமன் திருமேனிபோன்று நீல நிறங்கொண்ட யமுனையின் தூய நீரோட்டத்தைக் கண்டதும், ராமவிரகம் என்ற சமுத்திரத்திலே விழுந்து முழுகலானன்.

அன்று யமுனை நதிக்கரையில் கூடாரம் அடித்தார்கள். சமயத்துக் கேற்றவாறு அவரவருக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்பட்டன. அன்று இராத்திரிக்குள்ளேயே

ஒவ்வொரு கட்டத்திலும் கணக்கில் அடங்காத ஓடங்கள் வந்து குவிந்தன.

வைகறையில் எழுந்து நேரே ஓடத்திலேறி அனைவரும் அக்கரையை அடைந்தனர். அன்று ராமனது நண்பனை குகன் செய்த கைங்கரியத்தினால் அனைவரும் சந்தோஷ முற்றனர். பிறகு அந்நதியில் நீராடி அதை வணங்கிச் சேவித்துவிட்டு, இரு சகோதரர்களும் நிஷாதனுடன் முன்னோக்கிச் சென்றனர்.

அப்போது இயற்கையழகிலே மிகச் சிறப்புற்று விளங்குவதும், பயஸ்வினீ நதிதீரத்தை அருகில் உடையதுமாகி, அந்த இரு வீரரும் சீதையுடன்கூட வாசஞ் செய்கிறதும் மலைகளின் முடிமணியாக விளங்குவதுமான சித்திரகூட பர்வதத்தை அவர்களுக்குக் குகன் காண்பித்தான்.

மக்கள் அனைவரும் அம்மலையைக் கண்ணுற்று, "ஜானகியின் பிராணநாதன், ஸ்ரீராம சந்திரனுக்கு ஜே!" என்று ஆரவாரித்து வணங்கினர். அந்த ராஜபரிவாரங்கள், ராமனே அயோத்திக்குத் திரும்பி வந்ததுபோல, அவ்வளவு ஆனந்தங் கொண்டனர். அச்சமயம் பரதனுக்கு உண்டான ஆனந்தத்தை ஆதிசேஷனும் வருணிக்க இயலாது. அகந்தையென்னும் அழுக்கால் மூடப்பட்ட மனிதர்களுக்கு எவ்வாறு பிரம்மானந்தம் எட்டாதோ, அவ்வாறே கவிகளுக்கு இதை வருணித்தல் முடியாததாகும்.

நிற்க: சித்திரகூடத்திலே ஒரு நாள் இரவு கழிந்து விடியற்காலம் கிட்டியதும் ராமன் விழித்தெழுந்தபோது, ராமன் பிரிவாகிற தாபத்தினால் வாட்டமுற்ற சரீரமுடைய

பரதன், தன் பரிவாரம் புடைசூழ ஆங்கு வருவதாக அன்றிரவு கண்ட கனவைச் சீதை ராமபிரானுக்குச் சொன்னாள்.

மேலும் அக்கனவிலே சீதை, மக்கள் அனைவரும் மனச் சோர்வுற்றுத் துக்கிப்பவராகவும், தன் மாமிமார் முகங்கள் அதிகச் சோகமுற்றிருப்பதாகவும் கண்டாள்.

சீதையின் கனவைச் செவியுற்ற ராமனின் கண்கள் கலங்கி நீரைப் பெருக்கின. பிறர் துக்கத்தைப் போக்கு பவனான அந்த ராமனே அப்பொழுது துக்கத்திற்கு ஆளாகிவிட்டான்.

அதன்மேல் ராமன், "தம்பி லட்சுமணா! இக்கனவு நல்லதன்று. விரும்பத்தகாத விஷயத்தை நாம் கேள்வியுறப் போகிறோம்!" என்று இயம்பித் தம்பியுடன் நீராடி மகாதேவனைப் பூஜித்துப் பின் சாதுக்களுக்குச் சம்மானஞ் செய்தான்.

இங்ஙனம் அவன் தேவர்களையும் முனிவர்களையும் பூஜித்துப் பிறகு தர்ப்பாசனத்தில் உட்கார்ந்து கொண்டு வடதிசையை நோக்கினான்.

அச்சமயம் தூளியெழும்பி ஆகாயமெங்கும் பரவியது. அனேக விதமான பட்சிஜாலங்களும் மிருகங்களும் அச்சமுற்று, ராமனது ஆச்ரமத்தை நோக்கி ஓடிவந்தன.

ராமன் வியப்புற்று, 'இவை இங்ஙனம் ஓடிவருவதற்குக் காரணமென்ன?' என்று எழுந்து பார்த்தான். அதே சமயம்

கோலரும் கிராதரும் அங்கு வந்து ராமனிடம் விஷயங்களை அறிவித்தனர்.

சீதாநாயகனான ஸ்ரீராமன், 'பரதன் வரக் காரண மென்ன ?' என்று ஆலோசிக்க ஒருவன் வந்து, பரதனுடன் சதுரங்க சேனையும் வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

அப்பொழுது ராமன், "பரதன் நீதியை நன்குணர்ந்தவன்; சான்றோர் பேச்சைக் கேட்டு நடப்பவன்" என்று எண்ணி மனத்தில் சமாதானமுற்றான். ராமன் சிந்தையுற்றிருப்பதை லட்சுமணன் கண்டு அச்சமயத்துக்குத் தக்க நீதிமொழிகளை உரைத்தான்.

"எமது தலைவ! தாமோ களங்கமற்ற பரிசுத்தமான சித்தம் படைத்தவர்; நல்லொழுக்கத்திற்கும் அன்பிற்கும் அடைக்கலம்; அனைவர் மீதும் அன்பு கொண்டொழுகுபவர்; எல்லோரையும் தம்மைப்போல் பாவித்து நடப்பவர். எல்லாரிடத்திலும் உமக்கு விசுவாசமுண்டு.

"சுகபோகங்களில் பற்றுள்ள மனிதன் பிரபுத்துவம் அடைந்ததும், அஞ்ஞானியும் முட்டாளுமாகிறான். 'பரதன் நியாயப் பிரியன்; ஸத்புருஷன்; சாமர்த்தியசாலி; பிரபுவின் பாதத்தில் பற்றுள்ளவன்' என்ற விஷயம் உலகமறிந்ததே.

"அவனே ராஜபதவியை அடைந்து, இன்று நியாய பங்கஞ் செய்து தர்மத்தை மீறி விட்டான். வஞ்சகனும் துஷ்ட உறவினனுமாகிய பரதன் நமக்குக் கஷ்டகாலம் நேர்ந்திருப்பதை அறிந்தும், பிரபு தனிமையில்

வனவாசஞ் செய்வதை எண்ணியும், மனத்தில் தீய எண்ணங் கொண்டு ராஜ சபையினரை ஒன்று கூட்டி இடையூறில்லாமல் அரசாள எண்ணி இங்கே வந்தான் போலும்.

"இவ்விரு சகோதரர்களும் லட்சக்கணக்கான சூழ்ச்சிகள் செய்து பெருஞ்சேனை யொன்றைத் திரட்டிக்கொண்டு இப்பொழுது வந்துள்ளனர்.

"மனத்தில் வஞ்சகமும் சூழ்ச்சியுமில்லாதவன், ரத கஜ துரக பதாதிகளை ஏன் விரும்பவேண்டும்? இதில் பரதன்மீது வீணில் குற்றஞ் சாட்டுவானேன்? இராஜ்யப் பதவி பெற்ற பின் உலகத்தவர் யாவருமே இங்ஙனம் மதம் பிடித்து அலைவது இயல்பு.

"கார்த்தவீரியார்ஜுனன், திரிசங்கு, இந்திரன் இவர்களில் எவருக்கு அதிகார மதம் களங்கத்தைக் கொடாமலிருந்தது? 'பகைவனும் கடனும் ஒருபோதும் பாக்கியிருத்தல் கூடாது' என்ற உபாயம் உசிதமென்று பரதன் நினைத்தான் போலும்" என்றான் லட்சுமணன்.

மீண்டும், லட்சுமணன், "தலைவ! நான் உரைப்பது அனுசிதமென்று எண்ணவேண்டாம். பரதன் என்னை அறை கூவுவதுபோல் விளங்குகிறான். இதை யான் எப்படிப் பொறுத்திருப்பது? இச்சமயமோ பிரபு என்னுடன் இருக்கிறார்: கையிலோ வில் இருக்கிறது. யான் எவ்வளவு காலம் மனத் துன்பத்தைப் பொறுத்திருப்பது?

" முதலாவது நான் ஒரு க்ஷத்திரியன். அடுத்தபடி ரகு குலத்திலே உதித்தவன். அன்றியும் ராமனைப் பின்பற்றி நடப்பவன். இது உலகம் அறிந்த விஷயம். காலால் உதைத்திட்டால் தூசியும் கிளம்பித் தலைமேல் ஏறுகிறது. தூசிக்கு ஒப்பான துச்சப்பொருள் வேறு யாதுளது? " (நான் எவ்வளவு கடையேனாயினும் தூளிக்குள்ள ஆத்மாபிமானம் எனக்கில்லையா?—என்பது தாத்பரியம்.) என்று கூறி, உறங்கிக் கொண்டிருந்த வீரரஸம் விழிப்புற்றது போல் எழுந்து கைகூப்பி, ராமன் அனுமதியை யாசித்து நின்றான்.

லட்சுமணன், தலையில் ஜடையைத் தூக்கிக் கட்டிக் கொண்டு முதுகில் அம்பறாத் தூணி தரித்தவனாய், கையில் வில்லும் அம்பும் தாங்கி மறுபடியும், " போரிலே பரதனுக்குப் புத்தி புகட்டி, ராமனது சேவகனாயிருத்தலின் பெருமையை இன்று நான் அடையப் போகிறேன். அவ்விரு சகோதரர் களும் ராமனை அவமதித்தற்கு ஏற்ற பயனை அடைந்து, யுத்தகளத்திலே மீளாத் துயில் கொள்ள போகின்றனர்!" என்று வீரம் பேசினான்.

அதற்கு ராமன், " சான்றோர் சங்கத்தைச் சேர்ந்து சேவை செய்யாத மாந்தரே, ராஜபதவியாகிய மதுவை ஆசமனஞ் செய்ததும் மதம் பிடித்தவராகி விடுகின்றனர். ஆனால் கேளாய், லட்சுமணா! சிருஷ்டிகர்த்தாவின் வேலைப் பாட்டிலே பரதனுக்கு நிகரான ஒருவனைக் கேட்டதும் கண்டதுமில்லை.

" பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்களுடைய உயர்ந்த பதவியை அடைந்தாலும், பரதனுக்குப் பிரபுப் பதவியால்

மதம் என்றும் உண்டாகாது. காடியின் துளி சிந்தப் பாற்கடல் கெட்டது!—என்பது என்றைக்கேனும் உண்டோ?

"இளஞ்சூரியனை இருள் மறைப்பினும், மாட்டின் குளம்பிற்கொப்பான ஆழமுள்ள நீரில் அகஸ்திய முனி மூழ்கிவிட்டாலும், பூமாதேவி தன் இயற்கையாம் பொறுமையை விட்டு விட்டாலும், கொசுக்கள் ஊத மேருமலை பறந்தோடியதென்றாலும், பரதனுக்கு ராஜ பதவியால் மதம் என்றும் உண்டாகாது.

"அப்பா, லட்சுமணா! உன்மீது ஆணை. நம் பிதாமீது ஆணை. பரதனுக்கொப்பான சுசிவாய்ந்த நல்ல சகோதரன் ஒருவனுமில்லை" என்றுரைத்தான்.

பரதன்மீது ராமனுக்குள்ள விசுவாசத்தை விளக்கிக் காட்டும் அந்தச் சொற்களைக் கேட்ட தேவகணங்கள், "தயாநிதியான ராமனுக்கு நிகரான பிரபு வேறு யார்?" எனப் புகழ்ந்தனர்.

ராம லட்சுமணர்களும் சீதையும் தேவர்களது மொழியைக் கேட்டு அடைந்த சந்தோஷத்தை வருணிக்க இயலாது. இது இங்ஙனமாக, இங்கே பரதன் பரிசுத்தமான மந்தாகினியிலே நீராடினான்.

பின்பு அனைவரையும் அந்நதி தீரத்திலேயே நிறுத்தி விட்டுத் தாய்மார், மந்திரி, குரு இவர்கள் உத்தரவைப் பெற்றுப் பரதன் சத்ருக்னனையும் குகனையும் உடன் அழைத்துக்கொண்டு சீதையும் ராமனும் இருக்குமிடத்தை நாடிச் சென்றான்.

பரதன் தன் மனத்துள்ளே தன் தாய் கைகேயியின் தீவினையை நினைத்து லஜ்ஜையுற்றான். "ஒருகால் என் வருகையைக் கேள்வியுற்று ராம லட்சுமணர்களும் சீதையும் அவ்விடத்தை விட்டு வேறு எங்கேனும் போய்விடுவார்களோ?" என்று மனத்துள் கவலையுற்றான்.

"கல்மஷம் வாய்ந்த நெஞ்சத்தான் என்று என்னைக் கைவிட்டாலும், தம்முடைய உண்மையான ஊழியன் என அறிந்து அன்புடன் வரவேற்றாலும், இரண்டு விதத்திலும் எனக்கு ராமன் அடிச்சுவடுகளே சரணம். ராமன் நல்ல பிரபு. குற்றம் யாவும் சேவகனையே சார்ந்தவை."

இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டே பரதன் செல்லும் போது, சுப சகுனங்கள் தோன்றலாயின. நிஷாதன் அவைகளைக் கண்டும் கேட்டும் ஆலோசித்து, "இதனால் உங்களுக்குத் துயர் நீங்கி இன்பமுண்டாகும். ஆனால் இறுதியில் துயரமே பிரதானமாக நிலைக்கும்!" என்று கூறிச் சென்றான்.

பரதன் நிஷாதன் உரை சத்தியமென்றே உணர்ந்தான். இதற்குள் அவர்களும் ஆச்ரமத்திற்கருகே வந்து சேர்ந்தனர். அங்குள்ள அரண்யங்களையும் பர்வதங்களையும் கண்ணுற்று, பசிப் பிணியால் வாடியிருந்தவனுக்கு நல்ல அன்னம் கிடைத்தாற்போல், பரதன் ஆனந்தங்கொண்டான்.

அதிவிருஷ்டி, அனுவிருஷ்டி, பஞ்சம் முதலியவற்றினால் மிகவும் வருத்தமுற்றோரும், (தைஹிகம், தைவிகம், பௌதிகம் என்ற) மூன்று வித ஆபத்துக்களினால் பீடிக்கப்பட்டோருமான மக்கள் வேறொரு நன்னாட்டை யடைந்து அதன்

நற்காவலனது சிறப்புற்ற செங்கோலின் கீழே சுகமுறுவது போல, அச்சமயம் பரதனுடைய நிலைமை இருந்தது.

அவ்வனப் பிரதேசத்தில் அநேக முனியாச்ரமங்கள் இருந்தன. அவை நகரம், பேட்டை, ஊர், கிராமம் முதலியவற்றைப் போலவும், அவற்றில் வாழும் விசித்திரமான பல ஜாதி மிருக பட்சிகள், மக்களது கூட்டம் போலவும் விளங்க, அவ்வழகு வருணிக்க இயலாதது.

அங்கே காட்டெருமை, சிங்கம், புலி, பன்றி, எருது முதலிய ஜந்துக்களின் கூட்டம் காண்பதற்கு மிக அற்புதமாயிருந்தது. இந்த மிருகங்கள் யாவும் ஒன்றற்கொன்று விரோதமற்று ஒன்று கூடிச் சஞ்சரிப்பதானது, இவைகளே ஸ்ரீராமனுடைய சதுரங்க சைனியம் என்று எண்ணும்படியிருந்தது.

அவ்வனத்திலே மலையருவியின் பேரொலியும், மதயானைகள் பிளிறும் ஒலியும் சேர்ந்து, பேரி டங்கா முதலிய வாத்தியங்களின் சப்தத்தை ஒத்தன. இன்னும் அவ்வனத்திலுள்ள சக்ரவாகம், சாதகம், அன்றில், கிளி, குயில் முதலிய புள்ளினங்களும் மதுரமாகக் கீதம் பாட, அன்னப் பட்சிகள் களிப்புற்றன.

அங்கங்கே வண்டினங்கள் கூடி ரீங்காரஞ் செய்ய, மயில்கள் நர்த்தனமாட, அக்காட்சியானது ஒரு நல்ல இராஜ்யத்திலே நாற்புறமும் மங்கள நிகழ்ச்சி நடைபெறுவது போல் தோன்றியது.

தான் செய்த தவம் முடித்து அதன் பயனைப் பெற்று இன்புறும் யோகிபோல, பரதன் ராமன் வாழும் மலையின் சோலையைக் கண்ணுற்று மனத்தில் அத்யந்த பிரேமை யடைந்தான். அப்போது குகன் ஒரு பாறையின் உச்சி மீது தாவி ஏறிக் கைகளை உயர்த்தி ஆட்டிய வண்ணம் பரதனை நோக்கினான் :

" சுவாமீ! அதோ அத்தி, மா, பலா, நாவல், தமாலம் முதலிய விசாலமான விருட்சங்களைப் பாருங்கள்! அந்தச் சிறந்த மரங்களின் மத்தியில் பிரமாண்டமான ஓர் ஆலமரம் காண்போர் மனத்தைக் கவரத் தக்கபடி வெகு அழகாக விளங்குகிறது.

"அது மிக அடர்ந்து கறுத்திருக்கும் இலை துளிர்களையும், சிவந்த சிறு பழங்களையும் உடையதாய், எக்காலத்திலும் சுகத்தைத் தரக்கூடிய அதிக நிழலுடன் கூடியது.

" சிருஷ்டிகர்த்தா இருட் கூட்டத்தையும் செந் நிறத்தையும் ஒருங்கே சேர்த்துக் குவித்து, இன்பமளிக்கத் தக்க ஒரு சோலையை உருவகப் படுத்தித் தந்தார் போலும்.

" அத்தகைய மரம் இராமனது பர்ணசாலை அமைக்கப் பட்டிருக்கும் அந்த நதி தீரத்தில் உள்ளது. சில இடங்களில் சீதையினாலும், சில இடங்களில் லட்சுமணனாலும் வைக்கப் பட்ட துளஸிச் செடிகள் பொலிவுடன் தென்படுகின்றன. மேலும் அவ்வட விருட்சத்தின் அடியிலே, சீதை தன் தாமரைக் கையினாலே அமைத்த ஓர் அழகிய திண்ணை சோபிக்கிறது.

“அத்தகைய வட விருட்சத்தின் கீழ் அத்திண்ணையின் மீது, அறிஞர்களான ராமனும் சீதையும் முனிவர் குழாம் புடை சூழத் தினந்தோறும் வீற்றிருந்து, ஆகம புராண இதிஹாசங்களின் கதைகள் அனைத்தையும் இனிது கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்” என்று சொன்னான்.

நண்பன் சொற்கேட்டு அம்மரங்களைப் பார்க்கப் பரதன் கண்களில் களகளவென்று நீர் பெருகலாயிற்று. பிறகு இரு சகோதரர்களும் தூரத்திலிருந்தே அதற்கு நமஸ்காரஞ் செய்து கொண்டவாறே அதை அணுகினார்கள். அவர்களுடைய அந்த அன்பை நாமகளாலும் வருணிக்க இயலாது.

அடர்ந்த மரங்களின் இடையிலே நின்றிருந்த லட்சுமணன் கண்களுக்கு, நண்பன் குகனுடன் கூட நடந்து வரும் வசீகரம் பொருந்திய சகோதரர் இருவர் புலனாகவில்லை. ஆனால் பரதனோ பரிசுத்தம் வாய்ந்து சகல மங்களத்திற்கும் உறைவிடமாயிருந்த ஸ்ரீராமனின் ஆச்ரமத்தை அப்போதே கண்டு கொண்டான்.

அந்த ஆச்ரமத்தில் பிரவேசிக்கையிலே மோட்ச சாதனத்தைக் கிட்டிய யோகி போல, பரதன் வேட்கையும் துக்கதாபமும் அற்று மன அமைதி பெற்றான். லட்சுமணன் முன்னின்று ஏதோ வினவ, அதற்கு ஆதரவுடன் பிரபு உத்தரஞ் சொல்ல, அந்நிலையில் இராமனைக் கண்டான் பரதன்.

அந்த ராமலட்சுமணர்கள் தலையில் ஜடை முடி தரித்து, இடையில் வற்கலம் புனைந்து, கையில் வில்லும்

அம்பும் தாங்கியிருந்தனர். அத்திண்ணையின் மீது, முனிவர் குழாம் புடை சூழச் சீதாராமர்கள் இனிது வீற்றிருக்கக் கண்டான் பரதன்.

அப்பொழுது பரதனும் தம்பி சத்ருக்னனும் நண்பன் குகனுடன் பழைய சந்தோஷம், சோகம் யாவற்றையும் மறந்து உவகை பூத்து ஆனந்தக் கண்ணீர் நிறைந்து சந்தோஷமெய்தியவர்களாய், நாதா! காப்பாற்றவேண்டும். ஸ்வாமீ! ரட்சிக்க வேண்டும்" என்று கூவிக்கொண்டே திடீரென்று தண்டாகாரமாய்ப் பூமிமீது விழுந்து விட்டனர்.

பிறகு லட்சுமணன் அன்புடன் வணங்கி ராமனைப் பார்த்து, "ரகுநாயக! பரதன் நமஸ்கரிக்கிறான்," என்று அறிவித்தான். ராமன் அச் சொல்லைக் கேட்டதுமே அன்பினால் மனங்குழம்பி, ஒரு பக்கம் ஆடை குலைய, மறுபக்கம் தூணி நழுவ, அம்பையும் வில்லையும் அப்படியே போட்டு விட்டுப் பரபரப்புடன் எழுந்தான்.

கிருபா நிதியாகிய ராமன் பரதனை வாரியணைத்து, மார்புடன் இறுகத் தழுவிக்கொண்டான். ராமன் பரதன் இவர்களது இச்சந்திப்பைக் கண்ணுற்ற அச்சபையோர் அனைவரும் தம் உணர்வற்று மயங்கிக் கிடந்தனர்.

பிறகு ராமன் அதிவாஞ்சையுடன் சத்ருக்னனைச் சந்தித்து, அப்பால் குகனைச் சந்தித்தான். லட்சுமணன் தன்னை வணங்குவதைக்கண்டு பரதன் அதிகமான பரிவுடன் அவனை வாழ்த்தினான்.

பிறகு, தம்பி சத்ருக்னனுடனே பரதன் பக்தியோடு ஸீதையின் பாத பத்மங்களின் தூளியைச் சிரசின் மேல் வகித்து, அடிக்கடி அவளடியில் வீழ்ந்து சேவிக்கலானன். ஸீதை அவர்களை எழச் செய்து அவர்கள் தலையில் தனது கமலக் கரத்தை வைத்து ஆசி கூறினாள்.

அத்தருணம், ஒருவர் ஒன்றைச் சொல்லவோ, கேட்கவோ யாதும் இயலவில்லை. மனம் பிரேமை நிறைந்து சலனமற்றிருந்தது. அச்சமயம் குகன் திடம் கொண்டு கைகுவித்து வணங்கி,

"சுவாமீ! தாய்மார், மந்திரிமார், பட்டணத்துப் பிரஜைகள், பரிவாரங்கள் அனைவரும் வசிஷ்டமாமுனிவருடன் கூடத் தங்கள் பிரிவினால் அதிகமாகச் சிந்தையுற்று இவ்விடம் தேடி வந்துள்ளனர்" என்று தெரிவித்தான்.

ராமன் சீல சம்பன்னன்; தர்ம துரந்தரன்; தீனதயாளு; தீரமானவன். அவன் குருவின் வருகையைச் செவி யுற்றுச் ஸீதையின் சமீபம் சத்ருக்னனை இருத்தி அக்கணமே அவரைக் காண விரைந்து சென்றான்.

இவ்வாறு சென்ற ராமன் லட்சுமணனுடன் குருவைத் தரிசித்து அன்பு மேலிடத் தண்டனிட்டான். முனிவர்கோன் ஓடிச்சென்று சகோதரர்களைக் கட்டி அணைத்து ஆர்வம் பெருக அளவளாவினர்.

ராமசந்திரன் கணப்பொழுதில் அனைவரையும் சந்தித்து, அவரவர் சோக சந்தாபங்களைத் தூர விலக்கினான். கோடிக்

கணக்கான குடங்களிலும் ஒரு சூரியனே பிரகாசிக்கிறான். ஆதலால் இது ராமனுக்கு ஒரு பெரிய காரியமன்று.

சரளமான இயற்கையும், பக்திரஸம் தோய்ந்த நன்மதியும் கொண்ட ராமன் முதலில் கைகேயியினுடைய காலில் வீழ்ந்து நமஸ்கரித்துக் கால கர்ம விதிகளின்மீது பழி சுமத்தி அவளை நல்வார்த்தையால் தேற்றுவித்தான்.

பிறகு ராமன் மற்றத் தாய்மார் இருவரையும் கண்டான். "அம்மா! இந்த ஞாலம் முழுதும் கடவுளின் ஆட்சிக்கு உட்பட்டது. ஆதலால் இதில் எவர் மீதும் குற்றம் கூறுவதற்கிடமில்லை" என்று கூறிச் சமாதானஞ் செய்தான்.

அதன் பிறகு ராமன் பரத லட்சுமணருடன் அந்தணர், மந்திரிமார், தாய்மார், மற்றுமுள்ள பிரமுகர்களை உடன் அழைத்துக்கொண்டு வசிஷ்டருடன் தூய ஆச்ரமத்தை நோக்கி நடந்து சென்றான்.

சீதை அனைவருடைய பாதங்களிலும் வணங்கித் தன் மனத்திற்கிஷ்டமான ஆசிமொழிகளைப் பெற்றாள். சுகுமாரியான சீதையைத் தாபச வேஷத்தில் கண்ணுற்றபோது மாமிமார் சோர்வுற்றுக் கண்களை மூடிக் கொண்டனர்.

ஜானகியும் கருங்குவளை போன்ற தன் இரு கண்களிலும் நீர்பெருக, திடசித்தங்கொண்டு மாமிமார் அருகில் சென்று வணங்கிய பொழுது, பூமியெங்கும் கருணாரஸம் நிலவியது.

சீதையும் தசரதனது மனைவியரும் அன்பினால் அதிகமாக மனம் கலங்கியிருப்பதை அறிந்து ஞானியான வசிஷ்டர்

அவர்களனைவரையும் உட்காரச் செய்து, பகவானது மாயையினால் உண்டான உலகத்தின் போக்கை வர்ணித்துப் பாரமார்த்திகமான சில கதைகளை அவர்களுக்குச் சொன்னார்.

பிறகு வசிஷ்டர் ராமனுக்குத் தசரத சக்கரவர்த்தியின் சுவர்க்க யாத்திரையைத் தெரிவித்தார். அதைக் கேட்டு ராமன் பொறுக்க முடியாத துன்பமடைந்தான். தன் மீதுள்ள பிரீதியே மன்னர் மரித்ததற்குக் காரணமென்று தெரிந்து தீரனான ராமனும் மனக்கலக்க முற்றான்.

முனிவர் மீண்டும் தைரியங்கூற, அதன் மேல் ராமன் சபையிலுள்ள பெரியோருடன் கங்கைக்குச் சென்று ஸ்நானஞ் செய்தான். அன்று ராமன் தண்ணீரும் பருகாமல் உபவாசம் செய்தான். முனிவர் வெகுதூரம் சொல்லியும், ராமனுடன் அனைவரும் நிர்ஜல உபவாசமிருந்தனர்.

மறுநாள், சூரியோதயத்தில் வசிஷ்ட முனியின் கட்டளைப்படி பக்தி சிரத்தையுடன் பிதாவுக்குச் செய்ய வேண்டிய கர்மங்கள் அனைத்தையும் ராமன் செய்து முடித்தான்.

மாந்தர் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடிப் பாவம் நீங்கிச் சுசி பெறுவது போலவே, பகவான் ராம சந்திரனும் சான்றோர் விருப்பத்தின்படி நடந்து சுசியுள்ளவனானான். அதாவது, இரண்டு தினம் சென்ற பிறகு, ராமன் ஆசௌசம் நீங்கிச் சுத்தியடைந்தான். பின் அவன் பக்தியுடன் குருவை நோக்கி, "இறைவ! இவர்கள் அனைவரும் இங்கே கிடைக்கும் கனி கிழங்கு வேர்களையுண்டு, நீரைக்

குடித்துக் கஷ்டத்துடன் காலங் கடத்தி வருகின்றனர். பரத சத்ருக்னர், தாய்மார், மந்திரிகள் இவர்களை இந்நிலையில் காண எனக்கு ஒரு நாள் செல்வது ஒரு யுகம் போலிருக்கிறது. நீங்கள் இங்கிருக்கிறீர்கள்; நம் வேந்தரோ சுவர்க்கத்தில் இருக்கிறார்! நீங்கள் தாமதியாமல் எல்லோருடனும் அயோத்திக்குச் செல்ல வேண்டும். நான் ஏதோ சொன்னது அதிகம் தான்: இது தங்கள் முன்னிலையில் அதிகப் பிரசங்கியாக நடந்து கொள்வதாகும். ஸ்வாமீ! எது உசிதமெனத் தோன்றுகிறதோ, அதைச் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்” என்று கூறினன்.

அதற்கு வசிஷ்டர், “ராமா! நீ தர்மத்தின் எல்லை; கருணைக்கு இருப்பிடம்! நீ கூறுவது இவ்வாறின்றி வேறு எங்ஙனம் இருக்க முடியும்? இவர்கள் அனைவரும் இதுவரை விசனத்தில் ஆழ்ந்திருந்தனர். இந்த இரண்டு தினங்களாக உன்னைத் தரிசித்து மன அமைதி அடைந்திருக்கிறார்கள்” என்று விடையளித்தார்.

ஆழ்கடல் மத்தியிலே மரக்கலம் மூழ்கத் தொடங்கியது போல, ராமனுடைய சொற்களைச் செவியுற்று அச்சபையார் அனைவரும் அச்சங் கொண்டனர். ஆனல் மங்களத்திற்கெல்லாம் மேலான முனிவரது நன் மொழியைச் செவியுற்ற போது, காற்று அனுகூலமாய் வீசுவது போலாயிற்று.

அயோத்தி வாசிகள் அனைவரும் ராம பிரானுடைய வாச ஸ்தலமாகிய வனங்களையும் பர்வதங்களையும் சுற்றிப் பார்க்கச் சென்றனர். அங்கே எங்கும் சிறிதும் துன்பமின்றி, இன்பமே நிலவியிருந்தது. அக்கானகத்திற்கு இடையே

யுள்ள அருவிகளின் ஜலம் தெள்ளமிழ்தத்திற்கு ஒப்பாயிருக்க, அவ்விடத்தில் எப்போதும் வீசிய மூன்று குணங்களையுடைய தென்றல் மூன்று விதமான தாபங்களையும் அகற்றுவதா யிருந்தது.

அவ்வனங்களிலே வாழும் கோலர், கிராதர், பீலர் முதலிய காட்டு மனிதர்கள், அமிழ்தத்திற்கு ஒப்பான ருசியுள்ளவையும், சுத்தமுள்ளவையுமான பலவகைக் கனி, கிழங்கு, வேர், இளங்குருத்து, தேன் ஆகிய இவற்றை யெல்லாம் சேகரித்து அழகிய பளபளப்பான இலைத் தொன்னைகளில் நிரப்பிக் கொணர்ந்தனர்.

அவைகளை யெல்லாம் அந்த ஜனங்களிடம் கொடுத்து, அவற்றின் தனியான ருசி, குணம், பெயர், பிரிவு இவற்றை வருணித்து நமஸ்கரித்தனர். ஜனங்கள் அதற்காக அதிக விலை கொடுக்க முயன்ற பொழுது, அக்காட்டு மனிதர்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளாது, 'ராம! ராம!!' எனச் சத்தமிட்டுப் பிரார்த்தித்தனர்.

பிறகு அன்பொழுகும் தேன்மொழிகளால் பின் வருமாறு உரைத்தனர்: "நீங்கள் புண்ணிய சாலிகள். நாங்கள் ஈனவேடுவர்கள். ராமனுடைய அனுக்கிரகத்தினால் எங்களுக்கு உங்கள் தரிசனம் கிடைத்தது. நீங்கள் இஷ்டமான அதிதிகளாக இன்று இவ்வனத்திற்கு வந்திருக்கிறீர்கள். ஆனால் உங்களுக்குத் தொண்டு செய்யும் யோக்கியதை எங்கள் பாக்கியத்தில் இல்லை. பெரியோர்களே! நாங்கள் உங்களுக்கு என்ன கொடுக்க முடியும்? கிராதர்களின் நட்பை விறகு, பச்சிலை அளவிலே தான் காண முடியும்.

"உங்களுடைய பாத்திரம் பண்டங்களையும், வஸ்திரங்களையும் திருடிச் செல்லாமலிருப்பதே நாங்கள் செய்யத்தக்க பெரும் பணியாகும். ஏனெனில், நாங்கள் கேவலம் முரடர்கள்: உயிர்வதை செய்வது, திருடுவது, துரோகஞ் செய்வது ஆகிய இவைகளே எங்களுடைய இயற்கைக் குணங்களாகும். பாவத் தொழில் புரிவதிலேயே எங்களுக்கு இரவும் பகலும் செலவாகின்றன. எமது அரையிலே ஆடையில்லை; வயிறு நிரம்பச் சோறில்லை. கனவிலாவது தர்ம சிந்தனை எங்களுக்கு ஏற்படுவது எங்ஙனம்? எங்களுக்கு இவ்வளவு அறிவு கிடைத்ததும் ராம தரிசனத்தின் மகிமையே யாகும். பிரபுவின் பாத பத்மங்களைத் தரிசித்த நாள் முதல் எங்களுக்கு உற்ற கொடிய தாபம், பாவம் எல்லாம் அற்றுப் போய் விட்டன."

காட்டு மனிதர்களின் அச்சொற்களைக் கேட்டதும் அயோத்தியாவாசிகள், ராமனிடமுள்ள அன்புமேலீட்டால் அம்மனிதர்களின் அதிர்ஷ்டத்தைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். கார் காலத்தின் துவக்கத்திலே மயிலும், தவளையும் சந்தோஷத்தினால் உடல் ஊதிப்போவது போல, அயோத்தி மக்கள் அனைவரும் தினந்தோறும் வனத்தின் நாலு திசைகளிலும் சென்று உலாவி மிகவும் களிப்பெய்தி உடல் பூரிக்கலானார்.

இவ்வாறு நகர மாந்தர் ஆண் பெண் அனைவரும் ராமனது அன்பிலே ஆழ்ந்து களிப்புற்றிருக்க, ஒவ்வொரு நாளும் ஒரு கண்ணிமைப் பொழுதிற்கு ஈடாகக் கழிந்தது. சீதாதேவி அனேக சீதைகளாக மாறி, மாமிமார் அனைவரை

யும் சரிசமமாக உபசரித்துப் பக்தியுடன் தொண்டு செய்து வந்தாள்.

சீதை, ராமலட்சுமணர்கள் இவர்களுடைய சரளமான சுபாவத்தைக் கண்டு, துர்ப்புத்தியுள்ள கைகேயி மிகவும் பச்சாத்தாபம் அடைந்தாள். "என்னை இப்பூமி பாதலத்தில் இழுத்துக் கொள்ளக் கூடாதா? ஏன் பிரமன் எனக்கு மரணத்தை விதிக்கவில்லை?" என்று பிரலாபித்து, யமனையும் பூதேவியையும் வேண்டினாள்.

இவள் நிலை இப்படியிருக்க, பரதனுக்கு இரவு முழுதும் நித்திரையில்லை; பகல் முழுதும் பசியில்லை. சேற்றின் அடியிலே மூழ்கிக் கிடக்கும் மீன் ஜலக்குறைவினால் சங்கடப் படுவது போல், பெருந்துக்கத்தில் ஆழ்ந்து சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான். "பயிர் பக்குவமாயிருக்கையில் அதிவிருஷ்டியுண்டாவது போல, எனது போதாக் காலமே கைகேயியின் வஞ்சகத்தால் இத்தீவினையை உண்டாக்கியது. இப்பொழுது ராம பட்டாபிஷேகம் நிகழ்வது எப்படி? இதற்கான எந்த உபாயமும் எனக்குத் தோன்றவில்லையே!" என்று பரதன் ஆலோசித்தான்.

அவனுக்கு ஒரு யுக்தியும் சரியென்று தோன்றவில்லை. பலவாறு எண்ணி யெண்ணி இரவைக் கழித்தான். விடியற் காலம் எழுந்து நீராடி ராமனிடம் சென்று தலைவணங்கி உட்காரும்போது, வசிஷ்ட முனி அழைக்க அவரிடம் சென்றான். பரதன் குருவின் பாத கமலங்களில் வணங்கி உத்தரவு பெற்று உட்கார்ந்து கொண்டான். அச்சமயம் அந்தணர், மந்திரிமார், இராஜ பரிவாரத்தைச் சேர்ந்த

பிரபுக்கள், மற்றுமுள்ள மகாஜனங்கள் எல்லோரும் அங்கே வந்து ஒன்று கூடினர்.

அப்பொழுது முனிசிரேஷ்டரான வசிஷ்டர் அச் சபையோரை நோக்கிக் காலத்தை அனுசரித்துப் பேசினுர்: "அறிவில் சிறந்த பெரியோரே! பரத! கேளுங்கள்: நமது அரசனுன ராமன் சுதந்திர முள்ளவன்; பகவான்; தர்மத்தின் பாரத்தை வகிப்பவன்; சூரிய குலத்திறகுச் சூரியன்; சத்திய சந்தரை ஆதரிப்பவன்; வேத மரியாதையைக் காப்பவன். ராமனுடைய அவதாரம் இந்த ஜகத்தின் கல்யாணுர்த்தமாக ஏற்பட்டது. நமது ராமன் குரு, தாய், தந்தையின் சொற்படி நடப்பவன். துஷ்டர் படையை அழித்துத் தேவர் நலம் நிலேதிடச் செய்பவன். நீதிநெறி, அன்பு, பிறநலம், சுயநலம் இவற்றை உள்ளபடி தெளிவதில் ராமனுக்கு நிகராக வேறொருவருமில்லே. அப்படிப்பட்டவனுக்கு இராஜ்யாபிஷேகம் செய்வது எல்லோருக்கும் இன்பம் அளிப்பதாகும். நம் எல்லோருடைய சுபத்திற்கும், சந்தோஷத்திற்கும் காரணமாயிருப்பது இது ஒன்று தான். ராமன் அயோத்திக்குத் திரும்புவது எந்த விதம் நிறைவேறும்? நீங்கள் அனைவரும் கூடி யோசித்து ஓர் உபாயம் காட்டினுல், அப்படி நடப்போம்" என்ருர்.

நியாயம் நிரம்பியதாய், இகபரம் இரண்டுக்கும் சாதகமாயுள்ள வசிஷ்ட முனிவரின் வாக்கை அனைவரும் அதிக சிரத்தையுடன் கேட்டனர். ஆனுல் ஒருவரும் பதில் சொல்ல முடியவில்லே. அனைவரும் புத்தி மழுங்கியிருந்தனர். அப்போது பரதன் தலே வணங்கிக் கை கூப்பி, "சூரிய வம்சத்து அரச பரம்பரையிலே ஒருவரைக் காட்டிலும்

ஒருவர் அதிக மாட்சிமை தாங்கிய ராஜாதி ராஜர்களாகவே இது வரை தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருடைய பிறப்பிற்கும் காரணம் தாய் தந்தையராயினும், அவர்களது நல்வினை தீவினைகளுக் கெல்லாம் அவரவர்களின் விதியே காரணமாகும். தங்களுடைய ஆசிர்வாதம் சகல இடுக்கண்களையும் அகற்றிச் சகல நலங்களையும் அளிக்கத் தகுந்தது. இது உலகம் அறிந்த விஷயம். தாங்களே இன்றும் எங்கள் தலைவராக இருக்கிறீர்கள். விதியின் போக்கையும் தடை செய்த தாங்கள் கீறின கீற்றைத் தாண்ட எவனால் ஆகும்? இன்று தாங்கள் என்னை உபாயம் கூறும்படி கேட்கிறீர்கள். எல்லாம் என் துர்ப்பாக்கியமே!" என்று கூறினான்.

அன்பு ஒழுகும் அத்தகைய இன்ப மொழிகளைச் செவியுற்ற குருவின் இதயத்தில் பரதனிடம் பிரீதி பொங்கியது. "ஓ, அன்பனே! ராமனுடைய கிருபையினாலே இம்மொழி உண்மையாகுக. ராமனை வெறுப்பவனுக்குக் கனவிலும் காரியசித்தி கிட்டாது. உன்னிடம் ஒரு விஷயத்தைக் கூறத் தயங்குகிறேன். ஆனால் புத்திசாலியான மனிதன், முழுவதும் தொலைந்து போக இருப்பதைக் கண்டு பாதியை விட்டுக் கொடுத்து விடுகிறான். (இதனால் மறுபாதியையாவது காப்பாற்றக் கூடும் என்பது தாத்பரியம்.) நீங்கள் இரு சகோதரர்களும் கானகம் செல்லுங்கள். சீதையையும் ராம லட்சுமணர்களையும் நாட்டிற்குத் திரும்பும்படி செய்வோம்" என்றார் வசிஷ்டர்.

அவர் மொழிகளைக் கேட்ட இரு சகோதரர்களும் களிப்பெய்த, அவர்களுடைய சரீரங்கள் சந்தோஷத்தினால் பூரித்தன. "முனிவர் சொன்ன சொல், இவ்வுலகில்

பிறந்ததனுல் ஆகிய பெரும் பேற்றையும், இஷ்ட சித்தியையும் அடைவதற்குரிய பெருஞ்சாதனமாகும். என் வாழ்நாள் முழுதும் நான் வனத்திலேயே வசிப்பேன். இதைக் காட்டிலும் அதிக நலம் தருவது எனக்கு வேறு என்ன இருக்கிறது ?'' என்முன் பரதன்.

பரதன் சொல்லைக் கேட்டு ராமனிடம் அவனுக்குள்ள அன்பை அறிந்து, சபையோருடன் கூட முனிவரும் மெய்ம் மறந்து போனுர். பரதனது குணப் பிரபாவமாகிற மகா சமுத்திரக்கரையிலே ஓர் அபலையான ஸ்திரீக்குச் சமமாக நின்று விட்டது முனிவரின் புத்தி !

அவருடைய புத்தி அக்கடலைக் கடந்து செல்ல விரும்பிற்று. அதற்கான உபாயத்தையும் இதயத்தே தேடிற்று. ஆனுல் ஒரு மரக்கலமோ, ஓடமோ, அன்றி ஒரு கட்டு மரமோ, ஏதும் கிடைக்கவில்லை. குளக் கிளிஞ்சல் ஒன்றிலே மகா சமுத்திரம் அடங்குமோ ? அது போல் பரதனுடைய பெரும்புகழை எவரால் உரைப்பது சாத்திய மாகும் ?

முனிவர் தம் மனத்திற்குள்ளே பரதனை மிகவும் கொண்டாடி மெச்சினர். பிறகு சபையோருடன் கூட ராமனிடம் சென்முர். ராமன் நமஸ்கரித்து அவர்களுக் கெல்லாம் அழகிய ஆசனம் அளிக்க, அனைவரும் வசிஷ்டர் உத்தரவு பெற்று அமர்ந்தனர்.

பிறகு வசிஷ்டமுனி தேச காலத்திற்கு ஏற்றவாறு ஆலோசித்து, “ சர்வக்ஞனே ! புத்திமானே ! தர்மம், புத்தி, குணம், ஞானம் இவைகளுக்குப் பொக்கிஷம் போன்றவனே!

ராம! கேளாய்: நீ எல்லாருடைய இருதயங்களிலும் வசிக்கிறாய். அவர்களது மனோபாவங்களின் நன்மை தீமைகளை உணர்வாய்: தம்பி பரதன், தாய்மார், அயோத்தி வாசிகள் அனைவருக்கும் எது நன்மை தருவதாகுமோ, அந்த உபாயத்தைத் தேடிச் சொல்லவேண்டும்'' என்றார்.

ராமன் முனிவர் சொல்லைக் கேட்டு, "இறைவ! உபாயம் தங்கள் கையிலேயே இருக்கிறது. தாங்கள் எவனுக்கு எதை எவ்வாறு செய்யும்படி கூறுகிறீர்களோ, அவன் அப்பணியை எல்லா விதத்திலும் செய்து முடிக்க வல்லவனாகி விடுகிறான்'' என்று சொன்னான்.

அதற்கு முனிவர், "ராம! நீ உரைத்தது உண்மையே. ஆயினும், பரதனது பிரீதியை ஆலோசித்துப் பார்த்தாயில்லை. முதலில் பரதனுடைய பிரார்த்தனையைச் செவி கொடுத்துக் கவனமாய்க் கேள். பிறகு யோசித்துப் பார். சான்றோர் விருப்பத்திற்கும், உலக அபிப்பிராயத்திற்கும் எது ஒத்திருக்குமோ, ராஜநீதிப்படிக்கும் வேத முறைப்படிக்கும் எது ஒழுங்கானதோ, அதையே நீ செய்யவேண்டும்'' என்றார்.

அப்போது ராமன், "பரதன் என் இளைய சகோதரன். அவன் முகத்திற்கு நேரில் அவனைப் புகழ்வது சரியல்லவென்று தயங்குகிறேன். பரதன் உரைப்படி நடந்து கொள்வதிலேயே எல்லோருடைய நன்மையும் அடங்கியிருக்கிறது'' என்று உரைத்து விட்டு மௌனமாயிருந்தான்.

அதன்மேல் அம்முனிவர் பரதனை நோக்கி, "பரத! அருட்கடலாகிய உன் பிரியமான தமையனிடம் உன்

மனத்திலுள்ளவற்றைக் கூச்சமில்லாமல் சொல்லுவாயாக!" என்று ஆஜ்ஞாபித்தார்.

அதைக் கேட்ட பரதன் புளகாங்கிதனாய்ச் சபை நடுவே எழுந்து நின்று தன் கமலக் கண்களில் அன்புநீர் சொரியப் பேசினான்: "நான் சொல்ல வேண்டியது முனிபுங்கவர் முன்னமே உரைத்த விஷயம் தான். அவரை விட அதிகமாக நான் என்ன சொல்ல இருக்கிறது? என் பிரபுவான ராமரது இயற்கையை நன்கு அறிவேன். அவர் தமக்கு அபராதம் இழைத்தவர் மீதும் என்றும் கோபம் கொள்ளாத குணம் படைத்தவர். குழந்தைப் பருவத்தில் நான் அவரை விட்டுப் பிரிந்தவனல்லன். என் மனத்தை அவர் ஒருநாளும் புண் படுத்தியதில்லை. அவருடைய பிரீதியின் தன்மையை அனுபவித்திருக்கிறேன். நான் தோற்கும் ஆட்டத்திலும் எனக்கே ஜயம் உண்டாகும்படி அவர் விட்டுக் கொடுப்பார்.

"மனத்திலுள்ள அன்பினாலும் சங்கோசத்தினாலும், அவர் முன்னிலையில் ஒரு வார்த்தைகூட என்னால் சொல்ல முடியவில்லை. என்னுடைய அன்பு பிரம்மாவுக்குப் பொறுக்க வில்லை போலும். அந்தப் பாழ் விதி, 'தாயார்' என்ற வியாஜத்தினால் எங்களைப் பிரித்து விட்டது!

"நிற்க: புல்லரிசிக் கதிரிலே உயர்ந்த நெல்மணி கிடைப்பதுண்டா? குளத்துச் சங்கிலே நல்முத்துகள் உற்பத்தியாகுமோ? 'தாய் துஷ்டை! நான் குணவான்; நன்னடை யுடையவன்' என்று மனத்தில் நினைப்பதினாலேயே ஒருவனுக்குக் கோடானு கோடித் தீமைகள் உண்டாகின்றன. பிறருடைய குற்றமோ, கஷ்டமோ,

கனவிலும் இதற்குக் காரணமாகாது. ஏனென்றால் எனது துர்ப்பாக்கியமாகிய கடலே அளவற்ற ஆழங்கொண்ட தன்றோ? என் கரும விளைவுகளைத் தெரிந்து கொள்ளாமல் வீணில் தாயாரை நிந்தித்து மனம் நோகச் செய்தேன். இது சான்றோர் நிறைந்த சபை. இங்கே என் குருவும், பிரபுவும் இருக்கிறார்கள். இந்த இடமோ பவித்திர ஸ்தானம். ஆதலால் இவ்விடத்திலே நான் உண்மையே பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் என்னுடைய அன்பு மெய்யன்பா? வேஷமா? தமையனாரான ராமபிரானும் வசிஷ்டருமே அறிவார்கள்.

"சக்கரவர்த்தியின் மரணம் அவரது அன்பை ருசுப்படுத்தி விட்டது. தாய் கைகேயியின் துர்ப்புத்திக்கோ உலகமே சாட்சியாக நிற்கிறது. இப்போது சிந்தையுற்று வருந்தி நிற்கும் தாய்மாரைக் கண் கொண்டு பார்க்க முடியவில்லை. அயோத்தியின் பிரஜைகள் ஆண் பெண் அனைவரும் கொடிய விசனத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். நானே இந்த அனர்த்தங்களுக்கெல்லாம் மூல காரணம் என்று பிறர் சொல்லக் கேட்டும், உணர்ந்தும் இந்த வேதனையைச் சகித்துக் கொண்டிருக்கிறேன். சீதையுடனும், லட்சுமணனுடனும் ராமன் முனி வேஷம் தாங்கிக் காட்டிற்குச் சென்றதைக் கேட்ட அளவில், கால்களில் பாதரட்சையின்றி அப்படியே கால் நடையாக ஓடி வந்தேன்.

"எனக்கு உற்ற மனோவேதனையை எங்ஙனம் சகித்திருந்தேனோ? சங்கரன் தான் சாட்சி! இப்புண்ணுடன் யான் ஜீவித்திருக்கிறேனே! மேலும் நிஷாதனுடைய பக்தியைக் கண்ணுற்றும், என் இதயம் பிளந்து போகவில்லையே! இது வஜ்ராயுதத்தைக் காட்டிலும் கடினமானது. இங்கே

வந்து எல்லாம் கண்ணாரக் கண்டேன். இந்த மூர்க்கன் இவற்றையெல்லாம் சகிக்கும்படி ஆயிற்று. எந்த ராமனை வழியிலே கண்டு பகுத்தறிவற்ற பாம்பும் தேளும் கூடத் தமது விஷத்தைத் துறந்து விலகிப் போகின்றனவோ, அந்த ராமனும் சீதையும் லட்சுமணனும் என் தாய் கைகேயிக்குப் பகைவர்களாகத் தோன்றினார்கள். அவளுடைய புதல்வனை என்னைத் தவிர வேறு யாருக்குக் கடவுள் கொடிய துன்பம் விளைவிப்பார்?" என்றான்.

பரதன் அதிக வருத்தத்துடன் கூறிய பிரீதி, நீதி, வினயம், சோகம் இவை நிரம்பிய மொழிகளைச் செவியுறவே, தாமரைவனத்தில் பனித்துளி விழுந்தாற் போல அச்சபையோர் அனைவரும் ஆழ்ந்த துயரவெள்ளத்திலே மூழ்கினார்கள். பிறகு அறிவில் சிறந்தோராகிய அம்முனிவர் பற்பல புராண கதைகளை எடுத்துச் சொல்லிப் பரதனைச் சமாதானம் செய்தார்.

தினகர குலமாகிற நெய்தற் காட்டிற்கு முழுமதியாம் ரகுராமன், அச்சமயம் யுக்தமான வசனங்களைச் சொல்லலானார்: "அப்பா! பிராணிகளின் கதி ஈச்வரன் கையிலிருக்கிறதென்று மனத்தில் தேர்ந்து, தன்னையே நோவதைத் தவிர்ப்பாய்! முக்காலங்களிலும், மூவுலகங்களிலும் உள்ள புகழத்தக்க புண்ணியவான்கள் அனைவரும் உனக்குக் கீழ்ப்பட்டவர்களே என்பது என் சொந்த அபிப்பிராயம். பரத! ஒருவன் தன் மனத்தில் உன்னைக் குறித்து ஏதேனும் ஒரு தீய எண்ணம் கொள்வானாயின், அக்கணமே அவனுடைய இகபரம் இரண்டும் நாசம் அடைந்து விடும். ஸத்குருவையும், சான்றோர் சபையையும் அண்டிச் சேவை செய்யாத மூடர்

களை பெற்ற தாயின்மீது பழி பாவம் சுமத்துவார்கள். தம்பீ! பரத! சுபாவமாக நான் சிவன் சாட்சியாக உண்மையைச் சொல்லுகிறேன். இப்பூதலம் உன் உதவியினால் தான் நிலைத்திருக்கும். தம்பீ! நீ யாதொரு குதர்க்கமும் மனத்தில் கொள்ளாதே. பகைமையும் பிரீதியும் மறைத்திடினும் மறைந்து போகா.

"மிருகங்களையும் பட்சிகளையும் பார். முனிவர் அருகில் தயங்காமல் வருகின்றன. வதை செய்யும் வேடுவர்களைக் கண்டாலோ, பயந்தோடி விடுகின்றன. பசு பட்சிகளுங்கூட இவ்வாறு சத்துரு, மித்திரர்களைக் கண்டுகொள்ளும்போது, அறிவிற்கும் நற்குணத்திற்கும் களஞ்சியமாயிருக்கும் மானிட உடல் தாங்கியவரைப் பற்றிக் கேட்பானேன்? பரத! உன்னை நான் நன்கு அறிவேன். ஆனால் தர்ம சங்கடமாயிருக்கிறது! என்ன செய்வது? மன்னர் என்னைத் துறந்து தம் சொல்லைக் காப்பாற்றினார். பிறகு தம் உடலையே துறந்து என்மேலுள்ள பிரீதியை நிரூபித்தார். அவர் சொல் அழிந்துபோவதென்றால், எனக்கு அதிக வருத்தமாயிருக்கும்.

"ஆனாலும் அதைக் காட்டிலும் கூசுகிறேன் உன் விஷயத்திலே. மேலும் குருவும் என்னை உன் சொற்படி நடக்கும்படி ஆஜ்ஞாபித்திருக்கிறார். ஆகையால் நீ என்ன சொல்வாயோ, அதன்படி நான் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று கூறி முடித்தான்.

சத்திய சந்தனாகிய ராமசந்திரனது இம்மொழியைச் செவியுற்ற சபையோர் அனைவரும் மனமகிழ்ச்சியடைந்தனர்.

'ராமர் தம் பிரதிஜ்ஞையைத் துறந்தாவது என் விருப்பத்தை நிறைவேற்ற விரும்புகிறார். இதனால் என் மீது இவர் காட்டும் கிருபையும் அன்பும் கொஞ்சமல்ல. இவர் கட்டளைப்படி ஒழுகுவதே நன்மை விளைவிப்பதாகும்,' என்று மனத்தில் நிர ஆலோசித்துப் பரதன் தாமரைக்கு ஒப்பான கரங்களைக் குவித்து, ராமனுக்குத் தலை வணங்கி நின்று சொல்லத் தொடங்கினான் :

"குருவும் பிரபுவும் என்மீது வைத்துள்ள முழுப் பிரீதியைக் காண என் சித்தம் தெளிந்துவிட்டது. உள்ளத்தில் ஐயம் சிறிதுமில்லை. கருணாகர! பிரபுவான உன் சித்தத்திற்குச் சிறிதும் விரோதமின்றி, இந்தத் தாசனுக்கு நன்மை புரியவேண்டும். எஜமானனுக்கு இடையூறு விளைவித்துத் தான் நலமுற விரும்பும் சேவகன் அற்ப புத்தி படைத்தவன். சுயநலம், சுகம், எல்லாவற்றையும் துறந்து பிரபுவுக்குப் பணி செய்வதே சேவகன் நலமுறும் மார்க்கம்.

"ஐயனே! தாங்கள் அயோத்திக்குத் திரும்புவதனால் எங்கள் அனைவருக்கும் சுயநலம் சித்தி பெறுவதாகிறது. தங்கள் கட்டளையைப் பரிபாலிப்பது கோடி விதத்திலும் மேலானது. சமஸ்த புண்ணியத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் சோபை தருவது இதுவாகும். சுயநலம், பிறநலம் இவை இரண்டுக்கும் உள்ள ஸாரமான பேதம் இதுவே. இறைவ! எனது வேண்டுகோளும் ஒன்றுண்டு. அதைச் செவியுற்ற பின், எது உசிதமாய்த் தோன்றுகிறதோ அதைச் செய்யவும். முடிசூடுவதற்கான சாமக்கிரிகள் யாவும் சித்த

மாய் இங்கே கொணர்ந்திருக்கிறோம். பிரபுவுக்குத் திருவுள்ளம் பற்றினால் அவை யாவும் பயனுறச் செய்தல் வேண்டும்.

"சுவாமி! என்னை இளைய சகோதரன் சத்ருக்னனுடன் காட்டிற்குப் போகவிட்டு, பிரஜைகள் அனைவரையும் நாதனுள்ளவராகச் செய்யவேண்டும். இல்லாவிட்டால், லட்சுமண சத்ருக்னர்கள் ஆகிய இரு சகோதரர்களையும் சேர்த்து அயோத்திக்கு அனுப்பி வையுங்கள். நான் தங்களுடன் வனத்திற்கு வருகிறேன். அண்ணா! தாங்கள் என்மீது எல்லாப் பாரத்தையுஞ் சுமத்தி விட்டீர்கள். நீதியையும் கடமையையும் உணர்ந்து ஒழுகும் சக்தி என்னிடம் இல்லை. நான் கூறிய சொற்களெல்லாம் சுயநலம் பாராட்டிச் சொன்னவை. ஏனெனில் துயரமுற்றோர் மனத்திலே ஞானம் நிலைப்பதில்லையல்லவா? தயங்காமல் எவனெவனுக்கு எவ்விதக் கட்டளையிட்டாலும், அதை அனைவரும் தலைமீது தாங்கி அவ்வாறே செய்துமுடிக்கக் காத்திருக்கின்றனர். எல்லோருடைய சம்சயங்களும் தீர்ந்துவிடும்" என்று கூறிமுடித்தான் பரதன்.

பரதனுடைய களங்கமற்ற சொல்லைச் செவியுற்று வானோர் களிப்படைந்து, 'நன்று! நன்று!!' என்று கூறிப் புஷ்பமாரி பொழிந்தனர். அயோத்தியா வாசிகள் அனைவரும் இன்னது செய்வதென்று தோன்றாத நிலையில் இருந்தனர். தவசிகளும் வனவாசிகளும் மனத்தில் பெருமகிழ்ச்சியுற்றனர்.

பிரபு ரகுராமனோ யோசனையுற்றுத் தயங்கிச் சும்மா இருந்தான். ராமனது அந்நிலையைக் கண்ணுற்ற சபை

யோர் வருத்தமுற்ருர். அதே சமயம் மிதிலை மன்னரின் தூதர் வந்திருப்பதாகச் செய்தி கிட்ட, முனி வசிஷ்டர் தூதனை விரைவில் அழைத்து வரும்படி உத்தரவிட்டார். தூதர்களும் வந்து ராமனைக் கண்டு நமஸ்கரித்தார்கள். அவர்கள் ராமன் வேஷத்தைப் பார்த்து வருந்தினர். 'ஜனக மஹாராஜனின் குசல சமாசாரம் தெரிவிக்கக் கடவீர்' என்று வசிஷ்டர் வினவ, ஒற்றர்கள் தலை வணங்கிக் கைகூப்பிச் சொன்னதாவது:—

"சுவாமீ! தாங்கள் இவ்வாறு ஆதரவுடன் குசலப் பிரச்னம் செய்வதே எங்கள் க்ஷேமத்திற்கு ஏதுவாகிறது. இல்லாவிட்டால், எல்லா க்ஷேமங்களும் அன்றே கோசலாதிபதி தசரதருடன் சென்று விட்டதுபோல்தான். ஏன்? இவ்வையக முழுதுமே, முக்கியமாய் மிதிலையும் அயோத்தியும் அவரின்றி அநாதையாகி விட்டன. கோசலாதிபதிக்கு உற்ற துர்க்கதியைச் செவியுற்று ஜனக புரவாசிகள் துக்கத்திஞல் பித்தர்களாயினர். அச்சமயம் ஜனகரைக் கண்ணுற்ற ஒருவருக்காவது 'விதேஹன்' என்ற பெயர் அவருக்குத் தகுந்ததன்று என்று தோன்ற வில்லை. (விதேஹன் - தேகமில்லாதவன்.)

"ராணியின் சூழ்ச்சியைச் செவியுற்று இரத்தினமிழந்த நாகம் போலாஞர் எங்கள் மன்னர். என்ன செய்வதென்று விளங்கவில்லை. பரதனுக்கு இராஜ்யமும் ராமனுக்கு வன வாசமும் கிட்டியதைக் கேள்வியுற்று மிதிலை மன்னரின் மனத்தில் பெருந்துயர் மூண்டது. எங்கள் மகாராஜா அறிவில் சிறந்த பெரியோரையும் அமைச்சர்களையும் தரு வித்து ஒன்று கூட்டி, 'அயோத்திக்கு நேர்ந்திருக்கும் துர்க்

தசையை உணர்ந்து, அங்கு நாம் செல்வதா? அல்லது சும்மா இருந்து விடுவதா?' என்று வினவினர். (யுத்த சன்னத்தனய்—என்பது தாத்பரியம்) ஆயினும் இரண்டு வழிகளிலும் பெருந் தர்ம சங்கட மிருப்பதை உணர்ந்து ஒருவரும் அதற்குப் பதில் கூறவில்லை.

"அதன்மேல் எங்கள் வேந்தர் தைரியத்துடன் சமர்த்தர்களான நான்கு ஒற்றர்களைத் தருவித்து, "நீங்கள் அயோத்திக்குச் சென்று ராமன் விஷயத்தில் பரதனது எண்ணம் எப்படி யிருக்கிறது? நல்லதா? தீமை புரிவதா?—என்பதை விசாரித்தறிந்து ஒருவர் கண்ணுக்கும் புலனாகாமல் விரைவில் திரும்பவேண்டும்" என்று ஏவினர். மன்னர் கட்டளைப்படியே ஒற்றர்களும் அயோத்தியடைந்து, அங்கே பரதன் இருக்கும் ரீதியைச் செயல்களால் கண்டறிந்து, அவன் சித்திரகூடத்தை நோக்கிப் புறப்பட்டதும் மிதிலைக்குத் திரும்பினர்கள்.

"ஜனகர் சபையில் ஒற்றர் வந்து பரதனின் காரியக் கிரமத்தை விவரித்துக்கூற, அதைச் செவியுற்று அரசர், மந்திரி, குரு, புரோகிதர், பிரஜைகள் யாவரும் பரதன் மேலுள்ள அன்பினல் அதிகமாய்த் துயரமுற்றார்கள். பிறகு ஜனக மஹாராஜா சிறிது தைரியமுற்றுப் பரதனை வெகுவாகக் கொண்டாடிப் புகழ்ந்து, திறமை வாய்ந்த சேனைத் தலைவர்களையும் போர் வீரர்களையும் தருவித்தார். நாடு, நகரம், மாளிகை இவற்றின் பாதுகாப்பிற்காக ரட்சகர்களை நியமித்துத் தேர், யானை, குதிரை முதலிய பல வாகனங்களைச் சித்தஞ் செய்ய ஏவினர். இவ்வாறு எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து

அப்பொழுதே ஒரு முகூர்த்தத்திற்குள்ளாகவே ஜனகர் (சித்திரகூடம் நோக்கிப்) புறப்பட்டார்.'

" அரசர் மார்க்கங்களிலெங்கும் தங்கிச் சிரம பரிகாரம் செய்துகொண்டாரில்லை. இன்று அதிகாலையில் பிரயாகையை அடைந்து, அங்கே புனிதப் புனலாடி யமுனையில் இறங்குவதற்காகப் புறப்பட்ட பொழுது எமது அரசர், சுவாமீ! உங்கள் செய்தியை அறிந்துகொண்டு வருவதற்காக எங்களை இங்கு அனுப்பி வைத்தார் " என்று கூறி அத்தூதர் தலை வணங்கினர்.

அப்பொழுது முனி சிரேஷ்டர், ஆறேழு வேடர்களை உடன் கூட்டியனுப்பித் தூதர்களுக்குத் துரிதமாக விடை கொடுத்தனுப்பினர். ஜனக மகாராஜனின் வருகையைச் செவியுற்று அவதபுரி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுற்றனர். ராமனுக்குப் பெருஞ்சிந்தை உண்டாயிற்று. 'என்ன ஆகுமோ ?' என்று இந்திரன் கவலைப்பட்டான். (இராவண வதம் நின்று விடுமோ ?—என்று.)

இந்த ரீதியில் அன்று பொழுதுபோயிற்று. மறுநாள் அனைவரும் ஸ்நானஞ் செய்துவிட்டு, கணேசக் கடவுள், உமா மகேச்வரர், சூரிய பகவான் ஆகிய கடவுளருக்குப் பூஜை செய்யத் தொடங்கினர். அத்தருணம் மிதிலை மன்னன் வந்து விட்டதைச் செவியுற்று, மக்கள் அனைவரும் பிரீதியாகிற கடலில் ஆழ்ந்து விட்டனர். சூரிய குலமாகிற தாமரைக் காட்டிற்குச் சூரியன் போன்ற ராமன் சபையினருடன் கூட மிக்க பரபரப்புடன் எழுந்து நின்றான். பிறகு தம்பிமார், அமைச்சர், குரு, பிரஜைகள் யாவரையும்

உடன் அழைத்துக்கொண்டு ராமன் மிதிலை மன்னனை எதிர் கொள்ளச் சென்றான்.

நிற்க: மலைகளில் சிறந்த சித்திரகூட பர்வதத்தைக் கண்ணுற்றதும் ஜனகன் இரதம் விட்டிறங்கிக் காலால் நடந்து செல்லத் தொடங்கினான். ராம தரிசனத்திலுள்ள பேரவாவினால் எவருக்கும் வழியில் சிரமமோ, கிலேசமோ லவலேசமும் கிடையாது. அவர்கள் உள்ளம் ராமனும் சீதையும் எங்கிருந்தனரோ அங்கே சென்றிருந்ததாகையால், மனம் இல்லாமல் சுகதுக்கங்களின் உணர்ச்சி எவனுக்கு எவ்விதம் ஏற்படக்கூடும் ?

ஜனகன் தன் பரிவாரங்களுடன் வந்துகொண்டிருக்க, அவன் சீதாராமன் மேலுள்ள பிரீதியினால் அறிவிழந்து பிரமை பிடித்தவன் போலக் காணப்பட்டான். பிறகு ராமனும் மிதிலை மன்னனும் ஒருவரை யொருவர் அணுகக் கண்டு, இருதிறத்தினரும் புளகாங்கிதராய் ஆதரவுடன் சந்தித்து அளவளாவினர்.

ஜனக மகாராஜன் வசிஷ்டர் முதலிய முனிவர்களது பாதங்களில் வணங்க, ராமன் விசுவாமித்திரர் முதலிய முனிவர்களுக்கு அடி பணிந்தான். ராமன் தம்பிமாருடன் ஜனகனைக் களிப்புடன் வரவேற்றுப் பரிவாரம் புடைசூழ (ஆச்ரமத்திற்கு) அழைத்துச் சென்றான்.

அப்போது இரண்டு ராஜ சமூகத்தினரும் மானம், ஞானம், மனோதிடம் யாவும் துறந்து சோக சாகரத்தில் ஆழ்ந்தவர்களாய்த் தசரதனின் குணசீல ஔதாரியங்களைப்

புகழ்ந்து கூறி வாய்விட்டுப் பிரலாபிக்கலானார்கள். அதைக் கண்டு முனிசிரேஷ்டர் அங்குமிங்கும் ஓடி மக்களுக்குக் கணக்கற்ற உபதேசம் செய்து தேற்றினர். அவர் ஜனகனைப் பார்த்து, "தாங்களும் தைரியத்தைக் கை விடுவது தகுமோ?" என்றார். இவ்வாறு அம்மக்கள் ஸ்திரீ புருஷர் உட்பட அனைவரும் அதிக வருத்தமுற்று அன்ன ஆகாரம், ஜல பானங்கூட இல்லாமல் அன்று பொழுதைக் கழித்தார்கள். அன்றைத்தினம் பசு, பட்சி, மிருகங்கள்கூட இரை எடுக்காமலிருந்தனவென்றால், அன்பார்ந்த பந்து ஜனங்களின் உள்ளம் எவ்வாறு இருந்திருக்க வேண்டும்?

மறுநாள் பொழுது புலர்ந்து சூரியன் தோன்றவும், ராமன், ஜனகன் இருவருடைய பரிவாரங்களும் பயஸ்வினீ நதியிலே நீராடி, வட விருட்சத்தினடியிலே வந்து கூடினர். அவர்கள் அனைவரும் உடல் வாடி மனம் சோர்ந்திருந்தனர். அன்றைத்தினம் ராமனுடைய அனுக்கிரகத்தினாலே, சித்திர கூட பர்வதமும் அதன் சுற்று வட்டங்களும் விரும்பின வர்களின் விருப்பங்களை நிறைவேற்ற வல்லனவாய்க் கண்ட மாத்திரத்திலே மக்களது துக்கத்தை அகற்றுவனவாய் விளங்கின. அதைச் சூழ்ந்த நதி, தடாகம், பூமி முதலிய பிரதேசங்கள் ஆனந்தத்தைப் பெருக்கியோடச் செய்வன போல் இருந்தன. ராமனுடைய குலகுருவான வசிஷ்டர் கனிவர்க்கங்கள் நிரம்பிய கூடைகளை மிகவும் ஆதரவுடன் அனுப்பிவைக்க, மக்கள் அனைவரும் தேவ பிதுர்பூஜை செய்து அதிதி குரு இவர்களை முதலில் சன்மானித்துப் பின் *பல ஆகாரம் செய்யலானார்.

---

* பல ஆகாரம் — பழங்களோடு கூடிய ஆகாரம்.

இவ்வாறு பின்னும் நான்கு தினங்கள் சென்றன. பிரஜைகள் ஆண் பெண் அனைவரும் ராமனைத் தரிசித்துக் கொண்டே களிப்புடன் காலங்கழித்தனர். இவ்விரண்டு ராஜ சமூகங்களின் மனத்திலும் 'சீதாராமர்களின்றி வீடு திரும்புவது நல்லதன்று' என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது.

"சீதா ராமர்களுடன் சேர்ந்து வனவாசம் செய்வது, கோடி அமராவதிக்கு ஒப்பான இன்பம் பயப்பதாகும். ராம லட்சுமணர்களையும், சீதையையும் துறந்து எவன் ஒருவனுக்குத் தன் வீட்டின் மீது விருப்பம் ஏற்படுகிறதோ, அவன் விதியே விபரீதமானது! சகல விதத்திலும் தெய்வம் அனுகூலமுடையதாக இருக்கும் தருணத்திலே தான் கானகத்தில் ராமன் அருகில் வாசம் செய்வதாகிற—எளிதில் கிடைக்கப் பெறாத—பாக்கியத்தைப் பெறலாகும்" என்று ஒருவர் சொல்ல, மற்றொருவர், "ஆனால் நமக்கு இத்தகைய பாக்கியம் ஏது?" என்றார். இவ்வாறு மக்கள் பரஸ்பரம் பேசிக் காலங் கழித்தனர். இந்த இரண்டு ராஜ சமூகங்களினிடையிலும் ராமன் திருப்பாதங்களில் சகஜமான பிரீதி நிலவியிருந்ததே இதற்குக் காரணம்.

ஜனகரின் அந்தப்புர ஸ்திரீகள், சீதையின் மாமிமார்களுக்குத் தங்களைக் காண அவகாசமிருப்பதை விசாரித்தறிந்து அவர்களைக் காணச் சென்றனர். கௌசல்யா தேவி சமயத்திற்கு ஏற்றபடி அவர்கள் எல்லோரையும் ஆதரவுடன் வரவேற்று ஆசனம் அளித்து உபசரித்தாள். அங்குள்ள தேவிமார் அனைவரும், 'சீதாராமர் மீதுள்ள பிரீதியின் மூர்த்திகளோ? அன்றி, கருணாரஸம் பல வேஷம் தாங்கிச்

சிந்தையுடன் வீற்றிருக்கின்றதோ?" என்று எண்ணும்படி காணப்பட்டனர்.

அப்போது சீதையின் தாய் சுநயனை கௌசலையை நோக்கி, "பிரம்மாவின் மதி கெட்டு விட்டது. அவர், பால் நுரையினால் வச்சிர உளியை உடைத்துக் கொண்டிருக்கிறார்! விதியின் வினை பயங்கரமானது. அமிர்தத்தைக் காதால் மட்டுமே கேட்கிறோம்; கண்ணால் பார்ப்பதோ ஆலகால விஷம்!" என்று சொன்னாள். அதைச் செவியுற்ற சுமித்திரா தேவி வருத்தம் எழ, "ஆம், விதியின் போக்கு விசித்திரம் வாய்ந்தது; விபரீதம் விளைவிப்பது! உலகத்தைச் சிருஷ்டித்தல், காத்தல், அழித்தல் இவைகளெல்லாம் குழந்தையின் விளையாட்டுப் புத்தி போலிருக்கின்றன!" என்றாள். அதற்குக் கௌசலை, "எவரது குற்றமும் காரணமாகாது. அவரவர் ஊழ்வினைக்கேற்றவாறு சுகம், துன்பம், லாபம், நஷ்டம் இவை ஏற்படுகின்றன. பிரம்மா, மானிடரது கர்மவினைகளின் மர்மத்தை உணர்ந்தவராதலின், நன்மை தீமைகளின் பயனை நமக்களிக்கிறார்" என்றாள்.

சுநயனை கௌசலையின் அன்பு நிறைந்த சுபாவத்தை உணர்ந்து கொண்டாள். அந்தப் பணிவான மொழிகளைக் கேட்டு மெச்சி, அவளுடைய தூய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தாள். "இவ்வினயம் உமக்கு ஏற்றதே. ஏனென்றால் நீர் அந்தத் தசரதர் பட்ட மகிஷியன்றோ? மேலும் ராமனுடைய அன்னையுமாக இருக்கிறீர். நெருப்பு புகையையும், பர்வதம் புல்லையும் தம் முடிமீது வகிப்பது போலப் பிரபு ராமன் தமக்கு மிகவும் கீழ்ப்பட்ட மக்களையும் ஆதரிக்கின்றார். அம்மணீ! எங்கள் அரசன், மனம் மெய்

மொழி மூன்றிலும் உங்களுடைய சேவகன். மேலும் உங்களுக்கு உதவி புரியப் பார்வதியும் பரமேச்வரரும் இருக்கிறார்கள். அரசியே! உங்களுக்கு இணையாக இருக்கும் யோக்கியதையுடைவர் எவர் இருக்கிறார்? தீபத்தின் உதவியைக் கொண்டு சூரியன் பிரகாசிக்குமோ? ராமர் வனஞ் சென்று தேவர் காரியத்தைச் செய்து முடித்த பின் அயோத்தியை அடைந்து இடையூறின்றி இராஜ்ய பரிபாலனஞ் செய்வர்'' என்று சுநயனை அன்புடன் கூறினாள். கூறி, மீண்டும் கௌசலையின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.

பிறகு கௌசலையின் அனுமதி பெற்றுச் சீதையை அழைத்துக் கொண்டு தன் விடுதிக்குச் சென்றாள். வைதேகி பந்து ஜனங்களைச் சந்தித்து அளவளாவியிருந்தாள். ஜானகியின் தவ வேஷத்தைக் கண்டு அனைவரும் மிகவும் சிந்தை கலங்கினார்கள். ஜனகமகாராஜனும் ராமனது குருவாகிய வசிஷ்ட மகரிஷியின் அனுமதி பெற்றுத் தன்னுடைய கூடாரத்திற்குச் சென்று அங்கே சீதையைக் கண்டான். அவளை அவன் வெகு ஆர்வத்துடன் வரவேற்று அணைத்துக் கொண்டான்.

சீதை தன் தாய் தந்தையர் காட்டிய அன்பிற்கு ஆட்பட்டு, தன்னையும் மீறி அடக்க முடியாத துயரம் கொண்டாள். ஆனாலும் பூமியின் மகளாகையினாலே சந்தர்ப்பத்தையும் தன் கடமையையும் உணர்ந்தவளாய் மனோதிடங் கொண்டாள். தவ வேஷத்தில் சீதையைக் காண ஜனகனுக்கு அன்பும் சந்தோஷமும் அதிகமாக உதித்தன. "என் அரும் புதல்வீ! உன்னால் (பிறந்த இடம்

புகுந்த இடம்) இரண்டு குலங்களும் தூய்மை பெற்றன. உன்னுடைய கீர்த்தியினுல் இவ்வுலகம் முழுதும் ஒளி பெற்றிருப்பதாக யாவரும் சொல்லிக் கொள்ளுகிருர்கள்" என்ருன். இவ்வாறு தந்தை, மகள் மீதுள்ள வாஞ்சையினுலே உண்மையானதும், மங்களகரமானதுமான சொற்களால் சீதையைப் பலவாறு புகழ்ந்து பேச, அவள் கூச்சமடைந்து உடல் குன்றி நின்ருள். சீதையின் பெற்ருேர் மீண்டும் அவளைக் கட்டியணைத்துப் பல மொழிகளைக் கூறி ஆசி கூறினுர்கள்.

அப்போது சீதை கணவனைப் பிரிந்து இரவில் தங்குவது நன்றல்லவென மனத்துள் எண்ணினுளாயினும், வாயினுல் அதைச் சொல்ல நாணமுற்ருள். ஆனுல் ஜனகனது ராணி, முகக்குறிப்பைக் கொண்டு சீதையின் மனேபாவத்தை உணர்ந்து அதை அரசனுக்கு அறிவிக்க, இருவரும் சீதையின் உத்தம குணத்தை மனத்துள் நினைத்து மிகப் புகழ்ந்தனர். பிறகு அவர்கள் இருவரும், மேலும் மேலும் சீதையைப் பார்த்து அன்புடன் உபசரித்துக் கொண்டாடி, அவளுக்குப் போக விடை கொடுத்தனுப்பினர்.

அப்பால் புத்திசாலியான சுநயனை தருணம் பார்த்துப் பரதனுடைய சீலத்தை அழகாக விவரித்துக் கூறினுள். நறுமணம் பொருந்திய பொன் மலர் போலவும், அமுதம் பொழியும் நிலவுபோலவும் இருக்கும் பரதனின் சிறந்த சீலத்தைச் செவியுற்று ஜனக மஹாராஜன் புளகாங்கிதனுய்க் கண்களில் நீர் ததும்ப ஆனந்தத்தினுல் கண்களை மூடிக் கொண்டு உள்ளங்களிக்கப் பரதனைப் புகழலானுன்.

இவ்விதம் அரசனும் அரசியும் மிக்க அன்புடன், ராமன் பரதன் இவர்கள் குணங்களைப் புகழ்ந்து பேசிக்கொண்டேயிருக்க, வினாடியில் இரவும் கடந்து சென்றது.

மறுநாள் வைகறையில் விழித்தெழுந்து அவ்விரண்டு ராஜ பரிவாரம் ஸ்நானஞ்செய்து, தெய்வ பூஜை செய்யத் தொடங்கின. ராமனும் ஸ்நானம் செய்து விட்டுக் குருவை அணுகி அவர் பாதங்களில் வணங்கிய பின் தருணம் பார்த்து, "இறைவ! பரதன், நகர வாசிகள், அன்னையர் அனைவரும் வனவாசத்திலுள்ள சிரமத்தினால் துன்புற்று வருந்துகின்றனர். பல தினங்களாக மிதிலை மன்னரும் தன் பரிவாரங்களுடன் இக்கஷ்டங்களைச் சகித்து வருகின்றார். ஆதலால் ஸ்வாமீ! உசிதப்படி செய்யத் தக்கதைச் செய்யவேணும். எங்கள் யாவருடைய க்ஷேமமும் உங்கள் கையிலேதான் உள்ளது" என்று கூறி, அதிகம் பேசிவிட்டோமேயென்று வெட்கமுற்றான்.

முனிவர் அவனுடைய உயர்ந்த சுபாவத்தையும் சீலத்தையும் உணர்ந்து புளகாங்கிதராய், "அப்பா! ராம! நீ இல்லாமல் சகல சுப ஆடம்பரங்களும் இவ்விரண்டு ராஜ சமூகத்திற்கும் நரகத்திற்கு ஒப்பாகவேயிருக்கும். ராம! நீ அவர்களது ஆத்மாவுக்குப் பரமாத்மாவாய், உயிருக்குயிராய் சுகத்திற்குச் சுகமாய் இருக்கிறாய்! உன்னைப் பிரிந்த பின் ஒருவனுக்குத் தன் இல்லம் பிரியமாகத் தோன்றுமாயின், அவனுடைய கர்மகதி விபரீதமானது என்றே சொல்லவேண்டும்" என்று கூறினார்.

பிறகு குரு சிரேஷ்டர் ஜனகனிடம் சென்று, அழகிய சீலம், சுபாவம், நேசம் இவைகளை விளக்கும் ராமனது இன்

மொழிகளைக்கூறி, "வேந்தே! தர்மம் தவறாது யாவருக்கும் நன்மை பயப்பது எதுவோ, அதை இப்போது தாங்கள் செய்விக்க வேணும். வேந்தே! நீரோ புத்திமான்; சுசியுள்ளவர்; தர்மவீரர்; ஞானக் களஞ்சியம். இச்சமயம் சந்தேகத்தைத் தீர்க்கவல்லவர் உம்மையன்றி வேறு யார் உளர்?" என்று கூறினார்.

முனிவர் சொல்லைக் கேட்ட ஜனகரின் மனத்தில் ராமன் மீது அதிக அன்புண்டாயிற்று. அவர் மனங் கலங்கி உடல் தளர்ந்து, "நாம் இங்கு வந்தது சரியல்ல. தசரத சக்கரவர்த்தி ராமனை வனத்திற்குப் போகச் சொன்னார்; ஆயினும் தமது அந்தரங்கமான அன்பை மெய்ப்பித்தார்: நாம் அனைவருமோ ராமனை ஒரு காட்டிலிருந்து மற்றொரு காட்டிற்கு அனுப்பி விட்டுக் களிப்புடன் வீடு திரும்புவோம். இதுதான் நமது புத்திசாலித்தனத்தின் பெருமை!" என்று சொன்னார். அங்கேயிருந்த தவ சிரேஷ்டர்களும், முனிவர்களும், அந்தணர்களும் அவை யாவையும் கேட்டும், பார்த்தும் இருந்தனராதலால், அன்பின் காரணத்தால் மிகவும் மனங்கலங்கினர்.

பிறகு ஜனக மகாராஜன் சந்தர்ப்பம் அறிந்து மனத்தைத் திடமுறச் செய்து சபையோருடன் பரதன் இருக்குமிடம் சென்றான். பரதன் அவன் வருகையைக் கண்டு எதிர் கொண்டழைத்துக் காலத்திற்கு ஏற்றவாறு தக்க ஆசனம் அளித்து உபசரிக்க, ஜனகன், "பரத! நீ ராமனது இயற்கையை அறிந்தவன்; ராமன் உண்மை பேசுவதையே விரதமாகக் கொண்டவன்; தர்மத்தில் பற்றுள்ளவன்; அவன் நம் அனைவரது நேசத்தையும்,

சீலத்தையும் கண்டு என்ன செய்வதென்றறியாமல் தயங்கி யாவற்றையும் பொறுத்துக் கொண்டிருக்கிறான். ஆதலால் இப்பொழுது நாம் செய்யத் தக்கது யாதோ, அதைக் கட்டளையிடுவாயாக" என்றார்.

ஜனகருக்குத் தன்மீதுள்ள அன்பையும் மதிப்பையும் உணர்ந்ததும் பரதன் மயிர்க்கூச்சுற்றான். கண்களில் நீர்பெருக, மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, "ராமன் என் அன்பார்ந்த பிரபு. தாம் எனக்குப் பிதாவைப்போல் பூஜிக்கத் தக்கவர். குலகுரு வசிஷ்டரைப் போலப் பெற்ற தாய்தந்தையரும் எங்கள் நலத்தை நாடுகிறவர் ஆகமாட்டார்! மேலும் விசுவாமித்திரர் முதலிய முனிவர்களும், அமைச்சர்களும், ஞானக்கடலாகிய தாமும், இங்கே கூடியிருக்கிறீர்கள். ஆதலால், எமது தலைவர் பெருமானே! என்னை ஒரு சிறுவனாகவும், தமது கட்டளையைத் தட்டாது நடத்தும் பணியாளனாகவும் அறிந்து கட்டளையிடுக.

இந்த ஊமை, பாபிஷ்டன், பித்தன், என்ன செய்யக்கூடும்? சிறு வாயினால் பேருரை செய்கிறேன். விதியின் கதி விபரீதமாயிருத்தலை உணர்ந்து இதைப் பொறுத்தருள்க. தமையனாகிய ராமன்மீது எனக்குள்ள அன்பையும், நான் அவருக்கு ஆட்பட்டவன் என்பதையும் உணர்ந்து, ராமனுடைய விருப்பம், தர்மம், விரதம் இவற்றிற்குப் பங்கமில்லாமல் எல்லோருடைய நன்மை, சம்மதம் இவைகளுக்கு ஏற்றவாறு செய்யுங்கள்" என்றான்.

பரதன் இயற்கையை அவன் மொழியால் உணர்ந்து சபையினருடன் கூட ஜனகன் அவனைப் போற்றலானான்.

எளிய நடை, ஆழ்ந்த கருத்து; கேட்பது மென்மொழி, செய்வது கஷ்ட சாத்தியம்; சொற்கள் சில, அர்த்தமோ பல— என்னே, பரதன் சொன்ன சொற்கள்! முகம் கண்ணுடியிலும், அக்கண்ணுடி தன் கையிலும் இருந்தாலும், முகம் கையில் அகப்படாது. அதுபோல் பரதன் பேச்சு வியக்கத் தக்கதாயிருந்தது. பிறகு ஜனக மகாராஜன், பரதன் முதலியோர், முனிவர்களும் பெரியோர்களும் தம்மைப் புடைசூழ்ந்து வர, தேவர்களாகிற ஆம்பல் மலர்களுக்குச் சந்திரனுகிய ராமன் இருக்குமிடம் சென்றனர்.

அப்போது ரகுகுலத்துப் புரோகிதரான வசிஷ்டர் இடம், காலம் கடமைகளை அனுசரித்து, ஜனகனுக்கும் பரதனுக்கும் நடந்த சம்பாஷணையை ராமனிடம் கூறிப் பிறகு பரதன் கூறிய அழகிய யுக்தியையும் மொழிந்து, "ராம! நீ இடும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க அனைவரும் காத்திருக்கின்றனர். எனது அபிப்பிராயம் அதுவே" என்று கூறினர். கூறவே, ராமன் கரங்குவித்து, வியக்தமாகவும் உண்மையாகவும் இனிமையாகவும் உள்ள மொழிகளினல் வசிஷ்டரை நோக்கி, "மிதிலாதிபரும், தாமும் பிரசன்னமாயிருக்கும்போது, நான் பேசத் துணிவது எம்முறையிலும் தகாதது. தாங்களும் ஜனக மகாராஜரும் இடும் கட்டளை எதுவோ, அதையே நான் என் தலைமீது வகிப்பேன்: இது சத்தியம்" என்ருன்.

ராமன் செய்த சபதத்தைச் செவியுற்று வசிஷ்டரும் ஜனகனும் மனங்குன்றி விட்டனர். அங்கே கூடியிருந்த யாவரும் பரதன் முகத்தையே நோக்கலாயினர். பதிலுரைத்திட ஒருவராலும் கூடவில்லை. சபையோர்

மனங்குன்றியிருப்பதைக் கண்டு பரதன் மனத்தை மிகவும் தைரியப்படுத்திக் கொண்டான்; சந்தர்ப்பம் அனுகூல மில்லாமல் இருப்பதை உணர்ந்து, வளரும் விந்திய மலையை அகஸ்திய முனிவர் அடக்கியது போல, ராமன்மீது தனக்குள்ள அன்பை அடக்கிக் கொண்டான்.

அவன் ராமனை நோக்கிக் கூறுவான்: "பிரபுவே! மதிமயக்கத்தால் பிதாவின் சொல்லைப் பொருட்படுத்தாது எல்லா மக்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு வந்திருக் கிறேன். இவ்வுலகில் நல்லது கெட்டது, உயர்வு தாழ்வு, அமிர்தம் விஷம், நித்திய வாழ்வு சாவு எல்லாம் நிலவுகின்றன. ஆனால் மனத்திலாவது ராமர் கட்டளையை மீறின ஒருவனை எவரும் கண்டதோ, கேட்டதோ இல்லை. நான் எம்முறையிலும் பெரிய அபராதம் செய்துவிட்டேன். ஆனால் பிரபு ராமர் அதனை அன்பான பணியென மதித்து ஏற்றுக்கொண்டார். ஐயனே! தங்கள் நல்லியற்கை, நல்வாக்கு, புகழ், யாவும் உலகமெங்கும் தெரிந்த விஷயம். அவை வேதங்களிலும், ஆகமங்களிலும் பாடப்பட்டிருக் கின்றன.

"கொடியவன், வஞ்சகன், தூர்த்தன், துஷ்டன், அதமன், ஒழுக்கமற்றவன், நாஸ்திகன், வணக்கமற்றவன் இவர்களும் தங்கள் பிரபாவத்தைக் கேள்வியுற்றுத் திருவடி களின் முன் அடைக்கலம் புகுந்து ஒரு முறை பணிய, உடனே அவர்களைத் தங்களுடைய மக்களாக அங்கீகரித்து விடுகிறீர்கள். அம்மக்கள் செய்த குற்றங்களைத் தாங்கள் சிறிதும் பொருட்படுத்துவதில்லை. அவர்களது குணங்களைக் கேட்டதும், சான்றோர் சபையில்அவற்றைப் புகழ்ந்து உரைக்

கிறீர்கள். தாங்கள் அடியார்மீது அருள் புரிந்து சரிசமமான பதவி, பரிவட்டங்கள் எல்லாவற்றையும், அவர்களுக்கு அளித்து விடுகிறீர்கள். அடியார் செய்யும் அபராதங்களை எள்ளளவும் எண்ணாது, அவர்களுக்கு உற்ற ஆபத்துக்களையும், அவமானங்களையும் உள்ளத்தில் எண்ணி வாடி வருந்துகிறீர்கள் இத்தகைய குணம் படைத்த பிரபு வேறு எவர் இருக்கிறார்? இவ்வாறு தாங்கள் அடியார்களைச் சீர்திருத்தி வெகுமானம் செய்து, அவர்களைச் சான்றோர் சமூகத்தின் சிரோமணியாகச் செய்துவிடுகிறீர்கள். அத்தகைய கிருபாசமுத்திர மாகிய தங்களைத் தவிர வேறு எவரால் இந்தக் கீர்த்திக் கதையை (புகழ்மாலையை) நிலை நாட்டிப் பரிபாலித்திருக்க இயலும்?

"நான் தங்கள்மீதுள்ள அன்பினால் பிரிவைச் சகியாமல் விசனமுற்றுச் சிறு பிள்ளைத்தனமாய்த் தங்கள் கட்டளையை மீறி இங்கே வந்தேன். ஆனால் தயைகொண்டு தாங்கள் என் பட்சம் திரும்பி எனக்கு எவ்விதத்திலும் நன்மையே நாடியிருக்கிறீர்கள். ராகவ! நான் பலமான குற்றம் இழைத்துவிட்டேன். பெரியோர் சபை என்று பாராமல் சிறிதும் தயக்கமின்றி, பணிவுள்ளதோ, வினயமற்றதோ (எதுவோ?—அறியேன்) மனத்தில் தோன்றியதைத் தோன்றியவாறு பேசிவிட்டேன். நான் மிகவும் துன்ப நோய் கொண்டவன் என்று உணர்ந்து என்னை மன்னிக்கவும். நண்பன், புத்திசாலி, எஜமானன் இவர்கள் முன்னிலையில் அதிகம் சொல்வது அபராதமாகும். ஆகையால் என் சொற்களிலுள்ள குற்றங்குறைகளைப் பாராட்டாமலிருக்கவும், தங்கள் கட்டளையைத் தெரிவிக்கவும் வேண்டுகிறேன்.

இதயத்தில் உதிக்கும் இயல்பான அன்பே எஜமானனுக்கு உண்மைத் தொண்டு புரிவதற்கு ஒரு தூண்டுகோலாகும். அத்தகைய சேவை செய்கிறவன் பிறவிக்கு உற்ற நான்கு பெரும் பேறுகள், சுயநலம், கபடம், யாவற்றையும் துறத்தல் அவசியமாகும். நற்காவலனது கட்டளைக்குக் கீழ்ப்படிதலுக்கு ஒப்பாக வேறொரு சேவையுமில்லை. ஆகையால் பிரபோ! இச்சேவையாகிற பிரசாதத்தையே அடியேன் அடையும்படி செய்தல்வேண்டும்'' என்று சொல்லிப் பரதன், அன்பிற்கு முழுதும் வசப்பட்டு மயங்கி நின்றான்.

அவன் உடல் மயிர்க் கூச்சுற்றது. கண்களில் நீர் பெருகிற்று. அச்சமுற்றுப் பிரபு ராமன் பாதங்களைப் பிடித்துக்கொண்டான். அத்தருணம் உண்டான பக்தியை வருணிக்க முடியாது. கருணைக் கடலாகிய ராமன் நல்வார்த்தைகளால், அவனைத் தேற்றிக் கையைப் பிடித்துத் தன் அருகில் அமர்த்திக்கொண்டான். பரதனுடைய வணக்கத்தையும் ஒழுக்கத்தையும் கண்டு ராமனும் மற்றச் சபையோர்களும் பரதன்மீது உதித்த அன்பினால் மனங்கரைந்து போயினர்.

'முனிவர்களின் கூட்டமும் மிதிலாபதியும் எவனுடைய பக்தியில் ஓர் இம்மியளவு பாகத்தைக் கண்டும் அன்பு வெள்ளத்தில் ஆழ்ந்து மதிமயங்கி யிருந்தனரோ, அந்தப் பரதன் மகிமையை எங்ஙனம் துளஸீதாஸன் சொல்ல இயலும்? பக்தியின் பிரபாவத்தினாலே என் உள்ளத்திலும் நல்லெண்ணம் பெருகியோடுகிறது—என்கிறார் துளஸீதாஸர். 'பரதனை நினைத்த மாத்திரத்தில் ராம பக்தி எவனுடைய

உள்ளத்தில் சுலபமாக உதிப்பதில்லையோ, அவனுக்கு நிகரான வக்கிர புத்தி வாய்ந்தவன் மற்றொருவனுமில்லை.

தயாளுவாகிய ஸ்ரீராமன் அங்கிருந்த அனைவரும் அடைந்திருந்த நிலைமையைப் பார்த்து, அன்புள்ள பரதனுடைய மனத்தையும் உணர்ந்து, வாக்குத் தேவியின் வன்மை முழுதும் கொண்டு, கேட்பதற்கு அமுதஞ் சொரிவதும், விளைவில் நற்பயனைத் தருவதுமாகிய இன் சொற்கள் சொன்னான்: "தம்பீ! பரத! நீ தர்மத்தைத் தாங்குபவன்; உலக ரீதியையும் வேதத்தின் தத்துவத்தையும் உணர்ந்தவன்; அன்பு பூண்டு ஒழுகுவதில் சமர்த்தன். தம்பீ! நீ மனம், மெய், மொழிகளில் தூய்மை வாய்ந்து தனக்குத்தானே நிகராயிருக்கிறாய். பெரியோர்கள் அடங்கிய சபையிலே, மேலும் தகாத சமயத்திலே, சிறியேனை எங்ஙனம் சிறப்பித்துக் கூறலாகும்?

"தம்பீ! நீ சூரிய குல ரீதியை நன்கு அறிவாய். சத்திய சந்தரான தந்தையின் கீர்த்தியையும் அன்பு நிறைந்த அவரது உள்ளத்தையும் நீ தெரிந்து கொண்டிருக்கிறாய். மேலும் காலம், காலத்திற்குத் தக்க பொதுஜன உணர்ச்சி, குருக்களுடைய கௌரவம், சத்துரு மித்திரன் மத்தியஸ்தன் இவர்களது மனம் இவை யாவற்றையும் நன்கு அறிவாய். அப்பா, பரத! தந்தையின்றி நடைபெறும் நம்முடைய காரியக் கிரமங்கள் எல்லாம் குருமார்களின் அனுக்கிரகத்தால் செவ்வையாகச் செய்யப்பட்டு வருகின்றன. அங்ஙனம் நடைபெறாவிட்டால் தேசமக்கள், நகரவாசிகள், பக்தஜனம், பரிவாரங்கள் யாவரும் நம்முடன் துயருற்று அல்லற் படுவார்கள்.

"பரத! பூஜிக்கத் தக்க குருவின் கட்டளையை நீயும் செய்து, என்னைக் கொண்டும் செய்வித்துச் சூரிய குலத்தின் ரட்சகனுக்கடவாய். யோகிகள் நாடி நிற்கும் சகல சித்திகளையும் தரவல்லது இது ஒன்றே. செல்வம், நற்பெயர், நற்கதி இம்மூன்றும் சேர்ந்த திரிவேணியாகும் இது. ஆதலால், பரத! நீ இவற்றையெல்லாம் ஆலோசித்துப் பெருங்கஷ்டத்தையும் பொறுத்து உனது பரிவாரங்களையும் குடிஜனங்களையும் சுகமுறச் செய். தம்பி! துன்பங்கள் யாவும் நம் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் பதினான்கு வருஷத் தவணை முடியுமட்டும் எல்லோரையும் விட உனக்குத்தான் பெருங்கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

"நீ இளகிய நெஞ்சுடையோன் என அறிந்தும், நான் கொடிய மொழிகளைச் சொல்லுகிறேன். அப்பா! இது கெட்ட காலமாதலால் என் மீது குற்றமில்லை. ஒருவன் தன் மேல் வாளை வீச அதைத் தன் கையினாலேயே தடுத்து நிற்பது போல, நல்ல சகோதரன் ஆபத்துக் காலத்தில் உதவுகிறான். கை, கால், கண் முதலிய அவயவங்கள் சேவகன் ஸ்தானத்தில் இருக்கத் தலைவன் முகம் போல் இருக்கிறான்" என்றான்

சபையோர் அனைவரும் ரகுகுல சிரேஷ்டனின் சிறந்த சொற்களைக் கேட்டு, அன்பாகிய கடலின் அமிர்த நீரிலே முழுகினவர் போல் ஆயினர். இவ்வாறு நேசமாகிய சமாதியை அடைந்து சபையோர் அனைவரும் செயலற்றுக் கிடக்க, அவர்களுடைய அந்நிலையைக் கண்ட வாக்குத்

தேவியும் அதை வர்ணிக்க இயலாது சும்மா இருந்தாள். பிரபு ராமன் தனக்கு அனுகூலமாயிருப்பதனல் தனக்குற்ற சோகதாபங்கள் யாவும் பறந்து போகவே, பரதனுக்கு மட்டில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. பேசும் திறம் பெற்ற ஊமை போல, அவன் துயரற்ற நெஞ்சமும், தெளிவுற்ற முகமும் உடையவனய் விளங்கினன்.

பரதன் உள்ளன்புடன் மீண்டும் ராமனை அடிபணிந்து கரங்களாகிய பங்கஜம் குவிய, "நாத! தங்களுடன் செல்வதற்கு ஈடான இன்பம் எனக்கு இப்பொழுது கிடைத்து விட்டது. இப்பிறவி பெற்ற பயன் முழுவதையும் பெற்று விட்டேன். கிருபா மூர்த்தியே! உங்கள் கட்டளை எதுவோ? தேவ! குருவின் உத்தரவு பெற்றுப் பிரபுவின் அபிஷேகத் திற்கென்று சகல புண்ணிய தீர்த்தங்களிலிருந்தும் நன்னீர் கொணர்ந்திருக்கிறேன். இவ்விஷயத்தில் உங்களுடைய உத்தரவை எதிர்பார்க்கிறேன். பிரபோ! என் மனத்தில் பெரியதொரு கோரிக்கை உண்டு. ஆனல் பயமும் கூச்சமும் குறுக்கிட, அதைச் சொல்வதற்கு முடியவில்லை" என்று சொன்னன்.

அதற்கு ராமன், "தம்பி! அதைச் சொல்" என்று கட்டளையிட்டான். பிரபுவின் உத்தரவு பெற்றுப் பரதன் அன்பு தோய்ந்த அழகிய மொழிகளால், "பலவகையான மிருக பட்சிகளையுடைய இச்சித்திர கூடத்தைச் சார்ந்துள்ள குன்றுகளின் கூட்டங்களையும், மலையருவி, காட்டாறு, பொய்கை முதலிய நன்னீர் நிலைகளையும் வனம் முதலிய பரிசுத்த ஸ்தலங்களையும், பிரபுவின் பாத சின்னங்கள் பெற்ற

பூப்பிரதேசங்களையும் காண உத்தரவாகுமானால், நான் சென்று அவைகளைப் பார்த்துவர விரும்புகிறேன்'' என்றான்.

ராமன், "தம்பீ! அத்திரி மகரிஷியின் உத்தரவைத் தலைமீது தரித்து, நீ பயமின்றி வனத்திடை உலாவலாம். பரத! முனிபுங்கவரின் அனுக்கிரகத்தினாலேயே இவ்வனம் மிக்க பரிசுத்தம் வாய்ந்து அழகுள்ளதாய், தன்னை வந்தடைந்தோருக்குச் சகல மங்களங்களையும் தருவதாய் அமைந்துள்ளது. மகரிஷி எந்த இடத்தைக் குறிப்பிட்டு உத்தரவு செய்கிறாரோ, அவ்விடத்திலே நீ கொண்டு வந்துள்ள புண்ணிய தீர்த்தங்களின் தூய நீரைச் சேர்ப்பி'' என்று உத்தரவிட்டான்.

ராமன் சொன்ன சொற்களைக் கேட்ட பரதனது மனம் சாந்தம் அடைந்தது. அவன் எழுந்து மகிழ்ச்சியுடன் முனிவர் பாதங்களில் தலை வணங்கி நின்றான். அப்போது அத்திரி மகரிஷி, "சித்திர கூட பர்வதத்தின் அருகே ஒரு சிறந்த கிணறு உண்டு. தூய்மையை உண்டாக்க வல்லதும், அமுதம் போல உவமையற்றதுமான புண்ணிய தீர்த்தங்களின் இந்த ஜலத்தை அதில் சேர்த்து விடு'' என்றார். பிறகு அவர் சொன்னபடி புண்ணிய தீர்த்தங்கள் யாவும் அந்தப் பரிசுத்தமான இடத்தில் விடப்பட்டன. அப்பொழுது மகரிஷி பரதனைப் பார்த்து, "பரத! இந்த ஸ்தலம் அநாதிகாலமாக இருந்து வருகிறது. நாளடைவில் இது கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து போகவே, இதை ஒருவரும் கண்டு கொள்ளவில்லை'' என்று அக்கிணற்றின் வரலாற்றை எடுத்துரைத்தார்.

அதன்மேல் பரதன் மற்றப் புண்ணிய தீர்த்தங்களையும்

சுற்றிப் பார்த்து வருவதில் ஐந்து நாள்கள் சென்றன. ஐந்தாவது தினம் ஹரிஹரர்களின் கீர்த்தியைப் பாடுவதில் கழிந்து செல்ல, சந்தியா கலமும் கிட்டிற்று. அப்பொழுது அறிஞனாகிய பரதன் ராமன் முகக்குறிப்பை அறிந்து, உள்ளத்தில் உறுதி கொண்டு அன்புடன் எழுந்து தன் அண்ணனை நமஸ்கரித்துக் கைகூப்பியவாறு, "சுவாமீ! என் கோரிக்கைகள் எல்லாம் தங்களால் பூர்த்தி செய்யப்பட்டன. தீனதயாளு! கோசல நாட்டின் இறைவ! நீங்கள் திரும்பி வரும் தவணைவரையில் காத்திருந்து, அடியேன் திரும்பவும் உங்கள் பாத பத்மங்களின் தரிசனம் அடைவதற்கான முறைகள் எவை? அவைகளை எனக்கு உபதேசிக்க வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

ராமன் பரதனுக்குப் பலதுறைகளிலும் உபதேசஞ் செய்தான். செய்தும், பரதனுக்கு யாதொரு ஆதாரமும் கிட்டாமையினால் சந்தோஷமோ, மனச்சாந்தியோ ஏற்படவில்லை.

அப்போது பிரபு ராமன் பரதனுடைய நல்லொழுக்கத்தையும், குரு மந்திரிமார் அடங்கிய சபையோரின் அன்பு, மனவருத்தம் இவற்றையும் கண்டு வசப்பட்டவனாய் அருள் கூர்ந்து தன் பாதுகைகளை எடுத்துப் பரதனிடம் கொடுத்தான். பரதன் மிக்க பக்தியுடன் அவைகளை ஏற்றுத் தலைமேல் வைத்துக் கொண்டான். கருணைக்குப் புகலிடமாகிய பிரபு ராமனின் பாதுகைகள் இரண்டும், பிரஜைகளின் ஆவி காக்கும் மெய்காவலர் இருவரோ, பரதனின் ராம பக்தியாகிற இரத்தினம் வைப்பதற்கு ஆகிய சுந்தரப் பேழைகளோ, அன்றி பரதன் உயிர் நிலையைக்

காத்து நிற்பவைகளான ரகர மகரமாகிற சிறந்த அட்சர ஜோடிகளோ ?—என இருந்தன. மேலும் அப்பாதுகைகள், சூரியவம்சத்தின் இரு கதவுகள் போலவும், நியாயமும் சேவையும் சேர்ந்த இரண்டு தூய கண்கள் போலவும், நற்கருமம் புரிகின்ற இரண்டு கைககள் போலவும் இருந்தன. சீதாராமருடன் இருந்தால் எங்ஙனம் இன்புற்றிருப்பானே, அங்ஙனம் பரதன் அப்பாதுகைகள் இரண்டையும் தனக்கு ஓர் ஆதாரமாக அடைந்து அதிக இன்பம் எய்தினன்.

ராமன் பரதனை அணுகி அவனைக் கட்டித் தழுவித் தேறுதல் கூறினன்; களிப்பெய்திச் சத்ருக்னனையும் சேர்த்துத் தழுவிக் கொண்டான். பிறகு சேவகரும் அமைச்சரும் பரதனது முகக்குறிப்பை உணர்ந்து, புறப்படுவதற்கு ஆன ஆயத்தங்களைச் செய்யும் அலுவல்களில் ஈடுபட்டனர். பரதன் புறப்பாட்டைக் கேள்வியுற்று இருதிறத்தாரிடையிலும் மட்டில்லாத துயர் குடிகொண்டு விட்டது. பரத சத்ருக்னர் இரு சகோதரர்களும், ராமன் பாத தூளியை வணங்கி அவனது ஆஜ்ஞையை முடிமீது தாங்கித் தவசிகள், முனிவர், வனதேவதைகள் முதலியோருக்குத் தங்கள் நன்றியைச் செலுத்தி, மீண்டும் ஒருமுறை அனைவரையும் வணங்கி விடைபெற்றுப் புறப்பட்டார்கள். சகோதரர் இருவரும் லட்சுமணனைக் கண்டு விடைபெற்றுச் சீதையை வணங்கி அவளது பாத தூளியைச் சிரமேற்கொண்டு சகல மங்களங்களுக்கும் ஏதுவான சீதாராமர்களுடைய ஆசிமொழிகளைச் சிரவணம் செய்தவாறே புறப்பட்டுச் சென்றார்கள்.

பிறகு ராமன் லட்சுமணனுடன் ஜனக மகாராஜரது அடிகளில் பணிந்து அவரை மிகவும் புகழ்ந்து, "சுவாமீ! தாங்கள் என்மீதுள்ள தயவினால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிவிட்டீர்கள். பரிவாரங்களுடன் கூடி இவ்வளவு தூரம் காட்டிற்குத் தாங்கள் வர நேர்ந்தது என் பொருட்டு. இப்பொழுது எங்களை ஆசீர்வதித்துத் தங்கள் நகருக்குச் சுகமாய்த் திரும்ப வேண்டும்" என வேண்டிக்கொண்டான். அதைச் செவியுற்ற ஜனகனும் மனத்தை ஒருவாறு திடப் படுத்திக் கொண்டு புறப்பட்டான். அப்பொழுது ராமன் அங்கே கூடியிருந்த ரிஷிகள், பிராமணர், சான்றோர், முதலிய பெரியோர்களுக்குத் தக்க மரியாதைகளைச் செய்து அவர்களைத் திருமால், சிவன் ஆகிய தெய்வங்களுக்கு ஒப்பாக எண்ணி விடை கொடுத்தனுப்பினான்.

அதன் பின் ராமன் சீதையும் லட்சுமணனும் பின் தொடர, குரு, குரு பத்தினி இவர்களின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து உவகை பூத்து வியப்புடன் தன் பர்ண சாலைக்குத் திரும்பி வந்தான். பிறகு வேடுவனுக்கு மரியாதை செய்து விடை கொடுக்கவே, அவனும் சென்றான். ஆனால் அவன் மனம் துக்கித்தது. பிறகு வன சஞ்சாரிகளான கோலர், கிராதர், பீலர் இவர்களையும் விடை கொடுத்தனுப்பினான். அப்பால் ராமன், சீதை, லட்சுமணன் மூவரும் அந்த வட விருட்சத்தின் நிழலில் வீற்றிருந்து பந்து ஜனங்களின் பிரிவைக் குறித்து வருந்திப் பிரலாபித் தனர். ராமன், தன் பிரியை சீதை, தம்பி லட்சுமணன் இவர்களுடன், பரதன் காட்டிய பிரீதியையும், அவனது

இயற்கையாகவே இனிமை வாய்ந்த பேச்சுக்களையும் புகழ்ந்து கூறிச் சம்பாஷித்துக்கொண்டிருந்தான்.

இது இவ்வாறிருக்க: (அயோத்திக்குச் செல்லும் மார்க்கத்தில்) ரிஷிகள், அந்தணர், குருவசிஷ்டர், பரதன், ஜனக மகாராஜன் ஆகியோர் ராமன் பிரிவினால் மிகவும் மனம் வருந்தித் துக்கிப்பவராய் அவனுடைய குண சமூகங்களை ஸ்மரித்தவாறே வாய் பேசாது வழிநடக்கலாயினர். அவர்கள் முதல் நாள் யமுனை நதியில் இறங்கி அக்கரை சென்றனர். அன்று முழுவதும் ஆகாரமின்றிக் கழிந்தது. மறுநாள் கங்காதீரத்தில் இறங்கி அக்கரை யடைந்தனர். ராமனது தோழனாகிய குகன், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாஞ் செய்து கொடுத்தான்.

பிறகு அவர்கள் முறையே கைசயீ நதிக் கரையிலும், கோமதி தீரத்திலும் தங்கி நீராடி, நான்காவது தினம் அயோத்தியை வந்தடைந்தனர். ஜனக மகாராஜன் நான்கு தினங்கள் அயோத்தியில் தங்கியிருந்து, இராஜ்ய நிர்வாகங்களைச் செவ்வையாக நடப்பித்து வைத்தான். அப்பால் ஜனகன் ராஜ்ய பாரத்தைக் குரு, பரதன், மந்திரிமார் இவர்கள் வசம் ஒப்புவித்து, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் திரிஹுத நாட்டிற்குச் சென்றான். நகரவாசிகள் ஸ்திரீ புருஷர் அனைவரும் குருவின் நற்போதனையை ஏற்று அதன்படி நடந்து, ராமனுடைய தலைநகராகிய அயோத்தியிலே சுகமாக வாழ்ந்து வரலாயினர்.

மக்கள் அனைவரும் ராம தரிசனம் பெற வேண்டி நியமித்துடனிருந்து விரதங்களை அனுஷ்டித்து, அலங்காரம், போக விலாசம் முதலியவைகளைத் துறந்து பதினான்கு

வருஷத் தவணை முடிவடையும் நன்னாளை எதிர்நோக்கி உயிர் வாழ்ந்து வந்தனர். மந்திரிமார், நம்பிக்கையுள்ள சேவகர் இவர்களுக்குப் பரதன் தக்க போதனைகள் செய்து தத்தம் வேலைகளில் ஏவ, அவர்களும் பரதன் சொற்படி நடந்து தம் அலுவல்களைப் பார்க்கலாயினர். பிறகு பரதன் சத்ருக்னனை அழைப்பித்து, அவனுடைய வசத்தில் தாய்மார்கள் அனைவருடைய சம்ரட்சணையையும் ஒப்புவித்தான். பரதன் இனத்தாரையும், நகரத்துப் பிரமுகர்களையும், மற்றுமுள்ள பிரஜைகளையும் தருவித்து அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்துத் திருப்தி செய்தான்.

பிறகு இளைய சகோதரனுடன் குருவின் இல்லம் ஏகி அங்கு அவரைக் கண்டு தண்டனிட்டுக் கைகூப்பி, "குரு மஹராஜ்! நான் நியமத்துடன் வசிப்பதற்குத் தாங்கள் உத்தரவு செய்யவேண்டும்" என்று வேண்டினான். அதைச் செவியுற்ற வசிஷ்டர் பிரீதியுடன் புளகாங்கிதராய், "பரத! நீ நினைப்பது, சொல்வது, செய்வது இவை எவையோ, அவைகளே இவ்வுலகில் தர்மத்தின் தத்துவங்களாக இருப்பன!" என்று சொன்னார். இவ்வாறு பரதன் குருவின் உபதேசம் பெற்றுக் களிகூர்ந்து அவரிடமிருந்து மஹத்தான ஆசீர்வாதத்தையும் அடைந்து, பின் சோதிடர்களை வரவழைத்து நன்னாளொன்று குறிப்பிடச் செய்தான். பரதன் அந்த நல்ல முகூர்த்தத்திலே ராமனது பாதுகைகளைச் சிங்காதனத்தின் மீது ஏற்றி வைத்து யாதொரு விக்கினமும் இன்றி அவைகளைப் பிரதிஷ்டை செய்தான். தீரனும் தர்மசீலனுமாகிய பரதன், ராமன் தாய், குரு இவர்கள் பாதத்தில் தலைவணங்கி, ராமன்

பாதுகைகளிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு சென்று நந்திக் கிராமத்திலே ஒரு பர்ணசாலை கட்டி அதிலே வாசஞ் செய்யலானான்.

இவ்வாறு பரதன் அந்தக் கிராமத்திலே ஒரு குடிசையில், தலையில் ஜடை முடிதரித்து முனிவர் உடையுடுத்தி, பூமியைத் தோண்டி அதிலே புல்லை விரித்து, ஆசனம் அமைத்து வீற்றிருந்து, ஊண் உடை, பாத்திரம் பண்டம், நியமம் விரதம் இவையாவும் மகரிஷிகளைப் போலவே செய்துகொண்டு மிகக் கடுமையான ரிஷி—தர்மத்தை ஆசையுடன் அனுஷ்டித்து வந்தான். பரதன் இங்ஙனம் ராமனுடைய பாதுகைகளைப் பூஜித்து வந்தான். அவை களிடம் அவனுள்ளத்தில் உதித்த பிரீதி அடக்க முடியாததாக இருந்தது. அவன் பாதுகைகளிடம் விஷயங்களை அறிவித்து அவைகளிடம் உத்தரவு பெற்ற பிறகே, பலவித இராஜ்ய காரியங்களையும் செவ்வையாகச் செய்து வந்தான். அவன் எப்போதும் அன்பினால் உடல் சிலிர்க்கக் கண்களில் நீர் பெருக, சீதா ராமரின் நினைவை உள்ளத்திற்கொண்டு நாவினால் அவர் நாமங்களை என்றும் ஜபித்திருந்தான். சீதாராம லட்சுமணர்களோ வனத்திலே சுகமாக வாழ்ந்து வந்தனர். பரதன் வீட்டிலே வசித்தும் கொடிய விரதம் முதலியவை களால் உடலை வாட்டி வந்தான்.

இவ்வாறு 'இராம சரிதமானஸ'த்தில், 'விமலமான விஞ்ஞான வைராக்கியத்தை அளிப்பது' எனப் பெயர் வாய்ந்த இரண்டாவது படிக்கட்டு முற்றுப் பெற்றது.

— சுபம். —

கதைக் கோவை - I

40 - எழுத்தாளர்களின் சிறுகதைகள் - 40

உயர்ந்த பதிப்பு

1. மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
2. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்
3. எஸ். வி. வி.
4. க. சந்தானம், எம். ஏ., பி. எல்.
5. கி. சாவித்திரி அம்மாள்
6. "சங்கர ராம்"
7. ந. பிச்சமூர்த்தி, பி. ஏ.
8. ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.
9. தி. ஜ. ர.
10. கு. ப. ராஜகோபாலன், பி.ஏ.
11. தி. நா. சுப்பிரமணியன்
12. சங்கு சுப்பிரமணியன்
13. பி. எஸ். ராமையா
14. தி. ப. பத்மநாபன்
15. கி. வா. ஜகந்நாதன், பி. ஓ. எல்.
16. த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.
17. சேது அம்மாள்
18. சு. குருசாமி, பி.ஏ., எல் டி.
19. சி. வைத்தியலிங்கம், (கொழும்பு)
20. சிதம்பர சுப்பிரமணியன்
21. பி. எம். கண்ணன்
22. கொத்தமங்கலம் சுப்பிரமணியம்
23. கி. ரா.
24. க. நா. சுப்பிரமணியன்
25. சி. சு. செல்லப்பா
26. ஜே. தங்கவேல், பி. ஏ.
27. புரசு பாலகிருஷ்ணன், எம். பி., பி.எஸ்.
28. ஏ. முகம்மது ரஷீத், பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்)

26 த. நா. ஸேனாபதி

30. "சம்பந்தன்" (யாழ்ப்பாணம்)
31. அ. கி. ஜயராமன்
32. ஆர். நாராயணையங்கார். பி. ஏ., பி.எல்.
33. "மௌனி"
34. ஆர். ஷண்முகசுந்தரம்
35. பி.வி. சுப்பிரமணியன், பி.ஏ.
36. "குகப்ரியை"
37. "இலங்கையர்கோன்" (யாழ்ப்பாணம்

38 "ருவி"

39. ஸோ. சேதுராமன்
40. ஆர். திருஞானசம்பந்தன்

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

கதைக் கோவை-II

50 - எழுத்தாளரின் சிறுகதைகள் - 50

பெதர் வெயிட் பதிப்பு :: 577-பக்கங்கள் :: ரூ. 7-0-0

1. ஆண்டாள்
2. ஆர். ஆத்மநாதன்
3. ரா. ஆறுமுகம்
4. ராவ்பகதூர் வி. எம். இராம சந்திரஞ் செட்டியார் பி. ஏ., பி. எல்,
5. "இளங்கோவன்"
6. கே. பி. கணபதி
7. 'கதிர்'
8. கமலா பத்மநாபன்
9. கே. ஜி. கமலாம்பாள்
10. 'கல்கி'
11. ஆர். கிருஷ்ணசுவாமி
12. ஆர். கிருஷ்ணமூர்த்தி
13. பி. எஸ், கிருஷ்ணமூர்த்தி
14. வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி
15. எஸ். குஞ்சிதபாதம்
16. குமுதினி [எம்.ஏ., பி.எல்.
17. ப. கோதண்டராமன்,
18. வை. மு. கோதைநாயகி
19. அ. கோபால்ரத்னம்
20. கௌரி [பி.ஏ., பி. எல்.
21. கி. சங்கரநாராயணன்,
22. கி. சந்திரசேகரன், [எம். ஏ., பி. எல்.
23. கி. சரஸ்வதி அம்மாள்
24. வி. ஆர். ஸரோஜா
25. சோ. சிவபாத சுந்தரம் (யாழ்ப்பாணம்)
26. அ. நா. சிவராமன், பி. ஏ.
27. 'சுகி'
28. சுந்தரி
29. 'சுந்தா'
30. என். ஆர். சுப்பிரமணிய ஐயர், பி.ஏ., பி.எல்.
31. 'தமிலன்'
32. 'தேவன்'
33. நவாலியூர் சோ. நடராஜன் (கொழும்பு)
34. நல்லா முகமது
35. நாரண துரைக்கண்ணன்
36. என். நாராயணன், பி. ஏ.
37. 'மதுரம்'
38. V. R. M. செட்டியார், [பி. ஏ.
39. கே. எம். ரங்கசாமி
40. வ. ரா.
41. து. ராமமூர்த்தி
42. ந. ராமரத்னம்
43. நா. ராமரத்னம், எம். ஏ.
44. கா. சி. வேங்கடரமணி, [எம். ஏ., பி. எல்.
45. கே. வெங்கடாசலம்
46. ஆர். வெங்கடாசலம்
47. 'லக்ஷ்மி'
48. ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்
49. பி. ஸ்ரீ. [எம். ஏ.
50. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன்,

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

கதைக் கோவை - 3-ஆம் தொகுதி

60 - எழுத்தாளரின் சிறந்த சிறுகதைகள் - 60

1. "அகிலன்"
2. அ. செ. மு. (யாழ்ப்பாணம்)
3. அப்புஸ்வாமி, பெ. நா.
4. அம்மணி
5. ஈசுவரன் (மஞ்சேரி—எம்.ஏ.)
6. கணபதி ஐயர், ச. கு. (பி. ஓ. எல்.)
7. கதிரேசன் செட்டியார், மகாமகோபாத்யாய பண்டிதமணி.
8. கந்தசாமி, எஸ்.
9. கமலா, எம். எஸ்.
10. கமலாம்பாள்.
11. கா. ஸ்ரீ. ஸ்ரீ.
12. கிருஷ்ணமாச்சாரி, ஏ, டி. (பி. ஏ., பி. எல்.)
13. கிருஷ்ணமூர்த்தி, வ. வே. ஸ.
14. கிருஷ்ணன், எஸ்.
15. "கொனஷ்டை"
16. கோமதி சுப்பிரமணியம்
17. "சசி"
18. சண்முகசுந்தரம், கோ. த.
19. சதாசிவம், ஜி.
20. சபரிராஜன், எம். எல்.
21. சீதாதேவி (எம். ஏ.)
22. சீநிவாஸராகவன், ஆ,
23. சுவாமி சுத்தானந்தபாரதியார்
24. சுந்தரம்மாள், கே.
25. சுந்தரராமன், (பூவாளூர்).
26. சுந்தரி, ஆர்.
27. சுப்பிரமணிய முதலியார், வெ. ப. (ராவ்சாஹேப்)
28. சுப்பையா, ஆ.
29. சுப்பையா, வி. எஸ்.
30. சூடாமணி, பி. ஆர். ஆர்.
31. செல்லம், மோ. ஸ்ரீ (பி. ஓ. எல்.)
32. தங்கம்மாள் பாரதி
33. தஞ்சம்
34. "தூரன்"
35. "நாடோடி"
36. நீலகண்டன், ப.
37. பார்த்தஸாரதி. ஆர். கே.
38. பாலசுப்பிரமணியன், கு. மா
39. "புதுமைப்பித்தன்"
40. மயிலேறு, வி. ஆர். (எம். ஏ.)
41. "மாயாவி"
42. "மாரார்"
43. "மாஜினி"
44. ராகவன், வே, டாக்டர், M.A.
45. ராமஸ்வாமி, மே. சு. பி.ஏ., பி.எல்.;
46. ராமஸ்வாமி, ப.
47. ராமாமிருதம், லா. ச.
48. "வல்லிக்கண்ணன்"
49. வாசிமலை
50. விஜயராகவன்
51. வீரராகவன், (பி. ஓ. எல்.)
52. வேங்கடராமன். ரா.
53. வேங்கடலக்ஷ்மி
54. வையாபுரிப் பிள்ளை, எஸ். பி. ஏ., பி. எல். (ராவ் சாகேப்)
55. ஜானம்மாள்
56. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள். வி. எஸ் (மகாகனம்)
57. ஸரஸ்வதி. ஆர்.
58. ஸரோஜினி ராமஸ்வாமி
59. ஸையத் முகமத்
60. "ஷோமாஸ்"

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

எங்கள் உயரிய நூல்களில் சில

கதைக் கோவை - (இரண்டாம் தொகுதி) 50 எழுத்தாளரின் சிறுகதைகள் 50	7	0
கதைக் கோவை - (மூன்றும் தொகுதி) 60 எழுத்தாளரின் சிறுகதைகள் 60	7	8
கதைக் கோவை - (நான்காம் தொகுதி) (அச்சில்) 75 எழுத்தாளரின் சிறுகதைகள் 75		
இரு துருவங்கள் - காண்டேகர் நாவல்	5	8
எரி நட்சத்திரம் - ,,	4	0
சதுரங்கம் - டாகுரின் நவீனம்	1	12
மாலினி - டாகுரின் நாடகம்	1	4
இளமைப் பருவம் - டாகுர் எழுதியது	1	8
திக்கற்ற இரு குழந்தைகள் - ச. ம. நடேச சாஸ்திரி	3	0
தாசிப் பெண் - ஏ. எஸ். பி. ஐயர், ஐ. ஸி. எஸ்.	1	12
ஸம்பத்து - எஸ். வி. வி.	4	0
வாடா விளக்கு - எஸ். குருசாமி. பி. ஏ., எல். டி.	2	0
குழந்தையின் மனம் - த. நா. ஸேனுபதி	2	0
பிள்ளை வரம் - பெ. தூரன்	2	0
சந்தனக் காவடி - தி. ஜ. ர.	2	0
தேவகி - "குகப்ரியை"	2	0
போஜன் - நாடகம்	1	4
ஜனாதிபதி ரூஸ்வெல்ட் - கே. எஸ். ஜம்புநாதன்	1	4
துர்க்கேச நந்தினி - பங்கிம் சந்த்ரர்	2	0
தேவி சௌதுராணி - ,,	2	0
இந்திரா - ,,	1	4
ரஜனி - ,,	1	4
துளஸீ ராமாயணம் - பாலகாண்டம் - அம்புஜம்மாள்	1	8

(எங்கள் விவரமான புத்தக ஜாப்தாவுக்கு எழுதுக)

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் : : சென்னை